

இந்தியா
எங்கே?
கலைமாமணி, கவிஞர்
எஸ்.டி.சுந்தரம்

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை
https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில்
காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at
https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# இந்தியா எங்கே?

*கலைமாமணி, கவிஞர்*
**எஸ்.டி. சுந்தரம்**

**வேமன் பதிப்பகம்**
19, நியூ காலனி - சோசியர் தெ
நுங்கம்பாக்கம்
சென்னை - 600 034

## நூல் விளக்கம்

| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | **இந்தயா எங்கே?** |
| ஆசிரியர் | : | **எஸ்.டி. சுந்தரம்** |
| பதிப்பு | : | 2006 |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | நாடகம் |
| அளவு | : | 1 X 8 தெம்மி |
| எழுத்து | : | 11 புள்ளி |
| கட்டமைப்பு | : | வல்லட்டை |
| விலை | : | **ரூ 65/-** |
| பக்கங்கள் | : | 192 |
| வெளியீடு | : | **வேமன் பதிப்பகம்**<br>19, நியூ காலனி, சோசியர் தெரு<br>சென்னை - 34<br>தொலைபேசி : 28211134 |
| ஒளியச்சு | : | **சகுராம் கிராபிக்ஸ்**<br>சென்னை - 24 |
| மறுதோன்றி | : | **ரவிராஜா ஆப்செட்**<br>சென்னை - 14 |

# முன்னுரை

"தந்த பொருளைக் கொண்டே - ஜனம்
தாங்குவர் உலகினில் அரசரெல்லாம்!
அந்த அரசியலை - இவர்
அஞ்சுதரு பேயென்றெண்ணி நெஞ்சமயர்வார்!
நெஞ்சு பொறுக்கு தில்லையே - இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்..."

என்று, அன்று மகாகவிப் பாரதியார், நமது கோழைத்தனத்தைப் பார்த்துப் பரிதாபத்துடன் பாடினார். விடுதலை வந்து முப்பது ஆண்டுகளுக்குப் பின்னும் அந்த பயம் போகவில்லை, அரசாள வந்தவர்களைப் பேய் என்று எண்ணி, அஞ்சி நடுங்கும் அடிமைப் புத்தி நம்மை விட்டுப் போகவில்லை. இந்த வீண்பயம் போனால் தான், நான் உண்மையான விடுதலை பெற்றவர்களாவோம். இதை மனதில் எண்ணித்தான் நமது அருமை ஜனாதிபதி மாட்மிமிகு. நீலம் சஞ்சீவி ரெட்டி, குடியரசு தினச் செய்தியில் சில வீரமிக்கக் கருத்துகளைப் பேசியிருக்கிறார்.

1. வரும் தேர்தலில் மக்கள் யாரைத் தேர்ந்தெடுக்கப் போகிறார்கள்? அவர்களது ஊழியர்களையா? அல்லது எஜமானர்களையா?

2. பெரும்பான்மை மக்கள் ஒன்றுபட்டு, தங்களுக்கென ஒரு அமைப்பை அமைத்துக் கொண்டு, குரல் எழுப்பாததால், அவர்களது நியாயமான தேவைகளைப் பற்றி அலட்சியமாக இருக்கலாமா?

என்று ஜனாதிபதி கேட்டுள்ள கேள்விகளுக்கு அர்த்தம் என்ன? நமது மக்கள் அச்சமற்ற சுதந்திர உள்ளத்தோடு அரசியலின் கண்ணோட்டத்தைக் கொண்டு துணிந்து வாழ்க்கைப் போராட்டத்தை சமாளிக்க வேண்டும் என்பதுதான் அவர் கருத்து.

பாமர மக்கள் முதல் பாராளும் அதிகாரி - அமைச்சர் வரை தங்கள் மனதில் உள்ள கருத்தை வெளியில் சொல்லாமல் கோழையாக அஞ்சி நடுங்கி இருந்த ஆபத்தால்தானே, அசிங்கமானதொரு நிலை நாட்டில் ஏற்பட்டது. மறுபடியும் ஒருமுறை அத்தகைய அரசியல் அசிங்கம் நேராதிருக்க வேண்டு மானால், மக்கள் - படித்தவர் - நிர்வாகிகள் - அரசியல்வாதிகள் - பதவிக்காரர்கள் அனைவரும், ஆண்மையுடன் தர்ம நியாயத்தை உடையவர்களாக இருந்தால்தான் முடியும்.

தர்மத்தை மறந்தவன் ஒரு புழு. நத்தைக்குக் கூடப் பயப்படும் கோழையாகத்தான் இருக்க முடியும். அப்படி பயந்து நடுங்கும் அரசியல் பொம்மை களுக்கு இனி பொது வாழ்வில் வேலையில்லாமல் செய்யும் துணிச்சலை நாம் பெறவேண்டும்.

இந்த ஆண்டு 23.01.1978 அன்று, நமது ஜனாதிபதி அவர்கள் நேதாஜி அவர்களது படத்திறப்பின்போது பேசிய வீர கர்ஜனையும், அடுத்து விடுத்த குடியரசு தினச் செய்தியும், விடுதலையின் ஆத்மத் துடிப்பை நம் இதயமெங்கும் கலந்து உறவாடச் செய்தன... என்றாலும்,

உலகத்தில் மிகப்பெரிய ஜனநாயகத்தைக் கட்டிக்காப்பது, இந்தியா என்ற பெருமையைப் பறைசாற்றிக் கொள்வதில் நாம் தவறுவதில்லை.

ஆனால், அந்த ஜனநாயகத்தின் அடிவேர்களான, இந்நாட்டு ஏழை மக்களுக்கும் நாம் பறைசாற்றிக் கொள்ளும் ஜனநாயகத் திற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா என்று எண்ணிப் பார்த்தால், நம் மனோசாட்சி நம்மைப் பார்த்து கெக்கலி கொட்டிக் கேலி செய்து பலமாகச் சிரிக்கிறது!

அந்தச் சிரிப்பின் அதிர்ச்சியில், நமது நாட்டின் விடுதலை சக்தி வெடவெடத்து நடுங்குகிறது. ஆனால், இந்த மனோசாட்சி - விடுதலை - தியாகம் இவைகளைப் பற்றியெல்லாம், அரசியல் வியாபாரிகளுக்குக் கவலை இருப்பதாகத் தெரியவில்லை - இந்தக் கவலைகளை யெல்லாம் பட்டுக்கொண்டிருந்தால் அரசியல் வாதியாக இருக்கவும் முடியாது!

கொள்கை முன்னேற்றத்தைக் கொண்ட அரசியல் சக்தி விடுதலைக்கு வேலியாக வருவதை வரவேற்கிறோம். ஆனால், ஒரு கொள்கையும் இல்லாமல், எப்படியாவது அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கத்துடன், இன்று பலநூறு கட்சிகள் அல்ல - ஆயிரமாயிரம் கோஷ்டிகள் கிளம்பி, அரசியல் பஜனை செய்து கொண்டிருக்கின்றன. இந்த பஜனையில், சில கோஷ்டிகானம் மக்களைக் கவர்கிறது. பலரது ஜால்ராக்கள் எடுபடாமல் போய் விடுகிறது - ஆளுக்கொரு கட்சி; நாளுக்கொரு கூச்சல்; வேளைக்கொரு வேஷம்; வீதிக்கொரு நாடகம்! எல்லாம் விளம்பரம்! வேடிக்கை! வினோதம்! விளையாட்டு! வாய்ப்பந்தல்! இது மக்களுக்கும் பழக்கமாகி விட்டது. இருபத்தி நாலு மணி நேரமும் இத்தனை கோடி ஓட்டர்களும், திண்ணையில் சாய்ந்தபடி அரசியல்வாதிகளின் பேச்சுத் திறமைகளைப் பற்றியும், அவர்களது தந்திரங்களைப் பற்றியும் பேசிக்கொண்டு பொழுதைப் போக்குவது தான், ஜனநாயக உரிமை ஏன்று முடிவுக்கு வந்துவிட்டார்கள்! அவர்களைச் சரியாக ஆட்டிப் படைக்கும் அரசியல்காரர்கள்! இந்த இரண்டு பேரையும் ஆட்டிப்படைக்கும் சர்வ சக்தி படைத்த பண வலிமை! இந்த மூன்று பிற்போக்குகளையும் ஒழிக்கப் போவதாக, வெறும் வாயளவில் சொல்லிக் கொண்டிருக்கும் முற்போக்குவாதியின் பலவீனமான முணகல்!

இந்த நாற்கோணத் திடலில் அவ்வப்போது நடைபெறும் தேர்தல் விளையாட்டு! தேர்தலில் பணமூட்டையின் பவனிகள்! சூழ்ச்சி வலை வீச்சுக்கள்! வஞ்சக நஞ்சின் விருந்துகள்! கொடுமையின் குரோதமும் நிறைந்த கூச்சல் படைகள்! பயமுறுத்தும் பாசீஸப் போர்கள்! அச்சுறுத்தும் அடியாள் கூலிகள்! இவர்களுக்கு மத்தியில் இந்திய விடுதலையின் உயிர் மூச்சான ஓட்டுரிமை விலை கூறப்படுகிறது. விலை மதிப்பில்லாத, உயிர் கொடுத்துப் பெற்ற விடுதலைக்கு, இன்று தீயசக்திகள் விலை பேபாட முன்வந்து விட்டன!

இந்த நிலையில் நமது பாரத ராஷ்டிரபதி மாட்சிமைமிக்க நீலம் சஞ்சீவி ரெட்டியின் குடியரசு தினப் பிரசங்கத்தின் இரண்டு கேள்விகள் நம்பிக்கை தருவதாயிருக்கின்றன.

**“பெரும்பான்மை மக்கள் ஒன்றுபட்டு, குரல் எழுப்பாதிருப்பதால், அவர்களது நியாயமான தேவைகளைப் புறக்கணிக்கலாமா? என்று கேட்கிறார்.**

**வரும் தேர்தலில், மக்கள் தேர்ந்தெடுக்கப் போவது யாரை? தங்கள் ஊழியர்களையா? எஜமானர்களையா?”** என்று கேட்கிறார்.

இந்த உணர்ச்சி இன்றைய தேர்தல் மேதைகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும், கட்சிக் காளைகளுக்கும் வந்தால் நல்லது.

ஜனாதிபதி அவர்கள், மக்களுக்கு விடுத்துள்ள இந்த துணிச்சல் மிக்க உரையை ரேடியோவில் கேட்கும் போது, மகாகவி பாரதியாரின் கவிதைதான் மீண்டும் நம் நினைவுக்கு வருகிறது. மீண்டும் என்ன? நமது பயம் தீரும்வரை ஆயிரம் ஆயிரம் முறை இந்த மந்திரப்பாட்டை உருப்போட்டு மனம் மாற வேண்டும்!

**“தந்த பொருளைக் கொண்டே - ஜனம்**
**தாங்குவர் உலகினில் அரசரெல்லாம்!**
**அந்த அரசியலை - இவர்**
**அஞ்சுதரு பேயென்றெண்ணி நெஞ்சமயர்வார்!”**

என்று, அன்று - அடிமை நாட்டில் நமது மக்கள் கொண்டிருந்த அச்சத்தைப் போக்க வேண்டி, மகாகவி பாடினார்.

இன்று நமது மக்களின் தலைவன் சஞ்சீவி ரெட்டியும் அதே பொருள் தொனிக்கும் துணிச்சல் உரையை மக்களுக்குக் குடியரசு தினச் செய்தியாக வழங்கியமைக்கு, அவரை நன்றியுடன் பாராட்டுகின்றோம்.

இனியும் மக்கள் அரசியல்வாதிகளை எஜமானர்கள் என்று எண்ணிப் பயப்பட்டுச் சாகவேண்டாம். நாம் தரும் வரிப் பணத்தில் தேர்தல் செலவு செய்யப்படுகிறது. பார்லிமெண்டுகள், அசெம்பிளிகள், பஞ்சாயத்துக்கள், முனிசி பாலிடிகள் நடத்தப் பெறுகின்றன.

நம்மிடமிருக்கும் விலைமதிப்பற்ற வாக்குரிமையை பணிவுடன் கேட்டுப் பதவிக்குப் போகும் அவர்களைப் பொதுமக்கள் பொதுஜன ஊழியர்களாக எண்ணத் தொடங்கும் அந்தநாள்தான், இந்தியாவின் உண்மையான சுதந்திரநாள் என்பதையும் நினைவூட்டுகிறோம்.

நமது ஜனாதிபதி சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு தியாகங்களைச் செய்த **சிறந்த போர்வீரர்** ஆந்திர மாநில முதலமைச்சராகப் பல்லாண்டு மக்களோடு பழகி அவர்களது **அபிலாஷைகளை உற்றுணர்ந்தவர். மேலும், நமது ஜனாதிபதி ஒரு விவசாயி!** வெறும் வாய்ஜாலம் பேசும் அரசியல் வக்கீல் அல்ல; வறட்டுக் கட்சி வாதம் பேசுபவரல்ல; இன்று மாத்திரமல்ல; அவரது உள்ளம் அன்றே நிரூபிக்கப்பட்டது.

ஆந்தி கேஸரி தியாகப் பேருருவம் ஸ்ரீபிரகாசம், மகாத்மாஜி, பண்டித நேரு, பாட்டாளித் தலைவர் காமராஜ் இவர்களின்மீது, நமது ஜனாதிபதி வைத்திருந்த மரியாதையும், பெருமதிப்பும் வரலாற்றுச் சிறப்புமிக்க உண்மைகளாகும்.

கம்பீரமிக்க சஞ்சீவிரெட்டியின் குரல் என்றுமே, தமது இதயத்தின் கீதமாகவே ஒலிக்கும் பண்புடையது. உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசும் அரசியல் சூழ்ச்சியை என்றுமே விரும்பாதவர்.

1962-ல் அவர் காங்கிரஸ் இயக்கத்தின் தலைவராக இருந்தபோது, செய்த மகத்தான சாதனைகள் நாம் மறக்காமல் நினைவுபடுத்திக் கொள்ளத்தக்கவை! அதன்பின், பார்லிமெண்டின் நடுநிலைமைமிக்க தலைவராக வீற்றிருந்து தமது நாணயத்தை எல்லாக் கட்சிகளும் மெச்சும்படி நிலைநாட்டிய வீரர்! அரசியல் வாதிக்கு, கட்சி என்பது ஒரு படியே தவிர, அதுவே கோபுரமாகி விடாது. ஆகவே, கட்சிக்கு அப்பாற்பட்டு பெரும்பான்மையான பொதுமக்களுக்குரிய நன்மைகளைப் பற்றி நினைப்பவனே, இனி இந்திய அரசியல் பொறுப்பில் இடம்பெற முடியும் என்பதைத் தமது குடியரசு தினச்செய்தியில் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார். அவருக்கு நமது நன்றி.

இப்படி, ஒரு நம்பிக்கையை மக்களுக்கு குடியரசு தினத்தில் தந்த நமது ஜனாதிபதி நீலம் சஞ்சீவிரெட்டி அவர்களை வாழ்த்துகிறோம்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட ஒரு எளிய போர்வீரன் என்ற முறையில், ஜனாதிபதிக்கு என் வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு, 'இந்தியா எங்கே?' என்ற மக்களின் குரலை ஒருமுறை படித்துப் பார்க்கும்படியும் வேண்டுகிறேன். உங்கள் கருத்தைத் தெரிவிக்கவும் கோருகிறேன்.

# இந்தியா எங்கே?

## மனித சுதந்திரம்!

பஞ்சம், பசி, பட்டினி, பிணி, பிச்சைக்காரன், சோம்பேறித்தனம், வேலையில்லாத நொண்டிச் சமுதாயம் இவைகள் இல்லாத ஒரு புதுவுலகத்தைப் படைக்கத்தான் சோஷலிஸ இலட்சியம் தேவை என்று போராடினோம். அத்தகைய ஒரு இலட்சிய புது உலகத்தில் நாமும் ஒரு அங்கமாக இருக்க வேண்டும். தலை நிமிர்ந்து வாழ வேண்டும் என்பதற்காகவே பாரத சுதந்திரத்தைப் பெற்றோம். இந்த தேசத்தின் தலைவிதியை மாற்றி அமைக்க முயன்றோம். துரதிர்ஷ்டவசமாக அரசியல் சண்டையில் இலட்சியத்தை மறந்த நமது தீய அரசியல்வாதிகளால் நாடு காடாகி வருகிறது!

"அவர்களே இன்று, தேசத்தைப் பாதுகாக்க வாருங்கள்; ஆபத்து" என்கிறார்கள், ஆம்! உண்மை! நியாயமான எச்சரிக்கை! தேவையான காலத்தில் செய்யப்படுகிறது. உங்கள் குரலில் உள்ள ஆழ்ந்த பொருள் எமக்குப் புரிகிறது. நீங்கள் சுட்டிக்காட்டும் தேசீய விபத்தினை நாங்கள் அறிகிறோம். நீங்கள் சொல்வதை நூற்றுக்கு நூறு அப்படியே நம்புகிறோம். நீங்கள் என்னை நம்பாவிட்டாலும் நாங்கள் உங்களை நம்புகிறோம். நீங்கள் என்னை மதிக்கா விட்டாலும் நாங்கள் உங்களை மதிக்கிறோம்.

உண்மை உள்ளங்களையெல்லாம் உங்கள் அலட்சியத் தால் நீங்கள் புண்படுத்தியிருந்தாலும், அதையெல்லாம் மறந்து உங்கள் பேச்சில் இருக்கும் காலத்தின் உண்மையை உணருகிறோம்.

முப்பது ஆண்டுகளாக நீங்கள் இரக்கமின்றி வேண்டு மென்றே அழித்துப் பாழாக்கிவிட்ட தேசபக்தியின் மீது ஆணையிட்டுக் கூறுகிறோம். எங்களிடம் எஞ்சியிருப்ப தெல்லாம் எங்கள் உயிரும் தேசபக்தியும் தன்மானமும் தான்.

அதை நாங்கள் உங்களைப்போல் பட்டம் பதவி களுக்காக அடகு வைக்கவில்லை. கட்சி அரசியல் சூழ்ச்சி களுக்காக அந்த அரிய பொருளை விற்று விடவில்லை. தேசத்துக்கு வந்துவிட்ட ஆபத்தைப் பற்றி நீங்கள் சொல்லும் எச்சரிக்கை எங்களுக்கு நன்றாகப் புரிகிறது.

ஆனால் இந்நாட்டு ஏழை மகன் கேட்கிறான்:

"தேசத்தை எதற்காக யாருக்காக காப்பாற்ற வேண்டும்? இந்த நாட்டின் அரசியலைப் பயன்படுத்தி, கொள்ளை லாபமடித்து, தங்கள் சுயநல பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொள்ளும், ஒரு சிலர் நன்றாக வாழவா நாங்கள் இந்தத் தேசத்தைக் காக்க வேண்டும்?" என்று, வாழ்விலே ஒரு பலனையும் அனுபவிக்காத இந்த நாட்டின் தரித்திர நாராயணன் கேட்கிறான்!

சுதந்திர இந்தியாவில் ஒருவித சிறுவாய்ப்பையும் பெறாத வாலிபன். நன்கு படித்தும், வேலை கிடைக்காத இளைஞன், வேலை கிடைத்தும் சரியான கூலி கிடைக்கப் பெறாத அபாக்யசாலி, கூலி கிடைத்தும் அன்றாட அடிப்படைத் தேவைக்கு உரிய சாமான்களையே வாங்க முடியாமல் கடனிலே அவதிப்படும் இந்த நாட்டு ஏழை மகன் கேட்கிறான்.

"தேசத்தைக் காக்கும் சக்தி எங்களிடம் எங்கே இருக்கிறது? எங்களுக்கு இருக்க வேண்டிய ஆற்றலை யெல்லாம் இந்த நாட்டின் அரசியல் கட்சிகளல்லவா உறிஞ்சிவிட்டன! இந்த நாட்டில் ஜனநாயகம் எப்படி வாழும்? ஜனநாயகத்தின் சின்னமான ஓட்டுரிமையை பண நாயகர்கள், பத்து ரூபாய் கொடுத்து விலைக்கு வாங்கி விடுகிறார்களே! விற்கும் நிலையில் மக்களை வைத்து

*விட்டீர்களே! சுதந்திரத்தால் வந்த மனித உரிமையான வாக்குரிமையை, கேவலம் பத்து ரூபாய்க்கு விலை போட்டு வாங்கும் அரசியல்வாதிகளின் ஆதிக்கத்திற்கு இங்கு இடம் கொடுத்துவிட்ட பிறகு, சோஷலிஸ ஜனநாயகத்தைப் பற்றிப் பேசி என்ன பயன்?" என்று விரக்தியடைந்த, வாழ்க்கையில் தோல்வியடைந்த, பொருளாதார ஏற்றத்தாழ்வால் சலிப் படைந்த, இந்த நாட்டுமக்கள் கேட்கும் அவலக் குரல் நம் காதிலே கசப்பாக விழுகிறது!*

*இனிமேல் இந்த நாட்டை அழிக்க எவரும் துப்பாக்கியைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. இங்கே வேலையில்லாமல் வறுமையில் வாடும் வாலிபர் களையே தங்களுடைய படைகளாகப் பயன்படுத்திக் கொள்ளும் அளவிற்கு துணிச்சல் வந்து விட்டது. இந்த நிலையிலும் இந்தியாவில் இருக்க வேண்டிய அளவுக்கு தேசபக்தி இல்லை! இதற்குக் காரணம் என்ன?*

*சுதந்திரம் வந்தவுடனே, அதிகாரத்தைப் பங்கு போட்டுக் கொள்வதில் அக்கறை கொண்ட கட்சிக்காரர்கள், இந்த நாட்டில் மக்களுக்கு தேசபக்தியைப் போதிக்கும் கடமையைச் செய்ய அறவே மறந்து விட்டார்கள்! மறுத்தும் விட்டார்கள். இவர்கள் மறந்து போன கடமையைச் செய்ய வந்த சில தேசபக்தர்களையும் எள்ளி நகையாடினார்கள். அவரவர்களின் கட்சி அரசியல் - தேர்தல் திருட்டுத்தனந் தான் அவர்களுக்கு பெரிதாகத் தெரிந்ததே தவிர, இந்த நாட்டைக் காக்க வேண்டிய வாலிப உள்ளங்களில், நீக்கமற நிறைந்திருக்க வேண்டிய நாட்டன்பை நல்லதொரு துணிச்சலை, எதற்கும் அஞ்சாத வீரத்தை ஊட்டத் தவறி விட்டனர்.*

*மற்ற நாடுகளிலிருந்து வரும் வாலிபர்களைக் கண்டு நீங்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர் என்று கேட்டால், "நான் ரஷ்யன், தேசபக்த வீரப் போரில் நாசிகளை எதிர்த்து வெற்றி பெற்றோம்! நான் அமெரிக்கன், நான் ஆங்கிலேயன், நான் பிரஞ்சுக்காரன், நான் கனடியன், நான் எகிப்தியன், நான் ஆப்பிரிக்காக்காரன்" என்று தலை நிமிர்த்தி நெஞ்சு*

யர்த்தி, கண்களிலே நம்பிக்கை ஒளி வீச அழுத்தமாகப் பதில் சொல்லுவான். ஆனால் பாவம், ஆயிரம் வேற்றுமைகளில் அல்லற்பட்டு அழியும் இந்தியனோ மங்கிய குரலில் ஒளி யிழந்த பார்வையோடு இதயத்திலே ஒரு பிடிப்புமில்லாமல் 'நானும் ஒரு இந்தியன்தான்' என்று இழுத்தபடி கூறுகிறான். அவனுடைய வாய்ச் சொல்லில் வலுவில்லை. உள்ளத்திலே தெளிவில்லை. உடம்பிலே உரமில்லை, கண்ணிலே ஒளி யில்லை. இந்த வீரச் செல்வங்களையெல்லாம் அவனுக்குத் தேடிக் கொடுத்திருந்தால் இன்று இந்தியா உலகிலேயே சிறந்த நாடாக விளங்கி இருக்கும்.

இப்பொழுது காலங்கடந்து எச்சரிக்கை செய்ய முன் வந்திருக்கும் தலைவர்களுக்கு ஒன்று கூறிக் கொள்வோம். பெரியவர்களே! நீங்களெல்லாம் மிக உயர்ந்தவர்கள், ஆனால் இளைஞர்களது எழுச்சிகளைப் புரிந்து கொள்ளத் தவறியவர்கள்! நாடு இன்று இருக்கும் நிலைமைக்கு காரணம் நீங்கள் செய்த அரசியல் தவறுகள்! பொருளா தாரக் குற்றங்கள்! தேர்தல் திருவிளையாடல்கள்! இவை களை இன்று கடைசி நேரத்தில் உணர்ந்திருக்கிறீர்கள். இப்போதாவது உள்ளத் தூய்மையோடு எல்லோரும் ஒன்று சேருங்கள். நீங்கள் கூறுகிறபடி சுதந்திரம் தான் முக்கியம் என்றால், சுயநல வேறுபாட்டால் ஏற்பட்ட கோஷ்டிப் பிரிவினைகள், உட்குழுக் குறும்புகள், பிச்சைக் காரப் புத்திகள், கோபதாபங்கள், குற்ற யுக்திகள் எல்லாம் தீரவேண்டாமா?

எல்லோரும் ஒன்று சேர்ந்தால்தான் இந்தியாவைக் காக்க முடியும்! இல்லையேல், நம்நாடு எத்தனை துண்டு களாகுமோ, யார் யாருக்குகந்தபடி எந்தெந்த நிலையில் எப்படி எல்லாம் அடிமைச் சந்தைகளாகுமோ! துரோகி களின் கூடாரங்களாகுமோ என்ற அச்சத்தாலும், வேதனை யாலும், வெம்பிக் கருகி உயிர் துடித்துக் கொண்டிருக்கும், ஏழை மக்களின் இதயக் குரலை இனியாவது நீங்கள் கேட்க வேண்டும்! அப்போதுதான் நீங்கள் சொல்வதை அவர்கள் கேட்பார்கள்.

இந்த லட்சணத்தில்...

இந்தியாவின் சுதந்திரத்திற்கு முப்பதாண்டு விழாவும் கொண்டாடி விட்டோம்.

இப்போது நடக்கும் சில பெரியவர்களின் பிறந்த தின விழாக்களைப் போல், அவ்வளவு ஆடம்பரமாக இல்லா விட்டாலும் ஏதோ பாவம் சுதந்திர விழா ஆயிற்றே என்று உலகத்துக்காக பயந்து ஏதோ வேண்டா வெறுப்பாக கொஞ்சம் சுமாராக நடத்தினோம்.

விடுதலை வந்து ஒரு தலைமுறை கழிந்துவிட்டது. இந்த நாடு... தன் விதியைத்தானே வகுத்துக் கொள்ளும் உரிமை யைப் பெற்று 30 ஆண்டுகள் ஓடி விட்டன.

இந்தியச் சுதந்திரத்தின் பலாபலன்களைப் பற்றி அறிந்து கொள்ள உலகமே ஆர்வமோடு காத்திருக்கிறது.

நம்நாட்டின் 30 ஆண்டு லாப நஷ்டக் கணக்கை உலகின்முன் படைக்க நாம் மிக மிகக் கடமைப் பட்டி ருக்கிறோம். **கடனும் பட்டிருக்கிறோம்**. அப்படி நாம் இந்த உலகுக்குச் சமர்ப்பிக்கப் போகும் லாப நட்டக் கணக்கு, புத்திசாலிகள் எழுதிய லாபக் கணக்காக இருக்குமா? அல்லது புதிய வியாபாரி தீட்டிய லாபமும் இல்லாத நட்டமும் இல்லாத நடுநிலைக் கணக்காக அமையுமா? அல்லது லஞ்ச ஊழல் நிறைந்தவர்கள் எழுதிய தணிக்கை செய்ய முடியாத அளவு தவறுதல் நிறைந்த கள்ளக் கணக்காக இருக்குமா? என்பது பற்றி உலகந்தான் கணித்துச் சொல்ல வேண்டும்.

உலகம் சொல்வது ஒரு பக்கம் இருக்கட்டும். நமக் நாமே சமாதானம் சொல்லிக் கொள்ள வேண்டும். நட மனச்சான்று நம்மைப் பார்த்து... பின்வரும் கேள்விகளை கேட்டவண்ணம் இருக்கும்.

'ஏ! மனிதா! நீயும் மனித உருவுடன் திரிகிறாய். விடுதலை வீரன் என்று பெருமை பேசிக் கொள்கிறாய். விடுதலையால் வரும் நல்ல பலன்களை யெல்லாம்

அனுபவிக்கிறாய். உலகமும் உன்னை பெருமையோடு பார்க்கிறது.

உனக்கும் உன் சந்ததியாருக்கும் ஒரு கௌரவத்தைத் தேடித் தந்திருக்கிறது சுதந்திரம், படிக்காத முட்டாளாய் படுத்துக் கிடந்த உன்னை படித்த மேதாவியாக்கி இருக்கிறது, நீ பெற்ற விடுதலை இருட்டிலே கிடந்த உன்னை வெளிச்சத்துக்கு அழைத்து வந்திருக்கிறது.

சட்டைக்காரனைக் கண்டு சலாம் போட்டுக் கொண்டிருந்த உனக்குச் சட்டபடி சமத்துவத்தை அளித்திருக்கிறது. தாழ்ந்தவன் பிள்ளை தாழ்ந்தவனாகத்தான் இருக்க வேண்டும், ஏழையின் குழந்தை ஏழ்மையில்தான் சாக வேண்டும், என்ற இருண்ட வழக்கத்தை மாற்றி, எல்லோரும் முன்னுக்கு வர ஒரு சமசந்தர்ப்பத்தைத் தந்தது.

"சுதந்திரமே வேண்டாம். என்றென்றும் வெள்ளைக் காரனின் அடிமைகளாகவே இருப்போம். பதவிக்காக துரைமார்களின் காலைப் பிடிப்போம்" என்று கூறிய மீளா அடிமைகள்கூட, விடுதலையின் பெருமையை உணர்ந்து வாழும்படிச் செய்தது. வாழ்த்தும்படி செய்தது. அது மட்டுமா? அவர்கள்கூட ஆட்சிப் பொறுப்பை ஏற்று உயர வழிவகுத்துத் தந்தது.

சுதந்திரத்துக்கு முன், வெளிநாட்டில் இந்தியன் என்றால் கூலி வேலை செய்யும் **அடிமை,** என்று தான் பொருள். தாம் பிறந்த பொன்னாட்டை விட்டு விட்டு ஒப்பந்தக் கூலிகளாக, கங்காணிகளின் அடிமைகளாக, முதலாளி களுக்குக் கால் பிடிக்கும் அடைப்பக்காரர்களாக, தோட்ட வேலைக்காக உலகின் பற்பல தீவுகளுக்கும் சென்ற அவலத்தை இன்னும் வரலாறு மறந்து விடவில்லை. இப்போதும் ஆயிரக்கணக்கில் இந்தியர்கள் வெளிநாடு களுக்குச் செல்கிறார்கள். ஆனால், அன்று போல் அடிமை களாக அல்ல; கூனிக் குறுகிய கூலிகளாக அல்ல. அச்சத்தில் அழிந்த அகதிகளாக அல்ல. உணர்ச்சி இல்லாத பேடிகளாக அல்ல! வட்டி வாங்குபவர்களாக அல்ல!

இன்று அயல் நாடு செல்லும் இந்தியன், தலை நிமிர்ந்து நிற்கும் வீரனாக, தறுகண்மை நிறைந்த தக்கோனாக, பார்ப்போர் மதிக்கும் படிப்பாளியாக உயிர் காக்கும் டாக்டராக, புதிய இயந்திரங்களை இயக்கும் எஞ்சினியராக, அறிவுப்பசி நீக்கும் தத்துவப் போதகனாக, அறியாமை நீக்கும் ஆசிரியனாக, காலத்தை வெல்லும் கலைஞனாக, முன்னேறிய நாடுகளில் விண்ணேறிச் செல்லும் விஞ்ஞானிக்கு யோசனை கூறும் அறிஞனாக, அரசியல் ஞானியாக, சமாதானத் தூதுவனாகச் சென்று உலகத்தின் உயர்ந்த அறிவுப் பீடங்களில் அரியாசனம் பெற்று வருகிறான். அவனுக்குத் தெரியும் சுதந்திரத்தின் பெருமை என்னவென்று.

இங்கே, உன் கிராமத்தைவிட்டு அப்பால் நகராமல் குண்டு சட்டிக்குள் குதிரை ஓட்டும் உனக்கு என்ன தெரியும் சுதந்திரத்தைப் பற்றி?

ஏதோ பத்து ரூபாய் கொடுத்து ஓட்டை விலைக்கு வாங்குவது, நீயும் ஒரு குட்டித் தலைவனாவது, அந்தத் தலைமைப் பதவியை நல்ல லாபத்திற்கு - நல்ல கமிஷனோடு - மற்றொரு அரசியல் திமிங்கலத்துககு விற்பது, வந்த தரகுப் பணத்தைக் கொண்டு வாய்க்கு ருசியாகத் தின்பது, வயிறு நிறையக் குடிப்பது. வழியில் செல்வோரிடம் வம்பு செய்வது, சுகமாகத் தூங்குவது, நிதி வசூலிப்பது, விழா கொண்டாடு வது, ஊர்வலம் வருவது... உனைக்கண்டு எல்லோரும் எழுந்து நிற்க வேண்டும் என்று நீ எதிர்பார்ப்பது– இதுதான் சுதந்திரத்தினால் வந்த பலனா?

ஜனநாயக நாட்டில் ஜனங்களை, ‘ஏமாற்றிய வரை வெற்றி, அனுபவித்த வரை இன்பம், ஜனங்கள் ஏமாந்தி ருக்கும் வரை பதவி’ இதற்கு ஊரையே கலக்கிக் கொண்டி ருக்கும் உனக்குச் சுதந்திரத்தின் பெருமை தெரிந்திருக்க நியாயமில்லை.

இதுவரை தெரியாவிட்டால் இப்போதாவது தெரிந்து கொள். “வேண்டாம், நான் தெரிந்து கொள்ள வேண்டிய

அவசியமில்லை. உன்னைப் போன்ற ஏமாளிகள்தான் சுதந்திரத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பார்கள்" என்று சொல்கிறாயா? அப்படியெல்லாம் சொல்லாதே. நீ உன் நன்மையை முன்னிட்டாவது இதைக் கொஞ்சம் தெரிந்து கொள்ளத்தான் வேண்டும்.

நீ இப்போது அனுபவிக்கும் மாடி வீடு, ஆடும் ஊஞ்சல், பாடும் கலைகள், பறக்கும் மோட்டார்கள், பிணத்துக்கும் ஆசை ஊட்டும் சுவைமிக்க உணவு, போதை யூட்டும் மதுபானங்கள் இவை யெல்லாம் இன்னும் கொஞ்ச நாளைக்கு நீடிக்க வேண்டுமானால் நீ கூட கொஞ்சம் சுதந்திரத்தைப் பற்றி நினைக்கத்தான் வேண்டும்.

உனக்காக இல்லாவிட்டாலும் பிறத்தியார் உன்னை ஏதோ கொஞ்சம் தெரிந்தவன் என்று மதிக்க வேண்டு மானால் நீ சுதந்திரத்தின் கதையையும் தெரிந்து கொள்வது நல்லது.

"ஆ, என்ன சுதந்திரம்? எனக்கு மட்டும் தெரியாதா? ஏதோ வெள்ளைக்காரனுக்கு நம் மேல் வெறுப்பு ஏற் பட்டு விட்டது. விட்டு விட்டுப் போய்விட்டான். இங்கு இருப்பவன் விடுதலைக்காக என்ன செய்து விட்டான்?

"ஏதோ சந்தர்ப்பவசத்தால் வெள்ளைக்காரனுடன் ஒப்பந்தம் பேசி, பதவிகளில் ஒட்டிக் கொண்டான். பல வருஷம் அனுபவித்தார்கள் வயதாகி விட்டது. செத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது நாங்கள் அனுபவிக்கி றோம். எங்களைப் போலவே பின்னால் வருபவர்களும் அனுபவித்துக் கொண்டே இருப்பார்கள்.

"இது எல்லா நாடுகளிலும் எழுதப்படும் ஒரு தேசியத் தொடர் கதை. தலைவர்கள் நிறைய தியாகம் செய்து சுதந்திரத்தைப் பெற்றார்கள் என்பாய்! இவர்களை யார் தியாகம் செய்யச் சொன்னது? மட்டும் நாங்கள் நினைத்தி ருந்தால் எங்கள் அடுக்குச்சொல் ஆயுதத்தைக் கொண்டே அயலானைத் துரத்தியிருப்போம்"

ஐயா சொல்லழகா கேள்! எல்லா நாடுகளையும் போல உன் நாட்டையும் நீ எடை போடாதே. இந்த நாட்டுக்குத் தனித்ததொரு பெருந்தன்மை உண்டு.

உலகிலே உயர்ந்த மலையாகிய இமயமலை இங்கிருப்பது போல், 'உலகில் உயர்ந்த மனிதாபிமானம் என்ற மாபெரும் செல்வம்' இந்த நாட்டில் இமயமலையை விட உயர்ந்ததாக ஒரு காலத்தில் இருந்தது. அந்தப் பொற் காலத்தை மீண்டும் இந்நாடு பெற வேண்டுமென்று.... பெரியோர்கள் நினைத்தபோது நாம் எதிர்பாராதவாறு அன்னிய ஆட்சி இங்கே ஆதிக்கம் பெற்றது. ஆம்..

## விஞ்ஞான உலகம்

**மா**னிட சரித்திரத்தில் மிக மிக முக்கியமான காலத்தில் இந்திய நாடு அடிமைப்பட்டுக் கிடந்தது. கி.பி. 17-18-19ம் நூற்றாண்டுகளில்தான் புதிய புதிய விஞ்ஞான சாதனங்களை மனிதன் கண்டுபிடித்தான். இயற்கையோடு போட்டியிட்டு இயந்திர வலிமையை வளர்த்துக் கொண்டி ருந்தான். மேற்கு நாடுகள் சுறுசுறுப்போடு இயங்கிக் கொண்டிருந்த அந்தக் காலத்தில்தான் இந்தியா அடிமை உறக்கத்தில் அஞ்ஞானக் குறட்டைவிட்டுக் கொண்டி ருந்தது.

தாய் நாட்டின் பழம் பெருமையை மறந்து, வருங்காலக் கடமையும் துறந்து, அன்று கிடைத்த நிகழ்காலத்து அற்ப சுகங்களுக்காக இந்தியன் தன்மானத்தை அன்னியர் பலருக்கும் அடகு வைத்திருந்தான்.

அத்தகைய இருண்ட காலத்தில்தான் இங்கிலாந்தின் கப்பல் வியாபாரிகள் இந்தியக் கரைகளிலே வட்டமிட்டு வந்திறங்கினர். அவர்கள் இங்கே வெற்றி பெறுவதற்கு பெரிய படைகளைக் கொண்டு வரவில்லை. கண்ணாடிச் சாமான்கள், கட்டழகுப் பொருள்கள், பிரித்தாளும் சூழ்ச்சி, கருத்தழிக்கும் திராட்சை ரசம், கொல்லும் வெடி

மருந்து, ராஜதந்திரம் என்னும் நயவஞ்சகம் இவைகளையே ஆயுதங்களாகக் கொண்டு வந்தார்கள்.

இங்கிருந்து கொண்டு போனது, நவ ரத்தினங்கள், முத்துக் குவியல்கள், மிளகு, ஏலம், கிராம்பு, தந்தம் போன்ற சிறந்த செல்வங்கள். அத்துடன் இந்தியரின் தன்மான உணர்ச்சியையும் ஏற்றுமதி, செய்ய முயற்சித்தார்கள். இந்தியர்களின் கைத்தொழில்கள் தகர்க்கப்பட்டன. உரிமைகள் பறிக்கப்பட்டன. பொருளாதாரம் அழிக்கப்பட்டது.

இங்கே ஒற்றுமையின்றி தனிக்காட்டு ராசாக்களாக இருந்த மன்னர்களையும், மடையர்களையும் மாய வலைவீசி மயக்கி வைத்தான் வெள்ளைக்காரன். ஏமாந்த சில இஸ்பேட் ராஜாக்களை இஷ்டம்போல் மொட்டையடித்ததோடு மூடர்களாகவும் ஆக்கி விட்டான். தாய் நாட்டுக்குத் துரோகம் பண்ணப் பயிலும் துரோகப் பள்ளியே வைத்து விட்டான்.

வாணிபச் சாலையில் வெடி மருந்தை நிரப்பினான். அதை வேற்றுமைப்பட்ட சுதேச வேந்தர்களுக்கு விற்றான். விலையைப் பணமாக வாங்காமல், நிலமாக வாங்கினான். இந்த புத்திசாலி ராஜாக்களும் அவன் கேட்டபடி இடங்களைக் கொடுத்துக் கொண்டே இருந்தனர். வந்தவன் வளர்ந்து கொண்டே இருந்தான். இங்கே இருந்தவன் தளர்ந்து கொண்டே இருந்தான்.

வாங்கிய நிலத்தைச் சதிபல பேசிச் சாசனமாக்கிக் கொண்டான்.

கூடாரம் அடித்த அவன் கோட்டைகள் கட்டலானான். மர வீட்டில் வசித்த அவன் மாளிகைவாசி யானான். இவ்வாறு ஒண்ட வந்த பிடாரி ஊர்ப்பிடாரி ஆகி விட்டது.

பிழைக்க வந்த நாடோடி புலியாகும் தகுதி பெற்றான். இவ்வளவு தூரம் வெள்ளையன் முன்னேறிய பிறகுதான், இந்திய ராசாக்களுக்கு ரோசம் பொத்துக் கொண்டு வந்தது.

இருந்த பலத்தைக் கொண்டு எதிர்த்துப் போராடினார்கள். கட்டுப்பாடான பகைவனை சிதறிக்கிடந்த சுதேசிகளால் ஓட்ட முடியவில்லை.

அவனிடம், நவீன பீரங்கிகள் இருந்தன. இவர்களுக்கு அந்தச் சாதனங்கள் மிகவும் குறைவு. ஆகையால் வீர மிருந்தும் வெற்றி காண முடியவில்லை.

இப்படியாக சுதந்திர கோபுரத்தில் ஏறத்துடித்த இந்திய வீரம், முதற்படியிலேயே தடுக்கி வீழ்ந்து முழங்காலை முறித்துக் கொண்டது. இச்சமயம் பார்த்து ஆங்கிலேயன் தனது சக்தியைப் பலப்படுத்திக் கொண்டான். அதற்கான சகல முயற்சிகளிலும் சாகசமாக வெற்றி பெற்றான்.

1857-இல் இந்தியாவில் எழுந்து குமுறிய எரிமலைப் புரட்சி அடங்கியது போல் காணப்பட்டாலும், நீறு பூத்த நெருப்பாகத்தான் இருந்தது. அடுத்த ஐம்பது ஆண்டுகளில் அந்த எரிமலை நாடெங்கும் பரவலாகக் கிளம்பிற்று. சீறியெழுந்து, பகை நெருப்பை வாரி வாரி வீசியது.

சுகமான சிங்காரத்தில் வீற்றிருந்த பிரிட்டிஷ் சிங்கத்தை நமது எரிமலைகளின் சீற்றம் பயமுறுத்தியதே தவிர, பழி வாங்க முடியவில்லை. இடையில் இந்திய எழுச்சிக்கு ஒரு அணை போட்டபோது முதல் உலக மகாயுத்தம் (1914-16) வந்து குறுக்கிட்டது. உலகை எண்ணிக் கொஞ்சம் ஓய்வு கொண்டது நமது விடுதலைப் பாசறை.

போர் முடிந்தது. வெள்ளையன் சொன்னபடி நடக்க வில்லை. அதற்கு மாறாக நடந்தான். விடுதலைப் புரட்சியின் அஸ்திவாரத்தையே அழிக்கத் திட்டமிட்டான். இந்தியரை என்றுமே மீளா அடிமைகளாய் கட்டியாள எண்ணி, அடக்கு முறையை அவிழ்த்து விட்டான். வீரரை வேட்டை யாடினான். மடிந்தனர்; மாய்ந்தனர்; மாவீரர்கள்.

யுத்தத்தின் ஞாபகார்த்தப் பரிசுகளாக இந்தியர்களுக்கு பஞ்சாப் படுகொலை, ரௌலட் சட்டம், பீரங்கிக் குண்டுகள், ஆயுள் தண்டனை, தூக்குமேடை, தடியடி இவைகளைத் தான் அள்ளி அள்ளிக் கொடுத்தது ஆங்கில ராஜதந்திரம்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆண்மையின் எழு ஞாயிறாகத் தோன்றிய அறிவின் இளங்கதிரோன் திலக மகான். தேசபக்தியை நாடெங்கும் பரப்பி நல்லதொரு போராட்டச் சூழ்நிலையைப் பண்படுத்தி வைத்தார். அவர் போட்ட சுதந்திர விதையை மக்கள் மன வயல்களில் மேலும் தூவி, பருவத்தே மக்கள் மன வயல்களில் மேலும் தூவி, பருவத்தே பயிர் செய்யும் பொறுப்பு **காந்தி மகான்** கைக்கு வந்தது.

1928-ல் நாடெங்குமுள்ள தலைவர்களின் தலை களை தடிகளால் அடித்துப் பதம் பார்த்தது அரசாங்கம். அதில் பலியானார் பாஞ்சால சிங்கம் லாலா லஜபதிராயும் ஆயிரமாயிரம் வீர வாலிபர்கள் ஆவி நீத்தனர்.

மகாத்மா காந்தியடிகள் பாரத தேசமெங்கும் பிரயாணம் செய்து, விரிவானதொரு பொதுமக்கள் இயக்கத்தை உருவாக்கினார். மூலைமுடுக்கில் எல்லாம் தேசபக்தியைப் பரவச் செய்தார். படித்த சிலரையும் பொதுமக்கள் பல கோடிப்பேரையும் தமது புதிய போர்முறைக்குத் தகுந்தபடி பழக்கினார்.

## நாகரிகப் போர்!

வெள்ளையன் ஆயுத பலத்தால் மட்டும் நம்மை ஆளவில்லை. அறிவின் சூழ்ச்சியாலும் ஆளுகிறான். ஆகவே முதலில், அவன் அறிவில் உள்ள கோளாறை போக்கினால் தான் ஆதிக்க வெறியைப் போக்க முடியும் என்ற நுட்பத்தை நாட்டவருக்கு விளக்கமாகச் சொன்னார். வியாபாரியின் சூழ்ச்சியை வீரத்தின் நேர்மையால் வெல்ல எண்ணினார்.

கோடானு கோடி மக்களைத் தமது காந்த சக்தியால் கவர்ந்தார். தியாக சக்தியால் செயல்படச் செய்தார். சுதந்திர ஊற்றை உள்ளத்தில் ஊறச் செய்தார். சிறந்த செல்வாக்கும் மக்களின் நம்பிக்கையையும் நிரந்தரமாகப் பெற்றார். ஒரு

சேனாதிபதி வீரர்களை பழக்குவது போல், அவர் விடுதலைப் படையைப் பழக்கவில்லை. ஒரு பொறுப்புள்ள தாயார் தனது பலவீனமான குழந்தைகளை எச்சரிக்கையோடு வளர்ப்பதுபோல், வலிமையிழந்து வாடிக் கிடந்த இந்தியர் களின் அடிமை நோயைப் படிப்படியாக நீக்கினார்.

துணிச்சலான எண்ணத்தை, தெளிவான வீரத்தை, அழியாத ஞானத்தை ஏழை இந்தியருக்கும் புரியும்படி சொல்லி இதயத்தில் பதிய வைத்தார்.

அவர் இட்ட கட்டளையை நிறைவேற்றக் காத்துக் கொண்டிருந்தது ஒரு அரசியல் ஸ்தாபனம். அதிலே பற்பல ஞானமணிகள், வீர மாணிக்கங்கள் அங்கம் வகித்தனர். இந்து, முஸ்லீம், கிறிஸ்தவர், பார்சி, சீக்கியர், பணக்காரன், ஏழை, புத்திமான், பாமரன், தீவிரவாதி, மிதவாதி, பட்டதாரி, பராரி என்ற பலஜாதி மத, மொழி கொள்கை இனவர்க்கத்தைச் சேர்ந்தவர்களையெல்லாம் அரசியல் விடுதலைக்காக ஒன்று சேர்த்துக் கட்டிக் காத்தப் பெருமை இந்த ஸ்தாபனத்துக்கே உரியதாகும். இதை அவர் தன் வயப்படுத்தினார். ஆயுதங்களால் தீர்க்கப்பட்ட அரசியல் தலைவிதிகளை, அறிவால் தகர்க்க முடியும் என்றதொரு அமைதியின் சூழ்நிலையை நாட்டில் உண்டாக்கினார். உலகில் நல்லவர் உள்ளமெல்லாம் இந்தச் சாதனையை வாழ்த்தி வரவேற்றது! அரசியலில் இது ஒரு புதிய முயற்சி.

இந்த அமைதிப் புரட்சியை, புதிய வழியைக் கண்ட பழைய வெள்ளையன் நம்மை பலவீனர்கள் என்று எண்ணத் தலைப்பட்டான். பல ஆண்டுகளில் பல கட்டங்களில் மெதுவாக முன்னேறியது புதிய புரட்சி!

இரண்டாவது உலகப் போர் வந்தது. இங்கிலாந்து நடுங்கிப் பதறியது. நிலைமை நமக்குச் சாதகமானது. ஏளனம் செய்த வெள்ளையரை கடைசிவரை கௌரவமாகவே நடத்தினார் காந்தியடிகள்.

ஆனால் ஆதிக்க வெறி பிடித்த அவன் கலங்கிய மூளைக்கு, கருணாமூர்த்தியின் நல்ல எண்ணம் புரியவில்லை.

அவர் பொறுமையையும் சோதித்துவிட்டான். "கடைசி பாரதப் போர்" என்று முழக்கமிட்டார். "ஏகாதிபத்தியமே வெளியே போ!" என்று அவனுக்கும், 'இந்தியனே! செய், அல்லது செத்து மடி!' என்று நமக்கும் கட்டளை பிறப்பித்தார்.

இச்சமயத்தில் தூரக் கிழக்கிலிருந்து தலைவர் நேதாஜி "சகோதரர்களே, அண்ணல் ஆணையை உடனே நிறை வேற்றுங்கள். இதோ நானும் வருகிறேன். டில்லி சலோ!" என்று சங்கநாதம் செய்தார். பம்பாயில் கடற்கரை புரட்சிக் கனலைக் கக்கி எழுந்தது.

## நல்ல நாள் வந்தது

சிறையிலிருந்த நம் தலைவர்கள் வெள்ளையன் வெளியே போக நல்ல ஒரு நாள் குறித்துத் தந்தனர். அந்த நாள் வந்தது. 1947 ஆகஸ்ட் 15, கோட்டையிலே விடுதலைக் கொடி பறந்தது. கப்பல் ஏறியது வெள்ளையாட்சி. கைப்பற்றினோம் ஆட்சி பீடம். வியாபாரியாக வந்தவன் 'வீரனாக' வெளியேறினான். என்றென்றும் நாம் வியாபாரி களிடம் வெகு எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதற்கு வெள்ளையாட்சி ஓர் எடுத்துக்காட்டு. போகும் போது கூட இந்த நாட்டின் எதிர்காலத்துக்கு ஒரு எச்சரிக்கையாக, பாரத நாட்டை இரண்டு நாடுகளாக்கி விட்டுச் சென்றான். இந்தப் பாடத்தையும் நாம் மனத்தில் நன்றாகப் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். வெள்ளையர் சென்ற பிறகும் இங்கு பல புத்திசாலிகள் பேசிக் கொள் வதை நாம் பார்க்கிறோம்.

அதாவது வெள்ளையன்தான் கருணை கூர்ந்து, கஷ்டப் பட்டு இந்த நாட்டை ஒன்று படுத்தினானாம். இதை எப்படி, யார் நம்புவது? பாவம், அவன் எப்போது ஒன்று படுத்தினான்?

ஐநூறுக்கு மேற்பட்ட ராஜாக்களுக்குக் கொள்ளையில் பங்கு கொடுத்து, தனித்தனியாகத் தானே தயவாகத்தானே,

வைத்திருந்தான். அந்த மீசைக்கார ராசாக்களும் விளை யாட்டுப் பிள்ளைகள் போல் ஆளுக்கு ஐம்பது கல்யாணத் தையும், அவர்கள் வீட்டு நாய்களுக்கு ஆறு கல்யாணத்தை யும் செய்து கொண்டு தானே இருந்தார்கள். ஆகையால் வெள்ளையரை இந்த விஷயத்தில் நாம் நம்புவதற்கில்லை. பதவி பெற்ற அறிவாளிகள் வேண்டுமானால் நம்பலாம்.

## பெருமைப் படத்தக்க நிலைமை

சிதறிக்கிடந்த சுதேச சமஸ்தானங்களை முதன் முதலாக ஒன்று சேர்த்து ஒரு தேசமாக்கிய பெருமை நமது மாபெரும்வீரர் படேலுக்கே உரியதாகும். அயர்ந்து கிடந்த ஆசியாவுக்கே இந்திய விடுதலை மூலம் ஒரு அந்தஸ்தை உண்டாக்கியப் பெருமை நமது பண்டித நேரு அவர்களைச் சாரும். நம்மை எதிர்த்தவருக்கும் இரக்கம் காட்டி நேசத்தை வளர்த்து சேவையிலேயே தமது ஆவியை அர்ப்பணித்து உலக ஜோதியான பெருமை அண்ணல் மகாத்மாவையே சாரும். முன்னேறும் ஒரு நாட்டில் பிரதம மந்திரி எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு ஒரு மனித இலக்கணமாக வாழ்ந்து காட்டியவர் லால்பகதூர் சாஸ்திரி. போர்முனை வெல்லவும், ஏர்முனை பெருகவும், ஊர்மனம் செழிக்கவும், உத்தம நெறி காட்டிச் சென்ற ஒருவன் - திருக்குறளைப் போன்ற தூயவன் - அகத்தியனைப் போன்ற அறிஞன் - அவன். அதற்குப் பின் வரும் பிரதம மந்திரிகளுக்கு ஒரு பாடமாக பழுதற்ற முன்னோடியாக, வெற்றி வீரனாக, லட்சிய ஜோதியாக வாழ்ந்து சென்ற வழிகாட்டி, நண்பன், நாணயமுள்ள தலைவன். இத்தகைய லட்சியத் தலைவர்கள் வாங்கியதுதான் இந்திய விடுதலை!

பல ஆயிரம் ஆண்டுகளாக கிடைக்காத ஒரு பாக்கியம் நமது பாரத நாட்டுக்குக் கிடைத்திருக்கிறது. அந்த அரிய செல்வத்தை வருங்காலத்தில் நாம் எப்படிக் காப்பாற்றிக் கொள்ளப் போகிறோம் என்பதை இன்றே நிச்சயம் செய்து கொள்ள வேண்டும்.

வந்த சுதந்திரம் வெறும் வாய்மொழியால் வந்தது அல்ல. பல நூற்றாண்டுகளாய் பற்பல போர்க்களங்களில் நமது பாரத வீரர்கள் வெட்டுண்டபோது பெருகிய இரத்த ஆறுகள், நமது பாரத சுதந்திரம் பயிருக்குரிய நீராகப் பாய்ந்தது! என்பதை மறந்து விடக்கூடாது. பீரங்கி முனையில் பஞ்சு பஞ்சாகப் பிய்த்தெறியப்பட்ட நம் சகோதரர்களின் எழில்மிக்க உடலங்கள் எல்லாம் நாம் அனுபவிக்கும் சுதந்திரச் சோலைக்குரிய உரமாக்கப்பட்டன, என்பதையும் மறவாமல் இதயத்தில் பதித்துக் கொள்ள வேண்டும். தூக்கு மேடைகளை முத்தமிட்ட தியாகச் சுடர்களின் உண்மைச் சேவை. வாளேந்திப் போர் புரிந்த வீரமாதரின் உளத்துடிப்பு. நீலன் போன்ற காலர்களிடம் அகப்பட்டுச் சித்ரவதை அனுபவித்த இந்நாட்டுப் பெண்கள், குழந்தைகள், கிழவர்கள், கிழவிகள், இவர்கள் பட்டபாடு! இவற்றையெல்லாம் நமது நெஞ்சத்தின் ஒவ்வொரு அணுவிலும் பதித்துக் கொண்டால்தான் வந்த சுதந்திரத் தைப் பாதுகாப்பதற்கேற்ற நிரந்தரமான வழி நமக்குப் புலப்படும்.

எத்தனை லட்சம் பேர்கள்! எப்படி எண்ணுவது! பெரும் புயலில் விழுந்த பச்சை மரங்களை எண்ணி விடலாம். வாடியுலர்ந்து கருகி வீழ்ந்து கால வெள்ளத்திலே மறைந்து போன மலர்களையும், இலைகளையும், காய்களை யும், கனிகளையும் சரித்திர ஆசிரியர்கள் கூடக் கணக் கெடுக்க முடிவதில்லை. ஆகவே, ஊர்பேர் தெரியாமல் உயிரையிழந்த லட்சோப லட்சமான அந்த லட்சிய வீரர்களுக்கு, நமது நன்றியின் அஞ்சலியைச் செலுத்துகி றோம். நமக்காக மறைந்த மாவீரர்களோடு தோளோடு தோள் நின்று போராட்டத்தில் ஈடுபட்டு இன்றும் உயிரோடு இருக்கும் சில உத்தமர்களுக்கும் நமது சிரந்தாழ்ந்த வணக்கங்கள் உரியதாகும். போர் புரிந்து அமரர்களாகி விட்ட மாணிக்கங்களுக்கிருந்த துணிச்சலும், தூய்மையும், தியாக புத்தியும் நமக்கு ஓரளவாவது வர வேண்டும் என்று வேண்டி முயற்சிக்க வேண்டும். அப்போது தான் நமது நாட்டுக்குரிய நமது கடமைகளை குறைவின்றி

நிறைவேற்றும் சக்தி நமக்கு உண்டாக முடியும். நாம் நமது தியாக ஜோதிகளை வணங்குவது உண்மையென்றால், வீரவழிபாடு செய்வது சத்தியமானால், அவர்கள் வாங்கித் தந்த விடுதலைச் செல்வத்தை எப்பாடுபட்டேனும் காக்க வேண்டிய தகுதிகளை நாம் பெற்றே ஆகவேண்டும்.

## எச்சரிக்கை அவசியம்

இது வேகமான அணுயுகம். கொஞ்சம் நாம் ஏமாந்தாலும் போதும். காரியம் கெட்டுப் போகும். உதவி செய்வதிலும், உதவி பெறுவதிலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

ஒன்றுபட்ட இந்நாடு உலகரங்கில் ஒளி வீசி விளங்க வேண்டும். நமது சந்ததிகள் தீரர்களாய் வாழும்படி வளர்க்க வேண்டும்.

நமக்கும் பல பிரச்சினைகள் இருக்கலாம். அதற்காக அந்நியர் மத்தியஸ்தத்தை நாடக் கூடாது. சண்டையோ சமரசமோ நம் தலைவிதியை நாமே தான் தீர்த்துக் கொள்ள வேண்டும். இதுதான் சுதந்திரத்தின் ஆரம்பப் பாடம். அமர ஓசை, தன்மான நெடுங்கணக்கின் முதலெழுத்து.

"செப்பு மொழி பதினெட்டுடையாள், எனில் சிந்தனை ஒன்றுடையாள்" என்பதோடு சேர்ந்து வாழும் மனப் பான்மை இந்தியர் எல்லோருக்கும் இதயபூர்வமாக வளர வேண்டும்.

இந்த ஒற்றுமை பண்பாட்டுக்கு விரோதமான ஓட்டைக் காரியங்கள் நாட்டின் எந்த மூலையிலாவது நடந்தால், அந்த மக்கள் மறுபடியும் யாருக்காவது அடிமைப் பட ஆசைப்படுகிறார்கள் என்று தான் அர்த்தம்.

ஆகவே இந்த ஒரு கொள்கையில் நாம் மிக மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இந்த ஒரு காரியத்தில்

மட்டும் ஆட்சி, அரசியல், மொழி, மற்றெதுவும் குறுக்கிடா மல் நம்மை நாமே கண்காணித்துக் கொள்ள வேண்டும்.

நாட்டின் ஒற்றுமைக்கு மாறாக தலையெடுக்கும் தீய சக்தி, நாட்டை மாற்றானுக்குக் காட்டிக் கொடுககும் நயவஞ்சகம், என எண்ணி அவ்வஞ்சத்தை வேரறுக்க வேண்டும்!

எந்த வட்டாரத்திலிருந்து பிரிவினை வந்தாலும், அதை அந்நியர் படையெடுப்பைப் போலவே, எண்ணி எதிர்க்க வேண்டும்.

இந்தக் கடமையுணர்ச்சியை நமக்கு நினைவு படுத்தும் தியாக ஜோதிகளுக்கு நமது பணிவான அஞ்சலியைச் செலுத்து வோமாக.

அஞ்சலி செலுத்துவதோடு, நமது தெளிந்த அறிவிலே ஒரு மாறாத சுதேச வைராக்கியமும் நாட்டுப்பற்றும் வளர வேண்டும். உலகம் நம்மை மதிப்போடு பார்க்க வேண்டும்.

## உண்மையின் இதயம்!

ஆம், இன்று ஆசியாவின் இதயமாக இருக்கும் இந்தப் புனித நாடு, நாளை உலகத்தின் இதயமாகவும் மாறலாம். அது நமது நடத்தையைப் பொறுத்திருக்கிறது. நமது நாட்டுப் பற்றினையும் நாணயத்தையும் மனிதாபிமானத்தை யும் உலக உறவையும் பொறுத்துத்தான் நமது மதிப்பு உயரும். அந்த உயர்வுக்கு உரியபடி நமது மனமும் செயலும் இயங்குமாக.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று ஊருக்கு உபதேசம் செய்துவிட்டு உள்ளுக்குள்ளே சில்லரைச் சண்டை போடக் கூடாது. திருக்குறளைப் பற்றி தினசரி பேசிவிட்டு திருட்டுக் காரியங்களைச் செய்யக் கூடாது. பகவத் கீதையை பாராயணம் செய்துவிட்டு பேடிப் பயல்களாய் இருட்டிலே ஓடிப் பதுங்கக் கூடாது. புற

நானூற்றை முழுங்கி விட்டு புறமுதுகை காட்டி ஒதுங்கக் கூடாது.

உலகரங்கத்தில் நமது நாடும் ஒரு அங்கம் என்ற எண்ணம் வேண்டும். மேலோர்கள் வாழ்ந்த இந்நாடு மீண்டும் ஒருமுறை தனது மகோன்னதமான சிறப்பைப் பெற்று விளங்கிட வேண்டும்.

## இன்றைய நிலை

இது நாம் எதிர்பார்க்கும் சமுதாயம். ஆனால் இன்று நாம்காணும் வாழ்க்கை ஒரு சீரழிந்த சித்திரமாக அல்லவா இருக்கிறது. நல்லவன் அல்லல் படுகிறான்... கெட்டவன் சுகமடைகிறான். யோக்கியமானவன், நோய்க்கு மருந்துகூட வாங்கமுடியாமல் சாகிறான். அயோக்கியன் ஆடம்பரமாக வாழ்கிறான். தேசபக்தன் பட்டமரமாகித் தெருவிலே நிற்கிறான். தேசத்துரோகி அந்தப் பட்ட மரத்தை வெட்டித் தன் அடுப்பிலே எரித்துக் குளிர் காய்கிறான். குலப் பெண்கள் தங்கள் மனப் பொருமல்களை வெளியே சொல்லக் கூட முடியாமல் குமுறி அழுகிறார்கள். மற்ற வர்கள் எல்லா சிறப்புகளையும் பெற்று வீதியிலே ஊர்வலம் வருகிறார்கள்.

இயற்கையழகு எரித்துக் கரியாக்கப்படுகிறது. செயற்கைச் சிங்காரம் சிந்தையை அடிமையாக்குகிறது. வாங்குபவன் வறிஞனாகிறான். விற்பவன் வள்ளலாகிறான். குழந்தைகள் உணவில்கூட கலப்படம் செய்யும் கள்ள வியாபாரி சேர்மன் பதவி வகிக்கிறான். மகாவஞ்சகன் கூட மந்திரியாகிறான்! குடிகாரன் உபதேசியாகிறான். குற்றவாளி நீதிபதியாகிறான். காமுகன் கண்ணகிக்குக் கோயில் கட்டுகிறான். கள்ளுக்கடைக் காரன் காந்திக்கு சிலை வைக்கிறான். கசாப்புக் கடைக்காரன் ராமலிங்க சுவாமிக்கு மடம் கட்டுகிறான். கோயில் பூசாரி சிலையைக் கொள்ளையடிக்கிறான். வரிகட்டும் குடிமகன் கைகட்டி நிற்கிறான். வரிப்பணத்தால் பிழைக்கும் அரசாங்க

யந்திரம் வெறி கொண்டு ஆணையிடுகிறது. ஆட்டிப் படைக்கிறது. ஆணவம் காட்டுகிறது!

நம்மிடம் ஏதோ ஒன்றைச் சொல்லி ஓட்டை வாங்கிப் பதவிக்குப் போனவுடன் குரங்கு மாதிரி இடம் மாறி விடுகிறான் அரசியல்வாதி. அவனை ஏனென்று கேட்பதற்கு இந்த நாட்டுச் சட்டமும் இடம் கொடுக்கவில்லை. நமக்கு போதிய துணிச்சலும் இல்லை. துணிந்து கேட்டால் நூறு கட்சி மாறுவது, நுட்பமான அரசியல் என்பான். இப்படியே போய்க் கொண்டிருந்தால் இந்த நாட்டின் எதிர்காலம் என்ன கதி ஆகும்?

இந்தக் கேவலமான நிலை இந்த நாட்டில் ஏற்படுவதற் காகவா... நம்முடைய மாபெரும் வீரர்கள் தங்கள் உடல் பொருள் ஆவி அனைத்தையும் தியாகத்தின் வீர பீடத்திலே பலி கொடுத்தார்கள்?

உலகத்தின் பெரியோர்களால், "மிக உயர்ந்தவன்' எனப் போற்றப்பட்டவனும், இங்கிலாந்து பார்லிமெண்ட் அங்கத்தினன் ஆனவனும், 1906-ம் ஆண்டிலேயே ஐரோப்பிய சோஷலிஸ்ட் மாநாட்டில் இந்திய ஏழ்மை நிலையைப்பற்றி விளக்கியவனும் இந்திய சுதந்திர இயக்கத்தின் முதுபெரும் கிழவன் என்ற மரியாதைக்குரியவனுமான **தாதாபாய் நௌரோஜி** என்ற தனிப் பெரும் முதல்வன், பிரிட்டிஷ் சிங்கத்தை அதன் கூண்டுக்குள்ளேயே சென்று ஆட்டிப் படைத்தானே அது எதற்கு?

இன்று நாம் காணும் இந்த கண்ணருவி சுதந்திரத்தைக் கண்டு மகிழ்வதற்குத் தானா?

## சுதந்திரம் நமது பிறப்புரிமை:

**உ**லகின் மேதைகளெல்லாம், போற்றும்படியாக பேராசிரியப் பெருந்தகை, வீரத்தின் வித்தகன், போர்க்களத் தளபதி, தாய்க்குலத்தை தலைவணங்கிப் போற்றிய பண் பாட்டின் தந்தை, ஆண்மை மிக்க ஆசிரியன், தன்மானத்தின்

தனிப்பெருமை இலக்கணம், கல்விக்கடலின் கரைகண்டவன், கீதைக்குப் புதிய உரை தந்தவன், தேசமும், தெய்வமும் ஒரே பொருள்தான் என்ற தெளிவைக் காட்டியவன்.

தன் ஆருயிர் நீப்பினும் அதர்மத்தைக் கண்டு அஞ்சாத ஆண்சிங்கம்தான் தள்ளாத வயதில் தாய்த் திருநாட்டில் அடிமை விலங்கறுக்க பல ஆண்டுகள் கடுங்காவல், தண்டனை பெற்றவன், நாடு கடத்தப்பட்டவன் மராட்டிய மாநிலம் தந்த மாபெரும் தியாகமூர்த்தி **லோகமான்ய பாலகங்காதர திலகன்,** தன் இறுதி மூச்சுவரை **"சுதந்திரம் நமது பிறப்புரிமை. அதை அடைந்தே தீருவோம்"** என்று கர்ஜித்தானே, அது எதற்கு? இன்று நாம் காணும் தரங்கெட்ட வாழ்வின் திறங்கெட்ட சமுதாயத்தைக் காண்பதற்காகவா?

## செக்கிழுத்த செம்மலும், சிங்கத் தலைவன் சிவாவும்!

**எ**ந்தவொரு எதிர்ச் சக்தியையும் எரிக்கும் கதிர்ச் சக்தியாக விளங்கிய எழில்மிக்க வீரம், கட்டுறுதி உள்ள உடல், கருணை மிக்க நல்லமனம், கண்ணிலே புதிய ஒளி காரியத்தில் வைராக்கியம், பரம்பரையின் பெரிய குணம் ஆயிரக் கணக்கான சுற்றத்தார், அரசபோகம், ஆங்கிலேயர் களும் அஞ்சும் அரசியற்புலமை.... பணமழை பொழியும் வக்கீல் தொழில், பாசமிக்க குடும்பம், ஆசைத்துணைவி, பூசனைக்குரிய பெற்றோர், பேசற்கரிய பெரியோர், உயிரினும் இனிய நண்பர், உற்றார், உறவினர், தமிழின் புதிய ஜீவன் எனக் கருதப்பட்ட தனதரும் நண்பன் மகாகவி பாரதி, ஆகிய இத்தனைச் செல்வங்களையும் பெற்ற மேலோன்! தன் நாட்டின் விடுதலைப் போரில் ஈடுபட்டுக் கப்பலோட்டிய தமிழன், கன்னித் தமிழ்க் காவலன். தொழிலாளர்களின் துணைவன், வந்தவர்க்கெல்லாம் வரையாது கொடுத்த வள்ளல், உண்மையின் இமயம், உணர்ச்சியின் எரிமலை.

இவன் பேரைக் கேட்ட அளவிலேயே ஆங்கிலேய ஆட்சி அஞ்சி நடு நடுங்கும் ஆற்றல் மிக்கவன், தென் பாண்டிய நாட்டில் தேச பக்தியை வெள்ளம்போல் பாய்ச்சிய தளபதி **தேசபக்தர் சிதம்பரனார்.**

தனது நண்பர் சிவாவுடன் இரு ஜென்ம தண்டனை பெற்று.... கடுங்காவற் சிறையிலே.... கொடுமையை அனுபவித்து.... கல்லுடைத்து... செக்கிழுத்து.... புழுக்கள் நெளியும் களியைத் தின்ன முடியாத நிலையில், பல நாட்களைத் தனிமையில் கழித்து, தன் உயிர் குன்றிய போதும், உரம் குன்றாத தலைவனாக, தன்மானத்தின் குன்றாக, "சுதந்திரம் சுதந்திரம்" என்ற வீர முழக்கம் செய்து வெற்றிப்பறை முரசாற்றினானே... எங்கள் கொற்றவன் சிதம்பரம்! எதற்காக? குற்றுயிர்ப் பிணம் போல் சாவதா? பிழைப்பதா? என்ற சந்தேகத்தில் இன்று ஊசலாடுகிறதே... இந்த சுதந்திரத்தைக் காணவா எங்கள் வ.உ.சி. செக்கிழுத் தான்? சீரழிந்தான், செத்தொழிந்தான்? சொல்லடா தம்பி சொல்! இந்தக் கேடு கெட்ட சுதந்திரத்திற்காகவா கோடி கோடி வீரர்கள் பாடுபட்டார்கள்? சொல் தம்பி!

## கொடி காத்த குமரன்

உயிர் போகும்வரை, "**நாடு நாடு சுதந்திரம் சுதந்திரம்**" என்று கதறினானே கொடி காத்த குமரன் அவனென்ன பைத்தியக்காரனா, பணக்காரனா, பதவி பித்தனா, வாழத் தெரியாதவனா? இல்லை. நல்ல வாலிபன்! உன்னையும் என்னையும் போல வாழ வேண்டியவன், வாழத் தெரிந்தவன், எழில் ததும்பும் செல்வியை மனைவியாகப் பெற்றவன்! இதயத்திலே ஆசைக் கனவுகளை வளர்த்துக் கொண்டவன், எதற்காக தாயின் மணிக் கொடியை ஏந்தினான்? தெருவிலே பவனி வந்தான்? வந்தே மாதரம் என்றான்? மண்டை ஓடு பல சுக்கலாக வெடித்து மூளைக் குள்ளே பாயும் வரை, ஒரு கூலிப் போலீஸ்காரனிடம் அடிபட்ட போதும், "வந்தே மாதரம்" என்று வாய்

கோணாமல் முழங்கி, சுதந்திரம் சுயராஜ்யம் என்ற வார்த்தையைத் தனது இறுதி மூச்சோடு கலந்து, நமது இதயத்து முத்திரையாக்கி விட்டானே திருப்பூர் குமரன்! மானங்காத்த மனிதன். எதற்காக தம்பி எதற்காக.

சந்தர்ப்பவாதிகளின் சந்தையாகி, பாவிகளின் கைப் பாவையாகி மரணப் படுக்கையிலே துடிக்கிறதே இந்த ஈனமான சுதந்திரத்தைக் காண்பதற்காகவா எங்கள் குமரன் செத்தொழிந்தான்! பதில் சொல் தம்பி! பேசாமல் இருந்தால் என்ன அர்த்தம்! பதில் சொல் தம்பி!

## வீரவிளக்கு

மிகப்பெரிய கலையறிவு! அழகுக் கலைகளை ரசிக்கும் கலா ரசிகன், கிரேக்கம், லத்தீன், ஆங்கிலம், பிரெஞ்சு, சமஸ்கிருதம், செந்தமிழ் ஆகிய மொழிகளின் ஆழ்ந்த கவிக் கடலில் நீந்தும் அறிவுடைப் புலவன், பன்மொழி மேதை! பார் அட்லா! உலகத்திலிருக்கின்ற உயர்ந்த காவியச் சோலைகளையெல்லாம் கண்டு அனுபவித்தவன். கம்ப னெனும் மானிடனை, கவிச்சக்கரவர்த்தியின் காத்தத் தமிழின் காவியப் பெருமைகளை, ஆங்கிலத்தில் உலகுக்குச் சொன்னவன், திருக்குறளின் தெளிவை, தேர்ந்த ஆங்கிலப் புலமையிலே உலகுக்குத் தந்தவன், தமிழில் சிறுகதை இலக்கியத்திற்கு முதல் வழிகாட்டி, தமிழில் திறனாய்வு இலக்கிய மதிப்பீட்டு முறைக்கு முதல் வழிகாட்டி. வீர விளக்கு வ.வே.சு. ஐயர்!

லண்டன் மாநகரில், ஏகாதிபத்தியம் கண்டு நடுங்கும் படியாகப் புரட்சிக் கனல் வளர்த்துப் புதுமை செய்தானே? எதற்காக! போலிகளின் இருட்டறையாக, புல்லர்களின் கூடாரமாக இருக்கும் இன்றைய சுதந்திரத்தைக் காண்பதற் காகவா? சொல் தம்பி சொல்?

## எரிமலை!

"இவனை மட்டுமல்ல இவன் பிறந்த குடும்பத்தின் கடைசி ஆள்வரை - இவன் பிறந்த சித்பவன் வம்சாவளியின் கடைசி முனைவரை - எரித்துச் சாம்பலாக்கினாலன்றி பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் இந்தியாவில் நிலைத்திருக்க முடியாது" என்று ஆங்கிலேயர் அஞ்சி அலறும்படியாக, எதிரியின் மண்டையில் புரட்சி ஆணிகளை அடித்து, அவன் அறிவைச் சின்னாபின்னமாக்கிக் கொண்டிருந்த... அஞ்சா நெஞ்சன்! விடுதலை வேள்வியின் வீர விஸ்வாமித்திரன்; அஞ்சிப் பிழைக்கும் எலிகளை ஆண்மைப் புலிகளாக்கிய சட்ட மேதை காலிலும் - கையிலும் கடுவிலங்கைப் பூட்டிய போதும், கனலும் விழியோடு காறிஉமிழ்ந்து சிரிப்பான். அந்தமான் தீவா? அனுப்படா மடையா? அதுவும் என் அரண்மனைதான்", என்று அன்னியர் தனக்குக் கொடுத்த சொல்ல முடியாத சித்ரவதைகளை அழகின் சித்திரங்களைப் போலப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தானே 'வீரவிநாயக தாமோதர சாவர்க்கார்' இந்தப் பெயரை நீ கேள்விப் பட்டிருக்கிறாயா தம்பி? இவனும் உன்னைப் போல மனிதன்தான். இல்லை, இல்லை... உன்னையும் என்னையும் விட அதிகமாகப் படித்துப் பட்டம் பெற்ற சட்டமேதை! பகலெல்லாம் தூங்கிவிட்டு, மாலை நேரங்களில் மலர்ப் பூங்காக்களிலே எலெக்ஷன் பிரசங்கம் செய்து என்னரும் மக்களை ஏமாற்றவல்ல சொல்லழகனல்ல அவன்? சுதந்திரப் போரின் தளபதி! சுழன்றடிக்கும் சூறாவளி!

அவன் சொல்லிலே சுதந்திரத்தின் கனல் பறக்கும்! அவன் செயலிலே எதிரிகளின் தலை பறக்கும்! அடுக்குச் சொல் அழகனல்ல, போர் தொடுக்கும் செயல் வீரனவன். வாள் பிடிக்கும் அவன் கையில் வரலாற்றுப் பேனா விளையாடியது. எழுச்சி மிக்க "எரிமலை" என்ற வரலாற்று நூலின் பேராசிரியன் இவன்தான். தான் செய்த தியாகத் திற்கு, பட்டபயங்கரமான வேதனைக்கு ஆறுதலாக, ஒருநாள் கூட அவன் மந்திரியானதில்லை. ஒரு முனிசிபல் வட்டக் கவுன்சிலர் பதவிக்குக்கூட அவன் ஆசைப்பட்டதில்லை.

என்ன தம்பி! வியப்பாயிருக்கிறதா! இன்னும் கேள்! அவனுக்கு யாரும் பொன்னாடை போர்த்தவில்லை. பொற்கிழி அளிக்கவில்லை. புதிய கார் பரிசு தரவில்லை. வழியனுப்பு வரவேற்பு விழாக்களை அவன் சந்திக்கவில்லை. இந்நாட்டின் விடுதலைக்காகப் போரிட்டு மடிந்த அந்த வீரத்தளபதி அனுபவித்த ஒரே ஒரு விழா... அவனது கடைசி ஊர்வலந்தான். அதையும் பாவம் அவன் காணவில்லை. எப்படிக் காண முடியும்! அவனுடைய உடம்பைக் கூட, சந்தனக் கட்டையில் எரிக்கச் சொல்லவில்லை. சமாதி வைக்கச் சொல்லவில்லை. 'இறந்தபின் ஒரு ஏழையைப் போல என் உடம்பையும் எலக்டிரிக் அடுப்பிலே போட்டு விட்டு, அவரவர் வேலையை கவனியுங்கள். அழுது கொண்டிருக்காதீர்கள். ஆண்மையோடு கடமையைச் செய்யுங்கள். தொழுது பிழைக்காதீர்கள். துணிச்சலோடு வாழுங்கள். தேச விடுதலையைக் காப்பாற்றுங்கள்!" என்று கூறிய அந்த மாவீரன் இறந்து பட்டொழிந்தானே எதற்காக?

அசடுகளும் கசடுகளும் பஞ்சைகளும் பாவிகளும் வஞ்சகப் பூசாரிகளாகப் பவனி வருகிறார்களே....; இந்தப் பதர்களெல்லாம் வாழத்தானா? அந்த மாவீரன் பாடு பட்டான்?

## தூக்குமேடை

இருபத்திரண்டே ஆண்டுகள்! இரும்பு போன்ற இறுகிய தசைகள்; எஃகு போன்ற வலிமையான நரம்புகள்! எழில் ததும்பும் திருமுகம்! சுடர் பறக்கும் விழிகள்! மலை கலங்கினாலும் நிலை கலங்காத நெஞ்சுரம்! அரும்பு மீசை! அணையாத ஆசை! சிரிக்கும் உதடு! சிந்திக்கும் பார்வை! செம்மையின் சீலம்! சிதறாத கொள்கை! உறங்கிக் கிடந்த தாய் நாட்டை உலுக்கி எழுப்பிய புரட்சிவேகம்! ஒடுங்கிப் போன சமுதாய மனச் சான்றினை ஓங்கிக் கேட்கும்படி செய்த உண்மையின் கூக்குரல்! உணர்ச்சியின் எதிரொலி! புரட்சியின் களப்பலி!

தனது தாய் நாட்டின் சுதந்திரத்துக்காக.... தமது விலைமதிப்பற்ற உயிரை அர்ப்பணித்தார்களே, சர்தார் பகத்சிங், ராஜகுர, சுகதேவ் இவர்களைப் பற்றி உனக்குத் தெரியுமா தம்பி! இவர்கள் மேடை ஏறி ஜனங்களை பேச்சால் ஏமாற்றியவர்கள் அல்ல! தூக்கு மேடை ஏறி நம் மானம் காத்த மாவீரர்கள்! திருமணக் கயிற்றை அவர்கள் தொட்டுப் பார்த்ததில்லை! தூக்குக் கயிற்றைத்தான் முத்தமிட்டார்கள். கண்டாலே மனம் நடுங்கும் கொடிய லாகூர்க் கோட்டைதான் இந்த இளைஞர்களுக்கேற்ற மாமனார் வீடாக இருந்தது. அதற்காக அவர்கள் என்ன கண்ணீர் வடித்தார்களா? கவிதை பாடினார்களா? பத்திரிகை நடத்தினார்களா? போஸ்டர் போடச் சொன்னார்களா? இல்லை. அப்படி எதுவும் அவர்கள் செய்யவில்லை. அத்தகைய அற்ப ஆசைகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட சிங்கங்கள்! "அடல் ஏறுகள் - கடல் ஆறுகள்!" என்றெல்லாம் நீட்டி முழக்குவாயே தம்பி! அதற்கு இலக்கணங்களாக வாழ்ந்து காட்டியவர்கள்!

அவர்கள் கடைசியாக என்ன குரல் கொடுத்தார்கள் தெரியுமா? "இனம் வாழ்க" என்றார்களா? ஜனம், ஜாதி, மதம், பட்டம், பதவி, மனை, மக்கள், பணம், பாட்டில், சொத்து, சுகம், கட்டில், காடு, கரை, "இவைகள் வாழ்க" என்று கதறினார்களா? இல்லை. "இந்த நாடு சுதந்திரமடைய மக்களுக்கொரு மனப் புரட்சி தேவை; அதற்குத் தியாக உரம் தேவை; அந்த உரத்திற்கு எமது உயிர்களே உறுதியான அடித்தளம் அமைக்கட்டும்; எங்கள் தியாகத்தால் இமயம் முதல் குமரிவரை உள்ள எம் நாட்டு இளைஞர்கள் அதிர்ந்து எழுவார்கள். புரட்சி வீரர்களாவார்கள். அந்தப் புரட்சி வாழ்க" என்று லாகூர் கோட்டையில் அவர்கள் எழுப்பிய இதய ஒலிதான் இந்த நாட்டின் இமய ஒலியாக எங்கும் கேட்டது!

இவர்கள் எதற்காக உயிரை விட்டார்கள்? தின்று கொழுத்துத் திண்ணைச் சோம்பேறிகளாய், உண்டு உறங்கி ஊர் சுற்றும் தலைவர்களாய், கண்டது காட்சியாய்,

கொண்டது கோலமாய், சிற்றின்பச் சிட்டுக் குருவிகளாய், சிரித்து அழிக்கிறார்களே... இந்த அழியும் நாட்டுக்காகவா அவர்கள் சுதந்திரம் கேட்டார்கள்? புரட்சி செய்தார்கள்? இன்னுயிர் நீத்தார்கள்?

இந்த பிச்சைக்கார சுதந்திரத்திற்குத்தானா எண்ணில்லா மேதைகள் இறந்தொழிந்து பட்டார்கள்? இதற்காகவா பாரதி பரணி பாடினான்? இதற்காகவா தாகூர் தெய்வகீதம் இசைத்தான்? இந்த மட்டமான சமுதாயத்தைக் காணவா மகாத்மா முப்பது ஆண்டுகள் கடுந்தவம் கிடந்தார்?

இதற்காகவா அன்னை கஸ்தூரி தேவி சிறையிலே... பலியானார்?

இதற்காகவா தில்லையாடி வள்ளியம்மை உயிர் நீத்தாள்? - பால சுந்தரம் பரதவித்தான்?

இதற்காகவா பண்டித நேரு பதினான்கு ஆண்டுகள் தண்டனையடைந்தார்? இதற்காகவா ராஜன்பாபு சத்யா கிரகப் போர்க்களம் கண்டார்? இதற்காகவா சந்திரசேகர ஆஸாத் பறவையைப்போல் சுட்டுக் கொல்லப் பட்டான்?

சோம்பேறிகள் சுகம் பெறத்தானா எங்கள் சுபாஷ் பாபு சுதந்திர வேள்வியில் சுடர்விடும் ஜோதியானான்?

சதிகாரர்கள் ஜெயம் பெறத்தானா சுப்பிரமண்ய சிவா உடல் அழுகிச் செத்தான்? விடுதலைக் கீதமிசைத்தான்? வாஞ்சிநாதன் வெஞ்சமர் புரிந்தான்?

பாவிகள் பிழைக்கத்தானா.. பாலகன் பாபுகானின் தலை சூறைத் தேங்காய்ப் போல் வெடித்துச் சிதறியது?

அயோக்கியர்கள்... சுகம் பெறத்தானா அஜய்கோஷ் அவதிப்பட்டான்? இதற்காகவா காட்டே, டாங்கே, சக்கரைச் செட்டியார், திரு.வி.க., வாடியா போன்றவர்கள் தொழிற்சங்க வரலாற்றினைத் துவக்கி வைத்தனர்?

இதற்காகவா சர்தார் பட்டேல் பர்டோலியை குருக்ஷேத்ரமாக்கினார்?

*இதற்காகவா ஆஸாத் ஆருயிர் நீத்தார்?*

*நோய் வந்து ரத்தம் கக்கிய போதும், முதுகெலும்பின் மூட்டு முறிந்த போதும், இந்திய சுதந்திரத்திற்காகவே கடைசிவரை கர்ஜனை செய்தானே நாவலன், சொல்லின் செல்வன் சத்திய மூர்த்தி. இதற்காகவா சாகும் வரை சண்டை போட்டான்?*

இதற்காகவா ஜீவானந்தம்
ஜீவன்போகும் வரை பாடுபட்டார்?
இதற்காகவா முத்துராமலிங்கத்தேவர்
தியாகக்கனல் மூட்டினார்?
இதற்காகவா வரதராஜுலு நாயுடு
பெரியார் - ராஜாஜி - காமராஜ்
திரு.வி.க போன்ற பெரியவர்கள்
சொல்லரிய வேதனைகளை அனுபவித்தனர்?
இன்னும் எத்தனை எத்தனை ஏழைத்தோழர்கள்
பெயர் தெரியாத கண்மணிகள்
உயிர் வெறுத்து மறைந்தது
இந்த சுதந்திரத்திற்காகத்தானா?

*இந்தக் கொடுமையை நாம் காண்பதற்காகவா கோடானு கோடி மக்களைப் பலி கொடுத்தோம்? குடும்பங் களை இழந்தோம்? பந்தபாசங்களைத் துறந்தோம்? ஏமாளிகள் ஆனோம்?*

*இதற்காகவா மகாத்மா காட்டிய வழியிலே மகத்தான தியாகங்களையெல்லாம் செய்தோம்?*

*இதற்காகவா சத்தியச் சமர் புரிந்தோம்? இதற்காகவா கூலிப் போலீஸ்காரன் கொடுத்த தடி, அடி, உதைகளை யெல்லாம் சகித்துக் கொண்டோம்? போரிலே பட்டெரிந்த பச்சை மரங்கள் எத்தனை? எப்படி எண்ணுவது? எவர் எண்ணிப் பார்க்கிறார்கள்?*

*இதற்காகவா பஞ்சாப் படுகொலை? இதற்காகவா வங்காளப் பஞ்சம்? இதற்காகவா நவகாளியாத்திரை?*

இதற்காகவா இந்திய தேசீய ராணுவம்? ஓர் இமய 'ரலாற்றைப் படைத்தது? சே! போடா தம்பி, போ! ன்றுமே புரியவில்லை! போக்கிரிகளின் சொர்க்கந்தானா தப் பொல்லாத நாடு?

இந்த நாட்டில், கடவுள் கல்லாகி விட்டது! அறிவாளி கோழையாகி விட்டான். வாலிபன் வலிவிழந்து விட்டான். குமரி கிழவியாகி விட்டாள். கிழவன் கிண்ணரங் கொட்டு கிறான்! குழந்தை குரூபமாகி விட்டது. கலை - கொலையாகி விட்டது. கல்வி காவியாகி விட்டது! கோடிக்கணக்கான செல்வம் பாழ்! பாழ்! இந்த நாட்டுக்குப் பயன் தர வேண்டிய பல நல்ல விஞ்ஞானிகள் - எஞ்சினியர்கள் - டாக்டர்கள் அரசியல் தொல்லை தாங்காமல் அயல் நாடுகளுக்கே சென்று விட்டார்கள்.

இந்த நாட்டில் எதுவும் நடக்கிறது! இங்கே ஒரு வினோதமான ஜனத் தொகையைப் பார்க்கிறோம்! கெட்டது வாழ்கிறது; நல்லது நடுங்குகிறது!

இங்கே பாம்புக்குப் பாலூற்றுகிறார்கள்! நாய்க்கு நகை போடுகிறார்கள். திருடனுக்கு அடி வருடுகிறார்கள். கல் நெஞ்சனும் கவி பாடுகிறான். காமுகன் கற்புக்குக் 'காவல்' இருக்கிறான். இவ்வளவும் சுதந்திர நாட்டிலே நாம் காணும் அன்றாட வேடிக்கைகள்! தம்பி வேடிக்கைகள்!

இதைப் போல்... சுதந்திர நாட்டின் வினோதக் கதையை வேடிக்கையாகச் சொல்லிக் கொண்டே போகலாம். நீங்களும் கேட்டுக் கொண்டே ரசிக்கலாம்; ஆனால், இப்போது நேரம் இல்லை! இன்று, ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும்...!?

## நமக்கு சுதந்திரம் வேண்டுமா? வேண்டாமா?

வேண்டுமானால், அதைக் கட்டிக் காப்பாற்ற சில கடமைகளை நாம் செய்தே ஆக வேண்டும்!

இந்த நாட்டிலே பாதுகாப்போடு வாழ வேண்டு மானால், நம்முடைய மனைவி மக்கள், மானம் மரியாதை யோடு இருக்க வேண்டுமானால், இந்த நாட்டின் சுதந்திரத்தை நாம் காப்பாற்றித்தான் ஆகவேண்டும்.

நாம் வசிக்கும் வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்கி றோம். பாதுகாப்புக்காகக் கதவை மூடி வைக்கிறோம். இதே போல், நாட்டில் மலிந்து கிடக்கும் எண்ணில்லாத கொடுமை களை, அழுகிப் போன கேடுகளை அகற்றிச் சுத்தப்படுத்தியே ஆகவேண்டும். நம் நாட்டு எல்லையின் கதவுகளாகவும் அரண் களாகவும் இருந்து நம்மைக் காப்பாற்றும் நமது வீரப் படைகளை உற்சாகம் குன்றாமல் காப்பாற்ற வேண்டும்.

நம் நாட்டில் ஏர்முனையும் போர்முனையும் நன்றாக இருக்கிறது. அதனால் தான் பட்டினியின்றி நாம் உயிர் வாழ்கிறோம். இரண்டு படையெடுப்புகளைச் சமாளித்தோம். பாரத விடுதலையும் பறிபோகவில்லை.... ஆனால், இந்த இரண்டு சக்திகளும் முனை மழுங்காமல் இருக்க வேண்டு மானால்.... பொது மக்களாகிய நம்முடைய அன்றாட கடமை களை நன்றாக செயல்புரிய வேண்டும். இன்று, இந்தியாவில் நடக்கும் உள்நாட்டு அரசியல், சமுதாய, மொழி, இன, சாதி, மத, கட்சிச் சண்டைகள், கள்ள வியாபாரம், பொய், சூது, வஞ்சகம், பொறாமை, லஞ்சம், போக்கிரித்தனம், போலித் தனம் இவைகளையெல்லாம் பார்க்கும் ஏர் வீரனான உழவன், "இப்பேர்ப்பட்ட மக்களுக்காகவா நாம் இத்தனை பாடுபட்டு உணவு உற்பத்தி செய்கிறோம்?" என்று கேட்க ஆரம்பித்தால் நமது கதி என்னவாகும்?

இவற்றைப் பார்த்த இந்நாட்டுப் போர்வீரன்... "இந்தக் கேடு கெட்ட மக்களுக்காகவா நாம் இமயத்தின் எல்லையில் நின்று - இரவு பகல் கண்விழித்து உடல் விரைத்து இந்த நாட்டைப் பாதுகாக்கிறோம்?" என்று கவலையோடு நம்மைப் பார்க்கிறான்; பெருமூச்சு விடுகிறான்! துப்பாக்கி அவன் வீரக் கரங்களிலிருந்து, நழுவிக் கொண்டிருக்கிறது, அல்லது நம்மை பார்த்துக் குறி வைக்கத் துடிக்கிறது! என்ற நிலை வந்து விட்டால் என்ன செய்வது?

## மும்முனைப் போர்!

இப்படி பெருமூச்சுவிடும் ஏர்முனையும், எரிமூச்சு விடும் போர் முனையும், ஓய்வு கொண்டு விட்டால், அதாவது வேலை நிறுத்தம் செய்துவிட்டால், செயலிழந்து விட்டால் நீயும் நானும் வாழ்வது எப்படி தம்பி? நமக்குக் கோபம் வந்தால் நம்முடைய கடமையை கீழே போட்டு விடுகிறோம்! தொழிலாளி வேலை நிறுத்தம் செய்கிறான்! ரயில் நின்று விடுகிறது. ஏரோப்பிளேன் இறங்கி விடுகிறது. பஸ் பதுங்கி விடுகிறது. இவர்களைப் பின்பற்றி ஏர் உழுவோன் கலப்பையைக் கீழே போட்டு விட்டால் வயல் விளையுமா? போர் வீரன் துப்பாக்கியைக் கீழே போட்டு விட்டால் படை ஜெயிக்குமா? நாடு இருக்குமா? நாம் இருப்போமா? நானூறு கட்சிகள் இருக்குமா? நாலாயிரம் ஜாதிகள் இருக்குமா? முடிவில்லாத மொழிச்சண்டை இருக்குமா? மந்திரிப் பதவி உண்டா? தேர்தல் சண்டை உண்டா? கொஞ்சும் லஞ்சம் உண்டா? கள்ள மார்க்கெட் உண்டா? நிர்வாணச் சினிமா உண்டா? நீசக்கதைகள் உண்டா? இதற்கு யார் விடை கூறுவது? எப்படி பரிகாரம் தேடுவது, சொல் தம்பி! சொல்!

நிச்சயமாக இதற்கு நீயும் நானும் விடை கூறவேண்டிய அவசியமில்லை தம்பி! காரணம் மேற்கண்ட அற்ப இன்பங்களை நீயும் நானும் அனுபவிக்கவில்லை! மேற்கண்ட இன்பக் கடலிலே மன்மத விழா நடத்தும்... பெரிய மனிதர்கள் - என்று அழைக்கப்படும் புத்திசாலிகளுக்கு நமது சமுதாயம் ஒரு வினாத்தாளை கொடுத்திருக்கிறது. அந்த வினாத்தாளுக்கு ஏற்ற விடைகளை, சம்பந்தப் பட்டவர்கள் - விரைவில் கொடுத்தே ஆகவேண்டும்.

கேள்விகளுக்குரிய நல்ல பதில் குறித்த நேரத்தில் கிடைக்க வில்லையானால், நம்மைப்போல்..... சலித்துக் கொண்டு "போங்கடா போங்க போலிகளா!" என்று இந்தப் பயல் களை வெறுத்து ஒதுக்கி விட்டு துறவியாகப் போய் விட மாட்டான். அதோ சீறிக் குமுறி நிற்கும் நம் சின்னத்தம்பி!

## சின்னத் தம்பி!

தம்பி! நம் சின்னத் தம்பியைத் தெரியுமா உனக்கு? எரிமலையான அவன் சிவந்த முகத்தைப் பார்! அவன் பேர் தெரியமா உனக்கு? மகா காளி நடனமிடும் புரட்சிப் போர்க் களமான வங்கத்தில் பிறந்த அவனைப் படுதீவிரவாதி என்கிறார்கள். பதறி நடுங்குகிறார்கள். நீ ஏனடா தம்பி நடுங்குகிறாய்? பயப்படாமல் நம் சின்னத் தம்பியின் முகத்தை நன்றாகப் பார்!

அஞ்சாதே! அவன் உன்னையும் என்னையும் ஒன்றும் செய்யமாட்டான். நம்முடைய கேள்விகளுக்குரிய பதில் சொல்லாமல் இந்தப் பெரிய மனிதர்கள் நம்மை ஏமாற்றப் பார்த்தால் இந்தச் சின்னத் தம்பி அவர்களைச் சின்னா பின்னமாக்கி விடுவான்!

என்ன செய்வது? அனுபவித்தவர்கள் அபராதம் செலுத்தித்தான் தீரவேண்டும். போர்பந்தரில் பிறந்த தேசத் தந்தையின் சத்திய மொழியைக் கேளாத இந்த தன்னலச் சமுதாயம், இன்று போர்க்களத்தில் பிறந்த சின்னத் தம்பியின் பயங்கரக் கேள்விக்குப் பதில் கூறவேண்டிய நெருக்கடியை, தானே உற்பத்தி செய்துகொண்டது! சின்னத் தம்பியின் செயல் நமக்குப் பிடிக்காமலிருக்கலாம். ஆனால் கல்நெஞ்சம் கொண்ட சிலருடைய அலட்சிய புத்தி சிருஷ்டித்துவிட்ட கல்கி அவதாரத்தின் கனல் சக்திதான் நம் சின்னத் தம்பி!

அஜாக்கிரதையினாலும் அறிவின்மையாலும் உடம்பை அழிக்கும் வியாதியை உடம்பிலேயே உற்பத்தி செய்து கொண்டு, அதற்கு அறுவை சிகிச்சையைச் செய்து கொள்வதைப்போல், பெற்ற சுதந்திரத்தை அழிக்கும் ஒரு கொடிய அராஜக வேதனையை, இந்தச் சமுதாயமே உற்பத்திச் செய்துகொண்டு, இன்று படாதபாடு படுகிறது! படிக்காத மாணவன், பரீட்சைக் கேள்வியைக் கண்டு விழிப்பது போல், இப்பொழுது தம்பியின் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் சமுதாயம் விழிக்கிறது.

இந்தச் சமுதாயத்தை இந்த நிலைக்குக் கொண்டு வந்து விட்டவர்கள் யார் தெரியுமா? இந்நாட்டை முப்பது ஆண்டுகளாக ஆளவந்தவர்களான அரசியல்வாதிகள், ஈவு இரக்கமற்ற கள்ள வியாபாரிகள், இந்த இரண்டு பேருக்கும் ஒத்தாசை செய்யும் ஏட்டுப் பூச்சிகளான பழுதுபட்ட அதிகார யந்திரம்! இம்மூன்று பேருக்கும் கால் பிடித்துவிடும் சுயநலச் சோம்பேறிக் கூட்டம். இந்த நான்கு வர்க்கத்திற்கும் இரையாகி, மடிந்து கொண்டிருக்கும் இந்திய மக்களின் வாழ்க்கை எரியும் நரகமாகி வருகிறது.

பற்றி எரியும் வேகத்திலே... பல கேள்விகளைக் கேட்கிறது நாடு! அதிலே சில கேள்விகளை இங்கே தருகிறோம். சீக்கிரம் பதில் வேண்டும்! இல்லாவிட்டால் சின்னத் தம்பி சீறி எழுவான்!

உலக உத்தமர் தலைமையிலே, சுதந்திரத்தை யாருக்காக, எதற்காக வாங்கினோமோ, அந்த மக்களுக்காக சுதந்திரத்தின் பலனையும் கடமையையும் பகிர்ந்தளிக்கும் பணியைச் செய்தோமா?

"சொல்வதைச் செய்; நீ செய்ய முடிந்ததை மாத்திரம் மக்களுக்குச் சொல்" என்று தலைவர்களுக்கு அண்ணல் சொன்ன பாடம் என்னவாயிற்று? இப்பாடத்தை எந்த அரசியல் தலைவன் பின்பற்றுகிறான்?

"இந்நாட்டுக்கோடானுகோடி ஏழை மக்களுக்கு, இந்த நாட்டின் முன்னேற்றத்தில் பங்கிருக்கிறது - பொறுப்பி ருக்கிறது - என்பதை அவர்கள் உணரும்படியாக அரசியல் முறை அமைய வேண்டும்" என்று அண்ணல் எதிர் பார்த்தாரே, அப்படி நாம் செய்தோமா?

ஐந்தாண்டுத் திட்டங்களால் வளம் பெருகும். அந்த வளத்தின் பலன், பாடுபட்ட எல்லோருக்கும் உரிய முறை யில் கிடைக்க வேண்டும், என்று பண்டித நேரு ஆசைப் பட்டாரோ? அந்த ஆசையை நிறைவேற்ற ஏதாவது செய்தோமா?

அடிமையாக இருந்தபோது, மொழி மதச் சண்டை யின்றி, உலகிலேயே.... வலிமை மிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வெற்றி பெற்றோமே - அந்த வெற்றிக்குக் குழி தோண்டும் வகையில் இன்று எல்லாவகையான வேற்றுமை களையும் உரம் போட்டு வளர்க்கிறோமே - அது ஏன்?

ஜனநாயகம் வளரவேண்டுமெனில், தலைவர்கள் எனப்படுவோர் நன்கு ஆராய்ந்து மிகவும் எச்சரிக்கையாக நடந்து, ஜனங்களுக்கு நல்வழி காட்டி நம்பிக்கை ஊட்டவேண்டும். அப்போதுதான் தலைவர்களிடத்தில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும். வழிகாட்டிகளாக இருக்க வேண்டிய தலைவர்கள், கை காட்டி மரம் போல எங்கோ நின்றுகொண்டு "போங்கள் போங்கள்" என்று மக்களைத் துரத்துகிறார்களே... இது நியாயமா?

தங்களுக்குள் கொள்கை ஒருமைப்பாடு இல்லாமல் ஆளுக்கு ஆள் ஆழக் குழித்தோண்டிக் கொண்டு அதே சமயத்தில் மக்களைப் பார்த்து ஒன்றாக இருங்கள்... உறுதியாக இருங்கள்.... ஒழுங்காக இருங்கள்.... என்று உபதேசம் செய்தால்.... அதை யார் கேட்பார்கள் என்று இவர்கள் நம்புகிறார்கள்?

இந்நாட்டின் கள்ள வியாபாரிகளைத் "தூக்கில் போடுவேன்" என்று நேரு கூறினார்! நேருவின் கற்பனைத் தூக்கு மரத்தைக் கண்டு பயந்து நம்நாட்டில் கள்ள மார்க்கெட் நிபுணர்களின் தொகை குறைந்திருக்கிறதா? இல்லையென்றால், அவர்களை வெல்ல வேறு வழி இருக்கிறதா? நாளது வரை இல்லையே! ஏன்? எதனால்? ஒளி வீசிய ஆசிய ஜோதி - பாரத ரத்தினம் நேருவாலேயே முடியாத ஒன்றை - மற்ற கண்ணாடித் துண்டுகளா சாதிக்கப் போகின்றன?

இந்நாட்டுக் குழந்தைகளுக்கு பல நாடுகள் நல்ல உள்ளத்தோடு அன்பளிப்பாகக் கொடுக்கும் பால் பவுடரைத் திருடி, அதில் தவிட்டைக் கலந்து.... நாலு பங்கு விலைக்கு விற்றுப் பல குழந்தைகளுக்கு வயிற்று நோய் வரச்செய்யும்

கள்ள வியாபாரிகளை நம்மால் கண்டிக்க முடிந்ததா? குழந்தைகளுக்கு வரும் நோயைத் தீர்க்க நாம் வாங்கி வரும் மருந்தையும் கலப்பட மருந்தாக்கிக் கொடுத்து ஏமாற்றும் கொள்ளைக்காரர்களை நாம் ஏதாவது செய்ய முடிந்ததா?

மற்றும், கள்ளக் கடத்தல்; நோட்டடித்தல்; லஞ்சம் வாங்குதல்; பொய் வழக்காடுதல் போன்ற குற்றங்களை எல்லாம் கணிசமாகத் தடை செய்வதற்கு முயற்சி செய்தோமா? முடிந்ததா நம்மால்? ஏன்?

மக்கள் பண்பாட்டையும் ஆத்மாவையும் கெடுக்கும் நச்சு இலக்கியங்களையும், கொச்சைப் பத்திரிகைகளையும், பச்சைக் கதைகளையும், பாதி நிர்வாணப் படங்களையும் இல்லாமல் தடுத்தோமா? ஏன் இயலவில்லை தம்பி? இதை நீ என்றேனும் கேட்டதுண்டா?

## கல்வி

எல்லோருக்கும் கல்வி என்ற பெயரால், எழுபது குழந்தைகளை ஒரு சிறிய அறையில் அடைத்து, ஏழெட்டு வீசைப் புத்தகங்களையும் அதன் தலையிலே சுமத்தி, ஆறு மணிநேரம் அறியாப் பாலகர்களைக் கல்வியின் பெயரால் சித்ரவதை செய்கிறோமே - இது நியாயமா? இதற்குப் பரிகாரம் இல்லையா? இருபது குழந்தைகளுக்கு மேல் ஒரு வகுப்பில் இருந்தால்... அந்த ஆசிரியர் எந்தப் பாடத்தையும் சொல்லித்தர முடியாது... என்ற நிலையை எண்ணிப் பார்த்து.... செயல்பட முடியாதா?

நம்முடைய சிறுவர்கள் புகை பிடிப்பதும், மயக்க மாத்திரைகளை விழுங்குவதும், நிர்வாண சினிமாக்களை பார்ப்பதும், கெட்ட வார்த்தைகள் பேசுவதும், தெருத் தெருவாக அலைவதும், அந்தச் சிறுவர்களைப் பிடித்துத் தேர்தல் காலத்தில் கூலி கொடுப்பதும், கூச்சல் போடச் செய்வதும், குற்றேவல் செய்யச் செய்வதும், கள்ள ஓட்டுக்குக் கருவியாக்குவதும் எவ்வளவு பெரிய கொச்சை

யான குற்றம்? இந்த வருங்கால நாச காரியங்களை வேட்பாளர்கள் செய்யாமல் தடுப்பது நம் கடமை யில்லையா?

## தேர்தல் முறை

இந்த நாட்டில் ஜனநாயகம் இருக்க வேண்டுமா? வேண்டுமெனில், ஜனநாயகத்தின் சான்றாக இருக்கும் வயது வந்தவர் ஓட்டுரிமை நன்கு பயன்படுத்தப் படுகின்றதா?

தேர்தலுக்கு நிற்பவர்கள்.... சட்டத்தில் அனுமதிக்கப் பட்டிருக்கும் தொகைக்கு மேல் செலவழிக்கவில்லையென்று நெஞ்சிலே கை வைத்துச் சொல்ல முடியுமா? நாட்டுப் பணி செய்யும் தூய்மை, வாய்மை, தகுதி, ஆற்றல் அவர்கக உண்டா? எல்லாரும் நீதி பற்றிப் பேசுகிறார்கள், ஆனால் நடக்கத்தான் முடிவதில்லை! பாவம்! பைத்தியக்காரன் பேசும் பேத்தல் தத்துவம்!

பெண்ணொருத்தி, தன் கணவன் வாங்கித் தந்த சேலையை விற்றுவிட்டு, தன் ஆசை நாயகனுடன், "பெண்ணின் பெருமை"யென்ற பேசும் படத்திற்குப் போவதுபோல், தேர்தலில் நிற்பவர்கள் அறிந்தோ அறியாமலோ முடிந்தோ முடியாமலோ சட்டத்தின்படி நடக்க இயலாதவர்களாகி விடுகிறார்கள்! இவர்களைக் கண்டு நாம் பரிதாபப்படு கிறோம். இந்த முறையைக் கண்டு வெட்கப்படுகிறோம்! நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளும் ஒரு பெரிய் தீமை இது. இந்நிலை தேவைதானா?

எதைச் செய்தாவது போரிலும் காதலிலும் வெற்றி யடையலாம் என்பதைப்போல, எதைச் செய்தாவது தேர்தலில் வெற்றி பெறுவது என்ற நிலைவந்து விட்டது! இந்தக் கொடுமை வேண்டுமா? தேவைதானா?

கன்னிப் பெண் ஒருத்தி, கல்யாணத்தை வெறுத்து, கர்ப்பத் தடை செய்துகொண்டு, கருத்தைத் தடை செய்யாமல் கண்டபடி அலைந்தபின், கண்ணகி வேடத்தில் நடித்த

திறமைக்கு பொற்சிலம்பும் பரிசு பெறுவதுபோல, நாட்டுக்காக தன்னலத்தை வெறுத்ததாகச் சொல்லிக் கொண்டுவரும், பல பொதுநலவாதிகள், தேர்தலிலே எப்படியோ நடித்து வென்று பதவியைப் பிடித்து விடுகிறார்கள்.

ஒரு பிரமுகர், தேர்தலுக்கு நின்றால், முதலில் எவ்வளவு பணம் செலவழிக்க முடியும்; என்ன ஜாதி; என்ன கட்சி என்ற தகுதியைத்தானே எல்லாக் கட்சிகளும் முதன்மை யாகப் பார்க்கின்றனர்! நல்லவனா, நாணயமானவனா, அறிவாளியா என்று கேட்பதில்லையே! இப்படி நீதியின் தற்கொலையே நியதியாகி விட்டது!

ஒரு ஓட்டுக்குப் பத்து ரூபாய், ஒரு வீட்டுக்கு நூறு ரூபாய், ஒரு தெருவுக்கு ஆயிரம், வட்டத்துக்குப் பத்தாயிரம், தொகுதிக்கு லட்சம்... இப்படி லட்சக்கணக்கிலே செலவு செய்து.... வெற்றி பெறும் அந்தப் புகழுக்குரிய 'பொது நலவாதி' தான்பட்ட கடனைத் தீர்க்க - மேற்கொண்டு லாபத்தைப் பார்க்க - வெகு சீக்கிரம் சுயநலவாதியாகிவிடும் விபரீதத்தையும் நாம் பார்க்கவில்லையா? வியாபாரிகளிடம் லட்சக்கணக்காக - அன்பளிப்பாக வாங்குவதற்கு லஞ்சம் என்ற பெயரில்லை என்ற புது இலக்கணமும் வகுக்கப்பட்டு விட்டது தம்பி! இது நல்லதொரு விளக்கம்! நாகரீகத்தின் கடைசி மூச்சு! தர்மத்தின் மரண ஊசி! நீதியின் கடைசி துடிப்பு!

## பெரும்பான்மை — சிறுபான்மை

இப்படி ஒருவரை ஒருவர் ஏமாற்றி, கடைசியில் எல்லோரையும் எல்லோரும் ஏமாற்றிக்கொள்ளும் இந்த விபரீதத் தேர்தல் முறையால், யாருக்கு என்ன லாபம் என்று நாம் எண்ணிப் பார்க்க வேண்டாமா? இப்படிச் சொல்லுப வர்களை "ஜனநாயக விரோதிகள்" என்று வெறுத்து ஒதுக்கிவிட முடியுமா? அல்லது பெரும்பான்மை முடிவு என்பதற்காக... நாம் எதையும் சகித்துக் கொள்ள முடியுமா? உதாரணமாக நம்மில் பெரும்பான்மையோர் திடீரென்று

ஒருநாள் ஒன்று சேர்ந்து ஒருமனதாக "இந்தியா இன்று முதல் எவனுக்காவது அடிமையாக வேண்டும்" என்று முடிவு செய்தால் அதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டுமா? அதேபோல், சிறுபான்மை பாதுகாப்பு என்பதற்காக, ஒரு பைத்தியக்காரன் ஒரு முட்டைக் கல்லை எடுத்துக் கொண்டு வந்து, ஒரு கூட்டத்தை பயமுறுத்தி, "நான் கல்லெடுத்து ஓங்கி அடிப்பேன்; நீங்கள் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும்; ஏனென்றால், நான் சிறுபான்மைச் சலுகை பெற்றவன்" என்றால், அவனுக்கு அஞ்சி மாலைபோட வேண்டுமா? என்பதை நாம் யோசிக்க வேண்டாமா?

மேலும், ஒழுக்கத்தில் உயர்ந்தவர்கள் பின்பற்றத்தக்கப் பெரியவர்கள்... தலைமுறை தலைமுறையாக மாசுபடாமல் வாழ்ந்தவர்கள்.... தங்களுடைய நாணயத்தை, மனிதாபி மானத்தை பல்லாண்டுகளாக வாழ்வில் வாழ்ந்து காட்டிய சீலர்கள். இவர்களை நாமே விரும்பி வேண்டி, பொது வாழ்வுக்கு அழைத்து வர வேண்டாமா? அதை விட்டு விட்டு, "அவர்கள் வேட்பாளர்களாக முன் வரவில்லை; பணம் செலவு செய்யவில்லை; அவர் பேச்சுத் திறமை யில்லை; சூழ்ச்சிக் கலையில்லை; ஜாதி கட்சி பற்றில்லை - காக்காய் பிடிக்கவில்லை" என்றெல்லாம் கூறி நல்லவர்களை நாம் பொது வாழ்விலிருந்து வெறுத்து, ஒதுக்கி ஒழித்து விட வேண்டுமா?

## மன்னர்களும் மந்திரிகளும்!

ஐநூறு மன்னர்கள் ஏழை நாட்டுக்கு அதிகம்; தேவையில்லை - என்று ஒதுக்கினோம்! சமஸ்தானங்களை யெல்லாம் ஒன்று சேர்த்தோம். ஒரு மாதிரியாக ஒழித்து விட்டோம்! ஆனால், இன்று ஐநூறுக்கும் மேற்பட்ட மந்திரி களிடம் இந்நாடு அகப்பட்டுக் கொண்டிருக்கிறதே! அவர்கள் செய்யும் அசுரத் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டு சாகிறதே!

பல்வேறுபட்ட சட்டசபைகள், நாடாளும் மன்றங்கள், குழுக்கள், துணைக் குழுக்கள் என்ற பலவிதமான குழுக்களை மழைகாலத்து ஈசல்களைப் போல் பெருக்கிக் கொண்டே இருக்கிறோமே! இது நியாயமா! இதற்கு ஆகும் செலவுக்குரிய லாபம் ஏதேனும் கிடைக்கிறதா?

ஏழை இந்தியாவின் ஐந்தாண்டுக்கொருமுறை பொதுத் தேர்தல் நடக்கிறது. பஞ்சாயத்து தேர்தலிலிருந்து பாராளு மன்றம் வகையில், முதல் தேர்தல் - இடைத்தேர்தல் - கடைத்தேர்தல் என்று ஒரே தேர்தல் மயமாக இருக்கிறது. நம்மிடம் ஒரு சட்டை போட்டுக் கொண்டு வந்து ஓட்டுக் கேட்கிறார்கள். ஓட்டு வாங்கியதும் சிலர் சட்டையை மாற்றிக் கொள்கிறார்கள். ஏனென்று கேட்டால் "கொள்கை மாறுவது குற்றமில்லை. எனது அறிவிலே புதிய எண்ணம் தோன்றக் கூடாதா?" என்று நம்மையே பார்த்துக் கேட்கிறார்கள். நமக்கே புரியவில்லை. ஒரு நாளைக்கு ஒரு கொள்கைக்காளான் முளைக்கும். இந்த புத்திசாலியின் குப்பை மூளையில் நாம் எப்படி நம்பிக்கை வைப்பது, ஓட்டு வாங்கும்போது ஒன்று சொல்வதும் பதவி வந்தால் அதை மாற்றிக் கொள்வதும்தான். அரசியல்வாதியின் இலக்கணம் என்றால், அந்த அசந்தர்ப்பவாத அரசியல் இலக்கணத்தை இனிமேல் சகித்துக் கொள்ளமாட்டார்கள். நம் சின்னத் தம்பிகள். இனிமேல் போலி அரசியல் கட்சி வாதிகளின் பொய்மை நாடகம் பலிக்காது!

## திருவிழா நாடு!

இந்த நாடு அரசியல்வாதிகளுக்கு விழா எடுக்கும் நாடாகி விட்டது! தேர்தலில் ஜெயித்ததற்காக பாராட்டு விழாவுக்கு ஒரு ஆண்டு! இடை இடையே... சின்னக் குழந்தைகள் தின்பண்டங்களுக்குச் சண்டையிட்டுக் கொள்வது போல், அடிக்கடி தங்கள் குணம், குறிக்கோள், கட்சி, தன்மை, அவ்வளவையும் மாற்றிக் கொண்டு அவதிப் படுத்தும் அநாகரிகக் கட்சித் திருவிளையாடல்கள்! மீண்டும் புதுத் தேர்தல்! மறுபடியும் பாராட்டு விழா! வெள்ளி விழா,

தங்க விழா, தகர விழா, இரும்பு விழா, பிறந்த விழா, இறந்த விழா இப்படி இந்த நாடே ஒரு விழா நாடாகி விட்டதுடன், மக்களும் இந்த விழா மயக்கத்திலே எல்லா வற்றையும் மறந்து விடுகிறார்கள்! ஆளவந்த மந்திரிகளை நம்பி ஆட்சிப் பொறுப்பை தந்த இந்நாட்டு மன்னன் சோற்றுக்கே தாளம் போகிறான். எல்லாம் ஒரே ஜால்ரா மயம்! அரசியலின் பரத நாட்டியப் பெருமையில், சர்வமும் ஜால்ரா மயம்! பொய்! பொய்! அரசாங்க யந்திரமும் மெதுவாக பழுதுபட்டு வெறும் தேர்தல் யந்திரமாக, விழாக் கமிட்டியாக மாறும் அபாய நிலை ஏற்படுகிறது...! இப்பேற்பட்ட தேர்தலையும் மந்திரி சபைகளையும், சட்ட மன்றங்களையும், நிர்வகிப்பதற்கு பல கோடிப் பணம் செலவாகிறது. இந்த வகையில் கடந்த முப்பதாண்டுகளிலும் செலவான தொகை குறைந்தது சுமார் ஐநூறு அறுநூறு கோடிக்கு மேல் இருக்காதா?

"இவ்வளவு தொகையைச் செலவிட்டுப் பதவியை அனுபவித்த அரசியல் வாதிகளின் அறிவிலே பிறந்த சிறந்த ஆலோசனைகள் அத்தனை கோடிக்குப் பெறுமானமுள்ளது தானா?" என்று கேட்பது இந்த நாட்டுக் குடிமகனின் உரிமைகளில் ஒன்று என்று நாம் கருதக் கூடாதா? இந்தக் கேள்விக்கு கோபம் ஒன்றைத் தவிர வேறு பதிலே கிடையாதா? இப்படியே போனால், நமக்கு பார்லிமெண்டு, அசெம்பிளி இதெல்லாம் தேவைதானா? என்று கேட்கும் காலமும் வந்து விடுமே? அதுதான் இந்திய ஜனநாயகத்தின் கடைசி கேள்வியாக இருக்கும் என்பதை ஏன் இன்னும் உணரவில்லை இவர்கள்! தேர்தல் வியாபாரத்தில் தெளிந்த முதலாளிகள்தான் பதவியில் இருக்க முடியும்!

## அரசியல் வியாபாரமா?

இப்படிக் கேட்டால் "ஜனநாயகத்தைக் காப்பதற்கு ஐநூறு கோடியென்ன, ஐயாயிரம் கோடி செலவழித்தாலும் நாம் சகித்துக் கொள்ளத்தான் வேண்டும். ஏனென்றால், ஜனநாயகத்தில் தேர்தல் முக்கியமானது. அதற்காக எவ்வளவு

செலவானாலும், அது எத்தனை முறை நடந்தாலும் தேசத்தின் பொருளாதாரமே கெட்டுப் போனாலும் பரவாயில்லை! இத்தேர்தல் முறையை மாத்திரம் நாங்கள் கைவிட முடியாது. 'தேசத்திற்கழகு தேர்தல்தானே" அதைக் கைவிட்டு விட்டால் எங்கள் பிழைப்பு என்னாவது? இந்த நாட்டில் வேலையில்லாமல் திண்டாடும் ஆயிரக்கணக்கான எஞ்சினியர்களைப் போல, அரசியல் பேசத் தெரிந்த எங்களையெல்லாம் வீதியிலே அலையச் சொல்கிறீர்களா?" என்று எல்லாக் கட்சிகளும் இந்த விஷயத்தில் ஒன்று சேர்ந்து ஒரே குரலில் நம்மைக் கேட்கின்றன. அரசியலையே தங்கள் ஆயுள் தொழிலாக, அடிப்படை வியாபாரமாக வைத்து விளையாடும் இந்த ஆபத்தானவர்களுக்காக நாடே பாழாக வேண்டுமா? இந்த கேள்விக்கு நாம் பதில் சொல்லத்தான் வேண்டுமா? என்று நாம் சிந்தித்துக் கொண்டிருக்கும் போதே... நமது சின்னத் தம்பியின் சீறியெழும் கர்ஜனை நம் காதைத் துளைக்கிறது. ஒரு பக்கம் பார்த்தால், பாவம்! அரசியலையே தொழிலாகக் கொண்டு பிழைக்கும் கட்சி தோழர்களின் பரிதாபம், மறுபுறம் பார்த்தால், படித்த படிப்புக்குத் தகுந்த வேலை கிடைக் காமல், தான் கட்டிய வாழ்க்கைக் கோட்டை இடிந்து நிற்பதைக் கண்டு இந்த உலகையே பொடிப் பொடியாக்கத் துடித்து நிற்கும் சின்னத் தம்பியின் சிங்கப் பார்வை!

## உதயமும் அஸ்தமனமும்!

இந்த இரண்டு பார்வைகளில் எதற்கு நாம் முன்னிடம் அளிப்பது? மாற்றமில்லாமல் செக்கு மாடுபோல் வாழ்ந்து கொண்டிருக்கும் கிழடு தட்டிய அரசியலுக்கா? வருங் காலத்தை எண்ணி வாழத் துடிதுடித்து நிற்கும் வாலிபப் படையின் ஆசைக் கனவுகளுக்கா?

ஒன்று, அஸ்தமனத்தின் ஓரத்திலே நின்று ஜனநாயகம் என்ற பல்லவியை ஈனஸ்வரத்திலே பாடுகிறது. மற்றொரு சக்தி, காலைக் கதிரவனின் அருணோதயத்திலே மலர்ச்சி

பெறும் சோலைவனத்தின் முன்னணியில் நின்று "எங்கள் வாழ்வும் வளமும் எங்கே? வறுமைக்கு பார்த்துக் கேட்கிறது. இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லாத உங்கள் ஜனநாயகம் எதற்கு வேண்டும்; சுதந்திரம் யாருக்கு வேண்டும்? என்ற கேள்விக்குறி விஸ்வரூபம் எடுக்கிறது.

இளமைக் கேள்விகள் இருக்கும் துடிப்பைக் கண்டு நாம் அஞ்சலாமே தவிர, அந்தக் கேள்வியில் வஞ்சகம் இருப்பதாகத் தெரியவில்லை. பதில் சொல்ல முடியாமல் அஞ்சிப் பதுங்கும் இந்த நாட்டு செக்குமாட்டு அரசியலில் தூய்மை இருப்பதாக இளமையின் எழுச்சி நம்ப மறுக்கிறது.

## காலத்தின் கேள்வி?

இது இளமையின் கேள்வி மாத்திரமல்ல; காலத்தின் கேள்வியுமாகும். இதற்கு விடை கூறாமல் காலத்தை நாம் கடத்தினால் வெகு விரைவில் காலம் நம்மைக் கடத்திக் கொண்டு போய்விடும். சத்தியமே ஜெயிக்கும், வாய்மையே வெல்லும் என்று எழுதி வைத்திருக்கிறீர்களே, அதைச் செயலாக்காதது ஏன் என்று கேட்கிறான் சின்னத் தம்பி!

அதோ, மீண்டும் கேட்கிறது சுதந்திரம் யாருக்கு? என்ற வினா... பதில் சொல்ல நாம் பயப்படுகிறோம்! நீங்கள் அஞ்சுகிறீர்கள். உங்கள் அரசியல் குழப்பமடைகிறது. நமது கொள்கை, குருக்ஷேத்திரத்து அர்ஜுனன் போல் தலை குனிந்து கிடக்கிறது. ஆனால், துணிச்சலை இழந்துவிட்ட நமக்கெல்லாம் துணிச்சலைக் கொடுக்கும், ஒரு தூய்மையான குரல். நமக்கெல்லாம் கேள்விக்கேற்ற பதிலைச் சொல்லு கிறது.

இந்நாட்டு மைந்தர்கள் பாசத்தோடு கேட்கும் கேள்வி களுக்கு, தேசத்தின் தந்தை பதில் சொல்கிறார். நம்மைபோல் அஞ்சி ஓடிடும் கோழையல்ல அவர்! அவர் வீரர்க்கெல்லாம் பெரு வீரர்! எண்பதாவது ஆண்டில், தன்னை நோக்கி

துப்பாக்கி நீட்டிய போது புறமுதுகு காட்டவில்லை. மரணத்தின் குண்டுகளை மலர்களைப்போல தம் மார்பிலே தாங்கிய மாவீரர்! இதோ துப்பாக்கிக் குண்டுகளை விடக் கடுமையாக தாக்கும் இன்றைய சமுதாயத்தின் கேள்விகளை யும் தன் நெஞ்சகத்திலே ஏற்று அஞ்சாமல் அவர் கூறும் பதிலை கேட்போம். காந்தியடிகளின் அறிவுரையைக் கேட்க நெஞ்சில் துணிச்சல் வேண்டும்!

"சுதந்திரம் யாருக்கு? இந்திய நாட்டில் பரந்து கிடக்கும் ஏழு லட்சம் கிராமங்களில் வசிக்கும் கோடானு கோடி ஏழை மக்கள், வயிறார உண்ண வேண்டும். நாளை என்ன செய்வோம் என்ற ஏக்கமின்றி வாழ வேண்டும். உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க வீடும், சுகாதாரமான சுற்றுப்புறமும், அவர்கள் அடைய வேண்டும். அதற்கேற்ற படி பாவமற்ற நல்லதொரு தொழிலையும் உற்சாகத்தோடு அவர்கள் செய்யவேண்டும். இந்தக் கனவை நனவாக்குவதற் காகவே நமக்கு சுதந்திரம் வேண்டும். பரம ஏழைகளும் 'இது எங்கள் நாடு' என்று எண்ணும்படியாக ஆட்சிமுறை அமைய வேண்டும். நாட்டின் அமைப்பில் தங்களுக்குரிய உரிமையும் கடமையும், பொறுப்பையும் உணரும் படியாகச் செய்தல் வேண்டும். பிறப்பில் உயர்வு தாழ்வு இல்லாமல் எல்லாச் சமூகத்தினரும் அன்யோன்யமாக வாழவேண்டும். அத்தகைய இந்தியா உருவாகவே... நான் பாடுபடுவேன்..." என்பதுதான் உத்தமர் காந்தியடிகள் சுதந்திரத்திற்கு அளித்த விளக்கம். அந்த விளக்கத்திலேயே இன்றைய இளம் தலை முறையினரின் கேள்விகளுக்கு ஏற்ற பதிலும் இருக்கிறது.

பதிலிருந்து என்ன பயன்? செயலில் காட்டுவது யார்? செயலில் காட்ட வேண்டுமானால், இன்றைய அரசியல் முறையிலும் நிர்வாக அமைப்பிலும் தீவிரமானதொரு புதுமுறையை பிரத்தியட்சச் செயல்முறையை நாம் கடைப் பிடித்தாக வேண்டும்!

இந்தச் செயல்முறைக்கு புரட்சி என்று பெயர் வந்தால் அதை நாம் வரவேற்போம். காரணம், அண்ணல் மகாத்மா சொன்ன லட்சிய சமுதாயத்தை அமைப்பதற்காக கடந்த

முப்பது ஆண்டுகளாக நாம் ஏதேதோ ஒரு முறையை நம்மிஷ்டப்படி அனுசரித்தோம்! ஆனால்... அந்த முறையில் புதிய சமுதாயத்தை நம்மால் அமைத்துக் காட்ட இயலவில்லை.

சுதந்திரம் யாருக்கு? எதற்கு? என்ற கேள்விக்கு செயல் பூர்வமான பதிலை நாம் செய்து காட்டமுடியவில்லை.

உலகப் புகழ்பெற்ற பண்டித நேருவின் தலைமை யிருந்தும், நமது ஆசைப் பயணம் தனது லட்சியத்தை அடைய இயலவில்லை! ஆகவே... நாம் நமது நடைமுறையை மாற்றிக் கொண்டே ஆகவேண்டும் என்பது தெளிவாகி விட்டது.

## மன்னர்களும் மந்திரிகளும்

**மா**றுவது என்பது அவ்வளவு லேசான காரியமல்ல, காரணம், நாமெல்லாம் பழக்கத்திற்கு அடிமையானவர்கள்! முப்பது ஆண்டுகளுக்கு முன்னர், இந்திய சமஸ்தானங்களில் ஐநூறு மன்னர்களைப் பார்த்து, "மன்னர்களே! காலத்தின் தேவைக்கேற்ப நீங்கள் உங்களை மாற்றிக் கொள்ள வேண்டும்" என்று கேட்டோம். முதலில் அவர்கள் தயங்கி னார்கள். சர்தார் படேலின் சிறந்த ராஜதந்திரம் அவர் களைப் பணிய வைத்தது.

இன்றிருக்கும் இளையசமுதாயம் ஐநூறு மன்னர் களுக்குப் பதிலாக இந்நாட்டை நடத்திக் கொண்டிருக்கும் ஐநூறுக்கும் மேலான மந்திரிகளைப் பார்த்துக் கேட்கிறது.

"ஓ! மந்திரிகளே! காலத்தின் தேவைக்கேற்ப நீங்கள் உங்களை மாற்றிக் கொள்ள வேண்டும். நீங்கள் ஆடம்பர மாக வாழ்ந்து விட்டீர்கள். இனி நாங்கள் வாழவேண்டிய வர்கள் நீங்கள் பேசுவது ஒன்று, செய்வது வேறொன்றாக இருக்கிறது. உங்கள் மீது நாங்கள் வைத்த சகல நம்பிக்கையும் சர்வ நாசமாகி விட்டது!

பெரிய தலைவர்களின் பெயர்களைச் சொல்கிறீர்கள். காந்திஜி, நேதாஜி படங்களைக் காட்டுகிறீர்கள். ஆனால் உங்கள் செய்கைகளைக் கண்டால், அவர்கள் வழி வந்தவர்கள்தானா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. தயவு செய்து முறைகளை மாற்றிக் கொள்ளுங்கள். சுதந்திரம் வந்தது உங்களுக்காக மட்டுமல்ல; நீங்கள் ஐநூறு மந்திரிகளும், சில கட்சிகளும் கடத்தல் மன்னர்களும் கருப்பு மார்க்கெட்காரர்களும் சில லட்சம் அரசாங்க உத்தியோகஸ் தர்களும் மட்டும் வாழ்ந்தால் போதாது.

அறுபது கோடி மக்கள் வாழ வேண்டும். அதற்கு நீங்கள் வழி காட்டிகளாக இருப்பீர்கள் என்று எதிர் பார்த்தோம் ஆனால்... நீங்களெல்லாம் கைகாட்டி மரங்களாக செயலற்று நின்று விட்டீர்கள். உங்கள் காலில் விழுந்து கேட்டுக் கொள்கிறோம். மனமிரங்கி மாற மாட்டீர்களா? மக்கள் உணர்ச்சியை மதிக்க மாட்டீர்களா? நூற்றாண்டு காலமாக மணிமுடி தரித்து, சிங்காதனத்தில் அமர்ந்து அரண்மனைச் சுகபோகங்களை அனுபவித்து, அந்தப்புர உல்லாசிகள் மத்தியிலே அன்னச்சிறகு தூவப் பட்ட மஞ்சத்திலே... அழகுச் சிலைகளின் நடனத்திலே, அரம்பையர் தம் மயக்கத்திலே மயங்கி மூழ்கிக் கொண்டி ருந்த மன்னர்களே தங்களை மாற்றிக் கொள்ளும் நிலை நிர்ப்பந்தம் ஏற்பட்டதே! ஜனநாயகம் பேசும் நீங்கள் கொஞ்சம் செவி சாய்க்கவாவது கூடாதா? சற்று விலகி இருந்து நாட்டை வாழ்விக்க வேண்டாமா? சாகும் வரையில் மந்திரியாகத் தான் இருக்க வேண்டுமா?

"நாங்கள் மாறிவிட்டால் இந்த நாட்டை ஆள்வது யார்? இந்த நாடு அனாதையாகப் போய்விடும் என்று எண்ணு கிறீர்களா? அப்படி எண்ணினால்... நீங்கள் என்றுமே அழியாத சிரஞ்சீவிகள் என்பதற்கு உத்தரவாதம் தருவீர்களா என்று கேட்கிறான் சின்னத்தம்பி! வேண்டாம்! உங்கள் ஸ்வரத்தில் அபஸ்வரம் கேட்க வேண்டாம்! உங்கள் வாதத்தில் அபவாதம் தொனிக்க வேண்டாம்! செய்த குற்றங்களுக்குச் செய்யப் போகும் குற்றங்கள் சமாதானம்

ஆகிவிடாது! நீங்கள் மாறினால்தான் "சுதந்திரம் யாருக்கு?" என்ற கேள்விக்கு ஏற்ற விடை கிடைக்குமென்று நாடு நம்புகிறது. ஏனிதைச் சொல்லுகிறோம்? எழுந்து நின்று கேளுங்கள் எங்கள் எண்ணத்தை! உங்கள் இதயச் செவி திறந்து கேளுங்கள். அண்ணல் மகாத்மா அன்று சொன்னார். நீங்கள் கேட்கவில்லை. இன்னல்பட்ட இளைய சமுதாயம் இதோ கூறுகிறது கேளுங்கள்.

"இந்த நாட்டில் மனித வாழ்வு... வேகமாகக் கீழ் நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது. பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்து கிடக்கும் பிச்சைக்கார மந்தைகள், எச்சிலைகளைப் பொறுக்க, லைசென்ஸ் இல்லாத நாய்க ளோடு சண்டையிடுகின்றன. மானிடப் பண்புகள் வெகு விரைவாகக் காணாமல் போய்க் கொண்டிருக்கின்றன. சிலர் வாழ, பலர் நாசமடையும் பயங்கரத்தைப் பார்க்கிறோம். மண்ணாசையுடன் மடியும் மனிதக் கும்பல் ஒருபுறம், பொன்னாடை பூட்டிப் பொலியும் போலிக் கூட்டம் ஒருபுறம், "தாலி செய்யத் தங்கமில்லையே" என்று தவிக்கும் ஏழைக்கூட்டம் ஒருபுறம், "தங்கத்தால் செங்கல் செய்து பங்களா எழுப்ப முடியவில்லையே" என்று ஏங்கும் அஜீரணக் கூட்டம் ஒருபுறம்; முப்பது ஆண்டுகளாகியும் இந்த விபரீத ஏற்றத்தாழ்வு தீரவில்லை.

இதற்கு யார் காரணம்? எலும்புக் கூடுகளுக்கு மத்தியிலே மாமிச மலைகள் போல் வாழும் நம்மில் ஒரு சிலர்தான் காரணம், "அந்தக் கயவர்கள் ஒரு சிலர் தானே" என்று அலட்சியமாக இருக்கக் கூடாது. உலகத்தைக் கெடுக்க ஒரு ஹிட்லர் போதும், என்பதை நாம் அனுபவத் தில் பார்த்தோம். நல்ல உடம்பைச் சூறையாட ஒரு சிறு க்ஷய நோய்க் கிருமி போதும். ஆகவே... கெட்டது எவ்வளவு சிறிதானாலும் அதை உடனே ஒழித்துக்கட்டினால் ஒழிய... நாம் செய்யும் நன்மைகள் யாவும் பயனற்றுப் போய்விடும். ரத்தத்திலே இருக்கும் நோயை நீக்காமல், பட்டுச் சட்டை களினால் உடலை அலங்காரம் செய்வதனால் பயனில்லை. பட்டமரங்களுக்கு மத்தியிலே ஒரு பச்சை மரம் நெடுநாள்

வாழ முடியாது. ஒரு லட்சம் ஓட்டைக் குடிசைகளுக்கு மத்தியிலே ஒரு ஒய்யார மாளிகை இருக்க முடியாது. நாட்டு மக்கள், பட்ட மரங்கள் என்று எண்ணி ஏமாற வேண்டாம். அந்த மரங்களுக்கு எரியும் சக்தியுண்டு. ஒன்றுக்கொன்று உராய்ந்தால், திடீரென காட்டுத்தீ சீறியெழும்! நாட்டில் எங்கும் செந்நிறத் தீ பரவும். அதிலே சர்வமும் நாசமாகலாம். ஆகவே, நாடு சிவந்த தீயாக மாறுமுன், செழிப்பாக்க வேண்டிய ஏற்பாட்டை செய்வதற்குரிய தேசிய வீரம் வேண்டும். அரசியல் நேர்மை வேண்டும். ஆத்மீகத் துணிச்சல் வேண்டும். இதயத் தூய்மை வேண்டும். நிர்வாகத் திறமை வேண்டும். இந்த நல்வாழ்வுப் போர்க்களத்திலே அவசியமானால்... உயிரையும் தியாகம் செய்யும் ஆண்மை வேண்டும். மன்னர்களுக்குப் பதிலாக மந்திரிகள் ஆள்வது தான் சுதந்திரத்தின் பலன் என்ற மாய எண்ணம் மாறத்தான் வேண்டும். என்ன செய்வது? மன்னர்களை மாற்றினோம்; நாம் மாறக்கூடாதா?

"ஓட்டைப் போட்டால் நாட்டை முன்னேற்றுவோம்" என்று நீட்டி முழக்கினோம். ஐந்தாறு தேர்தல்களை ஓட்டிவிட்டோம்! இருபத்தாறு ஆண்டுகளை வரலாற்றின் இருட்டறையிலே... போட்டுப் பூட்டி விட்டோம். நாம் மக்களுக்குக் காட்டிய வழி என்ன? கூட்டிய பலன் என்ன? என்று கேட்கிறதே உலகம், அந்த உலகத்தைவிட உரத்த குரலில் நம்மைக் கேட்கிறதே நம்முடைய மனச்சான்று! "ஏ மனிதா! சுதந்திரம் யாருக்கு? சுகந்தான் யாருக்கு? நமது முன்னேற்றத்திற்கா? நாட்டின் முன்னேற்றத்திற்கா? இந்த வினாவிற்கு விடை கூறுவது யார்?

சிந்திக்காமல் நிற்கும் நீங்களா?

சிங்கம்போல் சீறி நிற்கும் சின்னத் தம்பியா? இந்த விஸ்வரூப வினாவிற்கேற்ற விடையை விவைில் சொல்லுங் கள். சொல்ல வேண்டாம்; செய்து காட்டுங்கள்! பார்க்கலாம்! ஓராயிரம் ஆண்டு ஓய்ந்து கிடந்த பின்னர் வாராது போல் வந்த வீர சுதந்திரம் உங்களுக்கு வேண்டுமா,

வேண்டாமா? வீரர்கள் பெற்றுத் தந்த வீர விடுதலைச் செல்வம் உங்களுக்கு வேண்டுமா வேண்டாமா? வேண்டும் என்றால் தேசபக்தியைக் காப்பாற்றுங்கள். தியாக வரலாற்றைத் திரும்பத் திரும்ப எண்ணிப் பாருங்கள்! கடமை புரியும், அதோ இருபெரும் கலங்கரை விளக்குகள் தெரிகின்றன! ஒன்றில் உலக உத்தமன் மகாத்மாவின் திருமுகம் தெளிவாகத் தெரிகிறது. மற்றொன்றில் மாவீரன் லெனின் காட்டும் நகைமுகம் தெரிகிறது. தெரிகிறதா? இரண்டு ஒளிகளின் சந்திப்பில் சிறந்த மற்றொரு புதிய வண்ண ஒளியும் தெரிகிறது!

மகாத்மா சொன்ன மார்க்கத்தை மறந்துவிட்டோம்; இனி என்ன செய்யப் போகிறோம் என்ற கவலை நமது இதயத்தைக் கசக்கிப் பிழிகிறது. மண்டை ஓட்டை தகிக்கிறது. இச்சமயத்தில் கவிதை மனம் சும்மா இருக்க வில்லை. தனது அதிர்ச்சியை எழுத்தாக்குகிறது.

இருபதாம் நூற்றாண்டின் மகாகவிஞன் பாரதியின் கடைசி ஆணை. 'இனி ஒரு விதி செய்வோம், அதை எந்த நாளும் காப்போம்' என்ற மகா மந்திரமும் நமது ஆத்மாவை துடிக்கச் செய்கிறது! என்று அந்த விதியை உருவாக்கப் போகிறோம்? அந்த ஒரு விதி வகுக்கப்பட்டால் இந்திய மண்ணில் பிச்சைக்காரன் இருக்க மாட்டான்; பட்டினியும் சோம்பலும் பறந்து போகும்; நாடு புதுவுலகப் பார்வையில் சிறந்து வாழும், இந்த நல்ல காரியத்திற்கு இடையூறாக உள்ளவைகளை உடனே தகர்த்தெறிந்தெ ஆகவேண்டும்.

நல்லவர்களும் வல்லவர்களும் சமுதாயத் தொண்டு செய்ய முன்வராமல், சலிப்படைந்து பின்தங்கிப் போன தற்குக் காரணம் பணத்தை அடிப்படையாகக் கொண்டு நடைபெறும் வியாபாரத் தேர்தல்தான். இன்று நடைபெறும் தேர்தல் தெருச் சண்டையில், மகாத்மா காந்தி அவர்களே வந்து ஒரு தொகுதியில் நின்றால்கூட அவர் வெற்றி பெறுவது சந்தேகந்தான்! "பாவம்! மகாத்மா உண்மை பேசுகிறார். அவர் மகாத்மாவாயிருக்கலாம் ஆனால் அரசியல் தெரியாதவர்" என்று ஒதுக்கி விடுவார்கள்.

விடுதலையின் சின்னமான ஓட்டுரிமையை விலைக்கு வாங்கும் வில்லர்களின் தேர்தலில் நேதாஜி வந்து போட்டி போட முடியுமா? போட்டி போட்டால் நேதாஜியின் டெபாசிட் பறிபோய்விடும். நாம் அவ்வளவு தேர்தல் ஞானி களாகி விட்டோம். பகத்சிங்கே வந்தாலும் தோல்விதான் அடைவான்! மகாகவி பாரதி தேசபக்தர் சிதம்பரனார், சிவா - வாஞ்சி - குமரன். சத்தியமூர்த்தி இவர்கள் எல்லாம் இன்றைய தேர்தலில் நின்று ஜெயிக்கவே முடியாது. ஜாதிபலம் - பணவலிமை பொய் பித்தலாட்டம், மக்களின் பலவீனம் இவற்றில் நம்பிக்கையுள்ளவர் தாம் தேர்தலில் நிற்கலாம், ஜெயிக்கலாம். தியாகம் - உண்மை - நேர்மை - சேவை இவைகளுக்கு தேர்தலில் கிடைப்பது படுதோல்வி தான்!

இப்படியாக வீரர்கள் உயிர் தந்து பெற்ற விடுதலையின் பரிசாக விளங்கும், ஓட்டுரிமையை கேவலம் பத்து ரூபாய்க்கும் ஒரு சாராயபாட்டிலுக்கும், ஒருவேளை சோற்றுக்கும் விற்று விட்டு, வீதியிலே ஏங்கி நிற்கும் இந்நாட்டு ஏழை மக்களின் வறுமையைப் பயன்படுத்திக் கொண்டு, நூற்றுக்கு 25 ஓட்டுக்களைப் பெற்று, மக்களின் மாபெரும் தலைவன் என்று ஊர்வலம் வரும், வெட்கங் கெட்ட தேசத்துரோகிகளை இனியும் நம் சின்னத்தம்பி சகித்துக் கொண்டிருக்க மாட்டான். இத்தகைய தேர்தல் நரிகளையும், பதவிப் புலிகளையும் வெகு விரைவில் நமது இளைய தலைமுறை பழிவாக கங்கணம் கட்டிக் கொண்டது.

ஓட்டை விலைக்கு வாங்கும் கள்ளச் சந்தையாகி விட்டது தேர்தல்களம். இந்தச் சந்தையிலே பணத்தை வாரி இறைத்து வெற்றிபெறும் ஜனநாயகக் கொலையாளிகளான, பண நாயர்களின் நாடகத்துக்கு இனியும் பணம் கொடுத்து டிக்கட் வாங்க மாட்டான் நம் சின்னத் தம்பி! பண நாடகத்தில் கிழவிகள் போடும் குமரி வேடங்களின் நிர்வாணக் காட்சியைப் பார்த்துப் பார்த்து சலித்து விட்டான் நம் நாட்டு இளைஞன் - இனி அவன் சும்மா

இருக்க மாட்டான். ஆம்! அவனுக்கு திரைமறைவின் மர்மம் தெரிந்து விட்டது!

விடுதலையின் விலை பத்து ரூபாய்க்கு ஓட்டை விற்கும் தேர்தல் நாடகம் அல்ல; வெறும் வாய்ஜால மேடை வாக்குறுதிகள் அல்ல; பொய்யர்களின் போலிப் பொம்மலாட்டம் அல்ல; கண்களை இமை காப்பது போல் காக்கப்பட வேண்டிய வீரச்செல்வம் நமது விடுதலை! இதை இளைய சமுதாயம் உணர்ந்து கொண்டது. இந்தக் கடமை உணர்வினால், என் சின்னத் தம்பியின் முகம் செக்கச் சிவந்த செந்தாமரை போல் விளங்குகிறது. இந்திய ஞான சூரியனை இனி பதவி வௌவால்களும், ஜாதிக் கோட்டான் களும், பணப் பேய்களும், கவர்ச்சி வேசிகளும் மாற்ற முடியாது. விடுதலையின் விலை நமது உயிர்! Eternal Vigilance is the price of Liverty. கண்ணிமையாத கண்காணிப்பு தேவை! அப்போது தான் விடுதலையை நாம் காப்பாற்றிக் கொள்ள முடியும்.

இந்தியா வாழ்ந்தால் நாம் அனைவரும் வாழலாம். இல்லையேல், மீண்டும் ஒருமுறை அடிமைகளாவோம். எச்சரிக்கை! இனியொரு தடவை நாம் விடுதலையை விற்று அடிமைகளானால், அந்த அடிமையிருள் நரகத்திலிருந்து நம்மை மீட்க மற்றொரு மகாத்மா வரமாட்டார். மற்றொரு திலகர் வரமாட்டார். மற்றொரு சிதம்பரம் வரமாட்டார். மற்றொரு பகத்சிங் - நேதாஜி, ஜெய்ஹிந்த் மந்திரத்தின் தந்தை - புரட்சி வீரர் டாக்டர் செண்பகராமன், திருப்பூர் குமரன், சிவா பாரதி - தாகூர் முதலியவர்கள் வர மாட்டார்கள். எச்சரிக்கை! விரைவில் ஒரு முடி வெடுப்போம்! நமக்கு வேண்டுவது என்ன? தேசமா? தேர்தலா? கட்சியா? காரியமா? அரசியலா, ஆற்றலா? போலியா, உண்மையா? நடிப்பா, நடப்பா? உண்மையா, பொய்மையா? வாழ்வா, தாழ்வா? இதில் நல்லது தேவை எனில் இந்தியாவில் இந்தியா இருந்தாக வேண்டும்!

**ஜெய் ஹிந்த்!**

# இந்தியா எங்கே?

*(எஸ்.டி.எஸ்)*

வீரசுதந்திர சக்தியைக் கடையில்
விலைகள் பேசலாமா? அதுவும்
வியாபாரிகளின் உரிமைகள் என்றால்
விடலாமா சும்மா?

பச்சைக் குழந்தைகள் உணவைத் திருடும்
பேய்களை விடலாமா? அந்தப்
பேய்களைப் பெரிய மனிதர்கள் என்றால்
பயந்து ஓடலாமா?

உணவுப் பொருளில் கலப்படம் செய்து
விலையை ஏற்றலாமா? அந்தக்
கடையனைப் பெரிய கோடீஸ்வரன்எனக்
கவிகள் பாடலாமா?

சம்பளம் ஆயிரம் ஆயிரம் தந்தும்
கிம்பளம் பெறலாமா? அந்த
வஞ்சகலஞ்சப் பாவியைப் பதவியில்
வைத்திருக்க லாமா?

கட்சிகள் தேர்தலில் காசுபணங்கள்
கொள்ளை கொள்ளலாமா? கழுகு
பட்சிகள் 'காகா' போல் பறந்தே
பணம் அடிக்கலாமா?

அக்ரமங்களைச் செய்வோர் தம்மை
அப்பா எனலாமா?
சக்கரம் உடைந்த ரயிலிலே ஏறி
சனங்கள் சாகலாமா?

வஞ்சனை சூதுலஞ்சப் பாவியை
மிஞ்சவும் விடலாமா? ரெண்டு
எஞ்சின் ரிப்பேர் ஏரோப்ளேனில்
ஏறிச் சாகலாமா?

ஆவிகொடுத்து மக்கள் தருகிற
வரியைத் திருடலாமா? அந்தப்
பாவியின் பிள்ளைபெரிய தலைவனாய்
பவனிகள் வரலாமா?

ஏழை எளியவன் துட்டுவாங்கினால்
எட்டுமாசம் ஜெயிலாம்!
பாழாப் போன படிச்சவன் லட்சம்
பணங்கள் வாங்கலாமா?

பட்டம் பதவிபடைச்சவன் எல்லாப்
பாவம் செய்யலாமா? கழுதை
சட்டம் அவனைக் காக்கும்என்ற
தைரியம் வரலாமா?

எத்தனை ஆயிரம்திட்டம் வந்தும்
ஏன்விளங்க விளங்கவில்லை? இங்கு
இத்தனைகோடி மக்கள் இருந்தும்
ஏன் துலங்க வில்லை?

அத்தனைபேரும் சேர்ந் துழைத்தால்
ஆகாததும் உண்டோ? அரசியல்
சொத்தைகளான சோம்பேறி கும்பல்
சொரணை பெற்றிடுமா?

வித்தைகள் செய்யும் மந்திரவாதி
உழவுகள் செய்வானா?
சுத்தி வளைச்சிப் பேசும்மந்திரி
சோறு போடுவானா?

## (வேறு)

சம்பந்திச் சண்டையில் கோட்டைவிட்டே - ஒரு
சத்துருக் காலில் வீழ்ந்தோமய்யா! வீண்
பொம்பளைச் சண்டையில் புத்திகெட்டே இந்த
பொன்னான வாழ்வை இழப்பதுவா?

செங்களத்தில் மாண்ட தீரபரம்பரை
சேமித்த வீர விடுதலையை
தங்கள் சுயநலச் சந்தையி லேபணத்
தாசர்கள் தேசத்தை விற்பதுவா?

கேனர்களும் குடிகேடர் களும்விலை
மாதர்களும் கலை மூடர்களும்
ஈனவிலைக்கிந்த இமயமலை நாட்டை
எதிரியுடன் விலை பேசுவதா?

ஓட்டுப்பிச்சைக் கேட்டு ஓடித்திரிகிறார்
நாட்டுக்கு யார்நலம் தேடுகிறார்?
வேட்டுவைத்தே விளையாடுகிறார் - இதை
வீரம் என்றே கவிபாடுவதா?

வீட்டுவழக்கினைத் தீர்ப்பதாகச் சொல்லி
வீட்டை விழுங்குவோன் வக்கீலா?
நாட்டுக்கு நலம்என்று வேட்டுகள்வைப்பவன்
நாசவிளையாட்டு தேவைதானா?

ஆயிரம்சண்டை இருந்தாலும் - அவை
அத்தனையும்நம் விவகாரம்! பெற்ற
தாயிடம் ஏதுக்கதிகாரம் - அவள்
தலையறுப்பதுவா வீரம்?

நாட்டை எதிரிக்குத் தந்துவிட்டால் - அவன்
நாளை நமக்கு உதை தருவான்! சொந்த

வீட்டைக் கொளுத்திக் குளிர்காய்ந்தால் - நாளை
வெயிலுக்கு யார்நிழல் தந்திடுவார்?

கோடி உயிர்தந்து கொண்ட விடுதலை
கோணங்கி நாடகம் ஆடுதற்கா?
வாடும்பயிர் எனஆடும் விடுதலை
வல்லமை பெற்று விளங்கிடுமா?

ஐந்தாண்டு திட்டத்தில்லாபம் என்றோம் - அந்த
லாபம் புகுந்தத யார்வயிற்றில்?
வந்தபலன் எல்லாம் எங்கே தொலைஞ்சுது
வல்லவரே அதைச் சொல்லுங்களேன்!

எந்தவொரு மொழிஆதிக்கம் இன்றியே
இந்தியர் ஒன்றாகத்தானிருக்கோம்! இன்று
விந்தைமொழிப் பிடிவாதத்தினால் பல
வீம்புகள் வந்தது யாராலே?

ஊருக்கு உபதேசம் செய்திடுவார் - அவர்
உள்ளுக்குள்ளே பழிவாங்கிடுவார்!
யாருக்குமே தெரி யாதென எண்ணியே
ஆளுக்கு ஆள்குழி தோண்டுகிறார்!

வெள்ளைத் துரைக்குப் பதிலாக இங்குக்
கள்ளக்கருப்புத் துரைத்தனமா?
கொள்ளை - கொலைகள் குறைந்ததுவா?
குற்றங்கள் வஞ்சனை தீர்ந்ததுவா?

வழிகாட்ட வேண்டிய மூத்தவர்கள்
கைகாட்டி மரமாக நிற்பதுவா?
பழிகாட்டும் வழியிலே ஓடுவதா இந்த
பாரதநாடுபா ழாவதுவா?

காளைஇளையவன் கிழவர்கள் சூழ்ச்சியைக்
கண்டுமிரண்டு முரண்டுகிறான்! அவன்
மூளைகொதித்தே மூட்டிய தீயினில்
முன்னின்று கத்தியைத் தீட்டுகிறான்!

வீரவிடுதலை நாட்டினிலே - இந்த
வேண்டாத தீயினை மூட்டுவதேன்?
'காரத்தை' எல்லோரும் காட்டுவதேன்? பெருங்
கோரத்தினால் நம்மை வாட்டுவதேன்?

பாவியர் சூழ்ச்சிகள் மண்ணாச்சா? இங்கு
பாட்டாளி வாழ்க்கையும் பொன்னாச்சா?
நாவிலே வல்லவர் வந்தாச்சா? அவர்
நாவளம் நல்ல பணமாச்சா?

கள்ளங்கபடம் குறஞ்சதுவா? கெட்ட
கலப்பட வஞ்சம் குறஞ்சதுவா?
பள்ளம் மறஞ்சிமே டானதுவா? பழி
பாவம் மறஞ்சி நெறஞ்சதுவா?

போலிக்கு நல்ல பதவிகளா?படு
பாவிக்கு எல்லா உதவிகளா?
ஆளுக்குத் தேள்அதிகாரங்களா? இந்த
ஆகாத வேதனை தீர்ந்ததுவா?

மன்னாதி மன்னரை மாத்திப்புட்டோம்!அவர்
மானியத்தைக்கூட வெட்டிப்புட்டோம்!இங்கு
தின்னூட்டுப்பேசற திண்ணை அரசியல்
தேவாங்கு நம்மை மிரட்டுவதா?

மன்னரை ஓட்டிமிரட்டிப் புட்டோம் - இன்று
மந்திரி நம்மை மிரட்டுவதா?

பின்னல் சிலந்திகள் கட்சிவலையில் ஓர்
பின்புத்திப் பூச்சியாய் மாட்டுவதா?

பெண்டாட்டி சேலையை வித்துப்புட்டே
பேசும்படத்துக்குப் போவதுவா?
திண்டாட்டத்தில் நாடு ஆடையிலே - இங்கு தேர்தல்
தெருக்கூத்து ஆடுவதா?

கன்னிஎனச் சொல்லி கர்ப்பத்தடைசெஞ்சி
கிழவிகள் கண்ணகி ஆவதுவா?
என்னென்னவோவழி தன்னில் பணம்பண்ணும்
ஈனர்கள் நம்மை ஆள்வதுவா?

ஏன்னுகேட்டா தேர்தல் நிதி இன்னு
ஏமாத்து வித்தைகள் செய்வதுவா?
இன்னும் ஒருதரம் கேட்டுப்புட்டாஆளை
இல்லாமலே கொலை செய்வதுவா?

பேனாபிடிக்கும்பே ராசிரியன் அவன்
பிராந்தி வியாபாரம் பண்ணுவதாஉதவி
மானாபி மானத்தை விற்பதுவா? அதில்
மாளிகை மண்டபம் கட்டுவதா?

பெண்ணைக் கெடுத்திட வண்ணக்கதை சொல்லும்
மண்ணாகும் புத்தகம் பத்திரிகை
மின்னிடும் மஞ்சள் மோகினியைப் போல - அது
திண்ணை தோறும்விலை போவதுவா?

காந்திப் படத்தையும் போடுகிறான் - அரள்
காஞ்சி முனியையும் கும்பிடுவான்!
சாந்தியின் வேதங்கள் ஓதும் கயவர்கள்
சர்வ கொலைகளைப் பண்ணுவதா?

எத்தனைஎத்தனை அநியாயம் - பழி
இத்தனைக்கும் யாரிங்குக் காரணமாம்?
சத்தியமாய் அந்தக் காரணத்தை - இங்கு
இத்தினமே காண வேண்டுகிறோம்!

பாலைவனத்திலும் சோலையுண்டு - இந்தப்
பாவத்துக் கும்பரி காரமுண்டு!
காலையிலே ஒளி காண்பதுண்டு - நம்மை
காந்தியின் சத்தியம் காப்பதுண்டு!

வீரக்கிழவர்கள்போரில் மடிந்தவர்
வெற்றியின் வீர சுதந்திரத்தைப்
பேரக் குழந்தைகள் சீருடன் காத்திடில்
பெற்றிடலாம் இன்பச் செல்வமெலாம்!

தாரணி போற்றிடும் போரணி வீரர்கள்
தலைமையிற் பெற்ற விடுதலையை
பூரணமாய் இனிப் போற்றியே காப்பது
புத்தியுள்ளவரின் கடமையப்பா!

தாதாபாய்வீர லாலா லஜபதி
தியாகத் திலகர் சிதம்பரமும்
நேதாஜிபக வத்சிங் குமரனும்
நெஞ்சுயிர் தந்த சுதந்திரமாம்!

இந்தியத் தாயின் இலக்கணமாம் - தேவி
எங்கள் அன்னைகஸ் தூரியம்மா
செந்தமிழ்ச் செல்வி வள்ளியம்மை - உயிர்
தந்ததால் வந்தசுதந் திரத்தை

ஏந்திப்பறக்குது இன்றுநம் கோட்டையில்
இந்தியத்தாய் மணிவீரக் கொடி!

இந்தக் கொடிநம் இன்னுயிரின் கொடி
எந்நாளும் காப்பதுநம் கடமை!

தேசத்தில் பட்டினி இல்லாமல்
தீமை வறுமைகள் கொல்லாமல்
பாசமுடனே உழைத்திடுவோம்
பாரத நாட்டினைக் காத்திடுவோம்!

சிந்தை துணிந்து எழுந்திடுவோம் -
சிங்கத் தலைவரை எண்ணிடுவோம்!
எந்தையர் நாட்டினைக் காத்திடுவோம் - வரும்
ஏழு தலைமுறை வாழ்த்திடவே!

# நம் தாய்

# நம் தாய்

## காலம் - 1

**இடம்** : மலைச்சாரல்

**காலம்** : பின்மாலை அந்திப் பொழுது

*(சிந்தனைக்குத் தூய்மை தரும் சிறப்பான சோலைகள். பார்த்ததுமே பசி தீர்க்கும் கனிகள் தரும் தோப்புகள். எழுந்துவரும் ஒலிகளையெல்லாம் எதிரொலிக்கும் குன்றின் சுவர்கள். வானளக்கும் பெரு மலைகள். முகில் தூங்கும் சிகரங்கள். அருவிகள் பாயும் சாரல்கள். ஆங்காங்கே சிறு குகைகள். அம் மலையின் ஓரத்தில் ஆற்றோரக் கரையழகு. அங்கெல்லாம் கல்மேடை. சாந்தி மலர்ச் சோலைகள். சீரான இளந் தென்றல் தலையாட்டும் பெரு மரங்கள். இங்குதான் நமது நாடகத் தலைவனையும், தலைவியையும் சந்திக்கிறோம். அவன் பெயர் வானழகன். அவள் பெயர் வேல்விழி. அவனே அவள். அவளே அவன். இருவரும் உயிரும் காற்றுமாகி நெடுநாட்கள் ஓடி விட்டன. இவர்களின் இன்ப வாழ்வின் அன்புச் செவிலிபோல் விளங்கியது அக்கானகம். இவர்களது பாசவலையில் அகப்பட்ட அன்புப்பறவையைக் கூட்டில் வைத்து வளர்க்கவில்லை. அப்பறவை இவர்களை விட்டுப் பிரியாமல், குழந்தையாக வளர்கிறது. இவர்கள் இலட்சியம் இந்த இன்பத்தோடு நிறைவு பட்டதாகத் தெரியவில்லை. இதனையும் தாண்டியதொரு குறிக்கோள் இவர்களை எதிர்நோக்கிக் கூவிக்கொண்டே இருக்கிறது. அதையடைய வெகுதூரப் பிரயாணம் செய்ய வேண்டிய நெருக்கடியும் அவர்களுக்கு உண்டு. அந்த ஆபத்தான பயணத்தில் குறுக்கிடும் பல மிருகங்களை வேட்டையிடவே*

*வில்வித்தையைத் தன் துணைவிக்கும் கற்றுத் தருகிறான் வானழகன். உடல் களைப்புத்தீர கீழ்க்காணும் உணர்ச்சிமிக்க வழிநடைப் பாடலையும் பாடி விளையாடுகின்றனர். அவன் வேடன் போல் சிறுத்தைத் தோலணியை ஆடையாகக் கொண்டுள்ளான். அவள் அதே தோலாலான போர்வீரன் முழுஉடுப்பை, தனது மெல்லிய மேனி உறுத்தலையும் பொருட் படுத்தாது போட்டுக்கொண்டு, பாட்டுடன் போர்க்கலைப் பயிற்சியும் பெறுகிறாள். அவளது குமுதச் செவ்வாய் பண்தேன் கொட்டுகிறது. குறுகுறுத்த விழிகள், அம்பின் பின் சிறகின் வழியாக தூரக்குறி நோக்கிப் பாய்கின்றன. அவள் வளைக்கும் வில்லும், மேனியும், ஒன்றையொன்று போட்டியிட்டன. மலர்க்கரம் துவண்டது. ஆனால், அவள் மனம் அப்படியல்ல. அவனது வெங்கலக்கைகள், அவள் கரங்களைப் பிடித்துப் போர்ப்பயிற்சி தரும் போதெல்லாம் ஏற்படும் துன்பமெல்லாம் இன்பமாகவேமாறித் துணிவைத் தந்தது. அவனும் குன்றின் குகையெல்லாம் எதிரொலிக்கப் பாடுகிறான்-)*

**நம்தாய் நம்தாய் நம்தாய்**
**எந்தன் அன்னைதந்தை வாழ்ந்தசொந்தமானநாடே**
**வந்தநண்பர் பசியைநீக்கும் பந்தமானவீடே**
**சிந்தையெங்கும் சீர்மைதந்த விந்தையானமாதா**
**எந்தநாளும் நமது தெய்வம் இந்ததேசத்தாய்தான்**
**நம்தாய் நம்தாய் நம்தாய்**

*(குன்றின் குகையிலிருந்து வந்த எதிரொலியைக் கேட்டு வியந்து)*

**வேல்** : கேட்டீர்களா எதிரொலியை! குன்றும், கூடப் பாடுகிறதே!

**வான்** : வேல்விழி! உன் வீர ஒலியைக் கேட்ட குன்று உயிர்பெற்றுப் பாடுவதில் வியப்பொன்று மில்லையே.

**வேல்** : எதிரொலி சுருதி சுத்தமாக வல்லவா கேட்கிறது.

**வான்** : எங்கே பாடு.

**வேல்** : நம் தாய் நம் தாய் நம் தாய் *(பாடல்)*

**எதிரொலி** : *நம் தாய்*

வேல் : அதுகூட நம் தாய் என்கிறதே.

வான் : ஆம் கண்ணே! குன்றும் நம்மைப் போலவே இந்தப் பூமிதேவியின் கர்ப்பத்திலே ஜெனித்தது தானே. அதுதான் உரிமையோடு நம்தாய் என்று நம்மோடு சேர்ந்து கொள்ளுகிறது. சரி நேர மாகிறது. அதோபார் அந்த மரக்கிளை! ஒரே அம்பில் துணிபட வேண்டும்.

*(இருவரும் மீண்டும் பாடி போர்ப் பயிற்சியைத் துவங்கி கால் கை சோர ஓடி விளையாடியபின்)*

வேல் : அப்பா... *(சேர்ந்து அமர)*

வான் : வேல்விழி! வானழகனின் துணைவியான நீயா இவ்வாறு வாட்டங்கொள்வது? பகைவர்களின் இரத்த வாளைத் தூளாக்கி வாழவேண்டிய புனித மான சந்தர்ப்பமே நமக்கு இப்போர்க் கோலத் தைப் பிறப்புரிமையாக அளித்துவிட்டது. அவர் களின் கொடுமையை எண்ணிப்பார். சோர்வும் துயரமும் காற்றில் பறந்து போகும். ஒரே அம்பில் அதோ அந்த மரக்கிளை முறிந்து விழ வேண்டும் எங்கே!

வேல் : நானா சோர்ந்து விட்டேன். குறிபார்த்து நாணை இழுப்பதற்குள், வீரமழையைக் கொட்ட ஆரம்பித்து விடுகிறீர்களே!

வான் : ஓகோ சரிதான். குறிபார்த்து அம்பெறியும் வரை யில் பகைவனும் தன் தலையை அசையாமல் நீட்டிக் கொண்டிருக்க வேண்டும். அப்படித் தானே?

வேல் : ஆமாம். என்றுதான் எனக்கு சக்தி இருப்பதாக ஒப்புக்கொள்ளுகிறீர்கள்? சரி இது போகட்டும் வாட்போரில் பாருங்கள் என் வல்லமையை நேற்று முழுதும் கை நோக வீசிப் பழகினேன்.

வான் : அப்படியே, எங்கே?

*(இரண்டு வாட்களைப் பாறையின் மறைவி லிருந்து எடுத்துவந்து அவனிடம் ஒன்றைத் தந்து)*

**வேல்** : உம். எதிர்த்து நில்லுங்கள் பார்க்கலாம்.

*(சண்டையிட்டுத் திறமையைக் காட்ட)*

**வான்** : சபாஷ்! வேல்விழி இன்றோடு என் கவலை ஒழிந்தது. எதிர்க்கவரும் குண்டர்கள் இன்றே வீழ்ந்து விட்டார்கள். உண்மையிலேயே நீ வாட் போரில் நல்ல பயிற்சி பெற்றுவிட்டாய். கண்ணே, நான் இவ்வளவு திறமையை எதிர் பார்க்கவே யில்லை.

**வேல்** : உண்மையாகத்தான் சொல்லுகிறீர்களா?

**வான்** : ஆம் கண்ணே. தற்காப்புக்கேற்ற பயிற்சியைப் பூரணமாகப் பெற்றிருக்கிறாய்... ஒவ்வொரு பெண்ணுக்கும் இவ்வளவு சக்தியிருந்தால் போதுமே எளிதில் பேயர்களின் கொட்டத்தை பொய்யாக்கி விடலாம்.

**வேல்** : உண்மையில் நாம் நமது இலட்சியத்தை அடைய முடியுமா? எண்ணில்லாத சூழ்ச்சியும் பக்க பலமும் உள்ள பனித்தீவின் சந்ததியே பூண்டற்றுப் போகச் செய்ய முடியுமா?

**வேல்** : வேல்விழி! மிகச் சாதாரண பெண்களுக்குரிய இந்த சலிப்பும் சந்தேகமும் உன் வாழ்க்கை யில் குறுக்கிடுவதை நான் விரும்பவில்லை. பெண்மைக்குரிய ஆற்றலைப் பொலிவாக்கி வளர்ப்பதே உன் கடமை. நீ மகாசக்தியின் வல்லமை கொண்ட வீரமணி. உனக்கு உரிமை யான மனவன்மையை நீயே தாழ்த்திக் கொள்ளாதே. தன்னம்பிக்கையில் தளர்வின்றி துணிவோடு நில். அஞ்சி நடுங்காதே.

**வான்** : நடுங்கவில்லை. எதிரிகளின் விலங்குத்தனமான படை வலிமையை எதிர்க்கத்தக்க எண்ணற்ற

துணைகள் நமக்கும் இல்லையே என்ற கலக்கந் தான் அடிக்கடியும் வட்டமிடுகிறது.

**வான்** : வேல்விழி! துணையை எங்கு சென்று தேடுவது? நமது நாட்டு வாலிப சந்ததியாரெல்லாம் பிடி பட்டு விலங்கினும் கேவலமாக அடிமைச் சந்தை யில் விற்கப்பட்டு விட்டார்கள். மீதியிருப்பவர்கள் எதிரிகளின் கண்ணில் படாதவாறு இத்தகைய மலைக்காடுகளிலும், மறைவான குகைகளிலும் காலத்தைப் போக்குகிறார்கள். நமது ஆத்ம பலமே நமக்கு உற்றுழி உதவும் முதல் துணை. உலகில் தலைசிறந்தவை நட்பும், உண்மையும், துணிவும். அதை அஸ்திவாரமாகக் கொண்டு, மூண்டெரியும் நமது பழியுணர்ச்சி, தன் இலட்சி யத்தை அடைவது உறுதி. சோதனைகள் வரும். அவற்றைக் கண்டு மலைத்து விடாமல் முன்னேற வேண்டும். உம்... சரி. நீ உன் தாயிடம் செல். நான் நாட்டுக்குள் சென்று பார்வையிட்டு வருகிறேன். நிலைமை முன்னிலும் சற்று முன்னேறியிருப்பதாகத்தான் தெரிகிறது. பனித் தீவிலிருந்து பொன் மேனிராயனுக்குச் சிலப் புதுப்படைத்துணை உடன்படிக்கையும் நடந் தேறியிருப்பதாக வதந்தி. வஞ்சகப் பதரை விரைவில் சாம்பலாக்கி விடுகிறேன். வேல்விழி! நான் வருகிறேன்.

**வேல்** : இவ்வளவு அவசரமா? சற்றுப் பொறுங்களேன் போகலாம்.

**வான்** : இப்பொழுது புறப்பட்டால்தான் நள்ளிரவுக்குள் திரும்பிவர முடியும்.

**வேல்** : இனியும் கொஞ்சம் இருள் சூழட்டும் வெளிச்சம் நன்றாக மறைந்தபின் போவதே நல்லது. தாங்கள் அடிக்கடியும் நாட்டுக்குள் போகக்கூடாதென்று நான் தடுப்பதை தயவுசெய்து பொறுத்தக்

கொள்ளத்தான் வேண்டும். இந்த பௌர்ணமி நாள் தீர்ந்த பிறகு வேண்டுமானால் உங்களிஷ்டப் படி போகலாம். பகல்போல் நிலவு காயும் முழு நிலா உங்களைப் பகைவர் கையில் காட்டிக் கொடுத்துவிட்டால் என்ன செய்வது?

**வான்** : பார்த்தாயா மீண்டும் ஆரம்பித்து விட்டாயே, வேல்விழி! முழுமதி என்னைக்காட்டி கொடுக்கு மாறு நான் அதற்கு ஒரு தவறும் செய்ய வில்லையே. நீ குகைக்குள் போயிரு.

**வேல்** : அதெல்லாம் முடியாது. கொஞ்ச நேரம் என் சட்டத்துக்குக் கட்டுப்படத்தான் வேண்டும். வறண்ட வாழ்க்கையில் இந்தச் சிறு இனிமைக்குக் கூடவா இத்தனைத் தடை உத்திரவுகள்?

*(அழுகிறாள்)*

**வான்** : அப்பா, உதிர்ந்ததா கண்ணீர் முத்து. சரி நான் உன் உத்திரவு பெறும்வரை நகருவதேயில்லை. மகிழ்வுதானே?

**வேல்** : ஆமாம். ஒரு சந்தேகம். நான் அணிந்திருக்கும் இந்த உடையையே எப்பொழுதும் போட்டுக் கொள்ளட்டுமா?

**வான்** : வேல்விழி! என்ன எப்பொழுதுமா?

**வேல்** : ஏன் நன்றாயில்லை. எனக்குப் பொருத்த மில்லையா?

**வான்** : கண்ணே! இயற்கை யெழிலும் செயற்கை அணியும் சேர்ந்து பின்னிய இளங்கொடி நீ. பழமையும், புதுமையும் கலந்து புதுச் சமுதாயத் தின் பிரதி நிதிபோல் காட்சி தரும் இந்தப் பேரின்பத் தோற்றத்தைப் பொருத்தமில்லை யென்று சொல்ல மனம் வருமா, அழகை மறைப்பதற்குச் செய்த இந்த அலங்காரம் கணந் தோறும் பெருகும் உன் சௌந்தர்யத்தைப்

*பதின்மடங்கு அதிகமாக்குகிறதே ஒழிய மறைத் பாடில்லையே.*

**வேல்** : *நான் என்ன அவ்வளவு அழகியா? தாங்க நேற்று என்னமோ தனிமையாகப் பாடி கொண்டிருந்தீர்களே. அதை நான் கேட்க கூடாதென்று தானே நான் பிரவேசித்தது நிறுத்தி விட்டீர்கள்...*

**வான்** : *நீ கேட்கக்கூடாதென்றல்ல - கேட்ட பி சண்டைக்கு வருவாயென்று பயந்தே மறைத்தே*

**வேல்** : *சரி... பாடுங்கள்.*

**வான்** : *பாதியில் படையெடுக்க மாட்டாயே?*

**வேல்** : *பாடுங்கள்.*

வாட்டமில்வயதின்ஜோதி - வளத்தொழில்
வளரும் தோட்டம்
நீட்டமாய்த் தரையைவெட்ட
நெளிந்திடும் சடையின்சட்டம்
சாட்டைபோல் கருத்தபாம்பின்
சடலமோ என்னத்தோற்றும்
போட்டிக்கு வருவோர்க்கெல்லாம்
போதையைப்பூசும் நாட்டம்!

**வான்** : *மணம் தந்த புதுமலரே! பாவம் எத்தனை நா யாக இந்த கடினமான தோல் உடுப்பை போட்டுத் தவித்து நிற்கிறாய்?*

**வேல்** : *உங்கள் பொருட்டு இரும்புக் கவசத்தையேனு ஏற்றுப் போர்புரியச் சித்தமான என்னை இ தோலுடை என்ன செய்யும்? இன்னும் எத்தன ஆண்டுகளுக்குத்தான் நாம் இப்படிக் காட்டி மறைந்து வாழ்க்கை நடத்துவது? நாகரீகமடை மனித குலத்தில் விடுதலை பெற்ற தம்பதிகளா உலவ வேண்டிய நாம் இப்படி மலைக் குகையி ஒண்டிக் கிடந்தே சாக வேண்டியதுதான*

அப்பப்ப! மனிதன் மனிதனுக்கு அஞ்சி வாழும் மிருகப்பிராயத்தை மீட்கத்தான் போகிறோமா?

வான் : வேல்விழி! நமது இன்பத்தில் இந்நாட்டின் தலை விதியும் பிணைக்கப்பட்டுள்ளது. நமது ஆயுட் கால முழுவதும் வேண்டுமானாலும் இந்தக் குகை யிலேயே வாழ்ந்துவிட வசதி செய்ய என்னால் முடியும். ஆனால் நம்போன்றே இன்ப வனத்தில், அன்புவானில் மிதந்து இனிக்க வேண்டிய லட்சக் கணக்கான இளங்காதலர்கள் கூண்டுப் பறவை போல் பனித்தீவின் அடிமைச் சந்தையிலே விலை கூறி விற்கப்பட்ட விலங்குகளாகி விட்டதை எண்ணும்போது, நமது இன்பக் கனவெல்லாம் சிதறிப் போகின்றதே, நானென்ன செய்வேன்? நமக்குத் தோன்றப் போகும் சந்ததிகளும் இப்படியே குகை வாழ்விலேயே வாழ்ந்து, கானகத்து மனிதர்களாக வேண்டியதுதானா? இவைகளை உத்தேசித்தே நான் பயங்கரமான எதிரியை வீழ்த்த என் கருத்தை உருப்படுத்து கிறேன். இந்தப் பெருந்துணிவில்லா விட்டால் நான் உனது சௌந்தரிய ஒளியைவிட்டு ஒரு கணங்கூடப் பிரிந்திருக்க மாட்டேன் கண்ணே, நமத இன்பப் பசியைப்போலவே எண்ணற்றவரை வாட்டும் இதயப் பசிக்கும் பரிகாரத்தை அதி விரைவில் தேடிவிடுகிறேன். வேல்விழி.

வேல் : விரைவில் விரதம் முடியட்டும். தணியாத தாகம் அது ஒரு அணையாத பெருநெருப்பு. பற்றி எரிகிறது. நாமா தீ வைத்தோம்? பருவக் காற்றால் ஆன பாசவலையில் மீளவழியின்றி தவிக்கின் றோம். இதன் பொறுப்பை, யார் மீதும் சுமத்து வதற்கில்லையே! இயற்கைச் சக்தியின் இன்ப விளையாட்டு.

வான் : வேல்விழி! இப்படி அருகில் வா. அமரு. சாந்தங் கொள். எங்கே உனது உன்னதமான துணிவு?

இதோ பார். சுற்றிலும் பறவைகள்கூட விடுதலை யோடு வாழ்கின்றன. பகுத்தறிவுள்ள நாட அடிமைகளாகவா? வாழ்வது?

**வாணி :** வேல்விழி! அம்மா!

*(வாணியம்மை பிரவேசிக்கிறாள்)*

**வாணி :** வேல்விழி! அம்மா! என்னம்மா, இவ்வளவ நேரமாகவா வெளியில் உலாவுவது? தம்பி அழகு உலகம் தெரிந்த பிள்ளையான நீ கூடவா சொன்னதைக் கேட்கக்கூடாது? நமது காரியப் கைகூடும் வரையில் எச்சரிக்கையாகவே காலப் தள்ள வேண்டுமப்பா.

**வான் :** பார்த்தாயா! நான் சொன்னால் கேட்டால் தானே வேல்விழி! இப்பொழுதாவது கேள் உன்தாய் சொல்வதை. அத்தை! நான் தலைநகரத்துக்குச் செல்ல வேண்டும் என்று புறப்படும் போதெல் லாம் தடையுத்திரவுகளும், தர்க்க வாதங்களும் இப்படி யெல்லாமிருந்தால் எப்படி இலட்சி யத்தை முடிக்க முடியும்? நீங்களே நன்றாக புத்தி கூறுங்கள்.

**வாணி :** ஆமாம் அப்பா! நான்கூட சொல்ல வேண்டு மென்று நினைத்தேன். நிலா மறையும் வரையில் இங்கேயே இருந்து தேய்பிறை காலத்தில் துப்பறியும் வேலையில் ஈடுபடுவதே உசிதமான தாகுமப்பா.

**வேல் :** பார்த்தீர்களா? நான் சொன்னால் கேட்டால் தானே. அம்மா! நானும் அதைத்தானம்மா நீங்க வரும்போது சொல்லிக் கொண்டிருந்தேன். கண்டித்துச் சொல்லுங்களம்மா.

**வாணி :** இதென்னம்மா புது உடை?

**வேல் :** போர்க்கவசம். அவர்தான் தயாரித்தார்.

**வாணி :** ஊஹூம். உங்கள் எண்ணம் கடவுள் செயலால் நிறைவேற வேண்டும். பனித்தீவின் அரக்கக்

கூட்டத்தை எதிர்க்க ஆயுதமும் ஆள் வலிமையும் நாம் திரட்ட முயல்வதுகூட பைத்தியக் காரத்தனம்தான்.

**வான்** : அத்தை! நீங்கள் பேசியதால் பொறுத்தேன். வேறு யாரும் இந்த ஒப்பற்ற முன்னேற்ற முயற்சியை ஏளனம் செய்திருந்தால்...

**வேல்** : இந்தா! நீங்கள் பேசியதால் பொறுத்தேன். வேறு யாரும் இந்த ஒப்பற்ற என் தாயின் முன் உரக்கப் பேசியிருந்தால்... உம் ஆமாம்.

**வாணி** : சரி. வாருங்கள் இருப்பதைச் சாப்பிட்டு உள்ளேயே இருந்து பேசலாம். *(சில அடிகள் நடந்து)*

**வாணி** : உம்... தம்பி! இந்தக் காலடிச்சுவடுகளை யெல்லாம் கலைத்து விடுவது நல்லது. ஒருவேளை துப்பறியும் நரிகள்...

**வான்** : அந்நரிகள் வரட்டுமே. இக்காட்டிலுள்ள பறவைகளுக்கு ஏற்ற விருந்து கிடைக்கும். எதற்கும் தங்கள் யோசனையும் நல்லதே. *(அடிகளை அழிக்கிறான்)*

**வேல்** : என்ன இது! இப்படித்தானா! பேஷ்... பேஷ்... இதோ அதற்கு வழி.

*(நீண்ட மூங்கிலில் ஒரு பிரம்புப் பின்னல் செய்து அதைக் கலைத்து)*

**வேல்** : எப்படி?

**வாணி** : அழகு! உணவுப் பொருள்கூட ஆய்விட்டதப்பா!

**வான்** : நாளை இரவு கொண்டு வருகிறேன்.

**வேல்** : எங்கிருந்து?

**வான்** : தேவையற்றோர் தேக்கி வைத்துள்ள களஞ்சியத்தில் கொள்ளைகொண்டு வருவேன். பசிக்கு எடுப்பது திருட்டல்ல.

**வேல்** : *பசித்தபோது உணவு தராதவர்கள்?*

**வான்** : *இரக்கமற்ற கல்நெஞ்சர்கள்.*

**வேல்** : *இதை மறக்காமல் நாளை நான் கேட்குமிடத்தில் திரும்பியும் சொல்லவேண்டும் தெரியுமா?*

**(காட்சி முடிவு)**

## ஒலி – 2

**காலம்** – பகல்

**இடம்** : பொன்மேனிராயன் மாளிகை

*(அன்பு நாட்டிலிருந்து பனித்தீவுக்கு அடிமை வியாபாரம் செய்யும் அதிபதி. பானை வயிறும் பகட்டான ஆடையும் பூண்டு உலகை ஏய்ப்பவன். சதா தன் நாய் வால் மீசையை முறுக்கிக்கொண்டேயிருப்பான். அவன் அளவுக்கு மீறி அலங்கார நடையுடை பாவனைகள் நகைச்சுவைமிக்க கேளிக்கையாயமைய வேண்டும். பலவித கோணலான ஒரு கிரீடம். பலவித நிறத்தாலான மேலுடை. அதேபோல் காலணி. மேனியெங்கும் பொன்னகைகள் மின்னவேண்டும். இவன் வருகைக்காக வீரர்கள் மண்டபத்தில் காத்து நிற்கின்றனர். அவன் பிரதானியான மலைகிள்ளு மாயன் பிரவேசித்து கட்டியங் கூறுகிறான்)*

**மலை** : *பராக்ரமசீல, பரிதாபகால, பரஞானமோன படாடோபமான, பலசாலிவேக, பணசாகரத்தின், பொன்மேனி முடிராய மகாபிரபுக்கு.*

*(அவன் எதிர்பார்த்தவாறு மற்றவர் "ஜே" சொல்லாமல் நின்றதைக்கண்டு திகைத்து)*

*அடே! ஏனடா வழக்கம்போல் ஜே சொல்ல மாட்டேன் என்கிறீர்கள்? காரணம்?*

**வீரன்** : *காரணமா! வழக்கம்போல் கூலி முதலில் வர வேண்டும். இல்லாவிட்டால் சப்தம் எப்படி வரும்?*

மலை : ஓகோ! தங்கம் தரமறந்து விட்டேனோ? இதோ வந்துவிட்டேன்.

*(பையிலிருந்த பொன்னை எல்லோரிடமும் தந்த பின் முன் கூறிய அதே கட்டியத்தைக் கூற எல்லோரும் பின்பற்றி "ஜே" என்று சப்தமிட பிரவேசிக்கிறாள். மலைபோன்ற தொந்தியும் மரமான மண்டையையும் சுமந்த பொன்மேனி ராயன்)*

பொன் : அடா! மலைகிள்ளு மாயா!

மலை : மகாபிரபு.

பொன் : இவர்களுக்கெல்லாம் நம் சமூகத்தின் மீது அளவில்லாத விசுவாசம். அப்படித்தானே?

மலை : ஆகா! அப்படித்தான். அவர்கள் ஜெய கோஷத்திலிருந்தே அவர்கள் உள்ளே இருக்கும் அன்பு பொங்கி வழிவதைக் கண்ட பின்னுமா எங்கள் அன்பின் மீது சந்தேகம்?

பொன் : மகிழ்ந்தேன். மலைகிள்ளு மாயா!

மலை : மகாபிரபு.

பொன் : பனித்தீவிலிருந்து மேலும் அழைப்பு வந்திருக்கிறது. நாம் புறப்பட வேண்டும். நேற்று கப்பலில் எத்தனை அடிமைகளை அனுப்பினாய்?

மலை : நூறு பெண்ணடிமைகள். ஐம்பது ஆண் அடிமைகள்.

பொன் : ஆம். பெண்களைத்தானே எப்போது பார்த்தாலும் பெருவாரியாக அனுப்பிக் கொண்டிருக்கிறாய்?

மலை : உலக விருப்பத்தை அனுசரித்து நடந்தால்தானே வியாபாரம் ஓங்கி வளரும். ஜனத்தொகையில் கூட அவர்கள் தானே அதிகமாகி விட்டார்கள்.

பொன் : கணக்கெல்லாம் அவ்வப்போது சரியாக...

மலை : ஓ! எல்லா கணக்கையும் அவ்வப்போது தீர்த் கொண்டே வருகிறேன்.

பொன் : மலைகிள்ளுமாயா! அரண்மனையில் திருட நடந்து விட்டதாமே. நிச்சயமாகவா? திருடனை கண்டுபிடிக்கும் வரையில் என்மனம் குழம் கொண்டேயிருக்கும்.

மலை : தெளிவாக்கி விடலாம். கவலைப்படாதீர்கள்.

பொன் : அடுத்த முறை வரும்போது பனித்தீவிலிருந்து முரட்டு வீரர்களை அழைத்து வந்தால் தா நமக்கு உதவியாயிருக்கும் இல்லையா?

மலை : ஆமாம். அப்படித்தான் செய்யவேண்டு அடிமைகள் அப்படியே சும்மா வாலாட்ட கற்றுக் கொள்ளுகிறார்கள்.

பொன் : நமது வியாபாரம் மாத்திரம் நிற்காமல் நடைெ வேண்டும்.

மலை : நடப்பதா! சே. ஒடும்படிச் செய்துவிடுகிறேன்.

*(இரண்டு வீரர்கள் கண்டு அடிமைகை விலங்கிட்டுப் பிடித்து வந்து)*

வீர : மகாப்பிரபு! நேற்றிரவு கிடைத்த அடிமை.

மலை : இரவு முற்றும் தேடி இரண்டு பேரைத்தா பிடிக்க முடிந்தது?

வீர : ஆமாம். பிரபோ.

(காட்சி முடிவு)

## ஒலி – 3

**காலம்** : மாலை

**இடம்** : குகை

*(வாணியம்மை கண்ணீர் சொரியும் காட்சி. அவள் மனோ சாட்சியின் எதிரொலி)*

வாணி : *ஆண்டவா! ஒருவன் கோபுரத்தின் சிலையாக இருக்கிறான். மற்றொருவன் புழுதியின் பூச்சியாகி நெளிகிறான். இந்த உலக நிலை முடிக்க முடியாத விதியா? மடையர்களை மலை மீது வைக்கிறாய். அறிஞர்களைச் சேற்றிலே தள்ளுகிறாய். குற்ற வாளியை நீதிபதியாக்குகிறாய், நிரபராதியைக் கைது செய்கிறாய். பெண்ணின் கண்ணீர் யுக யுகாந்தரங்களாகப் பெருகிக் கொண்டேயிருக்க வேண்டியது தானா! தாய்க் குலமான பெண்மை யையே தின்று, கொழுத்து வேட்டை நாய்களாகி விட்ட பனித் தீவின் பிரபுக்களும் தான் வாழ் கின்றார்கள் தாங்கள் மனித சென்மம் என்பதையே மறந்து இந்த நாட்டு மக்களும் தான் மானமிழந்து வாடுகின்றர்கள். நீதிக்கும், அநீதிக் கும் வேற்றுமை இன்றி ஒன்று கலந்த வஞ்சக உலகத்தின் மாயத்திரை மாறப் போவதில்லையா? உம். மாறுமென்ற நம்பிக்கை எனக்கில்லை. அப்படி மாற வேண்டிய காலம் வந்திருந்தால், என் ஒருவள் வாழ்க்கையில் நடந்த சொல்ல முடியாத கொடுமை ஒன்றே போதாதா? அல்லல் பட்டு ஆற்றாது அழுத என் கண்ணீர்த் திவலை கள் ஒவ்வொன்றும், ஒவ்வொரு நாட்டை நாசமாக்கும் பழி கலந்ததாயிற்றே. ஆண்டுகள் பலவாகியும், எனது உள்ளத்தில் என் மைந்தனை மறக்க முடியவில்லையே. இரத்த பாசம் கூடவா பொய்யாய்ப் போய் விட்டது? தாயன்பு அழிக்க*

முடியாத தெய்வீகம் என்பார்களே! எல்லாம் சொல்லழகின் பின்னால் தானோ? சூன்யக் காட்டிலே, குழப்ப இருட்டிலே, சுற்றி மடியவா பெண்ணாய்ப் பிறந்தேன்?

**வேல்** : அம்மா! என்னம்மா எனக்கு தைரியம் கூறும் நீங்கள் இப்படி எந்நேரமும் தேம்பிக் கொண்டிருக்கிறீர்களே? தாங்களே கண்ணீர் வடித்தால் நானென்ன செய்வது?

**வாணி** : கண்ணே! நீ வந்து விட்டாயா? ஒன்றுமில்லை அம்மா! உங்கள் வருங்கால வாழ்க்கையைப் பற்றி எண்ணிக் கொண்டிருந்தேன். என்னையும் அறியாமல் கண்ணீர் வருகின்றது.

**வேல்** : தாயே! தங்கள் அன்பும் ஆசியும் என்னையும் வானழகரையும் கட்டாயம் இன்ப உலகில் இணைத்து விடும் என்பதற்குச் சந்தேகமே இல்லையம்மா.

**வாணி** : ஆனால் வானழகனின் வீர வாழ்வு உனக்கு மாத்திரம் ஒதுக்கப்படாமல் உலகெங்கும் கவிழ்ந்து மூடிக் கொண்டிருப்பதை எண்ணும் போது தானம்மா என்னையுமறியாமல் துயரம் மூளுகிறது.

**வேல்** : அம்மா! அவர் அன்பின் அகண்ட சக்தி எனக்காக மாத்திரம் தேங்கி, என்னிடத்திலேயே நிலைத்து விட்டால், நிலையற்றுத் தவிக்கும் உலக நிலையின் பேய் நடனத்தை அழிக்க வேறு யாரம்மா இருக்கிறார்கள்? உலகத் தாய். அபலைத் தாயாகி விடுவாளே.

**வாணி** : உங்கள் துணிவைக் கண்டு தானம்மா என் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது.

**வேல்** : அம்மா! சென்றதை மீண்டும் பெற முடியாது. வருங்காலத்தின் நிகழ்ச்சிக்கு வேலியிடவும் முடியாது. இன்று வானழகர் செய்து வரும்

முயற்சி வெற்றி பெற்று விட்டால், பிறகு சிதறிக் கிடக்கும் நம் தாயகத்தின் மனித சக்தி ஒன்று பட்டு உறுதி பெற்று விடும். பிறகு எண்ணும் இன்பமெல்லாம் திண்ணமாக வரும். பனித் தீவினரின் பெருங் கொலைப் பணியையும் புறக் -கணித்து விடலாம். வருந்தாதீர்கள் அம்மா. இவ்வளவு இடையூறு களிலும் தாங்கள் நம்பும் அந்த ஆண்டவன், விதி இவை கூட நம்மைச் சாக்காட்டில் தள்ளாமல் வாழ வைத்திருப்பது இதற்காகத்தான் என்பதை எண்ணியாவது ஆறுதல் பெறுங்கள்.

வாணி : ஆகட்டும் அம்மா. ஆனால், நீ மட்டும் எச்சரிக்கையாக இரு. நமது முல்லையாற்றைக் கடந்து போகும் வழக்கத்தை விட்டு விடு.

வேல் : அவ்வாறே அம்மா. எதற்கும் பயப்பட வேண்டாம் அம்மா. வாழப் பிறந்த சந்ததிகள் நாம். வீழ்ச்சியைப் பற்றி எண்ணுவது கூட எனக்குக் கசப்பாயிருக்கிறதம்மா.

வாணி : நீ சொல்வது சத்தியமான நீதிதானம்மா. ஆண்கள் எவ்வளவு துணிவும் கொண்டிருக்கலாம். அவர் களுக்குச் சத்ருக்கள் அதிகமில்லை.

வேல் : தைரியம் ஆண்களுக்கு மாத்திரம் ஏகபோக உரிமையல்ல அம்மா. மழையும், காற்றும், வெயி லும் போலத் துணிவும் தூய்மையும் உயிரினத்தின் பொதுவான சொத்துக்களம்மா.

வாணி : அதற்காகச் சொல்லவில்லை வேல் விழி! நம்மைக் காட்டிக் கொடுக்க, நம்முடனேயே ஒரு பயங்கர மான சத்ரு பிறந்திருக்கிறது.

வேல் : என்னம்மா விளங்கவில்லையே.

வாணி : மகளே! அழகும் ஆபத்தும் இணை பிரியாத பொருள்கள். செம்மணியின் ஒளி போல் வியாபித்த உன் சௌந்தரியமே, உன்னை

வஞ்சகருக்குக் கூட்டிக் கொடுக்க பெரிய எதிரி. ஆதலால் வானழகனை விட உனக்குத்தான் எச்சரிக்கை அதிகமாக வேண்டும்.

**வேல்** : ஆபத்தின்றி அழகு வாழ முடியாதா தாயே!

**வாணி** : முடியாதம்மா. கருங்காகத்தைப் பிடிக்க யாராவது வலை வீசுகிறார்களா? இல்லை. ஆனால் பச்சைக் கிளியைக் கூட்டில் அடைத்துக் கொஞ்சுகிறது உலகம். இது அழகின் மோகன போதையிலே எழுந்த ஆசை வெறியாலல்லாவா! ஆகவே நமது வாழ்வின் ஒவ்வொரு விநாடியிலும் எச்சரிக்கை வேண்டுமம்மா. சரி எங்கே வானழகன்? அவ்வளவு கூறியும் தலை நகரத்துக் குள்போய் விட்டானா?

**வேல்** : இல்லையம்மா. எங்காவது வேட்டைக்குச் சென்றி ருப்பார். வந்து விடுவார்... இன்று ஒரு கரடியைக் கொல்லாமல் திரும்புவதில்லையென்று கூறிச் சென்றாரம்மா.

(திருப்புக் காட்சி)

## ஒலி – 4

**காலம்** : நள்ளிரவு

**இடம்** : பொன்மேனிராயன் அந்தரங்கப் படுக்கையறை

*(பொருளைப்பற்றி மனிதனுக்கு எழும் பேராசை முடிவின்றிப் பெருகிக் கொண்டேயிருக்கும் விநோத மனோதத்துவத்தைச் சித்தரிக்கும் பாடல். அதனால் அவன் மனம் அடையும் குழப்பமான பூகம்பம் பாட்டில் எதிரேலிக்கட்டும்)*

*(ஒரு பெரிய கொப்பறை நிறையத் தங்கக் கட்டிகள் நிறைந் திருக்கும் தனது அதிர்ஷ்டத்தை எண்ணியெண்ணி இறுமாந்து திரிகிறான் பொன்மேனிராயன் அதைப் பார்க்கிறான் -*

*பூரிக்கிறான் - தன்னை மறந்து பிதற்றுகிறான். இவ்வளவு செல்வமும் போய் விட்டால் என்ன ஆகுமென்ற பாட்டின் அடி வரும் போது பதைக்கிறான்)*

**பொன் :** *(தனக்குள்)* ஆ! என் தங்கம் என்னை விட்டு அகலாது. நான் சம்பாதித்தது. என் சொந்தமான சொத்து. பனித்தீவின் பிரபுக்களிடம் வியாபாரம் செய்தேன். வந்தது பணம். அமித லாபம்!

**அசரீரி :** மனிதா! உனக்குச் சொந்தமானது உலகில் எதுவுமில்லையே. உன் ஆட்டத்துக்கெல்லாம் சூத்திரக் கயிறாய் ஆடும் உனது உயிரே ஒரு நாளைக்கு உடம்பை விட்டு எங்கோ மறைந்து போகுமேடா. அதை எண்ணிப் பார். வீண் பொன்னாசை தொலைந்து விடும்.

**பொன் :** சே. என்ன நினைவு இது. எனது பராக்ரமம் பொருந்திய மலைகிள்ளு மாயனைக் கூப்பிட்டால் கொஞ்சம் ஆறுதலாயிருக்கும்... சே. அவன் என் அந்தரங்க அறைக்கு வருவதா? அதுவும் ஆபத்து - பொன் கோடிக் கணக்கான, தங்க நாணயங்கள் - இன்னும் கொஞ்சம் அடிமை களின் விலையை ஏற்றி விட்டால், தங்கக் கட்டிகளையே செங்கல்லாக உபயோகித்து கனகச் சுவரெழுப்பி, நவமணி மாளிகையிலே நாயகனாய் வீற்றிருப்பேன். ஆம் ஆம் தங்கம். அஹ்ஹஹ...

**அசரீரி :** அடா பேராசைப் பேயே! தங்க மாளிகையா வேண்டும்? எங்கு கட்டப் போகிறாய்? வெள்ளி மலையின் மீதா? மடையனே! இயற்கைத் தாய், சீறியெழுந்து சிரிக்கும் போது உண்டாகும். ஒரு நிமிஷ பூகம்பத்திலே பெருகும் நாச வெள்ளத் திலே, நீயும் உன் தங்கமும், மாளிகையும், உன் மூளையும், அனைத்துமே முழுகித் திணறி மூச்சற்றுப் பிரளயத் திமிங்கிலத்தின் இரையாக நேரும் போது என்னடா செய்யப் போகிறாய்?

இக் கேள்விக்கு விடையைத் தேட முயற்சி செய். அதற்கேற்ற தீர்ப்பு வர இந்த ஒரு சென்மம் உனக்குப் போதாதப்பா.

**பொன் :** நான் அழிவற்றவன். ஏனென்றால் பிரபுக்கள் அழிவதில்லையென்று தலையணை போன்ற பெரிய புத்தகங்கலேலாம் அன்று முதல் இன்று வரை ஓயாது ஓலமிடுகின்றன.

**அசரீரி :** நானென்ற அகந்தை பிடித்தவனே! செயலற்றுப் போன புராண ஒப்பாரி வைக்க ஆரம்பித்து விட்டாயா? நம்பிக்கையற்ற நாசத்தையே ஊளை யிடும் ஓநாய் ஏடுகளின் வியாக்யான அகராதியை, உன் படுக்கையிலிருந்து எடுத்து வெளியில் எறிந்து விட்டு, சத்திய இலக்கியத்தைப் போய்ப் பாரடா! நல்லது தெரியும். அழிவில்லையா உனக்கு? உன் சவத்தைப் புதைத்தால், மண்ணாகி விடுமடா- எரித்தால் சாம்பலாகி விடுமடா.

**பொன் :** தாகமெடுத்த போதெல்லாம் தங்கப் பஸ்பத்தையே கரைத்துக் குடிக்கிறேன். காய கற்பமாகி விட்டது உடல். மேனி எங்கும் தங்கமயச் சதைகள் சிங்காரமாய்த் திகழும் பொன்மேனிராயன் நான் தெரியுமா?

**அசரீரி :** அவசரப்படாதே. சிந்தித்துப் பார். மனிதா! உயிரகன்ற பின் உன் உடலால் யாருக்குப் பலனடா? நாயின் தோலால் நகை துடைக்கலாம். பாயும் புலித் தோலும் யோகியர்க்குதவும், பறவை யின் மென் சிறகால் படுக்கையாக்கி இளைப் பாறலாம். ஆனால், அசட்டு மனிதா! உயிர்போன பின் உனது மேனியின் ஒரு சிறுபாகத்தையாவது, என்றாவது, எதற்காவது உபயோகிக்க முடியு மாடா? உன் மூளையில் பணப் பித்தம் மண்டி விட்டது கொஞ்சம் தூங்கு. பிறகு தெளிவும்.

**பொன் :** ஆம். தூங்கா விட்டால் குழப்பம் அதிகமாகும். பொன்மேனிராயா! ஆகா! ஓயாத தங்கத்தைப்

பார்க்கும் பாக்கியநாதா! *(மது குடித்தல்)* எல்லாம் அடிமைகளை விற்றதன் பணம். பணம். பணம்...

**அசரீரி :** பாவி! உன்னைப் போன்ற, மனிதரை அடிமை என்ற பேரால் வேறு நாட்டுக்கு விற்கும் மகா கொலைகாரா! நீ குடிப்பது மதுவல்லடா! இன்று வரை விடுதலைக்காகத் தவங்கிடக்கும் கோடிக் கணக்கான ஏழை மக்களின் இரத்தத்திலிருந்து வடிகட்டிய கொடிய விஷமடா. தன்மான மற்றவனே! தாயை அடகு வைப்பவனே! பரதே சிக்குத் தாளம் போடுபவனே! பகுத்தறிவற்ற பதரே! உன் வாழ்க்கைப் படலத்தின் மரணப் பாடல்களை, காலக் கவிஞன் தன் புதுமை ஏட்டில் தீட்டி வெகு நாட்களாகி விட்டதடா. பழமை நெருப்பிலே பட்டுக் கெட்டுச் சருகாகப் போகிறதடா உன் போன்றோர் வாழ்க்கை.

*(பொன்மேனி நன்கு குடித்த போதையிலே தூங்கி விடுகிறான். அச்சமயம் மீண்டும் மனச்சாட்சி குத்தும் சொல்லீட்டிகள் சுழலப் புரண்டு படுக்கிறான். ஒரு மூலையிலிருந்து கஷ்டப்பட்டு இறங்கி முகமூடியுடன் பிரவேசிக்கிறான் வானழகன். ஏற்கனவே கொள்ளையிட்ட நகை மூட்டையை முதுகில் மாட்டிக் கொண்டி ருக்கிறான். தாடி வைத்திருக்கிறான். அவனது கட்டாரியால் குத்துகிறான். ஆனால், முன் ஜாக்ரதையாக முதலைத் தோலின் கவசத்தால் மூடியிருந்த பொன்மேனிராயனின் உடலில் கட்டாரி இறங்க வில்லை. அவன் எழுந்து ஓலமிட வானழகன் ஓடி விடுகிறான்)*

**பொன் :** ஆ... மலைகிள்ளு மாயா! மாயா! ஓடிவாயேன்.

*(ஓடி விடுகிறான் உள்ளே. அப்போது மலை கிள்ளு மாயன் பிரவேசித்து)*

**மலை :** மகாராசா பயப்படாதீர்கள்.

**பொன் :** திருடன் ஓடி வந்தான். குத்தினான். நல்ல வேளை யாகக் கவசம் அணிந்திருந்தேன். காயப்பட வில்லை.

**மலை :** காயம் பட்டால்தானென்ன? உங்கள் மேனியே தங்கம். மங்கவா போகிறது? தங்கத்தை இரும்பு ஒன்றும் செய்யாது!

## ஒலி – 5

**இடம்** : மலைச்சாரம்

**காலம்** : ஓர் இரவின் முன்மாலை

*(செங்கதிர் சாயும் வானப்பின்னணி. சுந்தரத்தோற்றவனம். செவ்வண்ணத்தின் சிறந்த ஆற்றல் சுற்றிவளையும் பிரதேசம். சிலுசிலுக்கும் ஓடை. சிரிக்கும் தாவரம். சுகம்பெருக்கும் சீதத்தென்றல். ஆங்கோர் கல்மேடை. அதன்மீது அமர்ந்துள்ளான் வாலிபன் வானழகன். வாழ்க்கைப்புயல் அவனை ஒரு தற்காலிகமான வனவாசியாக்கியுள்ளது. நாட்டின் குழப்பம் அவனை அம்மலைப் பிரதேசத்தில் ஒதுக்கி வைத்துள்ளது. அவன் அமர்ந்த அந்த பாராங்கல்லைப் போன்றே, அவன் உறுதி படிந்த உள்ளமும், உணர்ச்சியும், அக்கலைஞன் எழுப்பும் குழல்நாதம் போன்றது. அவனது கட்டற்ற விடுதலை வேட்கை, எளிய உடை வேடன் சாயலில் இடுப்பில் வேட்டியை இறுக்கக் கட்டியுள்ளான். தலையில் மான் தோல் பாகையாகத் துலங்குகிறது - இடுப்பில் ஒரு கட்டாரி. கேட்பவர் மன இருளைக்கீறி அமைதிதரும் அவன் மொழிபோன்றே, மெருகும், கூர்மையும், பளபளக்கும் மின் வெட்டும் அரிவாள், திரண்ட தோளிலும், சிவந்த மார்பிலும் வீரத்தை விமரிசனம் செய்யும் வடுக்கள். பரண்ட தலைமுடியிலும் ஒரு அழகு. இலட்சிய உறுதி பாய்ந்த கண்ணொளி. உட் தேங்கிய பழிஉணர்ச்சி கலந்துவரும் மூச்சு. குழலில் தேவகாந்தாரி பண்ணிசைத்துத் தன் கலக்கத்தை மாற்றிச் சாந்தி தரும் சங்கீத மருந்தைக் காதலால் உண்பதோடு, காற்றிலைகளிலும் கலக்கவிட்டுத் தூய்மையாக்கிக் கொண்டிருக்கிறான். மேடைக் குள்ளிருந்து அல்லது ஒரு மரத்தின் மறைவிலிருந்து யாரோ*

*இச்செல்வன் மீது மலர்களை ஒவ்வொன்றாக வீசி அர்ச்சனை புரிவதுமட்டும் தெரிகிறது. ஆள் யாரெனத் தெரியவில்லை. மீண்டும் பார்க்கிறான். மலர் மழை தொடர்கிறது. அப்பிரதேசமே எதிரொலிக்க உரத்த சிரிப்பொலியால், உள்ளத்தின் மகிழ்வை ஒளிக்காமல் வெளிக்கொட்டி விடுகிறான்.)*

**வான்** : *அழகானமலர்களை இப்படி என்மீது வாரி இறைக்கிறாயே! வசந்தப்பூவின் வனப்பை அறிந் திருந்தால் இப்பிழையைச் செய்வாயா? அறிவற்ற காற்றே!*

**வேல்** : *(உள்ளிருந்து) ஆறுதலற்ற மனிதரே! அன்பு மயமான என் இளமையை இனிக்கச் செய்யும் இன்ப ஊற்றுக்கு மணமான பூவை மகிழ்வோடு அர்ச்சனை செய்கிறேன். இதில் கூடவா உங்களுக்குப் பொறாமை? உங்கள் அவசர புத்தி யால் எனக்கு அறிவில்லையென்ற குற்றத்தையும் சாட்டிவிட்டீரே! இதுதான் பகுத்தறிவின் எல்லைக்கோடா?*

**வான்** : *ஓகோ! பேசும் பெண் காற்று என்று தெரிந்திருந் தால் பேச்சைக் கொடுத்திருக்கவே மாட்டேன்.*

**வேல்** : *உமது ஜீவன் நிலைத்திருக்க, உயிரின் மூச்சை ஏந்தி வரும் எனக்கு அறிவில்லையென்று எப்பொழுது ஆராய்ந்தீர்?*

**வான்** : *அறிவின் ஏகச்சக்ராதிபதி மனிதன் தான் எனக் கற்பிக்கும் கர்வமென்னும் கலாசாலையில் பயின்ற தன்னலவேதம் இது.*

**வேல்** : *ஆனால், உங்களுக்கு அதிபதியாரென்று கற்கும் சுயநலக்கல்லூரியில் எப்போது சேரப்போகி றீர்கள்?*

**வான்** : *என் உயிர்க்கு உணவான காற்றே! அக் கலையை உன்னிடந்தான் கற்கவேண்டும். நிபந்தனையற்ற என் சரணகதியைத் தாமதமின்றி ஏற்றுக்கொள். எல்லையற்ற சக்திகொண்ட உன் கருணை*

வெள்ளத்தில் என் வாழ்வு தன்னைமறக்கவே துடிக்கிறது.

**வேல்** : உம்மையே மறக்க வேண்டும்; நீர் பிறரை எப்படி நினைவு கூறப்போகிறீர்?

**வான்** : பிறர் நலமென்னும் அகண்ட சமுத்திரத்தில் குதிப்பவன், தன்னைப்பற்றி எண்ணுவது இயலாத வேலை.

**வேல்** : இனிமேல் அப்படிச் செய்யாதீர்! முதலில் உங்களைக் காத்துக் கொள்ளுங்கள். பிறகு பிறரையும் காப்பாற்றலாம். தெரியுதா?

**வான்** : ஆகா அப்படியே. ஏது தர்க்க வகுப்பில் சேர்ந்த மறு விநாடியே தத்துவ ஏட்டைத் திருப்பி விட்டாயே!

**வேல்** : என் தத்துவம் பேசினால் தலைவலிக்குமென்று அஞ்சுகின்றீரா?

**வான்** : ஆம். அதற்கு மருந்தை முதலில் சொல்லி விட்டால் நலமாயிருக்கும்.

**வேல்** : சிந்தனை தான் அதற்கேற்ற மருந்து,

**வான்** : ஆச்சர்யம்!

**வேல்** : எது ஆச்சர்யம்?

**வான்** : காற்றா சப்தம் போடுவது.

**வேல்** : அடப் பரிதாப மனிதரே! பின் எது சப்தம் போடும்? கனமான மாமிசமா? காற்றின் அலை தானே ஒலியை ஏந்தி வரவேண்டும்,

**வான்** : மன்னிக்க வேண்டும். காற்றே அசரீரியாக உலவும் நீ, உண்மைத் திருமேனியோடு என் முன் உலவினால் என்ன?

*(பொலிவான வைர நகைகளை உடல் நோகச் சுமந்து, அன்ன நடை தாளப் பின்னணியுடன் வந்து நின்ற வேல்விழியிடம்)*

**வான்** : *அழகுக் கலைவாணி! தென்றலின் அலையாகச் சஞ்சரித்துத் திகைப்பூட்டிய வனதேவதை தாங்கள் தானா?*

**வேல்** : *ஆமாம் பக்தரே! அது நாங்கள் தான். எப்படி? தத்துவ விசாரணையில் நேர்ந்த தலைவலியை நீக்க நேரிலேயே காட்சி தருகிறோம். வேண்டியதையெல்லாம் கேட்காமலே பெற்றுக் கொள்ளலாம்.*

**வான்** : *இப்படிக் கேட்காமல் அருள்புரியும் கருணை, எல்லாக் கோயில்களிலும் உள்ள கல் தெய்வங் களுக்கும் உண்டாகவே பிரார்த்திக்கிறேன் பேசுந் தெய்வமே!*

**வேல்** : *அவ்வாறே அருள்புரிந்தோம். விரைவில் அந்தக் கோயில் தெய்வங்கள் நடமாடி நன்மையை அளிக்கும்படி செய்யும் எமது சக்தியையும் உமக்கே அளித்திருக்கிறோம். அது சரி, பக்தரே! உமக்கு இந்த தெய்வத்திடம் பயமே தோன்றாத தால் தானே உயரத்தில் உட்கார்ந்தபடியே வரம் கேட்கின்றீர்!*

**வான்** : *தெய்வத்துக்குப் பயமென்னும் பாலாபிசேகம் செய்து வசப்படுத்தி ஏமாற்றும் போலி நானல்ல. என் பாசத்தையும் பக்தியையுமே பாத காணிக்கை யாகச் செலுத்துகிறேன். வேண்டிய நற்பயனைத் தர வேண்டிய பொறுப்பையுணர்ந்து தெய்வமே வலிய வந்து தரவேண்டியதுதான் தர்மம்.*

**வேல்** : *பக்தரே! போற்றினேன் உம்மை. ஆனால் நமது பாசமென்னும் கண்ணாடியில், பக்தியென்ற புகை படிய வேண்டாம். அதனால் அன்பென்னும் நேசவொளி மாசுபட்டு விடும்.*

**வான்** : *தெய்வமே! மெச்சினேன் உன்னை. இப்பொழு தாவது சீர்திருத்தமடைந்த உன்னை வரவேற்கி றேன். இனி என்னுடன் அமரலாம்.*

*(ஒரு கல்மீது அமர்கிறாள்)*

**வான்** : *(அருகமர்ந்ததும், அவள் அணிந்திருந்த நகைகளைப் பார்த்து வியந்து)* வேல்விழி! இதென்ன இது! இந்த நகைகளை எங்கு திருடினாய்? எப்படிக் கண்டுபிடித்தாய்? யாரும் அறியாத இடத்திலல்லவா புதைத்திருந்தேன்.

**வேல்** : உண்மை. வேறு யாரும் நம் இரகசியத்தை அறிய முடியாதுதான். நானறியாத இரகசியம் தங்கள் மனக்குகையிலேயே இல்லாதபோது, இந்த மலைக் குகையில்தானா இருக்கப் போகிறது.

**வான்** : வேல்விழி! இந்த விஷ நாகங்களை உடனே கழற்றி எறி. ஞானஜோதியான உன் மேனியில் இந்த நாற்றக் கற்கள் இடம்பெற யோக்கியதை அற்றவை என்ன பேசாதிருக்கிறாய்?

*(ஆத்திரத்தோடு அந்த ரத்ன ஆபரணங்களை எல்லாம் கழற்றி வீசுகிறான்)*

**வேல்** : ஏன் இப்படிக் கோபம்? விலை மதிக்க முடியாத மாணிக்கங்கள். ரத்ன மணிகள். மாற்றறியாத பசும்பொன் அணிகள். வீசுவது அபசகுனமென் பார்களே! இவைகள் ஏது?

**வான்** : மாற்றறியாத பசும்பொன்னா இது! ஆம் எனது நாட்டின் மாற்றறியாத மனித மாணிக்கங்களை எல்லாம் மிருகங்களாக மாற்றிச் சந்தையில் ஏலங்கூறி விற்ற மாபாதகனுக்குக் கூலியென்ற பெயரால் அளிக்கப் பட்ட பழி விலங்குகள். *(சிரிப்பு)* ரத்னங்களா இவை? அல்ல; என்னருமைச் சோதரிகளின் வற்றிய உடற்கூடுகளை ஆதிபத்யக் கசைகள் பின்னியிழுக்கும்போது வெளித் தோன்றி உறைந்துபோன இரத்தத் துளிகள் இவை. பச்சைக்கற்களா இவை? அல்ல. வஞ்சகமறியாத பல்லாயிரக்கணக்கான வளிய ஜீவன்கள், பனித் தீவிலே தரப்படும் பொறுக்க

முடியாத பணிகளை மூச்சு விடாமல் செய்யும் போது உயிர் விம்மி வெளியே தள்ளி விட்ட கருங்கல் விழிகள்! இவைகளைச் சுத்தப்படுத்தா மல் நீ அணிந்தால் அப்பாபம் நம்மீது நிழலிடும். விரைவில் தூய்மைப்படுத்தி, உனக்கு நானே சூட்டுகிறேன் கண்ணே. ஆம். இவைகளை ஆற்று நீரில் குளிப் பாட்டினால், மாசு தீராது. இதை இங்கு அனுப்பிய அந்த பனித்தீவின் பிரபு வம்சத் தின் பலகோடி இருதயங்களிலிருந்து நாளை பெருகப் போகும் இரத்த வெள்ளத்திலே குளிப்பாட்டினால்தான் இவைகள் குற்றமற்ற மணிகளாகும்.

**வேல்** : எங்கு சென்று எடுத்து வந்தீர்கள்?

**வான்** : எங்கா? பாதகனுடைய பொக்கிஷத்திலிருந்து. வேல்விழி உனக்கு இவைகள் எல்லா விதத்திலும் உயர்ந்ததொரு செல்வத்தைக் கொண்டுவரத்தான் போனேன். ஆனால், சந்தர்ப்பம் கொஞ்சம் ஏமாற்றிவிட்டது.

**வேல்** : இதைவிட உயர்ந்த செல்வமா அது என்ன?

**வான்** : அதுவா! பயங்கரக் கரடியான பொன் மேனி ராயனின் வைரம் பாய்ந்த இருதயம் தான். கட்டாரி கூட ஏறாதபடி கவசம் தரித்திருந்ததால் பிழைத்துக் கொண்டான். ஆகட்டும் சமயம் நேரும்.

**வேல்** : என்ன! எமலோகமான பொன்மேனிராயனின் மாளிகைக்குள்ளா சென்று வந்தீர்கள்? கரடி வேட்டைக்குச் செல்வதாகக் கூறிச் சென்றது இதற்குத்தானா?

**வான்** : இத்தகைய மனிதக் கரடிகளை வேட்டை யாடாமல், பாவம் காட்டில் வாழும் மிருகங்களை நாம் ஏன் வேல்விழி வதை செய்ய வேண்டும்?

**வேல்** : சரிதான். இனி உங்களை தனியாகப் போக அனுமதிப்பதே பிசகு. ஆகட்டும். அம்மாவிடம்

சொல்லி உங்களுக்கு விலங்கு போட்டால்தான் சொன்னபடி கேட்பீர்கள்! ஆமாம், அங்கு போவதாக என்னிடம் ஒரு வார்த்தை கூறினீர்களா? ஏதாவது ஆபத்து நேர்த்திருந்தால், ...ஐயோ எவ்வளவு பயங்கரமான இடம். எண்ணவே மனம் நடுங்குகிறதே! நான் ஒருவள் உயிரோடிருப்பதே உங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால், இதோ இந்தக் கட்டாரியால் கொன்று விட்டு, உங்கள் மனம் போனபடி எல்லாம் திரிவதுதானே. வீணாக எதற்கு இப்படி எல்லாம் சித்ரவதை செய்து என்னை அணு அணுவாகக் கொல்ல வேண்டும்?

*(அழுகைக் குரல்)*

**வான்** : *அடடா! வேல்விழி... அழாதே கண்ணே! உளவறிவதோடு திரும்பி விடலாமென்று தான் தலைநகருக்குள் சென்றேன். ஆனால், மூண்டெழுந்த பழியுணர்ச்சி என்னையே மறக்கச் செய்து பொன்மேனி ராயனின் மாளிகைக்குள் தள்ளிக்கொண்டு போய்ச் சேர்ந்துவிட்டது. ஆனால், உன் கணவன் இவ்வளவு சுலபமாக எதிரிகளிடம் அகப்பட்டுக்கொள்ளும் பலகீனன் என்று எண்ணி நீ அழுவதுதான் என்னையே அவமானப் படுத்துவது போலிருக்கிறது. நீ சொன்னபடியே நான் எவ்வளவு எச்சரிக்கையோடு இத்தகைய காரியங்களையெல்லாம் செய்து வருகிறேன் தெரியுமா? இதோ பார். இரவில் நான் வெளியே செல்லும்போது என் தோற்றத்தின் மாற்றத்தை, நீ பார்த்ததில்லையே! இங்கு வாயேன் அதைப்பார்த்தால் இப்படி எல்லாம் பயந்து சாகும் கோழைத்தனத்தை விட்டுவிடுவாய். இதோபார் இன்னும் தேம்பிக் கொண்டு தானே இருக்கிறாய்? எங்கே.... பாரேன் இப்படி.... இங்கே... அழமாட்டேன் என்று சொல்.. சிரிப்போடு சொல்லவேண்டும்.*

**வேல்** : இல்லை நான் அழவில்லை... இல்லை. சொன்ன படி கேட்டால், அழவில்லை. எங்கே உங்கள் வேஷத்தைப் பார்க்கலாம்.

**வான்** : வா பிறகுவந்து இந்த மண்ணாங்கட்டிகளைப் பொறுக்கிக் கொள்ளலாம்.

## ஒலி – 6

**இடம்** : முன்னிடமே

**காலம்** : முற்காலந்தான்

*(தாடி கட்டியதாடை – முதியோனைப் போன்ற முகவேடம் கந்தல் மேலாடை – கையில் திருவோடு – கரத்திலே ஊன்றுகோல் குருடனைப் போல் நடிப்பு – இத்துடன் யாசகன் போன்ற மெய்ப்பாட்டுடன் வறுமையைப்பற்றிப் பாடிவருகிறான் வான் அழகன்)*

**வான்** : எப்படி வேஷம்?

**வேல்** : சபாஷ்! அசல் பிச்சைக்காரரெல்லாம்கூட உங்களிடம் நடிப்பைப் பிச்சை வாங்க வேண்டும் போலிருக்கிறது. எங்கே! எப்படி நடந்து எந்த மாதிரி பிச்சை கேட்பீர்கள்? எங்கே...

**வான்** : அம்மா! கண் தெரியாதவனம்மா.

**வேல்** : ஐயோ பாவம். வா அப்பா. நான் வழிகாட்டு கிறேன். எங்கே போகவேண்டும்?

**வான்** : இனிமேல் எங்கம்மா போவது? இருட்டாகி விட்டதே.

**வேல்** : உன் குருட்டு விழிக்கு இருட்டை மட்டுந்தான் அடையாளந் தெரியுமா?

**வான்** : பசி பொறுக்காமல்தானம்மா புறப்பட்டேன்.

**வேல்** : நிறைய உணவு உண்ணலாம். அழாதே அப்பா...!

**வான்** : உணவால் வயிற்றுப் பசிதானே அம்மா போகும்? ஆனால் மற்றோரு பசி....

**வேல்** : பசியில்கூட பலவகை உண்டா என்ன?

**வான்** : என்னம்மா! நீங்களே இப்படிக் கேட்கிறீர்கள்?

**வேல்** : *(நின்று)* என்ன இது! பேஷ்! பிச்சைக்காரர் இச்சைக் காரராக மாறிவிட்டாரே! இப்படித் தானா போகுமிடத்திலும்? நன்றாயிருக்கிறது உங்கள் நாடகம்.

**வான்** : வேல்விழி! நமது இலட்சியப் பாதையில் நாம் எவ்வாறெல்லாம் மாறவேண்டியிருக்கிறது பார்த்தாயா?.....

*(வாணியம்மை வந்து)*

**வாணி** : *(கூர்ந்து கவனித்து)* அட ஆண்டவா! இதென்னப்பா விபரீத விளையாட்டு, எதோ பாடிக் கொண்டிருக்கிறீர்களே என்று வந்தால், வேஷம் பிரமாதமாக இருக்கிறதே!

வேல் : அம்மா எப்படி?

**வான்** : அத்தை! நான் தலைநகருக்குள் செல்லும் தோற்றம் இது.

**வாணி** : அப்பா! உனது இந்தக் கஷ்டத்தையெல்லாம் பார்த்து என்மனம் எறிவது போலவே, அந்த பனித்தீவின் ரட்சகர்கள் சீரழிந்து உண்மை யாகவே பிச்சைக்காரர்கள் ஆகி, உலகெங்கும் சுற்றியலையப் போகிறார்கள். ஒரு அபலைத் தாயின் இந்த சாபம் வீண் போய்விடுமென்று உலகம் எண்ணலாம். ஆனால், அதன் சுவாலையை நாம் காணத்தான் போகிறோம். இவைகளையெல்லாம் களைந்துவிட்டு வாருங்கள். கொஞ்சம் முக்கியமான செய்திகளை விவாதிக்க வேண்டும். *(சற்று தூரம் சென்று நின்று)* வேல்விழி! நீ வா...

**வேல்** : போங்களம்மா. இதோ வந்து விட்டேன்.

*(வாணி செல்கிறாள்)*

**வான்** : வேல்விழி! என்னை இந்தக் கோலத்தில் பார்தததும் உன் தாயின் துயரம் அதிகமாகி விட்டது. இல்லையா? நம்மேல் எவ்வளவு பாசம் வைத்திருக்கிறார்கள். ஆகா வேல்விழி! என்ன இருந்தாலும் தாயின் அன்பைப்போன்ற ஒரு தூய்மையான பொருள் உலகில் வேறு எதுவுமே இல்லை கண்ணே.

**வேல்** : ஆம். அதற்குச் சந்தேகமென்ன? எங்கள் பெண் குலத்தின் சீவ அணுக்கள் ஒவ்வொன்றும் தாயன்பைத் தன்னல ஆண்களுக்குக் கற்பிக்கும் குரு பீடம், தெரியுமா? சரி. வாருங்கள் பசிக்குது என்று பரிதவித்தீர்களே!

**வான்** : வருகிறேன்.

*(குகைக்குள்ளே)*

*(வாணியம்மையின் நினைவு பேசுகிறது.)*

பேதமை ஆகா! இவ்வளவு தூய்மையான அன்புத் தெய்வங்களிடம் எனது வாழ்வின் இரகசியத்தைச் சொல்லாமல் மறைத்து வைப்பது எவ்வளவு பாதகம்! அவசியம் இன்று சொல்லி என் இதயப் போராட்டத்திற்கு ஒரு ஓய்வைக் கொடுக்காவிடில், அது என்னை மாய்த்துவிடும்.

**வைராக்யம்** : பின்புத்தியுள்ள பெண்ணே! உன் பேதமையின் பலவீனத்தால் இப்படி எண்ணுகியாயே வாணித் தாயே! ஒரே ஒரு மனத்தில் மாத்திரம் நகராமல் இடம்பெற்ற நினைவுக்குத்தான் இரகசியம் என்று பெயர். யாராயிருப்பினும் சரி, அறிந்த மறு நிமிடமே அது எங்கும் பரவி பெரிய விபரீதத்தை விளைவித்து விடும். உனது உள்ளத்தின் மூலை யில் தூங்கும் இரகசியம் சாதாரணமானதல்ல.

அது ஒரு பெரிய எரிமலை. அதைக் குமுறும்படிச் செய்துவிடாதே. உனது அன்பான பொருள்கள் அனைத்துமே சாம்பலாகிவிடும். உனது கதையை, நீ அவர்களிடம் சொல்லி வாய்மூடு முன்னரே, வானழகன் வேல்விழியை வெட்டி எறிந்து விடுவான். வேல்விழியிடம் சொன்னால் அவளது மலை போன்ற நம்பிக்கை ஒரு நொடியில் தகர்ந்து, உன்மீதே சாய்ந்துவிடும். உன் வாயால், ‘மகளே’ என்று அழைக்கக்கேட்ட அவள் ‘மாற்றான் மகள்’ என்று நீ கூறப்போகும், கொடுங்கூற்றைக் கேட்டதுமே துடிதுடித்துப் போவாள். ஜாக்கிரதை! பொறுமைகொள். அதுதான் தாயின் தன்மை. உண்மைக்காகப் புலம்பும் தாயே! மகாசக்தியின் ஒரு வடிவமான உனது துணிவு எங்கே போய்விட்டது? பொங்கிச் சீறிக் குமுறிய எத்தனையோ துயரங்களை எல்லாம் ஆழம் காணமுடியாத உனது இருதயத் திலே வைத்துப் பூட்டி வைத்த புண்ணியத் தாயே! வேண்டாம். சொல்ல வேண்டாம். உன் உண்மையை உலகம் அறிந் துய்யும் காலம் நெருங்கி வந்துவிட்டது. அதற்குள் அவசரப்பட்டு உன்னை அம்பலப்படுத்தினால், அது உன் குழந்தையின், இந்த இன்ப நாடகத்துக்கு நீ விடும் கடைசித் திரையாகிவிடும். குழந்தைகளுக் காகவே உயிர் வாழும் குணமான தாய் நீ. சத்தியத்துக்காகவே சஞ்சலத்தை எல்லாம் வென்று நிற்கும் சாசுவத தெய்வம் நீ. தாயே! சாந்தம் கொள். கவிஞனின் கற்பனைகூட இது வரை எட்டிப் பார்க்காதது தாயினத்தின் தளராத சகிப்புத்தன்மை, ஒன்று தானம்மா வாயால் சொல்லி விளக்க முடியாத உங்கள் சகிப்புத் தன்மை மாத்திரம் இல்லாவிடில் இன்று உலகில் உலாவும் எண்ணற்ற மாந்தரும், மகளிரும் குழந்தை உருக் கொள்ளுமுன்பே குப்பை

மண்ணாகியிருப்பார்களே! வேண்டாம் தாயே. உன் வாழ்க்கைப்புயல் வீச வேண்டிய சமயம் வரும். அப்போது நான் ஆணையிடுகிறேன். உன் ஜீவனை வாட்டும் சோகச் சுமைகள் அனைத்தையும் நானே வெளித் தள்ளி, உனக்கு எல்லையற்ற சாந்தியை அளிக்கிறேனம்மா. தாயன்பை உலகறியும் காலம் வந்து விட்டது.

*(இருவரும் வருகின்றார்கள். தன்னை மறந்து அமர்ந்த தாயிடம்.)*

**வேல்** : *அம்மா! அம்மா!*

**வான்** : *அத்தை ! அத்தை!*

**வேல்** : *அம்மா!*

**வாணி** : ஆ... *(சட்டென எழுந்து கண்ணீரைத் துடைத்து)* ஏனம்மா இவ்வளவு நேரம்? எந்தக் கோட்டையை உடைக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தீர்கள்? செய்த உணவு காய்ந்து போகுமே என்ற எண்ணம்கூட இல்லாமல் சதா யோசனைகள் தானா?

**வேல்** : பேஷ்! அம்மா! பார்த்தீர்களா!

**வான்** : என்ன வேல்விழி! நீ உன் தாயாரிடம் கேட்டிருக்க வேண்டிய கேள்வியை அவர்கள் உன்னிடமே கேட்டுவிட்டார்கள். அப்படித்தானே?

**வேல்** : அதையே தான் நானும் சொல்ல வாயெடுத்தேன்.

**வான்** : பரவாயில்லை. யார் கேட்டால்தான் என்ன? பதில் சொல்லுவோனுக்குத்தானே கஷ்டமெல்லாம்.

**வாணி** : சரி சாப்பிடுங்கள். உட்கார் வேல்விழி. உட்காரப்பா.

**வேல்** : ஏனம்மா நான் பரிமாறினால் உங்களுக்குப் பிடிக்கவில்லையென்று வாய்விட்டுச் சொல்லி

விடலாமே அதற்கு ஏன் உட்கார் உட்கார் என்கிறீர்கள்?

**வான்** : ஆம் அத்தை! வேல்விழியே பரிமாறட்டுமே. உங்களுக்கு ஏன் சிரமம்?

*(வாணிக்கும் வானழகனுக்கும் உணவு படைத்துத் தானும் உண்கிறாள்.)*

**வேல்** : பசி தீரச் சாப்பிடுங்கள்.

**வான்** : நாளையிலிருந்து உணவு சமைக்கும் பணியைக் கூட நீயே ஏற்றுக்கொள் வேல்விழி. பாவம். அத்தைக்கு ஏன் சிரமம்?

**வேல்** : ஆகட்டும் அப்படியே. அம்மா தெரிந்து கொண்டீர்களா? நீங்கள் செய்த உணவு ருசியா யில்லையென்று சொல்லாமல் சொல்லிக் காட்டும் தந்திரம்.

**வான்** : அடாடாடா! சாப்பிடக்கூட முடியாமல் செய்கிறாயே.

*(சாப்பிட்டபின் அங்குள்ள கல் மேடையில் வாணி அமருகின்றாள்)*

**வான்** : வெளிக்குகை மூடியுள்ளதா என்று பார்த்து வருகிறேன்.

**வாணி** : ஆகட்டுமப்பா.

**வேல்** : *(வெளியே வந்து)* எங்கம்மா அவர்?

**வாணி** : வந்துவிடுமம்மா. வெளிக்குகையை மூடிவரப் போச்சுதம்மா.

**வேல்** : வெளிவழியை மூடப்போனாரா அல்லது தன் வழியே வெளியே போனாரா. அம்மா நான்போய் அழைத்து வந்துவிடுகிறேன்.

**வாணி** : சாப்பிட்டபின் போ அம்மா.

**வேல்** : பசியில்லேம்மா. *(சிட்டெனப் பறக்கிறாள்)*

**வாணி** : *எங்குமுள்ள அன்புத் தெய்வமே இவர்களைக் காப்பாற்று.*

**வேல்** : *(அவன் கையைப் பிடித்துவந்து)* நான் சொன்னது *தானம்மா சரி. நான் போகாமலிருந்தால், அவர் வெளியே போயிருப்பார்.*

**வாணி** : *எங்கப்பா...*

**வேல்** : *எங்கே கரடி வேட்டைக்குத்தான். அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். இந்த கஷ்ட காலத்தில் நமக்கே இருக்கும் உணவு போதவில்லை. இதில் கரடி யானை எல்லாம் பிடித்துக் கட்டினால் தீனிக்கு எங்கே போவது? ஒன்றும் வேண்டாம் உட்காருங்கள்.*

**வான்** : *பைத்தியமே... சாப்பிடு.*

**வேல்** : *எப்படிச் சாப்பிடுவது. எடுத்துப் பரிமாறுங்கள். அப்போதுதான் தெரியும் எங்கள் கஷ்டம்.*

**வான்** : *சரி.*

**வாணி** : *என்னம்மா இது? இன்னும் சிறு குழந்தைதானா?*

**வேல்** : *நான் பெரிய குமரிதானம்மா. ஆனால் பெற்ற உங்களுக்கு நான் சாகும்வரையில் குழந்தை தானேம்மா.*

**வான்** : *அத்தை! வேல்விழி தத்துவக் கடலிலே தத்திக் குதிக்கக் கற்றுக் கொள்வதன் முயற்சியின் வெளித் தோற்றம்தான் இந்தப் பேச்சு. தத்துவப்பித்தமே! முதலில் சாப்பிடு.*

**வேல்** : *ஆகட்டும் பக்தரே!*

**வான்** : *அதற்குள் முடிந்ததா?*

**வேல்** : *பின் ஆண்களைப்போல் அரைநாள் முழுவதும் சாப்பிட்டால் இல்லறம் நடப்பதெப்படி? அது சரி. நீங்கள்தான் வெளியே கிளம்பி போகக் கூடாது என்பது எனது தடையுத்திரவு ஆயிற்றே.*

எதற்காக வெளிச்செல்லப் பார்த்தீர்கள்? நீங்கள் இந்தக் குகையை விட்டு என் அனுமதியின் பேரில்தான் வெளியேற வேண்டும்.

*(இதற்குள் மற்றொரு மூலையில் சென்று ஒதுங்கி வாணியம்மை படுத்துறங்கல்)*

**வான்** : உம் சரி. என்ன செய்வது? வருங்காலச்சிறைக்கு இச்சிறை ஒரு பழக்கமா வேல்விழி!

**வேல்** : ஆமாம் ஐயா! குற்றவாளியாரே:

**வான்** : சரிதான் நீதிபதியாரே!

*(ஆங்குள்ள இருகல்லாசனத்தின் மீது இருவரும் படுத்துறங்குவது போல் நடித்தலும், ஒருவரை யொருவர் உறங்கியாகி விட்டதா என்று பரீட் சிப்பதும், ஒரு நகைமிகும் காட்சி. தனது தலைப் பூவில் ஒவ்வொன்றாய் எறிந்து பார்க்க, அசை யாதது கண்டு சற்று உறங்கிவிட எண்ணி வேல் விழியும் உறங்குகிறாள். அத்தருணம் பார்த்து எழுந்து மெள்ள நழுவப் பார்த்த வானழகனைக் கண்டு வேல்விழி எழுந்து வழி மறித்துக் கொண்டு)*

**வேல்** : என்னையா ஏமாற்றிப் பார்க்கிறீர்கள்; அது முடியாத விஷயம்.

**வான்** : வேல்விழி! இதுவரையில் நீ செய்த தடைகளை எல்லாம் ஏதோ என்னை மறந்த மறதி நிலையில் பொறுத்ததோடு, நீ திருப்தியடைய வேண்டியது தான். எனது மனமெல்லாம் பொன்மேனி ராயனின் உயிரின் மீதே இருக்கிறது. என் கட்டாரி அவனது இரத்தத்தைப் பருக வேட்கை கொண்டு தவிக்கிறது. போர் வெறி புகைந் தெழுகிறது.

**'ல்** : வெளிப்போரைப்பற்றி விஸ்தரிக்கும் தங்களுக்கு எனது மனப்போர் இன்னதென்று எண்ணிப்

பார்க்க ஒரு சிறு அவகாசம் கூடக் கிடைக்க வில்லை. அப்படித்தானே.

**வான்** : வேல்விழி! எங்கும் போராட்டம். உலகமே ஒரு யுத்த வயல். அதில் என் வைராக்கியம் ஒரு முடிவற்ற ரணகளத்தில் உறுதிச் சங்கநாதம் செய்கிறது. இப் போர் உனக்கும் எனக்கும் மட்டுமல்ல, உலகரங்கின் பொதுக்காட்சி. இரவும் பகலும் போரிடுகின்றன. பனியும் வெயிலும் போரிடுகின்றன. நீருக்கும் நெருப்புக்கும் போராட்டம். இன்பமும் துன்பமும் சண்டை இடுகின்றன. வாழ்வும் தாழ்வும் அப்படித்தான். கரையும் கடலும் பிணங்கிச் சாடுகின்றன. ஏன்? கணவனும் மனைவியும்கூடச் சண்டை இடு கின்றனர். ஆகவே போராட்டமே வாழ்வு. மனித சரித்திரத்தையே போராட்டம் என்னும் ஏட்டின் மீதுதான் இன்று வரை பேராசிரியர்கள் எழுதி வைத்துள்ளார்கள். அவர்கள் அடிச்சுவட்டை நாமும் பின் பற்றித்தானாக வேண்டும். இனி தாமதித்தால் வருங்காலம் நம்மை நிந்தனை செய்யும். நமது மனசாட்சியே நம்மைச் சபிக்கும். நான் போரை நிறுத்தினால், நமக்காக ஒதுக்கப் பட்டுள்ள காலவரலாற்றின் ஏடுகளில் பனித் தீவின் பேய் நடனச் சித்திரங்கள் தான் முதல் இடம் பெறும். அது உனக்குச் சம்மதமா? உன் மனப்போரைச் சாமர்த்தியமாகச் சமாளித்துக் கொள். என்னைக் கொல்ல வல்ல மனிதன் உலகில் இன்னும் பிறக்கவில்லை என்பதை உறுதியாக நம்பு. என்னை நீ நம்புவது உண்மை யானால், என் சொற்களை இப்படி சந்தேகப் புத்தியோடு உதாசீனப்படுத்துவது ஏன்?

**வேல்** : சரி போகலாம். சற்றே உட்காருங்கள்.

**வான்** : மீண்டும் நான் புறப்படுகையில் வழி மறிப்ப தில்லை என்றால் தான் உட்காருவேன்.

**வேல்** : சரி ஆகட்டும். அம்மா! அம்மா! அவர் புறப்படுகிறார்.

**வான்** : உஸ். வேல்விழி. அவர்களை எழுப்பாதே சரி உட்கார். உன்னிஷ்டப்படியே பிறகு போகிறேன்.

**வேல்** : நான் துணிந்து வழியனுப்ப எவ்வளவு தான் மனத்தைப் பண்படுத்தினாலும் அது தோல்வியே அடைகிறது. அதற்கு நானா பொறுப்பாளி. இப்படிக் கோபித்துப் பேசிவிடுகிறீர்களே!

**வான்** : துணிவு பூரணம் பெறாதவரை, வானழகனின் மனைவி, அவள் கணவனுக்குரிய கடமையைச் செய்யத் தவறிய குற்றவாளிதான்.

**வேல்** : ஒரு முறைக்குமேல் தண்டிக்கப்பட்ட குற்றவாளி கள், தொடர்ந்து அதே குற்றத்தையே தொழிலாக் கொள்வதில்லையா? அதைப் போல்தான் உங்கள் தண்டனைக்காகவே குற்றங்களைச் செய்கிறேன்.

**வான்** : அவர்களுக்குத்தான் நிரந்தரத் திருடர் என்ற பட்டத்தை சமூகம் சூட்டுகிறது.

**வேல்** : சூட்டட்டும். நான் திருடிக்கொண்டுள்ள பொருள் விலை மதிப்பற்றதாயிருப்பதால் அந்தப் பட்டத்தைப் பெருமையோடு ஏற்பேன்.

**வான்** : பேசுவதால் போகும் நேரத்தைச் சற்று தூக்கத்தி லாவது செலவிட்டால் உடல் நலமாகும். பேச்சு அதிகமாக ஆக, உன் உடல் இளைத்துக் கொண்டேயிருக்கிறது. சரி தூங்குகிறாயா, நானும் இன்று புறப்படவில்லை. எனக்கும் மயக்கமா இருக்கிறது.

**வேல்** : நம்பித்தான் தூங்குகிறேன். ஆனால், ஒரே ஒரு நிபந்தனை. ஒரு பாட்டு...

**வான்** : சரி. *(பாடுகிறான். வேல்விழி சற்று கண்ண யர்ந்ததும் ஏதோ மயக்க மருந்தை மூக்கில் காட்டுகிறான். மயங்கி அயர்கிறாள்.)*

**வான்** : *பாவம்! ஓய்வற்ற பாசவிழிப்பு. ஆற்றாமையால் தேம்புகிறது. இம்மருந்தின் உதவியாலாவது சிலநாழிகை நேரம் அமைதியாகத் தூங்கட்டும். நாம் அதற்குள் திரும்பிவிடுவோம். (போய் விடுகிறான்.)*

## ஒலி – 7

**காலம்** : மாலை

**இடம்** : பொன்மேனி ராயனுடைய ஓர் இடம்.

**பொன்** : *மலை கிள்ளும்மாயா! அன்று உடலில் கவச மில்லாவிட்டால் என் உயிர் என்ன கதியா யிருக்கும்?*

**மலை** : *உங்கள் உடம்பை எதுவும் என்றும், ஒன்றும் செய்ய முடியாது பிரபோ. உயிரை எடுத்துச் சென்று அந்த நாய் என்ன செய்ய முடியும்? பயப்படாதீர்கள்.*

**பொன்** : *மலை கிள்ளும்மாயா! அது அடிமை நாயாகத் தான் இருக்குமென்று நினைக்கிறேன்.*

**மலை** : *ஆமாம்.*

**பொன்** : *சரி. ஆடுகளுடன் புறப்பட்டுப் போய் என் அரண்மனையைச் சுற்றிலும் நிற்க வேண்டும். அதற்கப்பால் அகழிகளில் பேய்களைப் போன்ற வீரர்கள் படகிலேயே இரவு முழுதும் பாராக் கொடுக்கட்டும். நீ அப்படிச் சுற்றிக் கொண்டிரு.*

**மலை** : *பிரபு! திருட்டுப்போன அந்த நகைகளை எனக்காவது கொடுத்திருந்தால், திருப்திப் பட்டிருப்பேன். சரி. இப்போழுதாவது நான் கேட்டதைக் கொடுக்கா விட்டால், நான் வேலை நிறுத்தம் செய்யப் போகிறேன்.*

**பொன் :** உம். மலை கிள்ளும்மாயா! அடுத்த கப்பல் ஏற்றுமதியிலிருந்து அடிமைகளின் விலையை இரட்டிப் பாக்கப் போகிறேன். அப்போது நிறைய அமிதலாபம் வரும். அதில் உனக்கு மிதமானதைத் தருகிறேன். இப்பொழுது வேலைக்குப் போகிறாயா?

**மலை :** சரி. அப்படியே ஆகட்டும். நீங்க சொல்றது எல்லாம் பொய்யேதானென்றும், சொல்ல முடியாது. சரி அப்பவே வந்து வேலையை ஒப்புக் கொள்ளுகிறேன். இப்பொழுது நீங்களே ஒப்புக் கொள்ளுங்கள்.

**பொன் :** சேச்சே. அவசரமானால் தருகிறேன். அவசரப் படுகிறாயே...

**மலை :** சரி. என்னிஷ்டப்படிதான் ஆசைதீர எடுத்துக் கொள்வேன்.

**பொன் :** ஆசை தீரவா! ஆசைக்கு ஒரு அளவைச் சொல்லிவிடு.

**மலை :** ஆசையை அளக்கும் கருவியை இன்னும் கண்டு பிடிக்கவில்லையே.

**பொன் :** சரி. ஒரு மாதிரி தருகிறேன். உயிரைக் காப்பது உன் கடமை. என்ன?

**மலை :** எஜமான்! நீங்க உடலைப்பற்றியும் கவலைப்பட வேண்டாம். உயிரைப் பற்றியும் கவலைப்பட வேண்டாம். உங்கள் தர்மம் என்ன. தாத்பர்யம் என்ன. உங்களைப் போன்ற மகான்கள் எந்த உலகத்தில் இருந்தாலுமென்ன? பூதவுடல் மறைந்தாலும், பொங்கிய புகழ் மங்காது.

**பொன் :** சரி அன்பு செலுத்துகிறாய் நீ.

**மலை :** அதற்குக் கூலி அவசியம் தேவைதான்.

**பொன் :** வா தருகிறேன்.

## மாளிகையில் மற்றோர் இடம்

*(பொன்மேனி ராயனும், மலைகிள்ளும்மாயனும். பொன்மேனி நெஞ்சை ஒரு கையால் பிடித்துக் கொண்டே உலவுகிறான்)*

**பொன் :** *மலைகிள்ளும்மாயா! என்ன இது? மனம் என்னவோபோல் சுழல்கிறதே சொல்ல முடியாத குழப்பம்.*

**மலை :** *சொல்ல முடியாமல் என்ன? கற்றாழைச் சாற்றிலே விளக்கெண்ணெய் ஒரு படி ஊற்றியது போலிருக்கிறதாக்கும்.*

**பொன் :** *அந்தத் திருடன் யாராயிருக்கக்கூடும்?*

**மலை :** *ஆருடம் பார்த்தால் தெரியக்கூடும்.*

**பொன் :** *அன்றே முயற்சி செய்திருந்தால், கையும் களவு மாகப் பிடித்திருக்கக்கூடும்.*

**மலை :** *அதை இன்று கூட நாம் செய்யக்கூடும் பயப் படாதீர்கள்.*

**பொன் :** *மலைகிள்ளும்மாயா! நீ வெளியே சென்று எப்படியும் முன் ஜாக்கிரதையாக இரு.*

**மலை :** *போகிறேன். தனிமையாயிருந்தால் தங்கள் உயிர் வேறு எங்காவது சொல்லிக் கொள்ளாலாமல் அவசரப் பிரயாணம் போய்விடுமே என்று தான் பயப்படுகிறேன்.*

**பொன் :** *பயப்படாதே மலைகிள்ளும்மாயா. நானெல்லாம் ரொம்ப நாளைக்கு உயிரோடு இருப்பேன்.*

**மலை :** *ஆமாம் மகராசா! பலி பீடத்திலே நிற்கும் ஆட்டுக் கடாகூட ரொம்ப நாளைக்கு இருப்போ மென்ற எண்ணத்தோடுதான் தன் கழுத்திலுள்ள மரணப் பூசையின் பசுந்தழைகளை உற்சாகமாகக் கடித்துத் தின்று கொண்டிருக்கிறது.*

**பொன் :** *சே. மாயா! இதென்ன உவமை? பிடிக்க வில்லையே.*

மலை : நடக்கற உண்மையை உவமை சொன்னால், உலகத்துக்கு உள்ளம் குழம்புவது சகசந்தானே.

பொன் : எனக்கு ஆயுசு மிகவும் அதிகம் என்று எல்லோரும் சொல்லியிருக்கிறார்கள். சோதிட சாத்திரங்களும் முறையிடுகின்றன.

மலை : இருக்கும் இருக்கும். இந்த உடும்பு, மலைப் பாம்பு, இதுகளெல்லாம் ஆயுசு நீண்டு வாரர மாதிரி அப்படித்தானே?

பொன் : ஆமாம் *(போக)*

## திருப்புக் காட்சி

*(கோட்டையை அடுத்த கொத்தளம் தனிமையில் வானழகன் கத்தியைப் பார்த்து)*

வான் : பாம்பை எதிர்த்த அன்றே கொன்று விட வேண்டும். அரைகுறையாக அடித்துவிட்டால் அது தன் பழியெண்ணத்தை மறக்காமல் சீறிக் கொண்டேயிருக்கும். ஆம். இன்று பொன்மேனி ராயனைப் பிணமாக்காமல் திரும்புவதில்லை.

*(போகிறான் தாடிவேடத்துடன். முன்குகையில் பாடிய பிச்சைக்காரன் பாடலைப் பாடிய வண்ணமே போக ஆங்கு வீரர்கள் எதிர்ப் படுகின்றனர்)*

வீரன் : அடே! யார் நீ?

பிச்சை : தோற்றமே சொல்லுமே அய்யா.

வீரன்2 : பிச்சை போடறத்துக்குத் தான் ஆளில்லேன்னு தெரியுமே. ஏண்டா பிச்சை எடுக்கறெ?

வான் : பத்துமுறை கத்தினால் ஒரு முறையாவது மனம் இரங்கக்கூடும் என்ற நம்பிக்கையால் தான்.

வீரன் 1 : படிச்ச பிச்சைக்காரன் போலிருக்கிறானே.

வான் : படிக்கவில்லை. உலகத்தைபார்த்த பிச்சைக்காரன்.

**வீரன்2 :** பேடே! இவன் பிச்சைக்காரனில்லேடா. பேச்சுக் காரண்டா.

*(இவர்கள் தனது நிலையைக் கண்டு கொள்ளக் கூடும் என்ற எண்ணம் வரவே மறுபுறம் கிளம்பிய வண்ணம்)*

**வான் :** நான் வருகிறேனய்யா பசி போயிட்டுது.

**வீர1 :** என்னடா ஆச்சரியம்! ஒண்ணுமே கொடுக்கலே அதுக்குள்ள திரும்பறே!

**வான் :** பசி எப்போதுமே காத்துக் கொண்டிருப்ப தில்லை அய்யா! அக்னிபோல் எழுகிறது. அவ் வேளைக்கு ஒன்றும் கிடைக்கவிட்டால், எழுந்த இடத்திலேயே பதுங்கி விடுகிறது. சித்ரவதை செய்து சோம்பேறி மனிதனை செயலுக்குத் தூண்டும். காலம் வந்ததும், எதனையும் மதியாது பொங்கியெழும் பொதுமக்களின் புரட்சி வெள்ளம் போன்றது பசி. அது ஒரு தயவு தாட்சண்ய மற்ற வியாதி, அதில்லாவிட்டால் உலகம் விழிப்பின்றி உறங்கி உறைந்து உளுத்துப் போகும். மனிதனை ஆட்டுவிக்கும் பசியே வாழ்க நீ. ஊழித் தீபோல் வாழ்க. நான் போகிறேன்.

**வீர 2 :** ஒரு முதல்தரமான பிரசங்கம் செய்யுமளவுக்கு இவன் தலையிலே பசிவெறி அதிகரிச்சிருக்குதடா.

**வீர 1 :** டேடே! வெறும் வயிற்றுப்பசியாலே இந்த மாதிரிப் பேச்சு வராதுடா தம்பி. இது அறிவுப் பசியி னுடைய ஆழத்திலே இருந்து வர மந்திர மூச்சுடா தம்பி!

**வான் :** உஸ்... நான் வருகிறேனய்யா.

**வீர 1 :** தம்பி... நில். நீ பிச்சைக்காரன் இல்லேங்கறதை உன் பேச்சினுடைய போக்கே சொல்லுதே. யார் நீ, எங்கே வந்தே?

**வான் :** உஸ்... நான் போகவேண்டும்.

வீரன் : பிறகு போகலாம். நீ எங்கள் பின்னால் வா. இந்த இடத்துக்கு இந்த நேரத்திலே வரவங்களை கோட்டைக்குள்ளே கொண்டுவரும்படி மலை கிள்ளு மகாமாயர் உத்தரவு தெரியுமா?

வான் : ஏன் சத்திரம் கட்டி வைத்திருக்கிறாரா?

வீரன் : இல்லை. தூக்குப்போட உத்திரம் கட்டி யிருக்கிறார்.

வான் : பசிக்கு உணவு கேட்கவந்தால்...

வீரன் : பசியற்ற பரலோகத்திற்கு அனுப்புவோம்.

*(ஓடிப்பிடிக்க வந்த ஒருவனைக் குத்துகிறேன், வான் அழகன். மற்றொருவன் வருகிறான். மறு படியும் ஓடுகிறான். பத்துப்பேருடன் மலைகிள்ளு மாயன் வந்து பிடித்துக் கொண்டு இம்சிக்கிறான்.)*

மலை : ஆ- கிழட்டுப்பயலே! என்னடா செய்ய வந்தாய்? இந்த ஆயுதங்களெல்லாம் எதற்காக?

வான் : எல்லாம் அவசியத்திற்காகத்தான். அயோக்யர் களுக்கு உடம்பில் கொழுப்பு அதிகமாகி விட்டதால், குறும்பு பெருகுகிறதாம். இதைக் கொண்டு கொத்திக் குறைத்து அவர்களைச் சமநிலைப் படுத்தும் சிர்திருத்த ரணவைத்யக் கருவிகள் இவைதான். தெரியுமா?

பொன் : மலைகிள்ளுமாயா! இவன் பேசுவதைப் பார்த்தாயா..!

வான் : பேசுவதைப் பார்க்காதே. காதாலே நன்றாகக் கேளடா நீசப்பிறவியே.

*(பொன்மேனிராயன் நீள மீசையை முறுக்க)*

மலை : அடே, மனிதனே! அதோ எங்கள் தலைவருடைய கோபம் அளவுக்குமீறிப் பெருகிவிட்டதை நிருபிக்கத்தான் அவரது நீளமான மீசையை வேகமாக முறுக்கிக் காட்டுகிறார். அதையறிந்து

நாக்கை விழுங்கி வயிற்றுக்குள் தள்ளிவிடு. அவர் பெரிய தலைவர்.

**வான்** : ஆகா. பெரிய தலைவர்தான். வெறிபிடித்த நாய் வாலை முறுக்குவதுபோல், இவர் மீசையை முறுக்குவதிலிருந்தே, இவர் இன்னாரென்று தெரியப் படுத்துகிறாரே.

**பொன்** : அவன் என்ன சொல்லுகிறான்?

**மலை** : நான் சொல்ல முடியாததைச் சொல்லி விட்டான் மகாராசா. இவனைக் கொல்லலாமா?

**பொன்** : கொல்லாதே. இவனைப் பனித்தீவுக்கு ஏற்றுமதி செய்வதால், சுளைபோல்வரும் பத்தாயிரம் தங்க நாணயங்களை இழக்க விரும்பவில்லை.

**மலை** : அதற்காக தங்கள் மானத்துக்கு ஈனமான மோனைமொழியை உச்சரித்த இந்த வீணனை விட்டு விடுவதா?

**பொன்** : பரவாயில்லை. இழந்த மானத்தை இவனை விற்கும் பொன்னால் பெற்றுவிட முடியுமென்று நம்புகிறேன் நான்.

**மலை** : அதில் எனக்கும் பங்கு இருக்கும்படி செய்தா லொழிய இவன் உயிரின்மீது பச்சாத்தாபம் தோன்றப் போவதில்லை. இவன் தங்களை அவமானப் படுத்திய சொல்லம்பின் ரணத்தை நான் ஆற்றிக்கொள்ள வேண்டுமானால் அதற்குப் பரிகாரம் இவனுக்காக அடிமைச் சந்தையில் கிடைக்கும் பொன்னில் பாதியை நான் பெறத் தான் வேண்டும்.

**பொன்** : சரி. உன் மெச்சத் தக்க விசுவாசத்துக்கு ஈடு கட்டாமலிருப்பேனா? அப்படியே தருகிறேன்.

**மலை** : ஆ... ஆ...அடிமையே பிழைத்தாய். *(ஆனந்த பிகுதியால் தாடியைப் பிடித்தாட்ட தாடி கையுடன் வருகிறது.)*

**பொன் :** ஆ...! அழகான வாலிபன்.

**மலை :** சபாஷ். சபாஷ். இவன் விலை பத்தாயிரம் பொன்னல்ல. ஒரு லட்சம். ஆ... நமது நல்லகாலம்.

## திருப்புக் காட்சி

**வாணி :** பொல்லாத காலத்தில் இப்படியெல்லாம் வானழகன் விளையாடுகிறானே!

**வேல் :** அம்மா, நேற்றுச் சென்றவர் இன்னும் காண வில்லையே அம்மா.

**வாணி :** அம்மா. ஆண்டவன் மீது எனக்குப் பூரணமான நம்பிக்கை இருக்கிறது. உன் வான் அழகன் கட்டாயம் திரும்பிவிடுவான் கலங்காதே.

## பயங்கரப் பின்னணியோடு திருப்புக் காட்சி

*(கடற்கரை. படகில் பாய் மரக் கம்பத்தோடு கைகால் விலங்குடன் மீள முடியாதபடி கட்டப் பட்டுள்ளான் வான்ழகன். வில்லர் கூட்டம்.)*

**மலை :** நீ எங்கே போகிறாய் தெரியுமா?

**வான் :** தெரியும். மீளமுடியாத அடிமை நரகத்துக்கு.

**மலை :** தவறு. மாடமாளிகை கூட கோபுரம் மலிந்த பொன்னாடான பனித்தீவுக்கு பிரபுக்களுக்கு சேவை செய்ய எனச்சொல்.

**வான் :** இல்லை. பிரபு வம்சத்தின் உயிரின் வேரிலே கொதிக்கும் பழியென்னும் இரும்புக் குழப்பை வார்ப்பதற்கு.

**மலை :** அடே! கப்பல்காரா! திருப்பு பாய்மரத்தை.

*(ஓடப் பாட்டுடன் காட்சிமுடிவு.)*

**(முதல் முரசின் ஒலி 7 முடிவு)**

# இரண்டாவது போர்க்களம்

## விதியை வெல்வோம்

### காட்சி - 1

காலம் : முன்மாலை

இடம் : அலங்கார மண்டபத்தின் ஆட்டமேடை

*(பனித் தீவிலே பிரபுக்களின் களியாட்டம் - பருவப் பெண்களின் நடனம் கூட்டமாகப் பாடிய வண்ணம் அடிமைக் குமரிகள் ஆடுகின்றனர் - சில பிரபுக்களும் பாடலாம்- பாட்டுக்கேற்ற அபிநயம்)*

*(இதை நிழற் காட்சியாகக் காண்பித்துப் திரை உயர்த்தலாம்)*

பாடல்

*கூட்டம்*

மாந்துவோம் மது மாந்துவோம்
மாம்பழக் கன்னிகள் தர (மா)

நீந்துவோம் இனி நீந்துவோம்
தோய்ந்த இன்ப ஏரியிலே (மா)

சாய்ந் தெழுந்தும் பாய்ந்தும்
சக்கரம் போல் ஊர்ந்தும்

சூழ்ந்து நடமாடு மிந்த
சுந்தரிகள் சாய்க்கும் மது (மா)

ஏந்துவோம் என்றும் கிண்ணம் ஏந்துவோம்
ஏந்திழை கற்கண்டுக் கையில்

எட்டி ரசமாயினும் நாம் (மா)
வீழ்ந்த பொழு தெல்லாம்

ஊறி யெழும் போதை
காய்ந்த நெஞ்சத்துள்ளே - ஓடிக்

களைப்பைக் குடிக்கும் மது (மா)
மேகத்திலே பாடும்

மென் பறவை போல
சோக உலகை மறந்து
சுகத்தில் மறந் துலாவ (மா)

*குடிவெறியும் கூத்தின் மயக்கமும் கொண்ட சண்டிகள் நிறைந்த மண்டபம். ஆண் அடிமைகளின் ஓயாத வேலைகள். அவர்களும் மதுவைப் பரிமாறுகின்றனர். மாட்சிமை தங்கிய மற்ற பிரபுக்களுக்குத் துரோகம் இழைத்த குற்றத்தைச் செய்தவர்களாவார்கள். அதற்குப் பயந்தே அஞ்சி நடுங்குகின்றனர். ஒரு மாட்சிமை தங்கிய பிரபுவை நான்கு அடிமைகள் தூக்கி வருகின்றனர்.*

*சிம்மாசனத்தின் மீது வைக்கின்றனர். அவனுக்குச் சகலவித அதிகாரங்களும் உண்டு. பனித்தீவின் தலைவன். பெயர் இன்பவாகனன். இருட்டான இதயத்தான். ஏற்கனவே ஏகப்பட்ட அலங்காரங்களைச் செய்திருந்த அவனை, மேலும் மேலும் பெண்கள் வலம் வந்து அணி செய்தார்கள். ஒரு அடிமைப்பெண் அளவுக்கு மீறி ஆடியதால் களைத்துச் சுருண்டு வீழ்ந்து விடுகிறாள். இதைப் பார்த்த மற்ற அதிகாரி ஓடி வந்து அவளைச் சவுக்கால் அடிக்கிறான். மகா பிரபுக்கள் சபையிலே அவ்வாறு விழுவது ஒரு மன்னிக்க முடியாத பிழையாகும். இக் கொடூரக் காட்சியை தன் கூரிய விழிகளால் நோக்கினான் ஒரு வாலிப அடிமை.*

*அவன் உள்ளே பொங்கிக் குழம்பிய உணர்ச்சியின் சக்திக்கனல், அவன் செவ்விழியின் சிறு நரம்புப் பின்னலிலே மின்னித் தேங்கிற்று. கட்டுற்ற உடல் யாவும் வெட்டுற்று நடுங்கிற்று. சுற்றிலும் பார்த்தான். சூடான அவன் கரத்தால் ஓங்கி அறைந்தான். கசை வீசிய அதிகாரியின் கன்னம் சிவந்தது. பின் விளைவு கருதாமல்*

*மேலும் அறைந்தான். அதிகாரி தரையைத் தழுவினான். வாலிப அடிமையைப் பிரபுக்கள னைவரும் தாவிப் பற்றினார்கள். கயிற்றால் சுற்றினார்கள். வற்றிய அவன் சதைப் பிடிப்பை முற்றுகையிட்டன சாட்டையடிகள். வழிந்தது ரத்தம். வாடிற்று வதனம். ஆனால் விழவில்லை தரையில். வியந்தது மண்டபம். இவன் தான் அன்பு நாட்டின் தவப்புதல்வன். அடிமை வியாபாரத்தை அகற்ற உளங்கொண்ட உத்தமன். பெயர் வானழகன். பிறப்பால் பூரண எழில் வாய்ந்தவன். அடிமையாய் விலைக்கு வாங்கப் பட்டபின், மண் மூடிய மாணிக்கம்போல் மாசுற்றான். மௌனியாய் நின்றான். அவன் பேச்சைக் கேட்க அங்கு ஆளில்லை....*

*பேசுகின்றான் மகா பிரபு மன்மதசகாயனன்.*

**மன் - சகா :** அடிமை நாயே! முரட்டு மிருகமே! அநாகரீகக் கொழுப்பு உன் கையை நீட்டமாக்கி விட்டதா?

**மறுபிரபு :** எங்கள் தலைவர் இன்பவாகனர் கொலு வீற்றிருக்கும் போதா இந்த அநியாயம்?

**மன் - சகா:** மன்னிக்க முடியாதது. மலைபோன்ற குற்றம்.

**பிரபு 1 :** தீவிரமான தப்பிதம்.

**பிரபு 2 :** தண்டிக்க வேண்டிய கொடுமை.

**பிரபு 3 :** உணவைக் குறைத்துப் போடாததால் நேர்ந்த உடற்திமிர்.

**மன் :** *(அடிபட்டு உட்கார்ந்திருந்த அதிகாரியைப் பார்த்து)* அட அதிகாரி!

**அதி :** *(முதுகை நெளித்த வண்ணம்)* பேய் போல் அறைந்து விட்டான். பெயரில்லா அடிமை நாய்.

**மன் :** அதைப்பற்றிக் கவலைப்படாதே. வலித்தாலும் வெளியில் சொல்லாதே. நடந்ததென்ன?

**அதி** : நீங்களெல்லாம் பார்த்ததுதான்.

**மன்** : நீயாக, உன் வாயால் சொல்.

**அதி** : பயப்படத்தக்க கீர்த்தி வாய்ந்த பிரபுக்கள் முன்னிலையிலே மரியாதையின்றி விழுந்த அடிமைப் பெண்ணை அதிகாரத்தின்படி தண்டித்தேன். அதைப் பார்த்த இந்த நாய் என்மீது பாய்ந்து கடிக்க வந்தது.

**பிரபு 2** : கடித்தே விட்டது.

**வான் அழகன்:** அச்சிறு பெண் ஓயாது உழைத்தாள். மயங்கும் வரையில் உங்களுக்காக நடனமாடினாள். கடைசியில் சுருண்டு வீழ்ந்தாள். பிணத்தின்மீது கல்லெறிவதுபோல் அவளை மேலும் கசையாலடித்த உன் கரத்தை அறுக்காமல் விட்டது என் குற்றம்.

**அதி** : பார்த்தீர்களா! மன்மத சகாயமகா பிரபு! தங்கள் சந்நிதானத்திலேயே தன் நாற்றவாயைத் திறந்து சேட்டை செய்கிறது இந்தப் பிராணி.

**மன்** : (அடிமையிடம்) பிராணியே! கொஞ்ச நாளைக்குப் பிழைத்திருக்கவேண்டும் நீ. ஆகையால் பேசாதே.

**இன்பவாகனன்:** பிரதானி மன்மதசகாயா! என்ன! பாம்பை வெட்டிப் புதைக்காமல் பேசி நேரத்தைப் போக்குகின்றாய்?

**மன்** : இவனைப் பிணமாக்கினால் நாம் கொடுத்த பொருள்தான் நஷ்டமாகும். ஆகவே தண்டனை என்னவென்றால், ஆறு நாட்கள் பட்டினியோடு குதிரைக்குப் பதிலாக வண்டியிழுத்து வர வேண்டியது. போ ஏ அதிகாரி! இவனை இழுத்துப்போ.

**வான்** : ஆண்டவா!

**இன்ப** : சே... பனித்தீவில் பிறந்த புனிதமான சுதந்திர மனிதனுக்கு ஒரு அடிமை செய்தபாபத்தை மன்னிக்கும் உரிமையை உன் ஆண்டவன் இன்னும் பெறவில்லை. அதிகாரிகளே! ஆறு நாட்களுக்குள் திருத்திட வேண்டும். போ.

**வான்** : அப், பெண்?

**மன்** : *(முதலில் கீழே விழுந்து எழுந்து நடுங்கி நின்ற பெண்ணைப் பார்த்து)* பெண்ணே! இனிமேல் இப்படி விழுவாயா?

**பெண்** : இல்லை.

**மன்** : அடிமையே! சரிபோ. அவளைப் பற்றிக் கவலை கொள்ளவேண்டியது நாங்கள்.

*(அதிகாரிகள் இழுக்க வானழகன் போகிறான்)*

**இன்ப** : தன் இனத்தின் மாமிச மூட்டையை மனிதர்களின் இரைக்காக இழுத்துச் செல்லும் மாட்டைப் போன்ற ஒரு அடிமைக்கு இந்த உணர்ச்சிவரக் காரணம்?

**மன்** : நம்மைச் சுற்றிக் கொண்டிருக்கும் சுதந்திரக் காற்றை சுவாசிப்பதே இதற்குக் காரணம்.

*(எல்லா பிரபுக்களும் தொந்தி குலுங்கச் சிரிக்கிறார்கள்)*

**மன்** : மாண்புமிக்கப் பிரபுக்களே! கும்பிடத்தக்க கோலாகலமான சிம்மாசனத்தை அலங்கரிக்கும் இணையீடற்ற மகாப்பிரபு இன்பவாகனர் என்றும் வாழ நாம் அவரைப் பிரார்த்திப் போமாக. பணிவோமாக. காலில் விழுவோமாக. கட்வுளிடம் அழுவோமாக.

**இன்ப** : இன்ப நேசர்களே! சூழ்க எங்கும் சுகபோகம். வாழ்க நம் கேள்வியற்ற சுதந்திரம். ஆழ்க உலகெலாம் மதுக்கடலிலே. எப்போதும் இம்மது நம் குடலிலே. பருகுங்கள். பனித்தீவு வாழ்க.

*(எல்லோரும் கையிலிருந்த மதுக்கோப்பையை தலைவரைப் போன்றே தலைக்குமேல் தூக்கி "வாழ்க பனித்தீவு" என்று வாழ்த்திக் குடிக்கின்றனர்.)*

**(காட்சி 1 முடிவு)**

## காட்சி : 2

**இடம்** : காடு

**காலம்** : நடுப்பகல்

*(அடிமை வாலிபன் வானழகன் ஒரு வண்டியிலே குதிரை மாதிரியே கட்டப்பட்டிருக்கிறான். முன் காட்சியில் அடிப்பட்ட அதிகாரியும், மற்றொருவனும் சாட்டையால் ஓட்டுகின்றனர். பசிக் களைப்பால் மிகவும் நலிந்து, நாணமும் பழி வேகமும் கொதிக்க, மனத்திலே வீரம் குதிக்க, பல்லைக் கடித்தபடியே வண்டியை இழுக்கிறான் வானழகன். இரு அதிகாரிகள் பாட்டுடன் குதூகலித்துத் தங்கள் கட்டற்ற வெறிக் கோலத்தின் கோர சொரூபத்தை வெளிப்படையாகக் கொட்டுகின்றனர்.)*

**பாட்டு**

மனிதரையெல்லாம் மாடுகளாக்கும்
மட்டில்லாத ஆதிக்கம்
குமரியையெல்லாம் குதிரைகளாக்கும்
குன்றாளங்கள் ஆதிக்கம்
கண்டதையெல்லாம் கொண்டுசுகிக்கும்
கட்டில்லாத ஆதிக்கம்
தண்டனையெல்லாம் தருவேன் ஆமாம்
தடைசெய்வாரைப் பாதிக்கும்

அடிமைகள் எங்கள் அதிகாரத்தில்
ஆடும் கட்டைப் பொம்மைகளே
கடமையைச் செயவே காசுகொடுத்து
கடையில் வாங்கிய கரடிகளே
படபடப்பாக பறந்தே வேலையைப்
பணிவாய்ச்செய்யும் பேடிகளே
தடியால்நாங்கள் அடியேதரினும்
தாழ்ந்து வணங்கிடும் பேதைகளே

அதி 1 : *தோழனே! நம்கையில் அகப்பட்ட மானைக் கொன்று விட்டால், ஒரே விநாடிதான் இன்பம். ஆனால், இதைப் போன்ற சித்ரவதை செய்வதில் நீடித்த இன்பம் நின்றுகொண்டேயிருக்கிறது. இல்லையா?*

அதி 2 : *ஆம் நண்பா. இந்த விசித்திரக்கொலை நம்பனித் தீவின் மாபெருங்கலை. இதை நாம் இந்தச் சாட்டையின் நுனியிலே வளர்ப்போம். இக் கலையை எங்கும் பரப்புவோம். எப்படி என் மூளையின் வேலை?*

அதி 1 : *ஆளில்லாத ஊரில் உலகப்பரிசைப் பெறும் அபார அறிவுடைய அன்பனே! என்கை வலிக்கிறது. நீ ஓட்டு இந்த மாட்டை. அந்த அடிமைப் பொம்மையை இங்கு வரச் சொன்னேன். இன்னும் காணவில்லையே.*

அதி 2 : *ஏன் ஜோடியாகக் கட்டி ஓட்டலாமென்றா?*

அதி 1 : *இல்லை. இந்த மாட்டு வண்டியிலே அவளோடு ஊர்வலம் வந்தால், நமது கீர்த்தியும், சீர்த்தியும், நாகரீக நேர்த்தியும் பூர்த்தியாகப் புவியெங்கும் பரவும். எப்படி என் மண்டை கண்ட ஆராய்ச்சி யின் முடிவு?*

அதி 2 : *ஆஹா! நேர்த்தியான ராசதந்திரி நீயே, உன் இரும்புத் தலைவன் கனத்தை சம்மட்டியால்கூட அசைக்க முடியாதப்பா...*

*அதி 1* : தாகம் அதிகமாயிருக்கிறது.

*அதி 2* : திராட்சை ரசம் ஆய்விட்டதா?

*அதி 1* : திரும்பவும் கொண்டுவர அனுப்பினேன்.

*அதி 2* : அதோ ஓடிவருகிறது அடிமை.

*(முன் காட்சியில் களைத்துவீழ்ந்த அதே அடிமைப் பெண் மற்றொருத்தியோடும் நடுங்கி ஏந்திவந்த பலவித கொழுப்புணவையும் மது வகையையும் கையில் நீட்டி அவன்பாதத்தின் அருகிலிருந்த மேடைமீது வைத்து வணங்கு கிறாள். நாட்டிய முறைப்படி.)*

*அதி 1* : நண்பா! இவள் உடலைப்பார்த்தாயா?

*அதி 2* : பார்த்தேன். இவளிருக்கும்போது நாகப் பாம்பை யும், தோகை மயிலையும்கூட அனாவசியமாகப் படைத்த அந்த வேலையற்ற கடவுளைக் கேலி செய்யலாமா என்று தோன்றுகிறது.

**அதி 1** : நண்பா! நான் இன்ப வேட்டையாடுவதற்காகவே வாங்கிவந்த வனப்பும் கட்டுமிக்க வாலிபவில், இது. எப்படி என் உவமை?

**அதி 2** : அடா! அடா! தம்பி! நீ ஏண்டா ஒரு இன்ப இதிகாச இலக்கியத்தை இந்த இடத்திலேயே எழுதித் தள்ளக் கூடாது?

**அதி 1** : அடே! என் வில்லே! இது எந்த பிரபுவால் வாங்கப்பட்டது.

**பெண்** : வனாதிபதி மகாப்பிரபு வீட்டில் வாங்கப்பட்டது.

**அதி** : அடா தம்பி! என்னடா பார்க்கிறாய்?

**அதி 2** : தம்பி கொஞ்ச நேரம் விளையாடி வருவோம்டா.

**அதி 1** : தாகத்தையும் பசியையும் தணித்துக் கொள் வோண்டா. என் வில்லே! ஊட்டு இரையை ஊற்று மதுவை...

**அதி 2** : ஏ கல்லே! நீ என் பசியை ஆற்று. களைப்பை மாற்று.

*(இரு பருவமங்கையரும் இளங் கைகளால் மாமிசங்களை இந்தக் குண்டர்களின் வாயில் புகட்டுகின்றனர். அவ்வளவையும் உண்டு ஏப்பம் விடுகின்றனர். இதையெல்லாம் பசித்திருந்த வானழகன் பார்க்கிறான். பெருமூச்சுவிட்டு கட்டுகளைவிட்டு மீறி வெளிவர முயற்சி செய்கிறான். அனைத்தும் வீண்.)*

**அதி 1** : அடா. நம் மாட்டுக்குப் புல்போடவில்லையே.

**அதி 2** : ஆமாண்டா தம்பி. அடி பெண்ணே இந்த மாட்டுக்குத் தீனி போடு.

**அதி 1** : கொடு வைக்கோலை.

*(வைக்கோலைக் கொண்டுபோய் வானழகன் முன் நின்றவண்ணம் கண் கலங்குகிறாள் பெண். வாட்டும் சுதந்தரக்கனல் அவன் உடலையை தகிக்கிறது. ஏன் தின்னவில்லையென்று சவுக்கால் வீசுகிறான்)*

**அதி 2** : தம்பி! இந்தப் புல் காய்ந்துவிட்டதால், மாடு தின்னாது. நானும் இவளும் போய் நந்தவனத்தில் நல்ல பசும்புல்லாகப் பறித்து வரவா?

**அதி 1** : போடா தம்பி... போடா...

*(உடன்வந்த மற்றொரு அடிமைப் பெண்ணை அழைத்துச் செல்கிறான் இரண்டாவது அதிகாரி. முதல் அதிகாரி அடிமைப் பெண்ணுடன் ஆங்கோர் மேடைமீதமர்ந்து அளவுக்குமீறி குடித்து, ஏதோ இன்பப் பாட்டை முணகிய வண்ணமே சாய்கிறான் அவள் மடியில். மயங்கிய அவனை விலக்கிவிட்டு அடிமைப் பெண் வானழகனின் வாய்க்கட்டவிழ்த்து தண்ணீர் தருகிறாள்.)*

**பெண்** : இந்தாருங்கள். இதை அருந்துங்கள் பசியும், களைப்பும் மாறும். விரைவில் யாராவது வந்து விடப் போகிறார்கள்.

**வான்** : *(வயிறா உண்டு)* ஆ! மயக்கம் தெளிந்தது. அம்மா போதும். எழுந்துவிடப் போகிறான்.

**பெண்** : இவன் மயக்கம் தெளிய வெகுநேரமாகும் அதற்குள் தங்களைத் தப்புவிக்க வேண்டியது என் கடமை. என் பொருட்டு நேற்று பரிந்து வந்ததாலல்லவா தங்களுக்கு இவ்வளவு கொடூர மான தண்டனை? நாம் தான் அடிமைகளாகவே வாழவேண்டுமென்று கடவுள் பிறப்பித்து விட்டான். அந்த விதியிலிருந்து இந்த ஜென்மத் தில் மீளப்போவதில்லை. வீணில் ஏன் தங்கள் உடம்பைப் புண்ணாக்கிக் கொள்ளவேண்டும்.

**வான்** : உடலைப் புண்ணாகாமல் காப்பாற்றவா! பெண்ணே! அழுகி நாற்றமெடுக்கும் நம்மக்களின் மனப் புண்ணை ஆற்றமுடியுமென்ற நம்பிக்கை என் ஒவ்வொரு மூச்சிலும் ஓயாமல் ஊசலாடு கிறது. பாவம்! நீ பெண்ணாதலால் என் பரிதாபத்தைக் கண்டு பயப்படுகிறாய். அஞ்சாதே! இந்த அரக்கர்கள் என்னை அணு அணுவாகக் கூறுபோட்டு வெட்டலாம். என் உயிரையும் போக்கலாம். ஆனால், அசையாத உறுதி வெறியை, உரிமை நெருப்பை அணைக்கவே முடியாது. நீ மட்டும் முடிந்தவரை பாதுகாப் போடு இருந்து உதவு. அதுவே போதும்.

**பெண்** : கட்டுகளை அறுத்துவிடுகிறேன். தாங்கள் ஏன் எங்கேனும் காட்டுப்புறமாக ஓடிவிடக்கூடாது?

**வா** : தன்னல விடுதலையை வேண்டும் கோழை யல்லவா காட்டுக்குள் மறைந்து கண்ணை மூடிக் கொள்ள வேண்டும்!

**பெண்** : தாங்கள் அங்கிருந்தே விடுதலைக்குப் பாடுபட முடியாதா?

**வான்** : *சகோதரி! காட்டிலுள்ள மிருகங்களும் தாவரங்களும் விடுதலையோடே இருக்கின்றன. நாட்டில் சீரழியும் நம்மவர் மத்தியிலேயே இருந்து அவர்களின் விடுதலைக்குப் பாடுபடவே துணிந்து விட்டேன்.*

**பெண்** : *இயலாத காரியம். தாங்கள் தப்பிப் போகத்தான் வேண்டும். இது என் வேண்டுகோள்.*

**வான்** : *சகோதரி, துரத்திவரும் நாகத்துக்குத் தப்பி நச்சுப்பொய்கையில் குதிக்கச் சொல்லுகிறாய். நான் தப்பி ஓடி எங்கே போவது அம்மா? இச் சிறு சிறையினின்று தப்பினால் நாற்புறமும் ஆழமான சமுத்திரம். அதையும் தாண்டிச் சென்றால், மனிதத் தன்மையற்ற நாடுகள். அடைக்கலம் தர அங்கு ஆட்களில்லை. அன்பு நாட்டுக்குச் செல்வோமென்றால், காட்டிக் கொடுக்கும் லஞ்சப் பேய்கள் எங்கும் தாண்டவமாடி என்னை வளைத்து மீண்டும் இந்தப் பாழ் நரகத்துக்கே அனுப்பிவிடும் என்பதில் சந்தேகமே இல்லை. நம் நாட்டின் அடிமை வியாபாரி முன்னிலும் பதின்மடங்கு அதிகமாக தன் வியாபாரத்தைப் பெருக்கிக் பெட்டியை நிரப்புகிறான். நீ அஞ்சாதே!*

**பெண்** : *அய்யோ! இந்தப் பேய்விதியை விலக்கவே முடியாதா அண்ணா?*

**வான்** : *முடியும். விதியை வெற்றிகொள்ள முடியும் என்று என் மனத் துணிவு அடிக்கடியும் பேசுகிறது. அந்த நாள் வெகு அருகில் உள்ளதையும் ஏதோ ஒரு சக்தி எனக்குச் சொல்லிக்கொண்டேயிருக்கிறது. என்றாவது ஒரு நாள் விதியை வெல்லத்தான் போகிறோம். சுயநல மிருக நிலையில் திரியும் இந்த மனித சமூகம் உயர் நிலையடைவதை நம் கண்கொண்டே பார்க்க முடியுமென்று முழங்கி முரசொலி செய்யும் என்*

ஆத்மாவை நான் நம்புவதால், இவ்வளவு துணி வோடு பேசுகின்றேனம்மா. நீ அகன்றுவிடு. அவன் எழுந்து விடுவான் போலிருக்கிறது.

**பெண்** : சரி இந்த ஆகாரத்தை இன்னும் கொஞ்சம் உட்கொள்ளுங்கள். உம் சீக்கிரம்.

*(பயந்து பாலை ஊற்ற ஆவேசத்தோடு குடிக்கிறான்)*

**வான்** : ஆஹா! ஒன்றரை நாள் பசி ஒரு விநாடியில் மறைந்தது. உன் அன்புக்கு நன்றி. ஆகா....

*(அவன் கண்ணில் நீர் ததும்புகிறது)*

**பெண்** : ஏன் அழுகிறீர்கள்? கஷ்டம் சகிக்கமுடிய வில்லையா?

**வான்** : கண்ணீரின் காரணம் என்னைப் பற்றினதல்ல. மாடாக மாறிவிட்டேனே இந்த நிலையும் என்னைக் கலக்கவில்லை.

**பெண்** : பின் ஏன் அழுகின்றீர்கள்?

**வான்** : லட்சியக் கனவிலே இன்ப துன்பம் இரண்டும் ஒரே நிலையைப் பெறுகின்றன. ஆனால், என் முயற்சி அனைத்தையும் கடந்து, என்னைத் தாங்க இயலாமல் தத்தளிக்கிறேன். அத்துயரத்தின் பேரொளியால் என் மனக்கண் கூசிக் குருடாகின்றது.

**பெண்** : அதென்ன அப்பேற்பட்ட ரகசியம்?

**வான்** : இதயத்தோடு இணைந்துவிட்ட இன்ப ரகசியம். சொல்ல எழும் நாவை ஊமையாக்கும் உயர்ந்த ரகசியம். எண்ணினால் ஏக்கம். பேசினால் அழுகை. ஆ! நான் விலங்கான இச்செய்தியைக் கேட்ட மறுவிநாடியே உயிர் நீக்கும் என்தெய்வம். வேல்விழி! நீ எவ்வாறு இருக்கிறாயோ!

*(மனதுக்குள்)*

*(அவன் உணர்ச்சி அதிகமாகி, ஆ! வேல்விழி! என்ற ஒலியோடு வெளிக்குமுறும் சப்தம் அதிகாரி யின் உடலை அசைய வைத்ததைத் திகிலோடு கவனித்த அடிமைப்பெண் வில்லி, அவன் வாயை முன்போலவே கட்டிவிட்டு வருகிறாள். பொங்கிய கடல், கரைக்கு அஞ்சி அமைவதேபோல், வானழகன் அடங்காத துயரத்தை அமையும் படியான முயற்சி செய்கிறான். இதற்குள் அதிகாரி எழுந்து விடுகிறான்.)*

**அதி 1** : வில்லி! என்ன, மாடு புல் தின்றதா?

**பெண்** : ஆம் பிரபோ - வயிறு நிறையத் தின்றது.

**அதி 1** : எங்கே என் தம்பியும், அந்தத் தும்பியும் போனார்களே.

**பெண்** : போனவர்கள் திரும்பவே மாட்டார்கள் போலி ருக்கிறது.

**அதி 1** : அப்படியென்றால் அர்த்தம்?

**பெண்** : அவர்களைத் தான் கேட்கவேண்டும்.

**அதி 1** : சரி ரதத்தில் உட்கார் கேட்டுப் பார்ப்போம்.... இழு அடிமை மாடே. ஒடு ஒடு.

## காட்சி - 3

**இடம்** : காரியாலயம்

**நேரம்** : ஒரு காலை

**மன்** : ஆம். அன்புநாட்டின் அடிமை வியாபாரி வந்திருக்கிறான். சுதந்திர விழாவுக்கு முன்பே நாம் சொன்னபடி அழகான அடிமைகளை இம்முறையும் கொண்டு வரவில்லை. அவனை விசாரிக்க வேண்டும்.

இன்ப : வரச்சொல். எங்கே தணிக்கை செய்ய வேண்டிய காகிதங்கள்?

மன் : இந்தாருங்கள். இது அடிமைகளை விலைக்கு வாங்கவேண்டிய திரவிய அனுமதி ஒப்பந்தம். கையெழுத்துப் போடுங்கள்.

அன்பு நாட்டிலிருந்து பனித்தீவுக்கு ஏராளமான தங்க நாணயங்களுக்காக, அழகான வாலிபர் களையும் பெண்களையும் அடிமைகளாக விற்கும் கொடுமையாளன். அவன் பனித்தீவுக்கு அடங்கிய கோழை. அவன் அடக்க ஒடுக்கத்தோடும் வாய் மூடி, கைகட்டி மௌனியாகி, நடுக்கத்தோடும் சபைக்கு வருகிறான். கண்டவர் நகைக்கத்தக்க உடற்கோணலோடு, இவன் பெயர் பொன்மேனி.

பொன் : பணியத்தக்க பிரபு மண்டலமே! பனித் தீவின் இன்பமே! வாழ்க, வாழ்க, மாறா அடிமை. வணக்கம், வணக்கம்.

இன்ப : அடே, அடிமை வியாபாரி!

பொன் : அஞ்சத்தக்க பிரபுவே! குற்றமொன்றும் அறியேன் நான். இன்ப: நிரபராதிபோல் நடிக்கிறாயா?

பொன் : இல்லை. தங்கள் உத்தரவின்படியே ஆடுகிறேன்.

இன்ப : அடிமை வியாபாரி! நமது தீவின் சுதந்திர விழாவுக்காக, நல்ல அழகான, பதமான அதி வாலிபமான அடிமைகளை என் இந்நாள் வரை இறக்குமதி செய்யவில்லை?

பொன் : அடுத்த கப்பலிலேயே அனுப்பிவிடுகிறேன்.

இன்ப : இந்த வார்த்தையைத் தவறமாட்டாயே.

பொன் : தப்பாது கொண்டுவருவேன்.

மன் : சத்தியத்தைக் காக்காவிட்டால் உனது நாக்கையே காணிக்கையாகச் செலுத்த வேண்டிவரும் தெரியுமா?

பொன் : அப்படியே

(தலையை சொறிந்து நிற்கிறான்)

மன் : அடே! அடே! அநாகரீகம் செய்துவிட்டான்,

இன்ப : என்ன செய்தான்?

மன் : தாழ்த்திய தலையை நிமிர்த்திதோடு பிரபுவின் முன்னிலையில் தலைப்பாகையை எடுத்துவிட்டு குட்டு.

(அவன் அவ்வாறு குட்டியபின்)

அடே! இனிமேல் இக்குற்றம் செய்யாதே.

இன்ப : சரி. போ! ஏன் நிற்கிறாய்?

பொன் : மகாப்பிரபு! அடிமைகளை வாங்கக் கொஞ்சம் பொற்காசுகள் தேவை.

மன் : அதற்காகத்தான் தலையைச் சொரிந்தாயா?

பொன் : பிரபு! சொரியவில்லை. எம் நாட்டில் பணத் தேவையை வார்த்தையால் சொல்லாமல், அபி நயத்தால் கேட்கும் முறையிது.

மன் : சரி. எவ்வளவு தேவை?

இன்ப : மன்மதசகாயா! இரண்டு லட்சம் தங்க நாணயங் களைக் கொடு. அடிமை வியாபாரி! அற்புதமான அடிமைகளைக் கொண்டுவா.

மன் : எப்படி இருக்க வேண்டும் தெரியுமா?

பொன் : தங்களைப் போலவே விஸ்தரிக்க முடியாத அழகுள்ளவர்கள்களாக இருக்கவேண்டுமானா லும் கொண்டு வருகிறேன்.

மன் : மெத்தவும் மெச்சினோம். மெத்தவும் மெச்சி னோம். அடிமை வியாபாரி உன் மூளை அதிக கனம் வாய்ந்தது. அதிக கனம் வாய்ந்தது.

பொன் : அதற்கேற்ற பணந்தான் வேண்டும் பிரபோ.

மன் : *தருகிறேன். முதலில் அடிமைப் பெண்களுக்குரிய இலட்சணத்தைச் சொல்லுகிறேன். கேட்டுக் கொள்.*

**பாட்டு**

வாட்டமான நல்ல மேனிதனில்
ஓட்டமாய் திகழும் இளமை - கருஞ்
சாட்டைபோல் நெளியும் சடைகள் - அதில்
போட்டியிட்டு மயக்கும் மலர்கள் - இன்னும்
சின்னமுயல் போன்ற மென்மை - அதில்
அன்னப்பெடை தோற்கும் பெண்மை - இரு
கன்ன மேவியநல் தண்மை - அது
என்னை வாருமின்பம் வேண்டும்.

மன் : *தெரியுமா?*

இன்ப : *எப்படி எப்படி? இனியொருமுறை பாடு மன்மத சகாயா!*

மன் : *பாட்டு*

சின்னமுயல்போன்ற மென்மை - அதில்
அன்னப்பெடை தோற்கும் பெண்மை - இரு
கன்னமேவிய நல்தண்மை - வந்து
என்னைவாரு மின்பம் வேண்டும்.

மன் : *எப்படி.... நமது கவிதை? அடிமைகளின் அழகை எண்ணும் போதே நாக்கின் அடியிலிருந்து கவிதை நகர்ந்து வருகிறது.*

இன்ப : *என்ன அடிமை வியாபாரி மறக்கமாட்டாயே?*

பொன் : *ஆகா! இந்த இலக்கணப்படியே கப்பலேற்றி அனுப்புகிறேன்.*

**பாட்டு**

வாடாக் கனிபோன்றதேகம் - பார்க்க
சூடாகத் தோன்றுமொருயோகம் - வந்து
ஓடோடியும் உம்மைநாடும் - குயில்
பாடாத பதத்தையும்பாடும் - நீர்
தேடாத பேரின்பம் கூடும்,

பொன் : போதுமா?

இன்ப : ஓகோ, போதும். போதும் போ.. போ.அடுத்த கப்பலில் இத்தகைய அழகிய அடிமைகளோடு வர வேண்டும் தெரியுமா? போ.. போ அடே, பெண்ணே, ஆடு.

(காட்சி 3 முடிவு)

## காட்சி – 4

இடம் : கடற்கரை

காலம் : மாலை

*(காற்று வசதியாக வீசுவதால், தன் நாட்டிற்குச் செல்ல எண்ணமிட்ட பொன்மேனி, பணமூட்டைகளைப் படகோட்டிகளின் தலையில் வைத்து படகினுள் அடுக்கச் சொல்லுகிறான்)*

பட : இதுக்குள்ள எவ்வளவு நாணயம் சுவாமி இருக்கு. கழுத்தையே ஒடிச்சுடும் போலிருக்குதே பாரம்.

பொன் : அவ்வளவும் பத்தரைமாத்துத் தங்க நாணயமடா. இன்னும் இதைப்போல் எண்ணற்ற பைகளையும் தரக்காத்திருக்கிறார்கள்.

பட 2 : ஏன் சாமி! அடிமை வியாபாரம் பண்றது பாவம்னு சொல்கிறாங்களே சிலபேர்.

பொன் : வியாபார அறிவில்லாத முட்டாள்கள் பேச்சு. தங்கத்தின் எடையறியாத தரித்திரங்களின் பாட்டு. தங்கம்! உலகையே தன்வசமாக்கும் தங்கம்! பணம்! பார்ப்பதை எல்லாம் அடிமையாக்கும் பணம். உலகத்தைக் கவரும் மாயா சக்தி. இது இல்லாதவன் நடைப்பிணம். எப்பாடு பட்டேனும் இதைப் பெற்றவன் பெரியவன். அவன் தான் புண்ணியவான். அவன் எண்ணியதெல்லாம் நடக்கும். இதுவே என் தெய்வம்.

*பட 2 :* *என்னா சாமி! பூமியிலே இருந்து வடிகட்டின இந்த மஞ்சள் மண்ணாங்கட்டிக்கு, தங்கம்னு ஒரு புதுப்பேர் கொடுத்து, தெய்வம் கிய்வம்கிறீங் களே! எனக்கும் சிரிப்பு வருது சாமி.*

*பட 1 :* *டேய் டேய்! சாமி சொல்றது சத்தியமான பேச்சு. நாலுபேத்துக்கு மேலே நாமும் இருக்கணும்னா இது இல்லாட்டி முடியுமா? இதைப்பத்தி என் பாட்டி சொல்லித் தந்த பாட்டு நெனவு வருது.*

**பொன் :** *மற்றொரு ஆளுடன் உள்ளே சென்று, அங்கு வண்டியில் வைத்திருந்த மற்ற பைகளையும் கொண்டுவரும் பணியிலீடுபடும்போது, முதல் ஓடக்காரன் பாடுகிறான்.*

**பாட்டு**

பணமென்னுந் தோணியிலே - அகிலேசா
பதவியென்னும் பாய்விரிப்போம் - ஆமாண்டா

பொய்யென்னுந்துடுப்பாலே நீந்திடுவோம்
பெருமையென்னும் கடல்தாண்டிப்
போயிடலாம் - கேட்டியா

நீதியெனும் முதலைவரும் அப்போது
சூழ்ச்சியெனும் ஈட்டியாலே தீத்தூடு

சோதனைத்திமிங்கிலமே வந்தாலும்
தந்திரமாம் வோட்டுப்போட்டு சுட்டுடு - கேட்டுக்கோ

உண்மையென்னும் பலபாறை - அண்ணாத்தே
உன்வழியைமறிச்சாலும் அஞ்சாதே

தன்னலமாம் காத்தோட - சேந்துக்கோ
செல்வமென்னும் கரைநோக்கித்திருப்பிக்கோ

ஆமாம் சுக்கான் திருப்பிக்கோ.

*(இதைக் கவனித்துக்கொண்டிருந்த பொன் மேனி)*

**பொன் :** *ஆகா! அருமையான பாட்டு. யாராப்பா பாடினா?*

*பட 1* : *இப்பொ நான் தானுங்க பாடறேன்.*

**பொன்** : *யார் எழுதினா?*

*பட 1* : *என்பாட்டி சொல்லிவச்சதுங்க.*

**பொன்** : *பாட்டியின் கவிதையா? பொருளாதாரத் தத்துவம் நிறைந்த பாட்டு. சரி. காற்று நம் நாட்டை நோக்கித்தான் அடிக்கிறது. மெதுவாகப் புறப்படுவோமா?*

*பட* : *புறப்படுவோங்க. தூரத்திலே மற்ற படகுகளும் கப்பலுக்கு புறப்பட்டுச்சு பாருங்க. அண்ணாத்தே! ஏன் நிக்கிறே, ஏழுநாள் பயணம்- மலைச்சா முடியாது.*

*(என்று கூறியவண்ணமே படகில் ஏறி ஓடப் பாட்டுடன் புறப்படுகின்றனர்)*

## காட்சி - 5

**காலம்** : முன் இரவு

**இடம்** : இன்பவாகனன் மாளிகை

*(மன்மதச் சகாயன் பிரவேசித்து)*

**மன்** : *எது என்னை அழைத்தது?*

**இன்ப** : *(மது உண்டவண்ணம் உலவி) மன்மத சகாயா! என் மைந்தன் ஞானதேவனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டவேண்டும். என் பெயரை நிலை நாட்ட வேண்டிய சந்ததி என் அருமை மைந்தன் தானே. வரும் சுதந்திர விழாவன்றே இதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்யலாமே!*

**மன்** : *திடீரென்று ஏன் இந்த யோசனை?. பனித் தீவின் சிம்மாசனத்தின் பொறுப்பும், பதவியும், புளிப்பும் கசப்புமாயிருக்கிறதா தங்களுக்கு?*

**இன்ப** : *பதவி, என்றுமே இனிப்பும் வனப்பும் வாய்ந்தது தான். அதை நமக்குப்பின் சந்ததியாரும் சுவைக்கப் பழகவேண்டும் என்றெண்ணியே இம்முடிவு செய்தேன். ஏன்? மைந்தன் ஞான தேவன் பட்டம் பெறுவதற்கேற்ற பக்குவம் அடையவில்லையென்று எண்ணுகிறாயா?*

**மன்** : *பட்டத்துக்கு என்ன அவசரம், முதலில் ஞான தேவனுக்குத் திருமணம் நடைபெறட்டுமே.*

**இன்ப** : *மணப்பெண்ணை இன்னும் அவன் தேர்ந்தெடுக்க வில்லையே.*

**மன்** : *ஓகோ! பெண்ணை அவன்தான் தேர்ந்தெடுக்க வேண்டுமா?*

**இன்ப** : *ஏற்ற பெண்ணை நீ தான் தேடிச் சொல்லேன்.*

**மன்** : *நான் தேடவேண்டுமா? எங்கே சென்று? விமானத்திலேறி, விண்ணிலே பறந்து வானுலகத் திற்குச் செல்ல வேண்டுமா பெண் தேட?*

**இன்ப** : *என்னப்பா! திடீரென்று உன்கோபம் பூமி யிலிருந்து ஆகாயத்திற்குத் தாண்டி விட்டதே!*

**மன்** : *நான் தாண்டவில்லை. உங்கள் நினைவுதான் கனவு உலகத்திலே தாண்டவமாடுகின்றது. மதுவோடு மறதியையும் சேர்த்துக் குடிப்பதன் பலனா இது? முன் கடந்த நாட்களைக் கொஞ்சம் எண்ணிப் பாருங்கள்.*

**இன்ப** : *நீ தான் தயவுசெய்து நினைவுபடுத்தி விடேன்.*

**மன்** : *உமது மைந்தன் என நீர் சொல்லும் ஞான தேவன், என்மகள் இன்பக்கொடியைத் தான் மணந்து ராணியாக ஒப்புக்கொள்ள வேண்டும் என்ற நமது அந்தரங்க நிபந்தனையை அன்றே மறந்து விட்டீர்களா? இன்று நினைவூட்டி விட்டேன். இனியாவது நினைவிருக்கட்டும்.*

இன்ப : இதைச்சொல்லவா இத்தனை வாதமும் இவ்வளவு நேரமும்? அப்படியே செய்தால் போகிறது.

மன் : *(மெதுவாக தனக்குள்)* அவ்வளவு அசட்டையா? *(இன்பவாகனனை நெருங்கி)* அதிருக்கட்டும்... உங்கள் மைந்தன் ஞானதேவனைப் பெற்றபின், அந்த அடிமைத்தாய் அடிக்கடியும் உங்கள் கனவில் வரும் வழக்கம் உண்டென்று சொன்னீர் களே! உம். இப்பொழுதும் அப்படித்தானே?

*(இக்கேள்விக்கு பதில் சொல்லவகையின்றி திகைத்த இன்பவாகனனுக்கு, அலங்கோலமான ஒரு பெண்ணின் காட்சி மனத்திரையில் தோன்றி மறைகிறது. குழப்பத்தைச் சமாளித்துக் கொண்டு.)*

இன்ப : அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. அன்று மறைந்த உருவம் இப்போது வருவதே இல்லை. இந்தக் கேள்வி ஏன் இப்போது? மன்மதசகாயா! அந்தப் பரம ரகசியம் உன்னால் என்றும் பத்திர மாகக் காக்கப்பட வேண்டும். வீணாக என் ரத்த சம்மந்தமுள்ள சந்ததியைக் காட்டிக் கொடுத்து விடாதே. புகழின் வேரை வெட்டிவிடாதே.

மன் : உமது ரகசியம் என்னால் காக்கப்படும். அதே போல் என்மகள் இன்பக்கொடி தான் உம் மைந்தனை மணந்துகொள்ள வேண்டுமென்ற நிபந்தனையை நீர் நிறைவேற்றினால் ஒழிய நாம் பேசிய நிபந்தனையெல்லாம் அர்த்தமற்ற வார்த்தைகள்.

இன்ப : ஆகட்டும். இருவரும் அதற்காகவே முயல்வோம். இது உறுதி.

மன் : அப்படி வாருங்கள். பாம்பின் பாதை பாம்பறியும் என்பதை அறிந்திருந்தும் என்னையே ஆழம் பார்த்து விட்டீரே! அதுதொலையட்டும். எங்கே ஞானதேவன்? உமது மைந்தன்? எப்பொழுது வந்தாலும் காணுவதில்லையே!

**இன்ப** : *ஆம். மாளிகையைவிட என்மகன் மலர்ச் சோலை யையே அதிகமாக விரும்புகிறான்.*

**மன்** : *அருகில் ஒரு உயிர்த்தோகையில்லாத காரணந் தான் அது.*

**இன்ப** : *அதோ அவன் பாட்டின்பத்தைக் கேட்டாயா?*

*(ஒரு கதவைத்திறக்க மலர்வனத்தின் நிலவொளி யிலே மேடை மீதுவந்து பாடுகிறான் ஞான தேவன்.)*

**பாட்டு**

வானமெழும் இன்பஜோதி- தனில்
ஞானதரும் அன்புவீதி- இதைக்
காணும்விழிகள் சொல்லும் செய்தி - நெஞ்சில்
தோணச்செய்யும் மௌனசாந்தி
மானிடம் என்பதொருஜாதி-எங்கும்
மாண்புடன் வாழுவதேநீதி- பொங்கி
வீணச் செயல்புரியவீழும்-மங்கி
சோகப்புயல் மூளச்சாகும்-வா

*(கதவின் திரை மூடப்படுகிறது.)*

**மன்** : *இன்று முதல் வருங்காலத்து சந்ததிகளாகிய இவர்களையும். நம் வழியில் சேரும்படிச் செய்வதே நம் வேலை.*

**இன்ப** : *ஆம்...*

**(காட்சி 5 முடிவு)**

# காட்சி - 6

இடம் : சோலை
காலம் : இரவு

(திருப்புக்காட்சி)

*(வெண்ணிலவின் சௌந்தர்யபோதை நாற்புறமும் கௌவிப்படர்ந்த மலர் வனம். அதில் ஒரு மேடைமீது ஞானதேவன் உட்கார்ந்து பாடுகிறான். இந்த இளைஞன் பனித்தீவிலே பிறந்த ஒரு சுடர் விளக்கு. மற்றவர் குணத்திலிருந்து முற்றி லும் மாறுபட்டே விலகி நிற்கிறான். அவன் சிந்தை, வானமெல்லாம் கவிந்து பகிரண்டமெல்லாம் பரவி, பிரிக்க முடியாத ஒரு அகண்ட சக்தி வெள்ளத்திலேயே தவழ்ந்து நீந்திக் கொண்டிருக்கிறது. அமைதியும் அனுதாப உணர்ச்சியும் அவன் உடலெங்கும் உயிர்த்தாடும் உணர்விலே வயப்பட்டுப் பின்னிக் கிடந்தன. அவனது ஒழுக்கத்தின் உள்ளத்திலிருந்து கணக்கிட்டதால் ராட்சப் பிரபுவான இன்ப வாகனனது சந்ததியா என்ற சந்தேகம் இயல்பாகவே எழும்.*

*ஆனால் ஐயமின்றி இப்பையன் இன்பவாகனனது ஜீவநிழல்தான். அவன் தாய், அன்பு நாட்டிலிருந்து வந்த அடிமைப் பெண்களில் ஒருத்தி. அடிமைத் தாய்க்கும், இன்ப வாகனனுக்கும் ஜெனித்த ஒரு உயிர். இவன் பிறந்த பொழுதே இன்பவாகனனின் தர்ம பத்தினியாகவும், பட்டராணியாகவுமிருந்த மனைவிக்கு, ஒரு பெண் குழந்தை பிறந்திருந்தது. அப் பெண் குழந்தையைப் பெற்றவுடனே, அவன் மனைவி அவஸ்தையால் ஆவி துறந்தாள். அதே நாளில் அரண் மனைக்கடுத்த இடத்தில் இன்ப வாகனனின் ஆசைக்குட்பட்ட அந்த அடிமைப் பெண்ணும் ஒரு ஆண்மகவை ஈன்றாள்.*

*இன்பவாகனன் தன்புகழை உலகுள்ள நாள் மட்டும் பரப்ப தன் ராணியின் வயிற்றிலிருந்து ஜெனிக்கும் சிசு*

ஆணாயிருக்குமென்றே எதிர் பார்த்திருந்தான். இவன் நினைவுக்குமாறாக அது பெண் குழந்தையாகப் போனதும் யாருக்கும் தெரியாமல் தன் சமயோசித புத்தி வன்மையை உபயோகித்து தன்னால் தோன்றிய அடிமைப் பெண் பெற்ற ஆண்மகவைக் கொண்டு வந்து ராணியின் படுக்கையிலே வைத்துவிட்டு, உண்மையாக ராணி பெற்ற பெண் குழந்தையை அடிமைப் பெண்ணின் பக்கத்தில் சேர்த்து விடுகிறான். எப்படியும் தன் இரத்தச் சக்தி தன் பட்டத்தை வகித்து, தன்புகழை வாழையடி வாழையாகப் பேசு மென்ற ஆனந்தத்தால், அனைத்தையும் மறந்தான். இதைப் போன்ற குழப்பமும், குரூரமும் நிறைந்த செயல்களுக்குப் பனித்தீவின் பிரபுக்கள் பெயர் போனவர்கள்.

உடனே அந்த அடிமைத்தாய் இன்பவாகனனிடம் காரணம் கேட்க, இவன் மமதையால் சீறி எழுந்து அவளுக்கு அந்தப் பெண் குழந்தையாவது நிலைக்க வேண்டுமானால், மௌனமா இருக்க வேண்டுமென வும் இல்லா விட்டால் பெண் குழந்தையைக் கொன்று விடுவதாகவும் பயமுறுத்தினான். அடிமைத் தாய் குழந்தையின் கொலையை விரும்பவில்லை. மேலும் தனக்கு உயிர்ப்பிச்சை அளிக்கும்படியும் கெஞ்சு கிறாள்.

அவளை மனைவியாகக்கொண்ட அந்த ஒரே ஒரு பாசம் இன்பவாகனன் மனத்தில் கொஞ்சம் இரக்கத்தை உற்பத்தி செய்தது. எப்படியாவது தொலைந்தால் போதும், என்றெண்ணி உடனே அந்த அடிமைப் பெண்ணையும் பெண்குழந்தையும் கப்பலேற்றி அன்பு நாட்டுக்கே அனுப்பி விடுகிறான். அவளும் செல்லுகிறாள். இந்த அடிமைத் தாயின் கருவீட்டிலே பத்து மாதம் குடியிருந்த குழந்தைதான் இங்கு காட்சி தரும் ஞானதேவன். பதினெட்டு ஆண்டுகளாகி விட்டன. இப் பரிதாப நாடகம் நடந்தது. தாயின் சற்குணமே ஞானதேவனுக்கு

*அமைந்தது. இந்தப் பரம இரகசியத்தை மன்மத சகாயன் மட்டும் அரைகுறையாகக் கேள்விப்பட்டிருந்தான். அதைக் கொண்டே அவன் இன்ப வாகனனை மிரட்டி, பெரும்பதவி பெற்றதும், தன் பெண் இன்பக்கொடியை ராணியாக்க விரும்புவதும்.*

*காண்பதெல்லாம் இன்பமாகத் தோற்றுகிறது. ஞான தேவனுக்கு. பாடுகிறான்.*

*பாட்டு*

**ஓசைகூட்டி திசைக ளெல்லாம்**
**பேசுகின்ற இன்பமே**
**ஆசைமீட்டிமீட்டி அல்லல் ஓட்டி**
**ஆடுகின்ற செல்வமே**
**பாசமான பருவ மேனிப்**
**போர்வையோ நீ சொல்லுவாய்**
**வீசுகின்ற வாசக் காற்றுன்**
**வாலிபத்தின் வெள்ளமோ?**

*(முன்காட்சிகளில் வந்த அதே அடிமைப்பெண் வில்லி வந்து அவன் பாட்டுக்கேற்றபடி ஆட முயற்சிக்கிறாள்.)*

**ஞான** : பெண்ணே! அழைக்காமல் நீயாக வந்து அசைவது ஏன்?

**பெண்** : ஏன்? பார்க்க அழகாயில்லை?

**ஞான** : அப்படி நான் சொல்லவில்லை. அவசியமற்ற இடத்தில் அழகைச் சிந்துவதால் பயன்?

**பெண்** : மகாப்பிரபு! குறிப்பறிந்து உங்களுக்கு இன்பந்தர வேண்டுமென்பதே எனக்குள்ள புதுக்கட்டளை.

**ஞான** : கட்டளையா! யாரிட்டது?

**பெண்** : மகாப்ரபு மன்மதசகாயர்.

**ஞான** : அந்தப் புண்யாத்மாவா?

**பெண்** : ஆமாம். நான் ஆடாவிட்டால் தண்டிப்பார்.

**ஞான** : *தண்டனைக்குப் பயந்து எவ்வளவு நேரம் ஆடுவது?*

**பெண்** : *சுய நினைப்பிருக்கும் வரை. சுருண்டு தரையில் விழும்வரை.*

**ஞான** : *இதற்குப் பெயர் மரண தாண்டவமல்லவா?*

**பெண்** : *மகாப் பிரபுக்கள் விரும்பிக் கேட்பது இதுதான்.*

**ஞான** : *பகுத்தறிவற்றவன் ரசிக்கும் பாவச் செய்கை.*

**பெண்** : *ஆனால் பிரபுக்களுக்கு இதை ரசிக்காவிட்டால் பொழுதே போவதில்லை.*

**ஞான** : *கொழுத்தவர்கள் பொழுது போவதற்காக ஏழைகளின் உயிர் போக வேண்டுமா?*

**பெண்** : *அதுதான் இக்காலத்தின் நீதி....*

**ஞான** : *நீங்களும் சம்மதித்து ஆடுவதுதான் ஆச்சரியம்?*

**பெண்** : *சம்மதிக்கமாட்டோமென்று சொல்லும் சக்தி எங்களுக்கில்லை. நாங்கள் இன்பக்கருவிகள்.*

**ஞான** : *அவர்கள் அனுபவிக்கும் இன்பப்புயல் உங்களைத் துன்பக்கடலிலல்லவா தள்ளுகிறது.*

**பெண்** : *ஆம் துன்பச்சேற்றிலே புதைபட்டு அழியவே ஆண்டவன் பிறப்பித்தானாம் எங்களை... அதற்குப் பெயர்தான் விதியாம்.*

**ஞான** : *அல்ல.... பணச் செருக்கும் பதவித் திமிரும் உற்பத்தி செய்த சதி...*

**பெண்** : *வேறு கதியற்ற எமக்கு இதுவே சுவர்க்கம்.*

**ஞான** : *பெண்ணே! நீ போகலாம்.*

**பெண்** : *வணக்கம் பிரபு. (போக - மன்மத சகாயன் பிரவேசிக்கிறான்.)*

**மன்** : *ஞானதேவா! நீயேன் அரண்மனையிலேயே தங்க மாட்டேன் என்கிறாய்?*

ஞான : மாலை நேரத்தில் அங்கென்ன வேலை?

மன் : ஆட்டம் பாட்டு முதலியவைகளைக்கூட ரசிக்க மாட்டேனென்கிறாயே?

ஞான : நானா ரசிப்பதில்லை? இதோ இந்த இள வள மரங்களின் நாட்டியத்தையும், சிலுசிலுத்த ஓடையின் சிருங்கார கீதத்தையும், எந்நேரமும் இடைவிடாமல் அனுபவித்துக்கொண்டு தானிருக்கிறேன்.

மன் : மதுரமான பருவத்தை மரங்களின் நாட்டியம் மாத்திரம் இன்புறச்செய்யாது ஞானம்! ஒப்பற்ற வாலிபத்தை, ஓடையின் பாட்டுமாத்திரம் திருப்தி படுத்த முடியாதப்பா! அனுபவிக்கும்போது நீயே தெரிந்துகொள்ளப் போகிறாய். உம்....

(ஞானம்! உன்னிடம் ஒரு வார்த்தை பேசவே வந்தேன்.)

ஞான : ஒரு வார்த்தை என்ன? ஒரு வாக்கியம் வேண்டுமென்றாலும் பேசலாம். எனக்குச் சம்பந்தப்பட்டதாயிருந்தால் நான் கேட்கிறேன்.

மன் : உனக்குப் பூரண சம்பந்தமுள்ளது. உன்னை இன்பக் கரையை நோக்கி இழுத்துச் செல்லும் உல்லாசப் பிரயாணத்தைப்பற்றிய பேச்சுத்தான் அது.

ஞான : என்றுமே பூரண இன்பத்தோடு தானே இருக்கிறேன்.

மன் : அந்த இன்பத்தைத் தனிமையாகவே ரசிப்பதை விட, ஏற்ற துணையோடு நுகர்ந்தால் முற்றிய இன்பம் மூண்டு பெருகும். உம். உனக்குத் திருமணத்தை விரைவில் செய்யவேண்டுமென்பது எங்கள் ஏகமனதான தீர்மானம். அடுத்துவரும் விடுதலை விழாவில்.... என்ன?

ஞான : திருமணம் செய்துகொள்ளத் தீர்மானிக்க வேண்டியது நானல்லவா?

**மன்** : ஆனால், நம் சபையின் சட்டம் அப்படிச் சொல்லவில்லையே? மீனைப்போல் நழுவப் பார்க்கிறாயே?

**ஞான** : விவாகம் சட்டத்துக்காக அல்ல. வாழப்போகும் சந்தோச இல்லறத்துக்கு. மாமா! நான் உலகப் பிரயாணத்தை முடித்த பின்னர்தான், திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்று முடிவாக எண்ணியிருக்கிறேன்.

**மன்** : உலகப்பிரயாணமா! உன் துணைவியோடும், இளவரசன் என்ற பதவியோடும் போனால், தேசாதிபதிகளெல்லாம் உன்னை இன்னும் நன்றாகத் தெரிந்து கொள்ளுவார்கள் ஞானம்!

**ஞான** : என்ன! துணைவியோடு உலகப் பிரயாணமா? விலங்கோடு சமுத்திரத்தில் நீந்தப் பழகச் சொல்லுகிறீர்களே?

**மன்** : நீ நினைப்பது தவறு. இனிமைக் கப்பலில் இன்பப் பிரயாணம் செய்யச் சொல்லுகிறேன்.

**ஞான** : வாழ்க்கையை அளந்து பார்க்கவேண்டுமென்ற ஆசை கொண்டுள்ளேன். அதை நாசமாக்கும் முயற்சி இது.

**மன்** : எந்த அடிக்கோலால் வாழ்க்கையின் ஆழத்தை அளப்பதாக உத்தேசம்?

**ஞான** : உறுதியான எண்ணம் ஒன்றே போதும். உடைப் பில்லாத தன்னம்பிக்கையாலும், உலகறிவாலும் வாழ்வைத் தணிக்கை செய்துவிடலாம்.

**மன்** : தணிக்கை செய்தபின்?

**ஞான** : தராசு முள்போல் ஆட்சியை ஏற்று நடத்துவேன்.

**மன்** : நீ நினைப்பதுபோல், அவ்வளவு சுலபமான நிலையில், நம் தீவின் ஆட்சிச் சட்டம் அமைய வில்லையே?

**ஞான** : சட்டம், பட்டம், பதவி இவைகள் சந்தர்ப்ப வாதிகளின் சிருட்டிகள். கால வேகத்திலே கரைந்து போகும் களிமண் வீடுகள்.

**மன்** : ஞானதேவா! நீ இளங்குருந்து, பனித்தீவின் நிர்வாகமென்னும் சூரியனைக் காணமுடியாமல் வாடிப்போகிறாய். நீ பயப்படாமல் திருமணத் தோடு தந்தை தரவிருக்கும் பட்டத்தையும் ஏற்றுக் கொள். நான் தான் உனது வலது கைபோல் உதவி செய்யத் தயாராயிருக்கிறேன். உம். நான் போகிறேன். அங்கு என் அரண்மனையில் சதா என் குமரி இன்பக்கொடி உன்னைப்பற்றியே எண்ணி எண்ணி கவலைப்படுகிறாள்.

**ஞான** : தங்கள் குமாரி என்னைப்பற்றிக் கவலைப்பட வேண்டிய அவசியம்? நான் குறைவற்ற சுகத்தோடு தானே இருக்கிறேன்.

**மன்** : அவசியமா? விவாகம் ஆன மறுநாள், விவர மாகத் தெரிந்துவிடப் போகிறது. நான் வரட்டுமா? ஞானதேவா! பனித்தீவின் அரசியல் பார்க்கும் போது சிக்கலாகத்தான் தோன்றும். பட்டம் பெற்று, பதவியில் அமர்ந்து விட்டால், பிறகு எல்லாம் வெகு சுலபம். நான் மட்டுமென்ன, என் குமாரி இன்பக்கொடி பெண்ணாயிருந்தாலும், ஒரு பெரிய ராஜதந்திரியப்பா. உனக்கேற்ற துணைவி. சகலகலா சுந்தரி. சந்திரவதனி.

**ஞான** : இவ்வளவு சிரமம் எடுத்துக்கொள்ளுவது தவறு. வாங்க விரும்பும் பொருளுக்கு அதிகமான விலை தர முன்வருகிறீர் என நினைக்கிறேன்.

**மன்** : ஆம். உன் போன்ற ஞான மாணிக்கத்தை மரு மகனாகப் பெற வேண்டுமானால், விலையைப் பற்றி யோசித்தால் முடியுமா? நான் எதிர் பார்ப்ப தெல்லாம் உங்கள் இன்ப வாழ்வு. அவ்வளவுதான். எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல் வேறொன்றும் நானறியேன் ஞான

தேவா! நீ பனித்தீவின் வாலிபமன்னன். என் மகள் வளமானராணி! நான் ஒரு ஆலோசகன். எப்படி என் சித்திரம்? இந்தச் சித்திரத்தை காலத்திரையில் எழுதியே தீர வேண்டும். அதற்கு விதி வேலை செய்கிறது. நான் வருகிறேன்.

**ஞான** : சென்று வாருங்கள். விதியென்ற இரண்டெழுத் துக்களை உச்சரித்தே, உலகின் ஓட்டத்துக்கே அணைகட்ட முயற்சி செய்கிறீர்கள். ஆனால், மனித மதியின் ஒய்வற்ற வேகத்தின் முன் நீர் கட்டும் அணை ஒரு பஞ்சணைதான் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுகிறேன்.

**மன்** : கற்களினால் கட்டப்பட்ட அணைதானப்பா அது.

**ஞான** : சரி என் மாளிகைக்கு வாயேன் இன்று அடிமை நடனம் வேண்டாம். சுதந்திரமான நாட்டியத்தைத் தான் பார்க்க விரும்புகிறேன்.

**மன்** : உன் இஷ்டப்படியே நம் பனித்தீவின் சுதந்தர சுந்தரிகளையே ஆடச் சொல்லுகிறேன்.

**ஞான** : தங்கள் வரவேற்புக்கு நன்றி, மற்றொரு நாள் வருகிறேன்.

**மன்** : வரட்டா... வரட்டா... வரட்டா... போய் புதுச் சட்டங்களை எல்லாம் எழுத வேண்டும்.

**ஞான** : சரி வரட்டுமா? இன்பக்கொடி தூங்காதிருப்பாள். நான் சென்று உன்னோடு சம்பாசித்த செய்தியைச் சொன்ன பிறகு தான் தூங்குவாள். *(போக)*

**ஞான** : பதவிச்சவாரியில் மிகப்பழகிய கிழட்டுக்குதிரை. சரியான வரிப்புலி. எச்சரிக்கையாயில்லா விட்டால், நான் தான் இவன் வேட்டைக்கேற்ற முதல் இரையாவேன். அப்படியா?

**(காட்சி 6 முடிவு)**

# மூன்றாவது - வெற்றி உதயம்

## விதி வீழ்ந்தது

## கதிர் - 1

காலம் : பாதி இரவு
இடம் : மன்மதசகாயன் மாளிகை

*(இன்பக்கொடி சுகபோக சௌந்தர்யத்தின் எல்லையெனச் சொல்லத்தக்க தன் மாளிகையில் வீணைவாசித்துக் கொண்டிருக்க - வில்லி என்ற அடிமைப்பெண் பலவகை பானங்களைத் தர)*

**வில்லி** : அம்மா.... இந்தாருங்கள். இரவு வெகு நேரமாகி விட்டது. தங்கள் தந்தை வந்தால் என்னைத் தான் தண்டிப்பார். சீக்கிரத்தில் படுக்கைக்குச் செல்லுங்கள்.

**இன்ப** : நான் தூங்காமலிருப்பதற்காக நீ தண்டனை பெற வேண்டுமா? அப்படி யெல்லாம் இனி நேராது வில்லி.

**வில்லி** : எங்கேயம்மா, நீங்களும் நான் வந்த நாளாய்த் தான் இம்மாதிரி சொல்லுகிறீர்கள். ஆனால், நாங்கள் படும் தொல்லைகளுக்கு முடிவு இந்தப் பிறப்பில் இல்லை.

**இன்ப** : வருந்தாதே வில்லி! நானும் உன் போல் ஒரு பெண். எதிரியின் சிரமம் தெரியாத கல் நெஞ்சம் எனக்கில்லை. விரைவில் விமோசனம் வரும். உட்கார்.

**வில்லி** : ஐயோ... அம்மா... நானா உட்காருவது?

**இன்ப** : உட்காரேன் *(இழுத்து உட்கார வைத்து)* வில்லி அவர் சுகமா?

**வில்லி** : வானழகரைத்தானே கேட்கிறீர்கள்?

**இன்ப** : ஆம் வில்லி. அந்தப் புனித ஜீவனைத்தான்

**வில்லி** : என்னம்மா இது. ஒரு அடிமையை என்னென்னமோ சொல்லி அழைக்கிறீர்கள்?

**இன்ப** : அவ்வாறு சொல்லாதே. அவரா அடிமை? அல்ல. அவர் அழகுக்கு நானடிமை. ஆகா! வானழகர்... என்ன பொருத்தமான பெயர். *(பெருமூச்சு)*

**வில்லி** : அம்மா நீங்கள் விடும் இந்தப் பெருமூச்சு, ஒரு குற்றமும் செய்யாத என்னை அழிக்கும் புயலாகி விடும் அம்மா! உங்கள் ஆசை, வம்ச வழக்கத்துக்கு விரோதமானது.

**இன்ப** : ஆம். ஆனால் வாட்டும் ப்ரேமைக்கு ஒரு வரப்ர சாதம்.

**வில்லி** : அது நிறைவேறாத நினைவு.

**இன்ப** : நிறைவேறாவிடில் இந்த ஜென்மம் வீண்.

**வில்லி** : அதுவா. வயதான மனத் தடுமாட்டத்தின் விள்ளவு. அதைச் சட்டை செய்யத்தானா இனி நேரம்?

**வில்லி** : யோசித்துப் பேசுங்கள்.

**இன்ப** : முடிவுக்கு வந்து பலநாட்களாகி விட்டன.

**வில்லி** : மாற்றிக்கொள்ளுங்கள்.

**இன்ப** : எதை. ஆம் மாற்றிக் கொள்ளத்தான் போகிறோம். ஆனால் மனத்தையல்ல. மணமாலையை.

**வில்லி** : தங்கள் பிறவி?

**இன்ப** : பெண் பிறவிதான். வில்லி! வானழகரே என மனத் தெய்வம்.

**வில்லி** : ஆ!

**இன்ப** : ஆச்சரியப்படாதே.

வில்லி : மகாப்ரபுவின் மகளா மட்டமான அடிமையை மணப்பது?

இன்ப : ஆம் சமதர்மத்தின் உபதேசம் அதுதான்.

வில்லி : அதர்ம உலகில் இது ஒரு அசட்டுத்தனம்.

இன்ப : அதை என் எதிரில் சொல்ல எவருக்கும் துணி வில்லை.

வில்லி : தந்தையை மறந்தே விட்டீர்கள்.

இன்ப : அவர் பெண்ணாயிருந்தால் இவ்விஷயத்தில் அவர் யோசனையை வரவேற்பேன். ஆனால் அவர் ஒரு இரக்கமற்ற கல் இதயம். அன்பறியாத பிறவி.

வில்லி : பிடிவாதத்தை விட்டுக்கொடுக்க மாட்டார்.

இன்ப : அதையும் வெல்லும் ஆயுதம் என ப்ரேமை.

வில்லி : தங்கள் மாற்றம், உங்கள் பிரபு வம்சத்துப் புகழையே நாசமாக்கிவிடுமே.

இன்ப : வில்லி! கொடூரங்களை எல்லாம் சிதைக்கும் கோடாரியின் காம்புகூட அதே இனத்தைச் சேர்ந்ததுதான். மனிதகுலம் வாழ, தன்னினத் தையே நாசப்படுத்துவதற்கு அது வருத்தப் படுவதில்லை.

வில்லி : ஆனால், தங்கள் ஆசை மிகவும் குறைந்தது. ஆற்றலும் மிகச்சிறிது.

இன்ப : அம்மா! மூங்கிலிருந்து உற்பத்தியாகும் ஒரு சிறு நெருப்பின் பொறி, பெரும் மலைக்காட்டையே கரியாக்கும் வினோதத்தைக் கண்ட பின்னுமா என்மீது இந்த அவநம்பிக்கை?

வில்லி : தாங்கள் சேற்றிலே பிறந்த செந்தாமரையம்மா.

இன்ப : ஆனால் அந்த வானழகரின் முடியிலிருக்க விரும்பவில்லை.

**வில்லி** : மடியில் தவழத்தான் விருப்பமாக்கும்?

**இன்ப** : இல்லை. அவர் திருவடிச் சேவையைத்தான் விரும்புகிறேன்

**வில்லி** : ஒரு வேளை என்னைச் சோதிக்க இப்படி எல்லாம் பேசுகிறீர்களா?

**இன்ப** : தோழி! சந்தேகிக்காதே. பிரபு வம்சத்திலே பிறந்தது என் குற்றமல்ல. நல்லறிவு கொண்ட சில மிருகங்களை நீ பார்த்ததில்லையா? அதைப் போல், விதிவிலக்காக நானிருப்பது ஆச்சரியத் துக்கு உரியதாயிருந்தாலும் நம்பத்தகாக ஒரு பொய்யல்ல. செயலில் அறிந்துகொள்.

**வில்லி** : இல்லையம்மா! மண்ணிலே பிறந்த மாண்புடைய் தங்கம் தாங்கள். தங்கள் அன்புநிறைவேற, நான் ஒரு கருவியாக உபயோகப்படுவதே நான் செய்த தவம். உங்கள் ப்ரேமைத் தந்தியின் வழியாக, தூது சொல்லும் காற்றாயிருப்பதில், நான் வாழ்நாளில் பட்ட துயரத்தையும் மறக்கிறேன். இவ்வளவுக்கும் எதிராக இருப்பது, உங்களைப் பெற்ற தந்தையல்லவா?

**இன்ப** : தந்தை, தன்மையான சூழ்நிலையில் புகாத குற்றவாளி. கோடை இடியைத் துணிக் குடையால் தடுக்க முயற்சிக்கிறார். மலையருவிக்கு மணலால் அணை கட்டுகிறார். எல்லாம் வீண் வேலை. சூரியனைத் தடுக்கத் தமது ஐந்து விரல்கள் மட்டும் போதும் என்று எண்ணி விட்டார்.

**வில்லி** : தாங்கள் இளவரசர் ஞானதேவரை மணம் செய்து கொண்டு, மகாராணியாக வேண்டு மென்பதற்கு மன்னர் இன்பவாகனரும், உங்கள் தந்தையும் என்னென்னவோ திட்டம் போடு கிறார்களே.

**இன்ப** : அவர்கள் திட்டம் என் கட்டுப்பாட்டை ஒன்றும் செய்யமுடியாது வில்லி.

வில்லி : சரி. என் மனப்பூர்வமாக உங்கள் வெற்றிக்காக உழைக்கத் தயார்.

இன்ப : போதும் - போதும். இதுவே பெரிய ஆறுதல். அவர் தவறாமல் வேளாவேளைக்கு உணவு கொள்ளுகிறாரா?

வில்லி : இனிமேல் தான் கொண்டு போகவேண்டும்.

இன்ப : வில்லி! இனிமேல் இத்தவறு செய்யாதே. முதலில் அவரைக் கவனிக்க வேண்டும். பிறகுதான் மற்ற வேலை. சரி இப்பொழுதே கொண்டு போகிறாயா?

வில்லி : இன்னொரு குறுக்குவழி கண்டுபிடித்தேன்.

இன்ப : என்ன?

வில்லி : அவரைத் தங்கள் தோட்டவேலை செய்யும்படி ஏற்பாடு செய்துவிடுங்கள். யாருக்கும் விவரம் தெரியக்கூடாது. பிறகு.

இன்ப : ஆகா அப்படியே செய்யலாம். ஆகா! அருகி லேயே எப்போதும் பார்த்து ஆனந்திப்பேன். (மன்மதசகாயன் வந்து விடல்)

மன் : யாரது அடிமைப்பெண்ணா? அப்புறம் செல். (செல்ல) குமாரி! இன்பக்கொடி! இனி இந்த தூக்கமற்ற துயரநோய் உன்னை வருத்தாதம்மா.

இன்ப : அப்பா! எனக்கு நன்றாகத் தூக்கம் வருகிறதே. இப்போதுகூட உறங்கவே எண்ணியுள்ளேன். ஏன் ஏதாவது சொல்ல வேண்டுமா?

மன் : இன்பக்கொடி! நீதான் பனித்தீவின் மகாராணி என்ற ஊர்ஜிதமான செய்தியைக் கேட்டால், தூக்கம் மேலும் இன்பமாக வரும் என்று எண்ணி அச்செய்தியைக் கூறிப் போகவே வந்தேன், இன்பக்கொடி! என் தவப் புதல்வி யாகிய நீ, இளவரசன் ஞானதேவனின் பக்கலில் மகா ராணியாக மகுடம் சூடுவதைக் காண்பதே

என் வாழ்வின் கடைசி ஆசை. அதுவும் நிறைவேறி விட்டது. இனி நான் பாக்கியவான்.

**இன்ப** : அப்பா! உண்மையில் மனிதன் இன்பம் பெறுவதே இல்லை. இருந்தாலும் இன்பக் கானலைக் கண்டு உற்சாகமடைந்து விடுகிறான்.

**மன்** : என்னவோ சொல்லுகிறாயே.

**இன்ப** : இல்லை. மன்னர் இன்பவாகனர் ஒரு அசகாய சூரராச்சே என்றுதான்...

**மன்** : அதுவா... மகளே! எல்லாவற்றிற்கும் ஏற்ற உபாயத்தைத் தயாரித்தே வைத்துள்ளேன்.

**இன்ப** : அப்படியானால் அந்த உபாயங்களை நானும் உன்னைப் பொறுத்தவரையில் அமுலுக்குக் கொண்டு வர முயற்சிக்கிறேன் அப்பா. நான் தூங்கப் போகிறேன்.

**மன்** : சரி. இதுவே போதும். பரமதிருப்தி. ஆகா! நல் விதியே! உனக்காகவே நீ வேலை செய்.

## கதிர் – 2

**காலம்** : நள்ளிரவு

**இடம்** : அடிமைகளின் பாதுகாப்பு இடம்

*(அடிமைகளின் முன்னிலையில் வானழகனின் ஆவேசமான பிரசங்கம். தணிவான குரலில்)*

வான் : தோழர்களே! காவலர்கள் எல்லோரும் மது மயக்கத்திலிருக்கும்போதே உங்களுக்குச் சில உண்மைகளைக் கூறுகிறேன் கேளுங்கள்.

**பாட்டு**

**விடுதலை நாளைநோக்கி, வீணில் பஞ்சாங்க**
**ஏடுகளை இனிமேல், எண்ணும் பணியில்லை.**

பீடைச் சிறையிதுவே! பொலிவுறு கோயில்என்
வாடா வீரர்காள்! வணங்கும் தெய்வங்காள்!

மாண்டநம் அன்பர்களின், மனப்புண் அதனுள்ளே
தாண்டவ மாடியதே, தீரா உரிமைவெறி?
கூண்டில் மறைந்ததுவா? குன்றித் தேய்ந்ததுவா?
ஆண்மையின் மீதாணை, அதற்கோர் அசைவில்லை.

உடல்செத்தால் சாகட்டும், உண்மைத் தவக்காட்சி
அடைந்திடப் பிறந்திட்டோம், அதைநீர் மறவாதீர்
உடைந்தஉம் உள்ளங்கள், உணர்ச்சியின் உச்சிமலை
அடைந்திடும் பலம்பெறுக, அன்பின் தோழர்காள்.

முன்பிறந்தோர் செய்துவிட்ட, மூத்தபெரும் தவறதனால்
என்னருமை நாட்டுரிமை, எங்கிருந்தோ வந்தவராய்
கன்னற் பழம்போலக், கவர்ந்து விட்டார் களைப்பாறி
மின்வெட்டும் மேனியெல்லாம், மெத்தையெனும்
கொழுப்புற்றார்.

அன்னவரின் அக்ரமத்தை, ஆளும் நிறவெறியை,
எண்ணத்திலும் இல்லா, நெறியைச் செயல்வேண்டும்.
மன்னன் மனமற்ற, மிருகமும் இல்லைநாம்
தின்னுவ தின்னாதெனத், தெரியா விலங்கினமோ?

அன்னம் புசிப்பதனால், ஆகியஉடல் இதனுள்
வண்ணச் சுடர்மூச்சு, உயிராய் உலவுவதால்
கண்ணிய வாழ்வுற்றோம், கருதப் பயின்றிட்டோம்
அண்ணன் ஆயிடினும், அடிமைப் படுத்தவரின்

அன்னவன் நெஞ்சினிலே, அறையும் உரிமைவெறி!
பின்னர் பிறந்ததனால், பெரியோன் இளையவனைச்
சின்னப் பயல்தானே, இவனைநாம் ஆள்வோம்!
என்னலும்கொன்றிடவே, எழுமவ் வுரிமைவெறி

அந்நியர் விலங்கோ, அடங்கிடும் ஆகாகா!
புண்ணைக் கொத்தவரும், பருந்தைக் கும்பிடவோ!
வெண்ணை தின்னவரும், பூனையை வாழ்த்துவதோ?
கண்ணைக் குறிபார்க்கும், பாம்பைப் கொஞ்சுவதோ?

**என்றும் வற்றாத, ஊற்றின் கீதம்போல்**
**விண்ணில் அலைகள் போல் விரைவில் உரிமைதனை**
**திண்ணம் நாம்பெறுவோம், துணிவாய் என்பின்னே**
**கண்மணிபோல் வீரர்கள், காலடிவைப்பீரேல்!**

**வான்** : *இனி இந்தத் கொத்தடிமைத் தொல்லை இல்லை. அசட்டுத் தனத்தை விரட்டிவிட்டு நாம் சுதந்திர சூரியனைத் தரிசிக்கப் போகிறோம் என்ற தன்னம்பிக்கை வேண்டும். நம் உரிமை அயலான் தானமாகத் தந்து பெறுவதல்ல. நாமேதான் பெற வேண்டும். என் ஆணைகளை அவ்வப்போது நிறைவேற்றுங்கள்... என்ன! எல்லா அடிமைகளும்: ஆகட்டும். தாங்கள் சொன்னதை சமயத்துக்கேற்ற படி செய்து, இலட்சியத்துக்குத் துணை நிற்போம்.*

**வான்** : *நண்பர்களே! ஆகட்டும். அவ்வாறே செய்வோம். சரி நீங்கள் அனைவரும். சிறிது நேரமாவது உறங்குங்கள்.*

**ஒரு அடிமை:** *இனி எங்களுக்குத் தூக்கமேது? உங்கள் தொண்டே எங்கள் தவம்.*

**வான்** : *என் தொண்டல்ல. அவரவர்களின் விடுதலைக் காக, அவரவர்கள் செய்தே தீரவேண்டிய சுயமுயற்சி. சுதந்திர வேள்வி. உறங்குங்கள். நாளை செய்ய வேண்டிய பணிகள் மலைபோல் இருக் கின்றன. உம்.*

*(எல்லோரும் படுக்க. சற்று விலகி தனிமையை நோக்கி வருகிறான். அங்கு வில்லி தோன்று கிறாள்)*

**வில்லி** : *அண்ணா! என்னுடன் சற்று அப்புறம் வரு கிறீர்களா?*

**வான்** : *சகோதரி! ஏன் என்னை அழைக்கிறாய்? ஏதாவது புலன் தெரிந்ததா? புதுச் செய்தி ஏதேனும் உண்டா?*

**வில்லி** : *ஆம். ஏராளமாக உண்டு.*

## திருப்புக் காட்சி

(சோலையில் இன்பக்கொடி நிற்கிறாள்)

**வான்** : யாரது இந்த அம்மையா என்னைச் சந்திக்க வேண்டும்! இவர்கள்....

**வில்லி** : ஆம். மகாப்ரபு. மன்மத சகாயரின் மகள். இன்பக் கொடி அம்மா இவர்தான்.

**வான்** : ஆம் நான் தான் உங்கள் பிரபுத்வக் கசைக் கயிற்றில் கட்டுண்டு, இரத்தம் கக்கும் அடிமை.

**வில்லி** : பதறாதீர்கள் அண்ணா! அவர்கள் நம்மீது இரக்க முள்ளவர்கள்.

**வான்** : இரக்கமா! இவர்கள் இரத்த அணுவின் ஆயிரத் தில் ஒரு பங்கான பகுதியில் கூட, காணக் கூடாத குணமல்லவா அது.

**இன்ப** : அன்பின் களஞ்சியமே!

வான் : யார் நானா! முழுத்தவறு என்னிடம் அன்பும் இல்லை. நான் ஒரு கொதிக்கும் குரூரப் பைசாச மாக மாறி நாட்கள் பலவாகிவிட்டன. சென்று போன நாட்களில் என்னைவிட்டு நீங்காதிருந்த அந்த அன்பென்னும் வழுக்குப் பாறையில் மீண்டும் ஒருமுறை சருக்கி விழமாட்டேன். ஏது இங்கு வந்தது? ஏதாவது அவசரத் தொண்டுக்காக ஆளைப் பொறுக்க வந்தீர்களா?

**வில்லி** : அண்ணா! நிதானமாய்ப் பேசுங்கள். தாமரையின் மீது நெருப்பைக் கொட்டாதீர்கள். அன்பே உருவான ஆரணங்கை அழச் செய்யாதீர்கள்.

**வான்** : சகோதரி! இவர்கள் இதயத்திலிருந்து அன்பை எதிர்பார்க்கும் உன்னிலை மிகவும் பரிதாபத்துக்கு உரியது. கற்பாறையின் மீது கரும்பைப் பயிர் செய்ய முயற்சிப்பது பைத்தியக் காரத்தனமம்மா.

**இன்ப** : *அம்மா! அவர் உள்ளம் கொந்தளிக்கும் இச் சமயத்தில், எனது திக்கற்ற நிலையைப் புரிந்து கொள்ளமுடியாது. புரியவைக்கும் அளவுக்கு அறிவும், திறமையும் எனக்கில்லை. அவர்மீது குற்றமில்லை. கமலத்தைக் கல்லாக்கும் எமது நாட்டின் பிரபுத்துவத்தை உங்கள் நிலையிலேயே நின்று மனதாரச் சபிக்கிறேன். அவர்களின் கொடுங்கோலின் கூர்மையை மழுங்கச் செய்யும், முதல் சம்மட்டி நானே என்பதை சமீப நாட்களில் நிரூபித்த பின்பு அவர் என்னை அறிந்தால் போதும்.*

**வான்** : *உங்கள் இரக்கத்தை நம்பிப்பிழைக்க வேண்டும் என்ற ஆசை எங்களுக்கில்லை அம்மணி. மனித இரக்கம் வெகு சீக்கிரம் தேய்ந்தொழியும் வியாதி என்பதை அறியாத முட்டாளிடம், இரக்கமான குரலில் பேசினால், நீங்கள் எண்ணியபடி எல்லாம் தலையை ஆட்டுவான். நான் அந்த தலையாட்டும் பொம்மையல்ல.*

**இன்ப** : *அண்ணலே! இரக்கத்தின் பேரால் நான் தங்களுக்கு உபகாரம் செய்யமுடியும் என்ற இறுமாப்பு எனக்கில்லை. அன்பின் கடமையை ஆனவகையிலெல்லாம் செய்து எனது காணிக் கையைச் சமர்ப்பிக்கும் நன்னாள் கணந்தோறும் நெருங்குகிறது என்பதை மட்டும் பணிவுடன் தெரிவித்துவிட்டு விடைபெற்றுக் கொள்ளு கிறேன். அம்மா வில்லி! வா போவோம்.*

*(நகருகிறாள்)*

**வில்லி** : *அண்ணா! உங்கள் ஆவேசத்தால், சத்தியமான சாந்தி உள்ளத்தை ரொம்பவும் நோகச் செய்து விட்டீர்கள்.*

**வான்** : *சகோதரி! என்போன்ற நோயாளியை இதைப் போன்ற சுகவாசிகள் நெருங்கினால், நோய்*

பீடித்தே தீரும். ஆவேசம், ஆம். அது ஒரு தொத்து வியாதி. அதன் சேட்டைக்கு நான் பொறுப்பாளியல்ல. இதோ பார் என் நாட்டவரின் மிருக நிலையை.

**இன்ப** : *(மீண்டும் வந்து)* வில்லி! அவரை மேலும் சிரமப் படுத்தாதே. வா. பிறகு ஒரு சமயம் வரலாம். அய்யா மன்னித்து விடுங்கள். நாங்கள் வருகிறோம்.

**வான்** : என்ன வருகிறீர்களா! எதற்கு? வெந்து போன என் மனப்புண்ணை, உங்கள் ஆடம்பர விருந்துக்காக கொத்தியெடுத்துச் செல்லவா?

**இன்ப** : அப்பா.... போதும். அம்மா! நான் சாகுமுன் வீட்டிற்கு அழைத்துப்போ.

*(அழுத வண்ணமே போகிறாள்.)*

*(தனிமையில் பேசுகிறான். சற்றுயோசித்து)*

**வான்** : உலக நன்மைக்காக இடி மின்னலோடு வரும் மேகத்தைத் தனக்குத்தான் வந்தது என்று எண்ணி நடனமாடும் மயிலைப்போலல்லவா இருக்கிறது இப்பெண்ணின் நடத்தை?

*(ஒருபுறமிருந்து இளவரசன் ஞானதேவன் வந்து)*

**ஞான** : ஆமாம்! ஆனால் அந்த மயிலின்மீது மேகம் கொடிய இடியைத் தள்ளும் கொலைச் செயலைச் செய்வதில்லை அல்லவா? பாவம். அதிலும் ஒரு இளங்கொடியின்மீது உமது சொல்லிடிகளை மடமடவென்று கொட்டிய வேகத்தில் நானே அதிர்ச்சியடைந்து விட்டேனய்யா!

**வான்** : யார்? ஆ!

**ஞான** : கோபிக்க வேண்டாம். நான் பெண்ணல்ல. நானும் தங்களைப் போலத்தான் உலகத்தைக் கௌவியுள்ள துன்பச் சாத்தானுக்கு ஒரு

முடிவைத் தேடியலையும் நவயுக வாலிபன், நல்லோரின் தொண்டன்.

**வான்** : இளவரசரல்லவா தாங்கள்!

**ஞான** : இள அரசனுமல்ல. முதிர்ந்த அரசனுமல்ல. நீர் நிறைவேற்ற இருக்கும் பெரிய தவத்துக்கு ஆண்டவன் அனுப்பி வைத்த மற்றொரு துணை வனாக என்னைக் காணுங்கள். நாமிருவரும் சுதந்திரதேவியின் இரட்டைக் குழந்தைகள் என்று சொன்னால், அது மிகையாகாது. வானழகரே! இப்படி அமருங்கள்.

**வான்** : ஆ! நானொரு அடிமை. எம்மை விலைக்கு வாங்கிய பிரபுக்களின் வேந்தர் நீர். இதென்ன! சோதனைக்கும் ஒருவரையறையுண்டு என்பார் கள். அதையும் மீறி அப்பாற்பட்டிருக்கிறது சூழ்ச்சியிலேயே ஊறிய இந்த நாட்டவரின் மூளை?

**ஞான** : நான் தங்களிடம் இதனிலும் கொடிய சொல்லீட்டிகளையெல்லாம் தாராளமாக வாங்கிக் கொள்ள முடியுமென்று எதிர்பார்த்தே வந்திருக்கிறேன். ஆனால் வசை மாலைகளைச் சூட்டும் வேளையில், நமது குறுகிய நேரத்தை விரையமாக்காமல், ஆக்க வேலைகளைப் பற்றிப் பேச வேண்டும். ஆனால் தங்களது அதிர்ச்சியுற்ற உணர்ச்சிக்கு சற்றே சாந்தி தந்தால் தான் நான் சொல்லும் வேலையைச் செய்ய முடியும். கடந்த பலநாழிகைகளில் நிகழ்ந்த தங்களது வீரச் செயல் கள் அனைத்தையும், என் மனத்தில் நீக்கமறப் பதித்து விட்டேன். நீர் என்னை அறிந்து கொள்ள வேண்டுமென்ற முயற்சி செய்யும் முன்னோட்டந்தான் நான் துவக்கப் போகும் பேச்சு.

**வான்** : ஆ...

ஞான : ஏன்! ஆச்சரிய இருள், கண்ணையும் கருத்தையும் மூடுகிறதா?

வான் : இல்லை. காட்டாற்றின் கரை கடந்த வெள்ளம் படிப்படியாகக் குறைவதுபோல், என் கட்டற்ற ஆவேசம் குறைய ஆரம்பித்திருக்கிறது.

ஞான : ஆம் நம்புங்கள். நம்பாமல் கொந்தளிப்பதைவிட, நம்பி அமைதியை நிலைநாட்டுவது நல்லதல்லவா நண்பரே! நீண்ட இரவு கழிந்துவிட்டது. அதோ! வைகறை வேளையின் வருகையை அறிவித்து உதயதாரகை உவகையுடன் கீழ்வானில் மின்னு கிறது.

வான் : அதேபோல் உலகில் ஆதிக்க இருளைக் கரைக்கும் விடிவெள்ளியாக நீங்கள் விளங்குவீர் களானால், நான் ஒரு சிறு மலர் பெறும் மகிழ்ச்சியைப் பெறத் தயங்கமாட்டேன்.

ஞான : வானழகரே! ஒளியும் இருளும் மணம் புரிந்து கொள்ளும் கலியாண மண்டபத்தைத்தான் சூரியோதயம் என்றழைக்கிறோம். அதேபோல் தாங்களும் சற்றுமுன் இங்கு வந்த இன்பக் கொடியும் மணம் புரியும் திருநாளைத்தான் சுதந்திர உதயம் என்று என் வாயார வாழ்த்தப் போகிறேன்.

வான் : நானே சிருட்டித்துக்கொண்ட குழப்பக் கடலி லிருந்து மீட்கவந்தவர் என்று உம்மை நம்ப ஆரம்பித்த மறுகணமே, குழப்ப நரகத்தில் தள்ளி மூச்சைத் திணற வைக்கிறீர்கள். வேண்டாம். வேறு செய்தி உண்டா?

ஞான : மன்னிக்க வேண்டும். நெடுநாளைய சந்திப் பென்று நான் எண்ணியது தவறு போலிருக்கிறது.

வான் : அந்த சந்திப்புக்கும், என் அறிவுக்கும் துளிகூட சம்பந்தமே இல்லை.

### வேறு இடம்

**வான்** : *தங்கள் மனமாற்றத்தின் உண்மையான காரணத்தை ஒளிக்காமல் கூறினால், என்னுள் பிறந்துள்ள நம்பிக்கை வளருமென்று நினைக்கிறேன்.*

**ஞான** : *ஒளித்துப் பேசும் நரித் தந்திரத்தை நான் கற்க முயன்றாலும் வராது. உலகத்தின் உத்வேகமான முன்னேற்ற சக்தியைப் பகுத்தறிவோடு ஆராயும் சக்தியை நான் படைத்துள்ளதே மனமாற்றத்தின் காரணம்.*

**வான்** : *அப்படியானால் சகல உரிமையுமுள்ள நீங்கள் இவ்வளவு காலமாக வீணே கழித்தது ஏன்?*

**ஞான** : *தாங்கள் நினைப்பதுபோல் நாட்டின் தலை விதியைத் திருத்தி எழுதும் உரிமை எனக்கில்லை. சொல்லப் போனால் நானும் ஒரு பொன் விலங்கால் கட்டுண்ட அரண்மனைக் கைதி தான். அபிப்பிராய சுதந்திரம்கூட அற்ற அபலை யரசனின் இரத்த ஒட்ட சம்பந்தமுள்ள அடிமை நான். சகலமும் பிரபுக்களின் கையில் தான் பிடி பட்டிருக்கின்றன.*

**பொன்** : *அதிகாரத்தின் சீவநாடியை இறுகப் பிடித்துள்ள அவர்களை வீழ்த்த இதுவரையில் தாங்கள் செய்த சேவை ஏதேனும் உண்டா?*

**ஞான** : *செயலில் காட்ட முடியாத நெருக்கடியில் தவிப்பதால் உள்ளத்தில் பிரபுத்துவ வீழ்ச்சிக்கான திட்டங்களை வகுத்து வைத்திருப்பதே இதுவரை நான் செய்துள்ள சேவை.*

**வான்** : *அத் திட்டங்களைச் செயலாக்க என் ஒத்துழைப்பை விரும்புவீர்களா?*

**ஞான** : *நான் திட்டமிட்டுள்ள போர் முனைக்குகந்த பிரதம சேனாதிபதி தாங்களே என்பதைத்*

திரிகாண சுத்தியோடு சொல்லுவதை மறுக்காமல் அங்கீகரித்து விடுவீர்களானால் வெற்றியின் சங்கநாத முழக்கத்தைக் கேட்ட பேரின்பத்தை அடைவேன்.

**வான்** : நிற வேற்றுமையையே காரணமாக வைத்து மனிதர்களை விலங்குகளாக்கும் பனித்தீவிலே ஜெனித்த உமது இதயத்தில் உற்பத்தியான இரக்கத்தை நான் வணங்குகிறேன்.

**ஞான** : அப்படியே, இந்த இரக்கத்தை இரத்தத்தைவிட நுட்பமாக ஊறச்செய்த உங்கள் சகாக்களின் இன்னல்பட்ட இதயங்களை நான் உயிருள்ள வரை வாழ்த்தி வணங்குகிறேன்.

**வான்** : அதோ! அதிகாரிகள் வருகிறார்களே! உதய நேரம் வந்துவிட்டதா என்ன அதற்குள்?

**ஞான** : ஆம். உதய நேரந்தான். அஸ்தமனத்தையே அறியாத அற்புத நட்பு உதயமாகி விட்டது. சரி. பிறகு பேச்சைத் தொடரும்படியான சந்தர்ப் பத்தை சிருட்டி செய்து கொள்ளலாம்.

**வான்** : காரியம் முடியும் வரை சந்தேகத்தை நாமாக உற்பத்தி செய்வதும், ஆபத்துதான். சென்று வாருங்கள்.

**(கதிர் 2 முடிவு)**

# கதிர் – 3

**இடம்** : சோலை
**காலம்** : மாலை

*(மன்மத சகாயனும், மற்றோர் அதிகாரியும்)*

**மன்** : *அதிகாரி! நீ கூறுவது உண்மையா? அடிமையிடம் வருங்கால அரசன், இரவு முற்றும் பேசுவதா! அக்ரமம். நமது பரம்பரை கௌரவத்துக்கு குறைவு தேடும் ஆபாசம்.*

**அதி** : *அடிமையிடம் வருங்கால அரசன் மாத்திரம் பேசினால் பரவாயில்லையே. வருங்கால அரசி கூட அல்லவா, ஓயாது பின் தொடர்ந்து பேச ஆரம்பித்து விட்டார்கள்.*

**மன்** : *என்ன! என் பெண்ணையா குற்றம் சாட்டுகிறாய்? உன்னைக்கொன்று புதைத்து விடுவேன்.*

**அதி** : *இல்லை. சந்தேகமாயிருக்கிறது. நேற்றிரவு தோட்டத்தில் பேசியது, உங்கள் பெண் இன்பக் கொடியைப் போல இருந்ததால் யூகமாகச் சொன்னேன்.*

**மன்** : *அப்படிச் சொல்லாதே. வாயை மூடு. அவள் அரண்மனையை விட்டு அகலுவதில்லை.*

**அதி** : *ஆம். ஒரு வேளை அடிமையிடம் வேலையிடப் பேசியிருக்கலாமல்லவா?*

**மன்** : *ஆண் அடிமையிடம் அவள் பேசியிருக்க மாட்டாள். சரி, எப்போது அடுத்த அடிமைக் கப்பல் நம் கரைக்கு வரும்?*

**அதி** : *அடுத்தத வாரம்.*

**மன்** : *அந்த மடையன் பொன்மேனிராயன் அழகி களைப் பிடித்தானா, இல்லையா? அச்செய்தி*

தெரியுமா? அப்படியும் ஈடற்ற அழகியை இக் கப்பலில் அனுப்பியே ஆகவேண்டுமென்று செய்தி அனுப்பினாயா?

அதி : ஆகா....

மன் : என் மகள் இன்பக்கொடிக்கும், இளவரசன் ஞானதேவனுக்கும் நிகழப்போகும் திருமணச் செய்தியை நம் தீவெங்கும் பரவும் செய்தி அனுப்பினாயா?

அதி : ஆகா....

மன் : சபாஷ். உம் ஆகட்டும். புதுச் சிம்மாசனத்தைச் செய்யச் சொன்னாயா ?

அதி : ஆகா...

மன் : சரி, போ. இளவரசன் இனிமேல் அந்த அடிமை நாயைச் சந்திக்காத ஏற்பாட்டை செய்யக் கூறினாயா?

அதி : ஆகா.... (போகிறான்)

(கதிர் 3 முடிவு)

## கதிர் - 4

இடம் : மாளிகை
(அன்பு நாட்டில்)

பொன் : மாயா! மலைக் குகைகளிலெல்லாம் முழு முயற்சியோடு தேடினாயா? எப்படியும் ஒரு எடுப்பான அழகியை அனுப்பாவிடில், மன்மத சகாயரின் மனம் சாந்தியுறாது. ஏதாவது ஏற்பாடு பண்ணினாயா?

மலை : ஆகா. வீரர்களைக் கொண்டு மலைகளை எல்லாம் வெடி மருந்தால் உடைக்கும்படிக்கு செய்துள்ளேன். இந்த முயற்சியில் அங்கு

ஒளிந்துள்ள குகை அடிமைகளும், உயிருக்குப் பயந்து ஓடி வந்தே ஆக வேண்டும். அப்போது கிடைப்பார்கள் மலை அழகிகள். அங்குள்ள முயல்களைப் போலவே குறுகுறுத்த விழிகள் கொண்ட அழகிகள். எப்படி யோசனை?

**பொன் :** ஆகா! ஆகா... ஆகா.... எப்படியும் நாம் தங்க மாளிகையில் உலாவ வேண்டும்.

## திருப்புக் காட்சி

*(அடிமைகளைப் பிடிக்க வேண்டி, சந்தேகப்பட்ட குன்றின் குகையிடங்களையெல்லாம், பொன் மேனிராயனின் துப்பறியும் புலிகள் வெடி எழுப்பி உடைக்கும் கோரமான சப்தம் கேட்டு, சிலர் வெளியே வருகையில் பிடிபடுகிறார்கள். சிலர் மடிகிறார்கள். அதிர் வெடியும், அட்ட காசமும் செய்யும் கொடிய சைத்தான்களின் நாசவேலை.)*

## திருப்புக் காட்சி

**வாணி :** ஆம்! இனி மீள வகையில்லை. இத்தனை மாதங்களாக திரும்பாததால் வானழகன் வாழ்வு முடிந்தேயிருக்கவேண்டும். அன்றி பனித் தீவின் அடிமைக் கூட்டத்தில் தள்ளப்பட்டிருக்க வேண்டும். பகைவன் கையில் அகப்படாமல் கடந்த பதினெட்டு ஆண்டுகளாக காத்து வந்த என் இன்ப மகள் வேல்விழி இன்று பகைவர் கையில் பிடிபடும் கோரச் செயலைக் காண்பதை விட அவள் தூங்கும்போதே வளர்த்த என் கரத்தாலேயே கொன்றுவிட்டு நானும் தற் கொலை செய்து கொள்வதே புனிதமான செயலாகும். ஆண்டவா! உன்னை நம்புபவருக்குத் தரும் கடைசிப் பரிசை எனக்கும் தந்து விட்டாயா? சரி. ஆம். மனமே! இந்த உன்னத மான முடிவிலிருந்து மாறி விடாதே. *(ஓடுகிறாள்)*

குகை

வேல் : *எல்லாமிழந்தாகி விட்டது. இனி இந்த உடல் எதற்காக இருக்க வேண்டும்? இந்த உயிர் வாழ வேண்டிய அவசியம்? அவர் மறைந்த அன்றே மாறி விட்டது. நடைப்பிணமாக நான் ஏன் வாழுகிறேன்? அவரைக்காண முடியுமா? அவர் இறந்திருக்க முடியாது. அந்தக் கொடிய துக்கம் நேர்ந்திருந்தால் நானும் இறந்திருப்பேன். சே அவருக்கா மரணம்? ஒருக்காலுமில்லை. பின் நான் ஏன் வாழுகிறேன்? பதில் சொல்ல யார் இருக்கிறார்கள்? அம்மாவும் எங்கோ வெளியே போயிருக்கிறார்கள். ஏ. குன்றுகளே! அன்றெல்லாம் என்னோடு எதிரொலி செய்வீர்களே! இன்று எனக்கேற்ற பதிலைக் கூறமாட்டீர்களா?*

*(முன்பொரு நாள் வானழகன் நிகழ்த்திய வீர மொழிகள், அவள் மனத்துணிவையும், பழியையும் வளர்க்கும்படிக் கேட்கின்றன)*

வேல் : *(அவைகளைக்கேட்டு அசையாத கல் நெஞ்சத்தோடு)* ஆம். சாவது நிச்சயம். வீணாகச் சாவது கோழைத்தனம். அந்த அரக்கக் கூட்டத்தை என்னால் முடிந்தவரை நாசமாக்கிய பின்னே ஆவியைப் போக்கிக் கோள்வேன். அன்னையார் இந்த முடிவைச் சம்மதிக்க மாட்டார்கள். இருக்கட்டும். அவர்களே ஆச்சரியப்படும்படி என் எண்ணத்தைச் செய்து திரும்புகிறேன். மலையைப் பிளக்கிறார்களா மடையர்கள். அவர்கள் மனத்தைப் பிளந்து விடுகிறேன். *(கட்டாரிகளை எடுத்துக்கொண்டு)* ஆம். மாறு வேடத்தோடே போக வேண்டும்.

*(முதற் காட்சியில் அணிந்த உடை உடுத்தி வெளிச்செல்ல. காட்சி திரும்புகிறது. அதே இடம்)*

**வாணி :** *(கட்டாரியுடன்)* ஆ. வேல்விழி! *(அங்கிருந்த படுக்கையின் மீது கட்டாரியை எறிந்து)* ஆ. வேல்விழி! *(அருகே சென்று பார்த்து)* ஆ. எங்கே அவள்? வேல்விழி! வேல்விழி! நானாகக் கொல்லு முன்பு நீயாகக் கொலை செய்து கொண்டாயா! ஆம். அதுதான் வீரப்பெண்ணின் இலட்சணம். நீ இறந்து விட்டாயா! ஆம் அதுதான் நல்லது. தாயைக் போலத்தானே பிள்ளையாகிய நீயும் இருப்பாய். இல்லை. இல்லை. உன்னை நானே கொலை செய்தால் தான் ஆறுதல் அடைவேன். ஆம், நீ தப்பமுடியாது. இதோ வருகிறேன்.

*(புத்தி சுவாதீனமிழந்து கொலை வெறியுடன் பைத்தியமாகி ஓடுகிறாள் தாய்.)*

(கதிர் 4 முடிவு)

## கதிர் – 5

இடம் : காடு

*(பலவீரர்களையும் தாடி வேடத்தோடு பெண்புலி போல் பாய்ந்து கட்டாரியால் வீழ்த்தி வேட்டையிட்டு இரத்த வெறி பிடித்தலையும் போது பிடிபட்டு விடுகிறாள் வேல்விழி.)*

மலை : அடே மடையர்களே! முதலில் ஆயுதங்களைப் பறிமுதல் செய்யுங்கள். அந்தத் தாடியை அகற்றுங்கள்.

*(அகற்ற சுய உருவம் தெரிகிறது)*

**மலை :** ஆகா! மகாராஜா! மகாராஜா!

**பொன் :** மாயா! மாயா! என்ன?

**மலை :** இதோ தேடிய செல்வம்.

**பொன் :** ஆகா சத்துச் சந்திரனா இது?

மலை : ஆமாம். அதையும் பிடித்து விட்டோம்

பொன் : உடனே கப்பலேற்று. ஆகா விலைமதிப்பற்ற பொக்கிஷம்.

மலை : அப்படியே.

## வேறு காட்சி

*அதேபோல் தாய் வாணியம்மை வீதியெங்கும் சுற்றி அலைகிறாள். வேல்விழி என்ற சப்தத்துடன். புத்தி தன்னிலை இழந்துவிட்டது. வீரர்கள் பிடித்துச் செல்லல்.*

## வேறு காட்சி

*(கட்டுகளுடன் பொன்மேனிராயன் முன்னிலையில் நிறுத்து கிறார்கள்)*

மலை : அடா மடையர்களே! இந்தக் கிழவியை எந்தப் பிரபுவும் வாங்க மாட்டானடா! அதுவும் பைத்தியக்காரக் கிழவி. இவளை அடிமைச் சந்தையில் விலை கூறினால் நமக்குத்தான் செலவாகும். வெளியே துரத்தி விடுங்கள்.

பொன் : மேலும் அது பல வருடங்களுக்கு முன்பே மகாப் பிரபு மாட்சிமை தங்கிய இன்பவாகனரால் சுவைத்து மீண்டும் எறியப்பட்ட வெறும் சக்கை. அதை அனுப்பி விடுங்கள்

மலை : போ! பைத்தியமே.

வாணி : என் வேல்விழி!

மலை : வேல்விழியா? இருபது வருடத்துக்கு முன், உன் முகத்தில் இருந்திருக்கும். போ.

வாணி : வானழகன்!

மலை : வானத்திலே பறந்து தேடு அகப்படுவான்.

வாணி : ஆ! நான்தான் உண்மையான தாய்/ உலகறிந்த தாய். என் மைந்தன் தான் இளவரசன்!

மலை : சரி. இதோ இப்படியே போ. வேல்விழியைப் பார்க்கலாம்.

வாணி : அப்படியா. இதோ போகிறேன் அவளைக் கொன்ற பின், நானும் இறப்பேன்.

மலை : நல்ல வேலை செய்தே போ.

## கதிர் - 6

இடம் : சோலை - பனித்தீவு
(வானழகனும் - இன்பக் கொடியும்)

இன்ப : இன்னுமா என்மீது சந்தேகம்?

வான் : அம்மா! தாங்கள் என்னை அடிக்கடியும் சந்திப்பது ஆபத்தின் அறிகுறியாகும் என்பதே என் அபிப்பிராயம்.

இன்ப : எத்தகைய ஆபத்து வந்தாலும் நிவர்த்திக்கும் சக்தி படைத்த துணைவியிருக்கையில் அச்சமேன்? தாங்கள் தப்பவேண்டுமா?

வான் : அதற்கான முயற்சிகளைச் செய்து பார்த்து விட்டேன். அது பயனற்றதென்றறிந்த பின்னரே இங்கிருந்தே லட்சியத்தை அடையும் முடிவுக்கு வந்தேன். மேலும் எதிர்பாராமல் கிடைத்த உங்கள் நட்பு என் உற்சாகத்தைத் தூண்டுகிறது. ஆனால், ஒரே ஒரு உதவியைத்தான் எதிர் பார்க்கிறேன்.

இன்ப : அதென்ன? உடனே சொல்லுங்கள் உடனே செய்து முடிப்பேன்.

வான் : அதுவா! சொற்களால் விவரிக்க முடியாத ஒன்று. அதுவும் நீங்கள் புரிந்து கொள்ளவே முடியாத செய்தி. அப்படியே நான் சொல்வதைப் புரிந்து கொண்டால், தங்களால் ஏற்ற பரிகாரத்தைச் செய்யவே முடியாது.

இன்ப : முயற்சியாவது செய்வேனல்லவா?

**வான்** : அம்மா! அதைச் சொல்லி, கிடைத்தற்கரிய உங்கள் அன்பின் உதவியை இழந்துவிட விரும்ப வில்லை. சமயம் வரும்போது சொல்வேன்.

**இன்ப** : போதும் இந்தத் தணிவான பதிலே போதும். எனக்கு ஆறுதல் தந்துவிட்டது.

**வான்** : உங்கள் தந்தையார் உங்களுக்கும் தீங்கு செய்தால்....

**இன்ப** : அதில் துளிக்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால் அவர் எதிர்பார்க்கும் ஏகாதிபத்திய வேட்டைக்கு என் உதவி அவசியம். ஆதலால் தீங்கு தீவிரமாக முடியாது.

**வான்** : நான் பூரணமாக வெறுக்கும் அம்மனிதனின் மகள் நீங்கள். பரம எதிரியோடு பழக எப்படி மனம் இடம் தந்ததம்மா.

**இன்ப** : அந்தக் காரணத்தைத்தான் என்னாலும் அறிய முடியவில்லை. அதுமனித மூளைக்கும் அப்பாற் பட்டது. தடுக்கமுடியாத ஆற்றல் வாய்ந்தது. அதன் சக்தியை எண்ணினால் அதற்கு ஆதியு மில்லை. அந்தமுமில்லை என்பதே என் ஏகோபித்த முடிவு.

*(உள்ளிருந்து பார்த்த மன்மதசகாயன்)*

**மன்** : இன்பக்கொடி?...

**இன்ப** : ஆ...! இதோ வந்து விட்டேன்.

*(வானழகன் ஓர் புறம் சென்று விடுகிறான், பெண் உள்ளே செல்லல்)*

**மன்** : அம்மா! உனது திருமண நாள் நெருங்கி விட்டது. ஆகா எவ்வளவு சிறப்பு, எத்தனை ஆடம்பரம். சரி. அலங்கரித்துக் கொள். அங்கு யார்? அடிமையா?

**இன்ப** : ஆம் அப்பா! இட்டகட்டளையை நிறைவேற்ற வில்லை. அதைப் பற்றியே பேசிக்கொண்டி ருந்தேன்.

**மன்** : நீயா அடிமையுடன் சம்பாஷிப்பது? கேவலம்.....

**இன்ப** : அவர்களும் மனிதர்கள் தானே அப்பா.

**மன்** : மனித மிருகங்கள்.

**இன்ப** : இவ்வாறு செய்வதே வெறுப்பாயிருக்கிறதப்பா.

**மன்** : இன்பக்கொடி! இந்த அவதூறு நான் சகிக்க முடியாத ஒன்றாகும்.

**இன்ப** : சகிப்புத் தன்மையை வரவழைத்துக் கொள்ளுங்கள் அப்பா.

**மன்** : அடிமையிடம் பேசுவதையா?

**இன்ப** : பேசுவதை மாத்திரமல்ல. பாசமாகப் பழகுவதைக் கூடப் பொறுமையாக அனுமதிக்கத்தான் வேண்டும்.

**மன்** : என்ன பேசுகிறாய் நீ. வருங்கால ராணியின் பேச்சா இது?

**இன்ப** : வருங்கால ராணியா! ராஜாவாக ஞான தேவர் சம்மதிக்கும் நாள் வரட்டும். பிறகு, ராணி யாரென்பதை முடிவுகட்டலாம்.

**மன்** : ஆ! என்ன சொன்னாய்? அவன் ஒரு சிறுவன். நீ என் பெண். உங்கள் சம்மதத்தைக் கேட்காமலே, நீங்கள் தான் ராஜா ராணி என்பதை பிரபுக்கள் சபை பிரசாரம் செய்துவிட்டது தெரியுமா?

**இன்ப:** ஓகோ! உங்கள் பிரசாரத்துக்கு மேடையில் எங்களிருவரையும் பூமாலைகளாக்கிப் போட்டுக் கொள்ளப் போகிறீர்களா? நன்றாயிருக்கிறது. எங்கள் சம்மத மில்லாமல் இணைத்துவைக்க, நானும் ஞானதேவரும் என்ன சந்தையிலே

விற்கும் மாடுகள் என்ற நினைவா? அவரை மறுமுறையும் விசாரியுங்கள்.

**மன்** : விவாக விஷயமாக அவனை விசாரிக்கும்படியாக எந்தச் சட்டமும் சொல்லவில்லை. உன்னையும் நான் கேட்கமாட்டேன். தெரியுமா?

**இன்ப** : தெரியும். நீங்கள் ஒரு உயர்தரமான மாட்டு வியாபாரி என்று நன்றாய்த் தெரிந்து கொண்டேன்.

**மன்** : ஓகோ! உன் வாய்மதம் மீறிவிட்டதா?

**இன்ப** : ஜாக்கிரதை! தந்தையே யாருக்கு மதம்? பெண்மையைப் பற்றி மகாத் தெரிந்தவர்போல் உமது மயக்கத்தை மாற்ற புதுமை மருந்துண் ணுங்கள்! புத்தி தெளியும்.

**மன்** : ஆ!

**இன்ப** : வாயைப் பிளப்பதால் பயனில்லை. மனச் சாட்சி யின் கதவைத் திறந்தால் என் பேச்சு உமக்கு உண்மையைச் சொல்லும்.

**மன்** : பெண்ணே! வேடிக்கையல்ல இது.

**இன்ப** : வினோதம்.

**மன்** : உலகம் சிரிக்கும்.

**இன்ப** : உள்ளம் கூடத்தான்.

**மன்** : உதாசீனம் செய்கிறாய்.

**இன்ப** : உண்மைக்கு, தாங்கள் தரும் மறு பெயர் உதாசீனமா?

**மன்** : சிறையில் தள்ளுவேன்.

**இன்ப** : சிரிப்போடு புகுவேன்.

**மன்** : கல் நெஞ்சமே! இரக்கமற்றவள்.

**இன்ப** : அதுமட்டுமல்ல. கொடுமையாகிய எமது பிரதி பிம்பம்.

**மன்** : *சித்ரவதை தேவையா?*

**இன்ப** : *ஆம். சீக்கிரமே கொடுங்கள்.*

**மன்** : *வெட்டிப்புதைப்பேன்.*

**இன்ப** : *விசனமின்றி மண்ணாவேன்.*

**மன்** : *என்னதான் சொல்கிறாய் நீ?*

**இன்ப** : *எதைக்கேட்கிறீர்கள்?*

**மன்** : *கலியாணத்தைப்பற்றி.*

**இன்ப** : *கண்ணீரைப்பார்த்த பின்னுமா?*

**மன்** : *ஞானதேவனே உன் கணவன்.*

**இன்ப** : *ஆனால், அவர் என்னைச் சகோதரி என்கிறார்.*

**மன்** : *அவன் கிடக்கிறான். உன் இஷ்டம் என்ன?*

**இன்ப** : *வெட்டியான கேள்வி.*

**மன்** : *மனத்தை அறுத்துக் காரமான மருந்தைப் பூசுகிறாய்.*

**இன்ப** : *ரண சிகிச்சை முதலில் எரியத்தான் செய்யும்.*

**மன்** : *ராணியாக விரும்பவில்லையா?*

**இன்ப** : *இல்லை. வருங்கால உலகில் பொம்மை ராசாவுக்கும், ராணிக்கும் வேலையில்லை.*

*(கசை எடுத்து வீசி)*

**மன்** : *என் கனவு?*

**இன்ப** : *கலைக்கப்பட்டது.*

**மன்** : *நீ பாதகி.*

**இன்ப** : *உங்கள் மகள் வேறு எப்படியிருக்க முடியும்.*

*(மன்மத சகாயன் மேலும் கசைவீச. அடிமை வானழகன் தடுக்க)*

**மன்** : *அடா அடிமை நாயே!*

வான் : ஆம். விசுவாசத்தில் நான் நாய் தான். பெண் கொலை செய்யும் வேடனே விலகிப் போ.

மன் : ஆகா அவ்வளவு தூரம் ஆகிவிட்டதா?

வான் : பேயே! ஒரு கபடமற்ற ஜீவனை இப்படி வதை செய்கிறாயே! உன்னைப்பார்...

*(யுத்தம். எல்லா வீரரும் வந்து வானழகனைப் பிடிக்க)*

மன் : அடே! இந்த நாயை இனி நகரத்தில் வைக்கா தீர்கள். சுரங்கத் தொழிலுக்கு அனுப்புங்கள். இந்த நகரத்துப் பக்கம் வரவே விடாதீர்கள்.

**(கதிர் 6 முடிவு)**

# கதிர் – 7

*(இன்பவாகனனும் - மன்மதசகாயனும்)*

இன்ப : மன்மத சகாயா! ஏன் இப்படி என் கருத்தை நெருக்குகிறாய்?

மன் : உமது போதனையில்லாமல் உமது மகன் இன்பக் கொடியை இவ்வளவு தீவிரமாக வெறுக்க மாட்டான். பாம்பின்பாதை பாம்பு அறியாது என்றெண்ணி நீர் உமது சூழ்ச்சியை வளர்ப்பது சுத்த முட்டாள் தனம். எப்படியும் அவன் என்மகளை மணக்கத்தான் வேண்டும். இல்லா விட்டால் என் எதிர்ப்புச் சக்தியைச் செலவாக்கா மலே உமது கிரீடத்தைச் சூட்டிக்கொள்ளும் ஆற்றல் இந்த மன்மத சகாயனுக்கு உண்டு என்பதை மறந்து விடவேண்டாம் மன்னரே!

இன்ப : நீ எதையும் செய்யவல்லவன். ஆனால் என் மைந்தன் ஞான தேவன் பிடிவாதத்திற்கு நான்

பொறுப்பாளியல்ல. தயவு செய்து இந்த விடுதலை விழா முடியுமட்டும் பொறுமை யோடிரு. முடிந்ததும் சாவகாசமாக சமாதானம் செய்து இளவரசன் திருமணத்துக்கு ஏற்பாடு செய்து விடலாம்.

மன் : உறுதி தானே?

இன்ப : முழு உண்மை.

மன் : மாறினால் என்பழி சீறியெழும். சரி புது அடிமை களை ஏலமெடுக்க வேண்டும். கடற்கரை மண்டபத்துக்குச் செல்வோமா....

இன்ப : நீ செல், வருகிறேன்.

*(போகிறான் மன்மதன். ஞானதேவன் வருகிறான்)*

ஞான : அப்பா! நேர்மையில் களங்கமிருந்தால் தான் நெஞ்சு கலங்கிச் சாகவேண்டும். நீரேன் குமுற வேண்டும்?

இன்ப : ஞானதேவா! வீணாக மன்மத சகாயனுக்கு இடம் தராதே. நான் சொல்வதைத் தட்டாதே. இன்பக் கொடியை மணம் செய்துகொள். இந்நாட்டு இளவரசன் பதவியை ஏற்றுக்கொள்.

ஞான : தாம் பயந்து ஏற்கச் சொல்லும் பதவிச் சிம்மாசனத்தின் கால்கள் குளிர் காய்ச்சலால் கடகடவென்று நடுங்கிக் கொண்டிருக்கும் போது நான் அதில் அமர்வது ஒரு வேடிக்கை யாகுமப்பா.

இன்ப : சூரியனே நிரந்தரமாக உலகைவிட்டு அஸ்த மித்தாலும், நமது சாமராஜ்யச் செல்வாக்கு சிதறாத உருவடைந்திருக்கும் சீர்மையை உணராமல், சிறு பிள்ளைத் தனமாயிருக்கி றாயப்பா நீ. ஏன், அப்பெண் இன்பக் கொடியை மனைவியாகக்கொள்ள நீ காணும் தடைதான் என்ன?

ஞான : தடையா, அந்த இளம் சகோதரியின் மீது எனக்கு ஏற்பட்டுள்ள இரக்கம் ஒன்றுதான் பெருந் தடையாயிருக்கிறது.

இன்ப : சே! இரக்கமா! இமயமலைபோன்ற பெரிய அரசாங்கத்தின் முடி வேந்தனாய் விளங்க வேண்டிய உன்னையா, அந்த இரக்கம் என்ற சாத்தான் பிடித்து வாட்டுவது. அதை உடனே ஓட்டி என் வாட்டத்தைப் போக்க முயற்சிசெய்.

ஞான : பேஷ்! மன்னாதி மன்னரே! மறைந்து கிடக்கும் மண்வெறிக் கருநாகத்தை உமது சொல் மகுடியால் எழுப்பினால், நான் மருண்டு விடுவே னென்று எண்ணுகிறீரா? இது ஒரு அசட்டுத் தனமான பலவீன முயற்சி.

இன்ப : இக்கேள்விக்குப் பதில் சொல்லக் கொஞ்சம் தயக்கந்தான் ஏற்படுகிறது. ஏன்? கூச்சமும் குழப்பமும் கூட உண்டாகிறது.

இன்ப : அடே! புலி வயிற்றில் ஜெனித்துவிட்டு....

ஞான : பூனையானால் தானே கேவலம். தீமையை எதிர்த்துப் பாயும் புலியாக உமது குமாரன் விளங்குவதைக் கண்டு மகிழுங்கள்.

இன்ப : மடையனே! மண்ணின்பத்தை வெறுக்கும் மா பேடி நீ.

ஞான : என்னின்பத்தை நான் தியாகம் செய்யும் துணிவைக் காணத் தூய்மை வழிகள் உமக்கில்லை.

இன்ப : முற்காலந்தொட்டு நமது மூதாதைகள் காத்து வந்த முடியாட்சிக்கு முடிவு தேடும் முட்டுக் கட்டையை உண்டாக்குகிறாய்.

ஞான : என் உள்ளத்தைத் தெளிவாகத் தெரிந்த உம்மை வாழ்த்துகிறேன்.

**இன்ப** : *அடே! அப்பெண் இன்பக்கொடி மீது ஏதாவது குற்றங்கண்டாயா?*

**ஞான** : *குற்றமில்லை அன்புநாட்டு மக்களையும், நம் சுற்றமாக்கத் தவிக்கும் சமதர்ம ப்ரேமையைக் கண்டு பெருமையடைந்தேன்.*

**இன்ப** : *என்ன! அன்பு நாட்டு அடிமைகள் நமக்குச் சுற்றமா? முற்றிலும் முரணான செய்தி. மூடு உன் வாயை.*

**ஞான** : *வாயை மூடலாம். ஆனால் அப்பெண்ணின் இதயத்தில் வளரும் தூய காதலை யார் மூடுவது?*

**இன்ப** : *சூடான நெருப்பிலே சருகைக் கொட்டுகிறாயா?*

**ஞான** : *ஆமாம். நெருப்பின் பசிக்கு இரை தராவிடில் என்னையே சுட்டுவிடுமல்லவா.*

**இன்ப** : *பொறு. நான் கடற்கரை சென்று மீண்ட பின் கவனிக்கிறேன்.*

*(போகிறான்)*

**ஞான** : *புளித்துப்போன முடியாட்சிப் போதையைப் பூரணமாக போக்கினாலொழிய இந்த ஜென்மங் களின் மயக்கம் தீர மார்க்கமில்லை. பாவம் வானழகனையும் இன்பக்கொடியையும் பேச் சுரிமைக்குக்கூட இன்றிப் பிரித்துவைத்து விட்டார்கள். பார்க்கலாம்.*

**(கதிர் 7 முடிவு)**

# கதிர் - 8

இடம் : கடற்கரை

*(கடற்கரையில் சில அடிமைச் சரக்குகள் நிறுத்தப்பட்டுள்ளன. அதில் வேல்விழியும் ஒருத்தி. ஒவ்வொரு பிரபுவும் ஒவ்வொரு பெண்ணையும் முடியுள்ள ஒரு மொத்தமான கயிற்றையும் கழுத்தில் வீசி அழைத்துப் போகிறார்கள். அதையெல்லாம் ஞானதேவன் மறைந்து நின்று பார்க்கிறான். இவ்வாறு கயிறு மாட்டிய பணியில் மன்மதசகாயன் தன் பங்கை நிறைவேற்ற தனது அடிமைக் கயிற்றை வேல்விழியின் கழுத்திலே வீசுகிறான். ஒரு படகு போகிறது)*

பொன் : *மகாப்பிரபு! எங்கே மன்னர் இன்பவாகனர்? அவருக்காகவே இந்தச் சரக்கை ஏற்றிவந்தேன்.*

மன் : *பொன்மேனி! இவ்வளவு புதுச் சரக்கை அவர் என்ன செய்யமுடியும்? அவர் வராததும எனக்காகத்தான். இந்த சரக்குக்குள்ள லட்சக் கணக்கான பொன்னையும் நான் தருகிறேன், வா. வாங்குவது யாராயிருப்பினுமென்ன? உனக்குத் தேவையானதெல்லாம்.... பொன்: பொன் ஒன்று தான். தங்களுக்கு வேண்டுவதெல்லாம்....*

மன் : *பெண்கள் மந்தைதான். சரி வா என் இன்ப அடிமையே!*

*(வாய் கட்டப்பட்ட வேல்விழி பரிதாபமாக அங்கிருப்பவர் அனைவரையும் பார்க்கிறாள். வாலிபன் ஞானதேவன் பெருமூச்சோடு பிரபுக் களின் சகல விளையாட்டுக்களையும், பார்க் கிறான். அவர்கள் அகன்றபின், மற்றொரு படகு வருகிறது. அதிலே தான் வாணித்தாய் கொண்டு வரப்படுகிறாள். மலைகிள்ளும்மாயன பிடித் திழுத்து வருகிறான். சில பிரபுக்கள் வருகிறார்கள்.)*

மலை : *(வாணித்தாயைக் கட்டிய கயிற்றைக் கையில் பிடித்தவண்ணம்)* பிரபுக்களே! சரக்கு வயதாகி

விட்டதாக எண்ணவேண்டாம் - உலகத்தில் அனுபவமே பெரிது. புது மாடுகள் மிரளும். பழக்கப்பட்ட மாடு மிரளாது. ஆகவே, இந்தச் சரக்கு யாருக்கு வேண்டும்? விலை குறைக்கப் பட்டுள்ளது.

பிரபுக்கள் சிலர்: போடா! கிழவியை யார் விலைக்கு வாங்குவது?

**மலை** : *(ஏமாற்றத்துடன்)* சீ! படகுக்காரா! இந்தப் பெரிய சரக்கின் மகிமையை அறியவில்லை. அப்போதே சொன்னேன். இது ஒரு பீடையென்று. சரி. படகிலேயே கட்டிப் போட்டுவை. பார்க்கலாம். யாராவது கிழப் பிரபுக்கள் வந்தால் விலையாக்கி விடலாம்.

*(இளவரசன் ஞானதேவன் வந்து படகில் இருக்கும் தாயை வாணியைப் பார்க்கிறான்.)*

**மலை** : பிரபு தெய்வமே! ஏன் பார்க்கிறீர்கள்? அரண் மனைக்கு வந்தால் புதுக் குமரி போலாகி விடுவாள்.

**ஞான** : வயதான இந்த அம்மாவைக் கூடவா இரக்க மின்றிப் பிடித்துவரச் சொன்னார்கள்?

**மலை** : ஆமாங்க. பெண்ணென்ற உருவமெல்லாம் பனித் தீவுக்கு வர வேண்டுமென்பது உங்கள் சட்டம்.

**ஞான** : விலையாகவில்லையே. என்ன செய்வீர்கள்?

**மலை** : கடலிலே தள்ளுவோம்.

**ஞான** : சரி. நான் வாங்கிக் கொள்ளுகிறேன்.

**மலை** : சரிங்க.

*(தாயை அழைத்துப்போகிறான் ஞானதேவன் தாய், தன் சுயநினைவற்ற, நிலையில் தொடர்தல்)*

**(கதிர் 8 முடிவு)**

# கதிர் - 9

*(அடிமைப்பெண் வில்லியிடம்)*

**ஞான** : *சகோதரி! சுரங்கத்திலே அவஸ்தைப்படும் என் நண்பர் வானழகர் கூறிய புனிதத்தாய் இவர்களாகத்தான் இருக்கவேண்டும். இவர்களை யாரென்று யாராவது கேட்டால், என் நந்த வனத்தை வளர்க்கும் அடிமை என்று நீ கூறிவிடு. அவர்களைப் பசி தீர்த்துப் பாதுகாப்பது உன் பொறுப்பு. மன நிலை கலைந்து சிதறி அலை யாடுகிறது. பாவம் வானழகரின் தாயாகத் தானிருக்கவேண்டும். ஆனால் அவர் அடையாளம் கூறிய மற்றொரு வாலிபப் பெண்ணைத் தான் என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. இவர்களை அழைத்துப் போ.*

**வில்லி** : *இளவரசே! அந்தப் பெண்ணையும் நான் கண்டு பிடித்துவிட்டேன்.*

**ஞான** : *யாரவள்? எங்கிருக்கிறாள்?*

**வில்லி** : *அப்பெண் தான் மன்மத சகாயரின் மாளிகையில் பிடிபட்டுள்ள பேசும் பதுமை. பெயர் வேல் விழியாம்.*

**ஞான** : *அப் பெண்தானா? ஆகா! முத்து மாலை சொத்தைப் பன்றியின் கூட்டிலா இருப்பது? அது பொருத்தமற்ற செயல். வில்லி! உன் உதவியால் அம் மாலையைப் பொருத்தமான வீர மார்பில் சூட்ட முடியுமென்று எண்ணுகிறேன்.*

**வில்லி** : *இளவரசே! இது நான் அன்றே செய்து விட்ட தவம். ஆகட்டும்.*

**ஞான** : *அத் தாயைப் பத்திரமாகக் காப்பாற்று.*

(கதிர் 9 முடிவு)

# கதிர் – 10

மன் : *(தனிப்பேச்சு) ஆம்! என் மகளே! எனக்கு விரோதியாயிருக்கிறாள். மன்னன் இன்ப சகாயனும் எனது பிற்கால திட்டத்தை நன்கறிந்து கொண்டே குடும்ப சம்பந்தம் செய்து கொள்ள முட்டுக்கட்டை போடுகிறான். இளவரசன் ஒரு அடிமைப் பெண்ணிற்குப் பிறந்த பிள்ளை என்ற இரகசியத்தை நானும் அரசனும் மட்டுமே அறிவோம். இதை மற்ற பிரபுக்களுக்குப் பகிரங்கப்படுத்தாமல் நயமாகவே காரியத்தைச் சாதித்து சிம்மாசனத்தில் அமர நான் செய்த சூழ்ச்சி பலிக்கவில்லை.... எனக்கும் ஒரு ஆண் சந்ததி இருந்தால், இப்பயல் ஞானதேவனை பழம் செருப்பாக்கிப் பிய்த்தெறிந்திருப்பேன். ஏன், சந்ததியைப் பெறுவது என்னால் இயலாத காரியமா என்ன? ஆம். நான் ஏலமெடுத்த அடிமைப் பெண் வேல்விழியே இந்தப் புதுத் திட்டத்தைச் செயலாக்க ஏற்றதொரு இன்பக் கருவியாகக் கொள்வேன். ஆகா, அவள் அழகு என்னை ஆகர்ஷித்து விட்டது......*

## திருப்புக் காட்சி

இன்ப : *(தனிப்பேச்சு)*
*மடையன் மன்மதசகாயன் பெருநோய்க் கிருமியை விட மோசமாக என்னை அரித்துக் கொண்டே இருக்கிறான். என் பதவியைக் கொத்தப் பார்க்கும் அவன் ஒரு பழைய மலைக் கழுகு. அரசியல் குழப்பத்தை விளைவித்து, அதிகாரத்தைப் பறிக்க விரும்பும் கிழட்டுப் பெருநரி. எப்பொழுதோ அவனை நம்பி மதுப் போதையாயிருந்தபோது, சொல்லிவிட்ட உருவ மற்ற இரகசியத்தை வெளியாக்கும் பயமுறுத்த லையே ஆயுதமாகக் கொண்டு என்னை வீழ்த்தப்*

பார்க்கிறான். நானா வீழ்வேன்? வாழத் துடிக்கும் என் சத்திரிய இரத்தம் இதற்கெல்லாம் சோர்ந்து விடுமென்று எண்ணிவிட்டான். இதற்காகவா நான் ஞானதேவன் என்ற இப்பயலை, அடிமைப் பெண்ணின் இரத்தம் சம்பந்தப் பட்டிருந்தாலும், பரவாயில்லை என்று, என் குழந்தையாகப் பாவித்து வளர்த்தேன்! இதைப் பிரபுக்களுக்கு அம்பலப்படுத்தும் அவ்வளவு ஆதாரமும் ஆற்றலும் மன்மத சகாயர்க்குப் போதாது. ஆம். துணிவை விட்டுவிடக் கூடக் கூடாது. ஞான தேவனுக்கு வேறு ஒரு அரச குமாரியையே விவாகம் செய்விப்பேன். சீரோங்கும் சிங்கா தனத்தில் என் இரத்த சம்பந்தமுள்ள, அவனைத் தான் சக்ரவர்த்தியாக முடி சூட்டிப் பார்ப்பேன்... இது நிச்சயம்... ஆம்... ஆம்...

## திருப்புக் காட்சி

ஞான : *(தனிபேச்சு)*

இந்த ஏகாதிபத்ய மாளிகையின் பிரதமத் தூண்கள் இரண்டையும் பூசல் என்னும் புழு உள்ளூரக் குடைந்து விட்டது. இனி வெட்டி யெறிவதில் கஷ்டமேயில்லை. அரசாங்கத்தை இழுத்துச் சென்ற இரண்டு வரிக் குதிரைகளும் நேர்மாறான இரண்டு திசைகளைப் பார்த்த வண்ணம் திரும்பி முரண் செய்யும் வேடிக்கை யைக் காணுகின்றேன். இனி இந்த ஆதிபத்திய ரதத்தின் அச்சு முறிவது உறுதி. இந்த இரு வேட்டை நாய்களுடைய பலமும், இன்னும் கடைசி வரையில் சண்டையிட்டு ஒடுங்க வேண்டும். பலவீன தாகத்திலே தள்ளாடும் கடைசி விநாடியில், ஒரு விரலால் நசுக்கிவிட்டு நமது இலட்சியத்தைப் பூர்த்தி செய்து கொள்வதே ராசதந்திரம்! ஆம்! அப் பெண் வேல்விழி யென்மீதெறிந்து விட்ட வடிவேல்

மிகக் கூர்மையும், பலமும் கொண்ட கொடூர மான ஆயுதம் தான். அதை என் இதயத்தி லிருந்தும் மீண்டும் வலியின்றி எடுத்தெறியும் பணியையும் அவளால் தான் செய்ய முடியும்.

## திருப்புக் காட்சி

வேல் : (நன்கலங்கரிக்கப்பட்டு, ஒரு விலங்குச் சங்கிலி யால் பிணிபட்டு அமர்ந்திருக்கிறாள். அதுதான் மன்மத சகாயனின் அந்தப்புரம். அவள் மனத் திலே கடந்ததொரு காதற்காட்சி நிழலிடுகிறது. பாட்டுடன்)

இன் : *(நுழைந்து)* என்னம்மா யோசனை.

வேல் : அம்மா! நீயும் ஒரு அடிமைப் பெண்ணா!

இன் : ஆம் சகோதரி.

வேல் : ஏன் பொய் பேசுகிறாய். நீ தான் மன்மத சகாயரின் புத்திரி என்பதை அறிந்து கொண்டேன்.

இன்ப : பொய்யே அல்ல அம்மா! அடிமைப்படுத்தும் அக்ரம வெறியர்களுக்குப் புத்திரியும் ஒன்றுதான் வேறு பெண்ணும் ஒன்றுதானம்மா. சிம்மாசன வெறி பிடித்தால் சொந்த மகளின் கண்ணீரைக் கூடப் பார்க்க மாட்டார்கள். உலகத்தின் பெண்மையே உருக்குலைந்து தவிக்கிறது, இந்த உலுத்தர்கள் கையில். விமோசனம் தேடியதே குற்றமென்கிறார்கள். குரூர ஜன்மங்கள்!

வேல் : இப்படி உன்னினத்தைத் தாழ்த்துவதால் என் பரிதாபத்தைப் பெற்றுவிடலாமென்று நினைக்கிறாயா?

இன்ப : சகோதரி! முன்னொரு தடவை ஒரு புண்ணிய ஆண் மகன் இதே போன்று சொல் நெருப்பால் என் இதயத்தைப் பழுக்கச் சுட்டு விட்டதால்

*பண்பட்டு விட்டேன். நானென்ன செய்வேன். என் ஆற்றலை உபயோகித்து என் கையாலேயே என் தந்தை என்பதையும் மறந்து ஒருநாள் விஷத்தையும் தந்தேன். அவர் அதைக் கண்டு பிடித்து விட்டார். அதிலிருந்து என்னை மகள் என்று அழைப்பதை மறந்ததோடு, கைதியாகவும் நடத்தி வருகிறார். நானும் ஒரு தந்தை என்ற பாசத்தைக் கடமை நெருப்பிலே வீசி எறிந்து விட்டேன். ஆயினும் என்ன? நான் எதற்காக இதை எல்லாம் செய்தேனோ அந்த மனித மாணிக்கம் எங்கோ சுரங்க இருட்டிலே மறைக்கப்பட்டு விட்டார். அந்த நரகத்திலிருந்து மீண்டு வந்த பிறகல்லவா என் உயிரைப் பெற முடியும்? அந்தோ? எனக்கு ஆறுதல் தந்து கொண்டிருந்த அப்பெண் வில்லியையும் என்னை விட்டுப் பிரித்து வைத்து விட்டார்.*

வேல் : *அம்மா, நீ கூறும் அந்த மனித மாணிக்கம் யார்?— சொல்லக்கூடாதா?*

இன்ப : *சகோதரி சொல்ல நா நடுங்குகிறது. அடிமை என்ற பெயரால் இந்நாட்டு மூடர்களால் அழைக்கப்படும்-ஆண்மைக் சூரியர். அவர் பெயர் வானழகர்.*

வேல் : *ஆ...!*

இன்ப : *ஏன் ஆச்சரியம்? முன்பே அவரைத் தெரியுமா?*

வேல் : *தெரியுமா வா! தெரியும் அம்மா! அவர் உன்னிடம் அடிக்கடியும் சம்பாசிப்பாரா!*

இன்ப : *ஆம் அன்பின் மொழியைக் கேட்கத் துடித்துச் சென்றபோதெல்லாம், ஆத்திர நெருப்பை அள்ளி யள்ளிக் கொட்டுவார். ஆனால், அது என்னைச் சுடவில்லை. மூண்டெரிந்த நெஞ்சத்து அன்பை மேலும் வளர்த்து அணையாத ஜோதியனலாக்கி விட்டது சகோதரி.*

வேல் : அவரை மீண்டும் நாம் அல்ல, நீ சந்திக்கவே இயலாதா?

இன்ப : சந்திக்க எவ்வளவோ முயற்சியைத் தான் செய்து வருகிறேன். நமது உறுதி உண்மையானால் சந்திப்பு ஏற்பட்டே தீரும்.

வேல் : சகோதரி! என்னை விடுதலை செய்ய முயற்சி செய். உன் தந்தை என்ற பெயர் கொண்ட இந்தப் பைசாசம் என் வாழ்வை அழித்துவிடும் போலி ருக்கிறதே. நமக்கு உதவும் மனிதர் யாருமே இல்லையா?

இன்ப : அவசியம் முயற்சிக்கிறேன் அக்கா! அதற்கேற்ற புனித மனிதர் ஞானதேவர் ஒருவர்தான்.

*(இச் சமயத்தில் மன்மத சகாயன் கதவைத் தட்டுகிறான்)*

வேல் : சகோதரி! சாத்தான் வந்துவிட்டதே. நீயும் என்னை விட்டுப் போகப் போகிறாயா? நில் போகாதே... என் அச்சம் அதிகமாகிறது. என் மானம் தூக்கு மேடையில் தற்காப்பு எண்ணி ஊசலாடும் இச் சமயத்தில் தானே உதவி தேவை. ஐயோ நீ இப்படி ஒளிந்து கொள்.

*(இன்பக்கொடி ஒளிந்துகொள்ள மன்மத சகாயன் கதவை உடைத்துப் பிரவேசிக்கிறான்)*

மன் : பெண்ணே வேல்விழி! நீ என்னைக் கணவனாகக் கொண்டால், உயர்ந்த மாளிகையில் உல்லாசமாக வாழலாம். *(விலங்கை அவிழ்த்துவிட்டு உடம்பை நெளிக்கிறான்)* பெண்ணே நீ ஊமையா?

வேல் : ஆமாம். உன்மத்தர்கள் முன்னிலையில் நான் ஒரு ஊமைதான்.

மன் : ஏமாற்று வித்தைகள் என்னிடம் செல்லாது பெண்ணே.

**வேல்** : எல்லையில்லாத கொடுமைச் சாகரத்திலே தத்தளிக்கும் என்னிடம் பேசாதே போ.

**மன்** : மடப்பெண்ணே! தேடிவரும் செல்வத்தை எட்டி உதைக்கிறாயே.

**வேல்** : செல்வத்தை மட்டுமல்ல, தருபவர்களையும் உதைக்கு முன் வெளியேறிவிடு வேட்டை நாயே.

**மன்** : ஆ! என்னை நாயென்றா சொன்னாய்?

**வேல்** : நான் மட்டும் சொன்னால் பிசகாகும்.

**மன்** : சே. என்ன கேவலம்! ஒரு அடிமை நாய், என்னை நாய் என்று அழைத்த பின்னும் பேசாதிருப்பதா? *(கட்டாரி எடுத்து)* சே... எண்ணற்ற பொன் கொடுத்து வாங்கிய இவளைச் சிறிதேனும் சுவைக்காமல் கொல்வதா...? அடி... என்ன சொன்னாய்...? *(இம்சிக்கும் சமயம் ஒளிந்துகிடந்த இன்பக்கொடி வந்து தடக்க அவளைக் குத்திவிட்டு மேலும் இம்சிக்கையில், அங்கு வேல் விழியைச் சந்திக்க வேண்டி ஆவலோடு பிரவே சித்த ஞானதேவன் கடும் சண்டையிடுகிறான். அவன் கை ஒன்று ஒடிகிறது. கடைசியில் சோர்வு ஏற்படும் சமயம் வேல்விழி தந்த கட்டாரியால் பலவாறு குத்தி குத்தி)*

**ஞான** : அடா கொடுமையான மலையே! தெரிந்து கொண்டாயா என்னை. ஒழிந்து போ. கக்கிவிடு. உன் உயிர் போகுமுன், நீ தேனெனப் பருகிய ஏழைகளின் இரத்தத்தை ஒரு துளியுமின்றி வெளியே கக்கிவிடு... பாதகா! இப்போதாவது உணர்ந்து பாரடா? நீ செய்த பாதகங்களின் கொடுமையை. உணரும் சக்தி உனக்கேது? இன்னுமா துள்ளுகிறாய்? தொலைந்து போக. கடைசிக் காலத்திலும் நீ ஒரு பெறற்கரும் பாக்கியத்தை இழந்துவிட்டாய். அந்த உத்தமன் வானழகனின் கையால் கொலைபட்டிருந்தால்

உன் ஜென்மம் புனிதமடைந்திருக்கும். போ. உனக்கு அந்தப் புண்ணியம் எப்படி வரும், போ. நாயே. சொந்த புத்திரியையே கொலை செய்து விட்டாயேடா!

(வேல்விழி, இன்பக்கொடியை உயிர்ப்பிக்கப் பாடுபடுகிறாள்)

**இன்ப** : ஆ. சகோதரி! நான் பிழைக்கப் போவதில்லை. ஆனால், வானழகரைக் கண்டால் அவர் பெயரை உச்சரித்தவாறே இறந்ததாகச் சொல்ல மறந்து விடாதே. அண்ணா!

**ஞான** : சகோதரி! சஞ்சலப்படாதே. உயர்ந்த உண்மையைக் காக்கும் சேவையில் மடியும் நீ ஒரு தியாக ஜோதி. உன்னை நான் மறக்கமாட்டேன். ஆறுதல் கொள். ஆவி பிரிகையில் அலையாதே. வானழகன் காப்பாற்றப்படுவார்.

**இன்ப** : ஆம் அது போதும் அண்ணா. வேல்விழி! சகோதரி! நீயே அவரை ஏற்றுக்கொள்ளம்மா. (உயிர் பிரிகிறது)

**மன்** : ஞானதேவா! வா. ஒரு ரகசியம்.

**ஞான** : என்ன அது.

**மன்** : நீ ஒரு அடிமைப் பெண்ணின் மகன்.

**ஞான** : என்ன நானும் ஒரு அடிமைத் தாயின் மைந்தனா...?

**மன்** : ஆமாம்... நான் போகிறேன்.

**ஞான** : வேல்விழி! இனி இங்கிருக்காதே.

**வேல்** : அய்யா! நீர் யாரென்று எனக்குத் தெரியாது, என்றாலும், என்னைக் காப்பாற்றியதாலும், என் கணவருக்குற்ற துணைவர் என்று தெரிவதாலும், சகோதரராக பாவிப்பது பிழையாகாதென்று கருதுகிறேன். அண்ணா! தியாகமான தங்கங்களுக்குரிய கடன்களை நாமே செய்து விடுவோம்.

**ஞான** : *ஆ! வானழகர் உன் கணவரா?*

**வேல்** : *ஆம். அவர்தான் என் அன்பர்.*

**ஞான** : *சகோதரி! என்னை மன்னித்துவிடு.*

**வேல்** : *ஆமாம். தாங்களும் ஒரு அடிமைத்தாயின் மைந்தர் எனக்கூறிக் குழப்பத்தை விளைவித்துச் செத்தாரே இம்மனிதர். தாங்கள் யார்?*

**ஞான** : *எனக்கே இப்பொழுது சந்தேகமாயிருக்கிறதம்மா. என்னை எல்லோரும் இளவரசன் என்கிறார்கள். இன்றுதான் இந்த அரிய இரகசியத்தை அறிந்தேன். (யோசித்து) ஆம். என் தந்தையென்று சொல்லும் அந்த அரக்கனின் உள்ளத்தைப் பிளந்தால் கட்டாயம் இரகசியம் வெளிப்படும்.*

**வேல்** : *உங்கள் குழப்பத்திற்கும் விரைவில் தெளிவைப் பெறமுடியுமென்று நம்புகிறேன். அதை என் தாயிடந்தான் கேட்க வேண்டும்.*

**ஞான** : *உன் தாயா? அவர்கள்...*

**வேல்** : *அன்பு நாட்டிலிருந்து என்னைச் சிறை கொண்டு வந்த அடுத்த கப்பலிலேயே அவர்களையும் அழைத்து வந்ததாகக் கேள்வி. எங்கிருக்கிறார் களோ...?*

**ஞான** : *என்னுடன் வா...*

**(கதிர் 10 முடிவு)**

# கதிர் - 11

*(தங்கச் சுரங்கத்தின் அழகான பகுதியிலே அடிமைகள் தொண்டு செய்கிறார்கள். சிலர் சாகிறார்கள். சுரங்க வெடி விபத்தாலும், சரிந்து விழும் மண்கட்டிகளாலும் தாக்குண்டு சாய்கிறார்கள். கையொடிந்தாரும் கால் முறிந்தாரும் கறுப்புடை கொண்டு அலைகிறார்கள். அதிகாரிகள் வேலை வாங்குகிறார்கள். ஒவ்வொரு தொழிலாளியின் தலையிலும் ஒவ்வொரு மெழுகுத் திரிவிளக்கு சிம்னி வெளிச்சத்துக்காகக் கட்டப்பட்டுள்ளது. கையில் உளியும் சம்மட்டியும்)*

**அதிகாரிகள் :** *(சாட்டை வீசி)* உம். சுறுசுறுப்போடு வேலை செய்யுங்கள்.

**ஒரு அடிமை :** கொஞ்சம் பொறு அய்யா! ஒரு தோழன் இறந்து விட்டான். அவன் பிணத்தை வெளியே கொண்டு போய் அடக்கம் செய்து வந்தபின் வேலை செய்யலாம்.

**அதி 2 :** சீ! அடக்கம் செய்ய தனிக்குழி ஒன்றும் வேண்டாம். சுரங்கத்தின் மேல் எடுத்துப்போனால் ஆறடி ஆழத்தில் தானே புதைக்க முடியும். அதை விட இந்த ஆயிரம் அடிக்குழியிலே ஒதுக்குவது புண்ணியமல்லவா? போடா அடக்கம் செய்யப் போகிறானாம். எதிர்த்தா பேசுகிறாய்! *(கசை வீசுகிறான்)* உம்.

**அடிமை :** பிணத்தைத் தாண்டிக்கொண்டு எப்படி அய்யா போவது? பாவமல்லவா.

**அதி 1 :** தாண்டாதே. மேல் மிதித்துக்கொண்டு போ.

*(மேலும் அடிக்கிறான். பழியுணர்ச்சியோடு ஆங்கு வந்து, இதைக்கண்ட வானழகன் சம்மட்டிக் கொண்டு அதிகாரிகளைத் தாக்கி வீழ்த்தி ஆவேசத்தோடு அடிமையின் சவத்தை வாரி எடுத்து)*

வான : அடா அடிமைத் தோழனே! உன் உயிர் கட்டற்ற சுதந்திரத்தை நாடிச் சென்றதா? இந்த இருட்டுச் சுரங்கத்தை விட்டொழித்து, பேரருட் ஜோதி யிலே கலந்துவிட்டதா? அல்லடா! அல்ல. பிரபுக் களுக்காக பொன் தோண்டும் சேவையிலே தியாகம் செய்த அடிமையடா நீ. உன் போன்றோ ருடைய எண்ணற்ற எலும்புக் கூடுகளையே ஆகாரமாகத் தின்று பொன்னைக் கருத்தரித்த இச்சுரங்கம் தரும் தங்கத்தைக் கொண்டு தானடா நம்மவரை அடிமைகளாகச் சந்தையில் வாங்கு கிறார்கள். இப்போதாவது இந்த உண்மை உனக்குப் புரியுமென்று நினைக்கிறேனடா தோழா! நீ கண்டு கொண்ட உண்மையை எங்களுக்கெல்லாம் வாய் திறந்து சொல்லடா! ஓ உனக்கு வாய்ப்பூட்டுச் சட்டமிருக்குதென்று பயப்படுகிறாயா! பயப்படாதே. உனக்காக நான் பேசுகிறேனடா. அடா தோழர்களே! இங்கு வாருங்கள். நான் சொல்வதைக் கேட்காவிட்டால், இவன் அடைந்த நிலையை நானே உங்களுக்குத் தந்து விடுவேன். இந்தக்கணம் முதல் நாம் சுதந்திர மக்களடா. இதோ இச் சுரங்கத்திலே பின்னி ஓடும் இந்தத் தங்கக் கொடிகள் தானடா, அவர்களின் ஆதிபத்ய இரத்தம் ஓடும் நரம்புகள். இச் சுரங்கத்துக்கு நமது உயிர்களைப் பணயம் வைத்துப் பொன் தோண்டித் தரும் வேலையை நிறுத்திய விநாடியே பிரபுக்களின் ஆணவ ஓட்டம் அசைவற்றுப் போகுமடா. பொன்னில் லாவிட்டால் நம் பெண்களை அவர்கள் மாம் பழங்கள் போல் சந்தையிலே வாங்கிச் சுவைத்து எறிய முடியாதடா! அடா! கேளுங்கள்.

பாட்டு

நாயொன்றைக் காவல் செயக்கட்டிவைத்தால்
அதுகூட வெளிச்செல்ல ஊளைசெய்யும்

நாகணவாய் வேடனிடம் அகப்பட்டால்
நாக்குழறிச் சிறகடித்து ஆவிசாகும்
நாற்றமிகு பன்றிதனை மனிதவெறி இரைக்காகக்
கைதுசெய்தால் நாற்கால்தூக்கி நடுங்கிச்சீறும்
நாம் சொந்தநாட்டினிலே உரிமையெனக்
கேட்டதுவே துரோகத்தின் குற்றமென்றார்

குற்றமெனக் குதித்தவர்கள் கூரான
விஷஈட்டி தன்னைத்தீட்டிக்
குற்றுயிராய்க் குலைநடுங்கக் கிழித்திழுந்தார்
சாக்காடாம் சகதிதன்னில்
பற்றற்று மிதிபட்டோர் பாலியர்கள்
என்றால் நான் பதறேன் ஆனால்,
சிற்றிடைகொள் கன்னியரின்
சிலையான வடிவமெல்லாம் சூறையிட்டார்!

நிறைவாகக் கருவுற்ற குறையாமாதர்
நலிவற்ற வயிறறுத்து நெஞ்சைவெட்டிக்
குறைவற்ற கொலையுள்ளக் கரும்புலிகள்
காட்டுகின்ற தடியாட்சிக் கொடுமைக்காட்டில்
கரையற்றபொறுமைக்குக் கடுமையெனும்
மேடிட்டார் அதன்மேல் நின்றேன்
வெறிகொண்ட வீணர்களை வேட்டையிடும்
வினைசெயவே வந்துதித்தோம் வீரநாட்டீர்!

வான : *அடா! கிளம்புங்கள். நாம் ஆயிரக்கணக் கானவர்கள். அவர்களைச் சாகச் செய்வோம் அல்லது செத்து மடிவோம். உம், இத்தகைய தங்கச் சுரங்கங்கள்தான் ஏழைகளின் சவக் குழிகள். நம் சீவக் குழிகளை நாமே வெட்டிக் கொள்ளும் வேலை தொலையட்டும். வெடி வைத்து இதனைப் புதைத்து விடுங்கள். பொன் மேனிராயனைப் பொடியாக்குங்கள். மன்மத சகாயன் மண்டை ஓட்டில் அவன் இரத்தத்தை எனக்குக் கொண்டு வாருங்கள். இன்பவாகனனது இருதயத்தை எனக்குத் தின்பண்டமாகத் தர*

வேண்டும். இளவரசன் ஞானதேவனையும் நம்பாதீர்கள். அனைவரையும் சிறைப்படுத்துங்கள். எவரையும் நம்பாதீர்கள். ஆயுதமில்லையே என்ற அச்சம் வேண்டாம். விடுதலை விழா கொண்டாடப் போகிறீர்களா? நமக்குத்தான் அந்த விழா. சுதந்திரத் தோழர்காள்! விடுதலைச் சுடர்காள்! பிரபுத்வ நாவற் பழங்களைக் கிளைகளிலிருந்து உலுக்கிவிட்டுச் சாப்பிடுங்கள். செல்வப்பயிரின் செருக்கென்னும் கதிர்களை அறுவடைசெய்து, சீர்திருத்த அரிசிகொண்டு சுதந்திரப் பொங்கல் செய்து உண்ணுங்கள். பசி தீரும்; புறப்படுங்கள்.

## திருப்புக் காட்சி

*சுரங்கம் உடைபடும் அதிர் வெடிக்காட்சிகளின் ஓல மிடும் பின்னணி, பிரபுக்களின் தலைகளை ஈட்டிமுனைகளிலே நாட்டி அடிமைகள் ஆரவார ஊர்வலம் வரும் காட்சி, பொன்மேனிராயனின் சித்ரவதைப்படலம், மலை கிள்ளுமாயனின் மரணவேதனை.*

**வான்** : *(பெரும் சிரிப்பு)* வெற்றி! தோழர்களே! அரண்மனைதான் மீதி! நுழையுங்கள். தூளாக்குங்கள். என் பசி அதிகமாகிறது.

**வில்லி** : அண்ணா! தங்கள் வேல்விழியும் வாணித்தாயும் கூட வந்துவிட்டார்கள். காணத் துடிக்கிறார்கள். காத்திருக்கிறார்கள்.

**வான்** : பெண்ணே! அவர்களை அங்கு அழைத்து வா. வேட்டை முடியும்வரை எவரையும் பார்க்க இயலாது. விரைவில் வா விடுதலை விழா மேடைக்கு.

## திருப்புக் காட்சி

## கதிர் – 12

*(இன்பவாகனன் கைதியாகிக் கலங்கி நிற்கிறான், ஞானதேவன் கைதியாகித் துணிந்து சிரிக்கிறான், பொன்மேனிராயனைப் பலரும் பந்தாடுகிறார்கள்)*

**வான்** : தோழர்களே! இந்தப் பந்து இனி விளையாட உதவாது. இதற்குள்ளிருக்கும் காற்றை வெளி யனுப்பி விடுகிறேன்; பிறகு விளையாடுங்கள். *(குத்தி வீழ்த்துகிறான்)*

**வேல்** : *(ஓடிவந்து)* ஆ! தாங்களா?

**வான்** : யாரது! வேல்விழியா? ஒதுங்கி நில். தொடாதே என்னை, வீணில் எரிந்து போவாய். சற்றே பொறு.

**வாணி** : அப்பா, வானழகா!

**வான்** : அம்மா அப்படி நில்லுங்கள். அடா! அவன் எக்கேடா?

**வேல்** : மன்மதசகாயரை ஞானதேவரே கொன்று தீர்த்தார்.

**வான்** : உண்மையாகவா? அவன் மகள்.

**வேல்** : அந்த மன்மதசகாய மடையனாலேயே மாண்டான். என்னைக் காத்த சேவையில் தங்கள் பெயரை உச்சரித்தபடி உயிர் துறந்தாள்.

**வான்** : ஞானதேவனை விடுதலை செய்யுங்கள்.

**ஞான** : வானழகரே! நானும் கொல்லப்பட வேண்டிய குற்றவாளிதான். ஆனால் உயிரை உங்களுக்கு அர்ப்பணிக்கு முன் ஒரு சிறு ஆறுதலைப்பெற விரும்புகிறேன். வேறொன்றுமில்லை. இதோ இந்த சக்ரவர்த்தியின் நெஞ்சகத்திலே இருக்கும் என் சம்பந்தப்பட்ட இரகசியத்தை எடுத்து விட்டால் போதும். ஆறுதலோடு உயிர் பிரிவேன்.

**வான்** : செய் உன்னிஷ்டப்படியே.

**ஞான** : *(இன்பவாகனனைப் பிடித்திழுத்து சிம்மாசனப் படிமீது தள்ளி வாளை ஓங்கி)* அடே பாதகா! சொல்லிவிடு. நீ எனக்கு உண்மையில் தந்தையா? அப்படியானால் என்தாய் யார்? உண்மையைச் சொல்.

*(வாணி ஓடிவந்து தடுக்க)*

**வான்** : என்ன? இன்னுமா ஜீவகாருண்யம் உமது நெஞ்சிலே ஒட்டிக் கொண்டிருக்கிறது? வேண்டாம். தற்போது காருண்யம் எங்களுக்குப் பிடிக்காத ஒரு பிசாசு. அதைக்கண்ட இடத்தில் என் தோழர்கள் வெட்டியெறிந்துவிட வேண்டுமென்பது என் சபதம். தடுக்கக் காரணம் என்ன? தயவு வந்துவிட்டதா இந்த மிருகத்தின் மேல்?

**வாணி** : அப்பா வானழகா! என்னருமை மக்களே! இவர் தானப்பா என் கணவர்.

**ஞான** : ஆ....!

*(எல்லோரும் ஆச்சர்யத்தின் சிகரத்தில் இருக்க வேண்டும்)*

**வான்** : ஆ! அப்படியானால் வேல்விழி?

**ஞான** : அப்படியானால் நான்....!

**வாணி** : பொறுங்களப்பா சொல்லுகிறேன். நான் வாலிபமாயிருக்கும்போது ஒரு அடிமையாய் இத்தீவுக்கு வந்தேன். நான் ஒரு அரண்மனை அடிமை. அப்போது இவர் தனது வாலிபத்துக்கு என் மானத்தை இரையாக்கிக் கொண்டார். அதன் பயனாக ஜெனித்த குழந்தைதானப்பா நீ. நீ பிறந்த மறுநாளே அப்போது பட்டராணியா யிருந்த பெண்ணுக்குப் பிறந்த பெண் தான் வேல்விழி. பிறந்ததும் அப்பட்ட ராணி பர லோகம் போய்விட்டாள். பிற்காலப் பட்டத்துக்கு

*ஆண் சந்ததி வேண்டுமென எண்ணி, இரண்டாம் பேருக்குத் தெரியாமல் உன்னை என்னிடமிருந்து பறித்துக்கொண்டு வேல்விழியை என்னிடம் கொடுத்தார். மறுத்தேன். மறுத்தால் குழந்தையைக் கொல்வதாக பயமூட்டினார். தாயுள்ளம் சிசுக்கொலையை விரும்பவில்லை. உயிர்ப்பிச்சை கேட்டேன். தந்தார். வேல்விழியுடன் அன்பு நாடு சென்று வளர்த்து வந்தேன். அதன் பிறகுதான் வானழகா! உன்னை வேல்விழி சந்தித்த கதையும், பிறவும் நடந்தது. ஆக, இவரே என் கணவர் உயிர்ப்பிச்சை கொடுங்கள் அவருக்கு.*

**ஞான** : *ஆம் தாயே! அன்று கடற்கரையில் பார்த்த போதே என்னையும் அறியாத பாசம் ஜெனித்த விந்தையிதுதானோ? என்ன உண்மைதானா?*

**இன்ப** : *ஆம். முழு உண்மைதான். ஆயினும் நான் உயிர் வாழ விரும்பவில்லை.*

**வான்** : *உயிர் வாழ விடவும் போவதில்லை. ஆகவே வேல்விழி இந்த ஏகாதிபத்ய இரத்தத்திலே வந்த சந்ததி தானா? தோழர்காளே! இந்தப் பீடை இரத்தச் சேர்க்கையின் ஒவ்வொரு அணுவையும் பொசுக்குவ்தாகவல்லவா உங்களிடம் உறுதி தந்தேன். அதை ஒரு குறைவுமின்றி நிறைவேற்ற என்னால் முடியுமென்பதை நிரூபித்து விடுகிறேன். ஆ! வஞ்சக் இரத்தத்தால் வந்த பாவ ஜென்மமே! நீயும் தொலைந்து போ. (வேல் விழியைப் பாய்ந்து மயிரைப் பிடித்திழுக்க கதறுகிறாள்)*

**ஞான** : *நண்பா!*

**எல்லோ** : வேண்டாம் நிறுத்துங்கள், பாவம்.

**வில்லி** : *அண்ணா! எனக்கு உயிர்ப்பிச்சை தரவேண்டும்.*

**வாணி** : *வானழகா! ஆம். உன் சபதத்தை குற்றவாளி நிரூபிக்க வேண்டுமானால், வேல்விழி கொல்லப்*

படக் கூடியவளே. ஆனால், அதற்குமுன் என்னையும் தான் உன்னை சுத்த வீரனென்று அழைக்கவும், இல்லாவிட்டால், நீ ஆவேசத்தின் அடிமை.... சாந்தங்கொள்.

**வான்** : மன்னித்துவிடுங்கள் அம்மா, சரி, தோழர்களே! இந்தச் சிம்மாசனத்தை வெட்டியெறியுங்கள். இன்பவாகனரே! பாரும் உமது பிரபுத்வ சிம்மாசனத்தை! எடுங்கள் அந்தக் கொடுங்கோலை... முறித்தெறியுங்கள் ....

*(வில்லி வேல்விழியையும் தாயையும் மறைவாக அழைத்துப் போகிறாள்)*

**இன்ப** : வானழகா! எல்லாம் சரிதான். இதை யெல்லாம் உலகிலுள்ள மற்ற சக்ரவர்த்திகள்; மகுடபதிகள் கேள்விப்பட்டு நியாயத்தைக் கேட்க வந்தால் அவர்களுக்கு நீ ஏற்ற பதில் சொல்லக்கூடிய நிலையில் உள்ளாய் கொடுமையை அவதானித்துக் கொள்ளல் நலம்.

**வான்** : ஆகா! என்ன சொன்னாய்? எதிர்த்துவரும் பேயரசர்களுக்குப் பதில் சொல்ல எனக்கு நேரமேதடா? நான் செய்யும் இந்தக் கொடுமைக்கு ஏற்ற காரணத்தை உன் பழுத்த ராஜதந்திர மண்டையால்தான் கூறமுடியும். ஆகவே அதை நான் பத்திரமாகக் காப்பாற்றியே தீருவேன். *(இழுத்து சிம்மாசனப் படியிலே வைத்து தலையை வெட்டித் தனியாக எடுத்து)* தோழர்களே! மற்றவர்கள் கேள்வி கேட்க வந்தால் அவர்களுக்கு முன்னிலையில் இந்த தலையை எறிந்து விடுவதே நாம் அவர்களுக்குத் தரும் பதில். உம் ஞானதேவா! நீ என்ன கூறுகிறாய்?

**ஞான** : நண்பரே! சகல நன்மைகளுக்கும் காரணமான என் தாயைச் சிறிது நாளாவது வழிபடும் பாக்கியத்தைத் தாங்களாகக் கொடுத்தால் ஏற்கிறேன். அப்படி இஷ்டமில்லாவிட்டால்,

இப்போதே பசிக்கேற்ற உணவாகத் தயாரா யிருக்கிறேன்.

எல்லோ : தலைவரே! விடுதலை செய்யுங்கள். தேவரை. வாணித்தாய் அவருக்கு மட்டும் தாயல்ல எல்லோருக்கும் தாய்தான். அவர்களின் மனம் நோக வேண்டாம்.

வான் : ஆம். அந்த அம்மை **நம்தாய்! நம்தாய்** தான் தோழர்களே! இனி நான் தலைவனல்ல. நம்தாய் சொல்வதே நமது சட்டம். நம் தாய் வாழ்க. பனித் தீவும் அன்புநாடும் இன்று முதல் ஒன்றுதான். முடியாட்சி மண்ணைக் கவ்வியது; இனி மக்களாட்சி, நம் தலைவிதியை நாமே நிர்ண யித்துக் கொண்டோம். இவ்விதியை எந்த நாளும் காப்போம். பெண்மையைப் போற்றுவோம் தாய்க் குலத்தின் தெய்வீக மானத்தைக் காப்பாற்று வோம். வெறியர்க்கு வேலையில்லை. வீணர்க்கு இட மில்லை. உழுதுபயிர் செய்து தொழிலாக்கம் கொண்டு வாழ்வோம். வாழ்க நம் தாய்! நம் தாய் வாழ்க!

## திருப்புக் காட்சி

வாணித்தாய்க்கு எல்லா சுதந்திர தம்பதிகளும் மாலையிட்டு மலர் பொழிந்து, அர்ச்சனை செய்து, ஆராதனை செய்து நம்தாய் என்னும் ஆரம்பப் பாடலைப் பாடுகிறார்கள். அப்போது வானழகனும், வேல்விழியும் மணகோலத்தோடு வந்து, தாய் தந்த மாலையை இருவரும் மாற்றிக் கொள்ளுகிறார்கள். தாயை வணங்கி தம்பதிகளும் பாடுகின்றார்கள்.

## திருப்புக் காட்சி

புதுமணத் தம்பதிகள் தேமதித் திருநாளில் மலர் வில்லும்; பூங்கணையுங் கொண்டு, இன்பப் போர் பயின்று எங்கும் எதிரொலி எழ, தாய்நாட்டுக் கீதத்தைப் பாடி விளையாடு கிறார்கள்.

**(முற்றும்)**